காவேரி

விஜய - மார்கழி, Dec-1953

ACL-TNAL 03H69

8 அணா

அன்றலர்ந்த மலர்போல்
புதுமையாகவும் மோகன
காந்தியுடனும் விளங்குங்கள்...
ஹமாம்
டாய்லட் ஸோப்பு
உபயோகியுங்கள்
HAMĀM
TOILET SOAP
ஹமாம் புதிய
வாசனை பொருந்தியது...
அதிக நாள் வரவும்
செய்கிறது!
தி டாடா ஆயில் மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
A TATA PRODUCT
டாடா தயாரிப்பு
TS6928

294/1-54

நடுக்கும் குளிர் ஜுரம் மேலும் உடலில் வலி இவற்றுடன் ஆரம்பமாகும்

மலேரியாவை

'பாலுட்ரின்'

நீக்குகிறது

2489

THE REGISTRAR OF BOOKS
28 JAN 1954

மலேரியாவின் சின்னங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்

முதலில் குளிரில் நடுக்கம் உண்டாகும். ஜுரம் ஆரம்பமாகும். பிறகு உடம்பு முழுவதும் வியர்த்து வலி உண்டாகும்.
இந்த அறிகுறிகள் ஏற்பட்டால் உடனேயே டாக்டரைப் பாருங்கள்.

எப்பொழுதும் 'பாலுட்ரின்' சாப்பாட்டிற்குப் பிறகு ஒரு டம்ளர் தண்ணீருடன் உட்கொள்ளுங்கள்.

வயதுவந்தவர்களுக்கும், 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும்: ஒரு மாத்திரை

6 லிருந்து 12 வயதுவரையுள்ள குழந்தைகளுக்கு: அரை மாத்திரை

6 வயதுக்கு கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு: கால் மாத்திரை

தினந்தோறும் ஜுரம் குணம் அடையும் வரை கொடுக்கவும்.

ICI

CP 177

வலி வேதனையா?
"நோபெய்ன்"
அதை உடனே குணப்படுத்தும்
ஓர் கல்கத்தா கெமிகல் தயாரிப்பு

★ காவேரி ★

விஜய மலர் 13 | பொருள் அடக்கம் | மார்கழி இதழ் 5

நாணயத்தைக் குலைப்பதா?		...	4
தந்தி இலாகாவின் நூறு ஆண்டு சேவை		...	5
காதலுக்குக் கண்கள் உண்டோ?	ரா. ஸ்ரீ. தேசிகன்	...	10
மீண்ட வாழ்வு ...	எி. ஆர். ராஜம்யா	...	17
உள்ளமும் உருவமும் ...	ஏ. எஸ். ராகவன்	...	22
வெற்றி யாருக்கு? ...	கிருஷ்ணு	...	27
உங்கள் எதிர்காலம் ...	எி. பி. பொன்னுசாமி முதலியார்	...	35
காஃபி-ஹவுஸ் ...	D. ராஜன்	...	40
விஞ்ஞானத் துணுக்குகள்	நா. கி. நாகராஜன்	...	46
புயலுக்குப்பின் ...	ரவிப்ரியா	...	50
நீரோட்டம் (தொடர்கதை)	தி. சேஷாத்திரி	...	55
பருத்திக் கொட்டையிலிருந்து	அ. ராம்கோபால்	...	66
சம்மானம் ...	மேகவண்ணன்	...	70
காலம் தோற்றது ...	ஜெயகாந்தன்	...	75

குறிப்பு:

'காவேரி'யில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்.

(ஸ்தாபிதம் 1932)

Sir. A. ராமஸ்வாமி முதலியார் K. C. S. I. D. C. L. (OXON) (சேர்மன்)

சென்னை நகரத்தில் உள்ள காரியாலயங்கள்

நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் ரோடு; பெரியமேட்; திருவல்லிக்கேணி; மயிலாப்பூர்; & தியாகராயநகர்

கிளைகள்

அம்பாஸமுத்ரம்	மதுரை	திருநெல்வேலி ஜங்ஷன்
ஆம்பூர் (N. A. Dt)	மாயவரம்	திருநெல்வேலி டவுன்
சிதம்பரம்	பாலக்காடு	திருச்சிராப்பள்ளி
கூடலூர்	புதுக்கோட்டை	வேலூர்
ஈரோடு	ராமநாதபுரம்	விஜயபுரம்
காஞ்சீபுரம்	சீர்காழி	விழுப்புரம்
காரைக்குடி	தஞ்சாவூர்	&
கும்பகோணம்	தென்காசி	விருதுநகர்

சேமிப்புகளுக்குரிய வட்டி விகிதம்

ஸேவிங்ஸ் பாங்க்: ஒரு வருஷத்திற்கு 2½% வீதம் வட்டி கொடுக்கப்படும்.

மாதாந்தர சேமிப்பு & காஷ் சர்டிபிகேட்டுகள் } ஒரு வருஷத்திற்கு 4% to 4¼% வீதம் காலத்திற்கேற்றபடி பயனளிக்கும்.

தவணை டிபாசிட்டுகள்:
City { ஒரு வருஷ தவணைக்கு 3% p. a. வீதமும், இரண்டு வருஷத் தவணைக்கு 3¼% p. a. வீதமும்.

Mofussil { ஒரு வருஷத் தவணைக்கு 3¼% வீதமும் இரண்டு வருஷத் தவணைக்கு 3½% வீதமும் வட்டி கொடுக்கப்படும்.

S. கிருஷ்ணஸ்வாமி
செக்ரடரி

காவேரி

விஜய வருடம் மலர் 13 | "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார் | மார்கழி இதழ் 5

99745 சென்னை-600

நாணயத்தைக் குலைப்பதா?

"நமது விவசாயிகள் சத்தியசந்தரர்கள், தெய்வ நம்பிக்கைகொண்டவர்கள். கடனைத் திருப்பிக்கொடுத்தே தீருவார்கள். அவர்களுக்குக் கொஞ்சம் அவகாசம் அவசரச் சட்டம் கொடுக்கிறது.அவ்வளவே" என்று ஸ்ரீ ராஜாஜி கூறியிருக்கிறார்.

விவசாயிகள் உண்மையில் நல்லவர்கள்தான், நெறியும், தெய்வபக்தியும் கொண்டவர்கள். கொண்ட கடனை ஏமாற்றுவது வழக்கமல்ல. ஆனால், ராஜாஜி முன்பு கொண்டுவந்த கடன் நிவாரணச் சட்டம் அவர்கள் நல்லெண்ணத்தைப் பாழ்செய்துவிட்டது, வாங்கிய கடனை மொண்டியடித்து, குறைத்துக் கொடுப்பது சட்டம் என்றானதும், அதன் போர்வையில் திறனுள்ள விவசாயிகள் உள்பட எல்லோரும் பழைய பண்பை மறந்து நடக்க ஆரம்பித்துவிட்டனர்.

அடுத்தபடியாக ராஜாஜி, குடியானவர்-பண்ணையாள்கள் சட்டம் பிறப்பித்தார். குடியானவர்களும் பண்ணையாட்களும் மிகவும் நல்லொழுக்கமுள்ளவர்கள். ஆனால் அச்சட்டம் நல்வழியினின்று பிறழுவது சட்டவிருத்தமன்று என்பதை அறிவுறுத்திற்று. நேர்மையுடனும் சொல் தவறாமலும் நடந்து வந்த பெரும்பாலான குடியானவர்களையும் இடறச்செய்து ஆசைவலையில் விழச்செய்த பெருமை நம் ராஜாஜிக்கே உரித்தாகும்.

இதோடு நிற்கவில்லை. இன்று கடன்பட்ட விவசாயிகளுக்கும் ஓர் வழிகாட்டியுள்ளார். ஒரு வருடத்திற்கு அவர்கள் கடனைத் திருப்பிக் கொடுக்காமலிருக்கலாம். அப்படி அவர்களைச் சட்டபூர்வமாகக் கட்டாயப்படுத்தும் உரிமையை அவசரச் சட்டத்தின் மூலம் எடுத்துவிட்டார் ராஜாஜி.

கடன்பட்டவன் புண்பட்டவனே. அவனுக்கு இச்சட்டம் சாதகம் செய்யும் என்பது திண்ணம். ஆனால், அவன் மனப்பான்மையை எவ்வகையில் அது மாற்றும் என்பதை யோசிக்கவேண்டும்.

ராஜாஜி உதார நோக்கோடு விவசாய மக்களின் நன்மையைக் கருதியே இம்மூன்று சட்டங்களையும் கொண்டுவந்திருக்கிறார் என்பதை நாம் முழு மனதுடன் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால், இதனால் அவர்களின் மனப்பான்மையையும் பண்பையும் எவ்வகையில் அச்சட்டங்கள் மாற்றி விடுகின்றன என்பதை அவர் கருதவில்லை போலும். ஒரு நாட்டு மக்களின் மனப்பான்மையும் நேர்மைக் குணங்களும் பற்பல தலைமுறைகளாகப் பேணி வளர்க்கப்பட்ட பொக்கிஷங்களாகும். நாணயம் என்பது எளிதில் அமையும் தன்மையல்ல; சட்டத்தினால் ஆக்கக் கூடியதும் அல்ல, ஆனால், அதை அழிக்க எளிதில் முடிகிறது. சட்டம் இதற்கு அனுகுணமாக அமைக்க வேண்டுமா என்பதுதான் பிரச்னை.

ஒவ்வொரு துறையிலும் நமது நாட்டின் பண்பாட்டைக் குலைக்கும்வண்ணம் நம் சர்க்கார் காரியம் செய்து கொண்டு போவதுதான் விந்தையிலும் விந்தை, ஒரு சிலருக்குக் கடன் திருப்பிக் கொடுக்கப்படாவிட்டால் அதனால் நாடு சீர் குலையாது, கடன் பளுவினால் துயரப்படும் விவசாயிகளுக்கு அப்பளுவைக் குறைக்க அவர் தன்மையை மாற்றாது செய்தால் நாட்டு நலம் கெடாது,

விவசாயிகள் கவர்மெண்டாரிடமோ, கூட்டுறவுச் சங்கங்களிடமோ கடன்பட்டிருந்தால் அதைத் திருப்பித் தந்தாகவேண்டும். ஆனால் சாதாரண மக்கள் கூடன் கொடுத்திருந்தால் அதைத் திருப்பிக் கேட்கமுடியாது. விவசாயியைப் பொறுத்தவரை அதுவும் கடன் பளுவு தானே. ஏன் இதற்கு மட்டும் விதிவிலக்கு? மக்களுக்கு ஒரு நீதி, அரசாங்கத்துக்கு ஒரு நீதி போலும்!

உண்மையில் கடன்பளுதாங்க முடியாதாருக்கும் பெருநிலமிருந்தும் கடன்பட்டிருக்கும் விவசாயிகளுக்கும் யாதொரு வித்யாசமும் அவசரச் சட்டத்தில் இல்லை. எல்லோரையும் மறைமுகமாகச் சட்டத்தின் போர்வையின்கீழ் புகுத்தி கடனைத் திருப்பித்தர, மறுக்க உதவுகிறது. கடன் கொடுத்தவனுடைய நிலைமையைக் கருதவேயில்லை. அவன் கடன் வாங்கினவனைக் காட்டிலும் ஏழ்மையானவனாக இருக்கலாம்.

மொத்தத்தில் இந்த அரசாங்கம் நல்ல மக்களை நாணயமற்றவர்களாகச் செய்வதில் அறிந்தோ, அறியாமலோ முனைந்திருக்கிறது. தீய காரியத்தை நல்லெண்ணம்கொண்டு செய்தாலும் அத்தீமை விலகிவிடாதல்லவா!

நம் நாட்டு அரசாங்கத்தில் அரசியல் வாதிகள் சட்டம் இயற்றுகிறார்கள். தற்காலச் சாந்தியும் குறுகிய நோக்கமுமே அவர்களுக்குத் தென்படுகின்றன. தீர்க்க தரிசனமும் ஆழ்ந்த யோசனையும் கொண்ட மந்திரிகள் இத்தகைய காரியங்கள் செய்யமாட்டார்கள் என்பது திண்ணம்,

ராஜாஜி நல்ல அறிவாளிதான், ஆனால் தற்கால சாந்திதான் அவருக்குக் குறிக்கோள். இவர் போன்ற பெரியார்கள் அரசியல் வெள்ளத்திற்கு ஏற்றவாறு சட்டங்களைச் செய்துகொண்டு போனால் நாட்டின் எதிர்காலம் என்ன ஆகும் என்று ஏங்க வேண்டி வருகிறது.



கண்காட்சியில் ஒரு தோற்றம்.

தந்தி இலாகாவின்
நூறு ஆண்டு சேவை

டில்லிவாசி

நம் பக்கங்களில் தந்தி என்றாலே கதி கலங்குவார்கள் ஜனங்கள்; அது அந்தக்காலம். இந்தக் காலத்தில் வயல் காட்டில் வேலை செய்யும் குடியானவர்கள் கூட ஆறு கடந்து சென்று தூரத்துக் கிராமத்தில் தம் வேலையை முடித்துக்கொள்ளும் பழக்கத்தைவிட்டு, தந்தி மூலம் தம் வேலையை முடித்துக்கொள்ள விரும்புகிறார்கள். ஆனால் தந்தி ஆபீஸுக்குச் செல்லச் சில மைல்கள் நடந்துசெல்லவேண்டியிருக்கிறது.

ஐயாயிரம் ஜனங்கள் உள்ள ஊர், தாலூகா தலைமை ஸ்தானம், போலீஸ் ஸ்டேஷன் உள்ள ஊர்கள் ஒவ்வொன்றிலும் தந்தி நிலயங்கள் ஏற்படுத்தப் போகிறார்கள் என்றால் நம்புவீர்களா? அல்லது இரண்டாயிரம் ஜனத்தொகை உள்ள ஒவ்வொரு ஊரிலும் டெலிபோன் வசதிகள் ஏற்படுத்தப்படும் என்றால் 'நம்புவீர்களா! பொழுது போகாதவன் கப்ஸா அடிக்கிறான் என்று சொல்வீர்கள். ஆனால் மேற்சொன்னவை ஹேஷ்யங்கள் அல்ல. 1956-ஆம் வருஷத்தில் நடக்கப்போகும் அதிசயங்கள். அதற்காக என்று தபால்-தந்தி இலாகாவில் திட்டம் இட்டு 48 கோடி ரூபாயும் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இந்தத்திட்டம் இந்த நாளில் வெகுவாக அடிபடுகிறதே ஐந்து வருஷத் திட்டம் என்று, அந்தத் திட்டத்தின் ஒரு பகுதிதான்.

இதை ஏன் சொல்லவந்தேன் என்றால் இந்தியாவில் தந்திப் போக்குவரத்து ஆரம்பித்துச் சரியாக நூறு வருஷங்கள் ஆகின்றன. 1853-ஆம் வருஷம் நவம்பர் மாதம் தந்தி மார்க்கம் துவக்கம் ஆயிற்று. முதல்முதலில் தந்தியைக் கல்கத்தாவில் பரிசோதித்தார்கள். ஜன சமுதாயத்தை வாழ்விக்க வந்த தந்தி மார்க்கம் சேர்ந்தாற்போல் இந்தியா, பிரிட்டன், அமெரிக்க இம் மூன்று நாடுகளிலும் ஆரம்பிக்கப்பட்டது. ஆகவே, மற்றெந்தத் துறையில் பின்வாங்கியிருந்தாலும் தந்திப் போக்குவரத்தில் நாம் முன்சென்ற சிலருள் ஒருவர் என்ற கீர்த்தி உண்டு.

இந்தியத் தந்தி மார்க்கத்திற்குத் தந்தை டாக்டர் ஒஷானெஸி என்ற ஆங்கிலேயர். இவர் 1837-முதல்கொண்டே மின்சாரத் தந்தியைப்பற்றி ஆராய்ச்சி செய்து வந்தார். 1851-ஆம் வருஷம் இவர் கல்கத்தாவிலிருந்து சுமார் 40 மைல் தூரத்தில் உள்ள டைமண்ட் ஹார்பர் என்ற இடத்துக்குத் தந்தி மார்க்கம் அமைத்தார். ஆனால் 1853-ஆம் ஆண்டுதான் கல்கத்தாவிலிருந்து ஆக்ராவிற்குத் தந்தி மார்க்கம் அமைக்கப்பட்டது. அதனால்தான் 1853-ஆம் வருஷத்தைத் தந்தி இலாகாவின் துவக்க வருஷமாக எடுத்துக்கொண்டார்கள். ஒஷானெஸிக்கு 'வலதுகை'யாக விளங்கியவர் ஸ்ரீ சிப்சந்தர்நந்தி என்றவர். நந்திதான் அந்த நாட்களில் எளிய முறையில்



நவீன காலத்தில் செய்திகள் அனுப்ப உபயோகப்படும் யந்திரங்களின் பகுதி.

பனைமரக் கம்பங்கள்மேல் கம்பிகள் போட்ட சமயோசித வாதி. பிற்பாடு இவர் சிறிய படகுகளைக்கொண்டு சமுத்திரத்திலும் தந்தி மார்க்கத்துக்கு வேண்டிய கேபிள் (CABLE) என்ற கனத் தந்திகளின் சேர்க்கைகளை அமைத்தார்.

ஆரம்பத்தில் ஜன சமூகத்துக்குத் தொண்டு ஆற்ற முற்பட்டவர்கள் அனுபவித்த இன்னல்கள் பல. அவைகளுள் சில: காட்டுப் பன்றிகள் தந்தி மரங்களைப் பெயர்த்துவிடும். கரையான்கள் தங்கள் கைவரிசைகளைக் காண்பிக்கும். முள்ளம்பன்றிகளும் பெருச்சாளிகளும் கம்பங்களைத் தோண்டி எறிந்து விடும். இதன் விளைவாக முன்னே சென்றவர்கள் பின்னோக்க நேரிடும். இந்த இடைஞ்சல்கள் இலாகாவில் கொஞ்சம் கொஞ்சமாக உலோகங்களைக் (Metal) கொண்ட மரங்கள் உபயோகப்படுத்த ஆரம்பித்ததி லிருந்து மறைய ஆரம்பித்தன.

தந்தி மரங்களும் தந்தி இயந்திரங்களும் இல்லாதிருந்தால்? இந்தக் கேள்வியைக் கேட்டால்தான் தந்தி மார்க்கத்தின் உபயோகம் தெரியவரும். தந்திப் போக்குவரத்து உலகத்திலேயே ஏற்படாதிருந்தால் உலகம் இன்னும் கொலம்பஸ் கண்டுபிடித்த அளவிலேயே இருந்திருக்கும். பரந்த இந்தியாவில் கிழக்கு கிழக்காகவும், மேற்கு மேற்காகவும் இருந்திருக்கும். சிதறிக் கிடக்கும் பல்வேறு பாகங்கள் தனித் தனியாகவே நின்றிருக்கும். இந்தியாவில் ஒரு நாடு, ஒரு தேச மக்கள், ஐக்கிய மனப்பான்மை முதலியவைகளை ஏற்படுத்திய பெருமை தந்தி மார்க்கத்தைச் சாரும். இது எப்படி நடந்தது என்பதைத்தான் புதுடில்லியில் நடக்கும் தந்திமார்க்க நூற்றாண்டுக் கண்காட்சிச் சாலையில் காண்பித்திருக்கிறார்கள்.

இந்தக் கண்காட்சியை நவம்பர் முதல் தேதி ராஷ்டிரபதி ராஜேந்திரப் பிரஸாத் திறந்துவைத்தார். கண்காட்சிச்சாலை ஸ்தலம் புது தில்லியின் மத்திய தந்திக்காரியாலயத்தை அடுத்த திறந்த மைதானம்.

என்னுடன் வந்த நண்பர் ரயில்வே நூற்றாண்டுக் கண்காட்சியைப் பார்த்தவர். ஆகவே, 'பூ, இவ்வளவுதானா' என்று உதட்டைப் பிதுக்கி விட்டார். கண்காட்சிச் சாலையைக் குதிரை லாட வடிவத்தில் உண்டாக்கியிருக்கிறார்கள். கேவலம் 68 அடைப்புகளே (Stalls) உள்ளன. கண்காட்சிக்கும் அதிகம் செலவாக வில்லை. இரண்டு லக்ஷம் ரூபாய்தான் செலவிட்டிருக்கிறார்கள். ரயில்வே கண்காட்சியில் விளம்பரத்திற்கு மாத்திரமே ஒரு லக்ஷம் செலவு செய்தார்கள். மற்றப்படி ஒரு லக்ஷம் துத்தநாகத்தகடுகளில் மாத்திரமே செலவு செய்திருந்தார்கள். ரயில்வே கண்காட்சிக்கு எடுத்துக் கொண்டிருந்த நிலப்பரப்பு மாத்திரமே ஒரு சிறிய நகரத்தின் பரிமாணம் இருந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக ரயில்வே சம்பந்தமான எந்த விஷயமும் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பார்த்து ஆனந்திக்கக்கூடிய பொருள் சம்பந்தப்பட்டது. பழைய காலத்தில் எப்படி என்ஜின் இருந்தது. இடையே என்ன என்ன மாறுதல்களும் அபிவிருத்திகளும் ஏற்பட்டன என்பதை அப்பட்டமாக உருவாக்கம் மூலம் வெளிப்படுத்த முடியும். தந்தி இலாகாவைப்பற்றிய வரை அறிந்துகொள்ளக் குறைந்தபக்ஷம் விஞ்ஞானத்தைப்பற்றிய எளிய ஞானம் கொஞ்சமாவது வேண்டும்.

"ஏன் ஸ்வாமி, நீர் டெலிபோன் வைத்திருக்கிறீரா" என்று என் நண்பரைக் கேட்டேன். "அதென்னய்யா அப்படிக் கேட்டீர்? இந்த நாளில் அம்பட்டன் கடையில் கூடவல்லவா இது இருக்கிறது? என்னிடம் இல்லாமல் இருக்குமா?" என்று பதிலுக்குக் கேட்டார். "அப்படியானால் இந்தப்பக்கம் வாரும்" என்று கண்காட்சிச்

சாலையில் இடது பக்கம் உள்ள அடைப்புக்கு அழைத்துச் சென்றேன்.

ஸீமன்ஸ் என்றால் ஜெர்மனியின் பெயர் பெற்ற கம்பெனி என்று யாவருக்கும் தெரியும். இவர்கள் ஸ்டாலில் அப்பப்பா! என்னென்ன வித டெலிபோன்கள் வைத்திருக்கிறார்கள். டெலிபோன் ஆரம்பித்த பொழுது வைத்திருந்தார்களே ஆள்கள் மூலம் இயக்கப்பட்ட கருவி, அவைகள் முதல் தற்போது நாகரிகம் மிகுந்த நாடுகளில் சிறிய ஆபீஸ்களில் முதலாளி அறைக்கு அறை வேலையைக் கண்காணிக்க டெலிபோன் வைத்துக் கொள்கிறார்களே அந்த உள்-புழக்க வசதியுள்ள மார்க்கம் வரை பலவிதக் கருவிகள் வைத்திருக்கிறார்கள். தவிர ஒரே கம்பி மார்க்கத்தில் பல இடங்கள் சேர்ந்தாற்போல் இயங்கும்படி செய்யும் முறைகளையும் காண்பிக்கிறார்கள். இவைகளின் வேலையை மிகத் தெளிவாக விளக்குகிறார்கள், அங்கங்கு நிற்கும் விஷயம் தெரிந்த சிப்பந்திகள்.

என் நண்பர் தந்தி மார்க்கத்தையும் அதிகமாக உபயோகிப்பதை ஒப்புக்கொண்டார். தந்திமரங்கள் ஆதியில் எப்படி இருந்தன தெரியுமா! பெரிய கனமான பாராங்கல் ஸ்தம்பங்களாக இருந்தன. நாளாக நாளாகத்தான் இவைகளை உலோக மயமாக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியிருக்க வேண்டும். உண்மையில் ஆதியில் தந்திக் கம்பிகளை நடையாக நடந்துபோட்ட ஊழியர்களுக்கு நாம் கடமைப் பட்டிருக்கிறோம். உதாரணமாக, அஸ்ஸாம் மலையில் எப்படித் தந்திமார்க்கம் வேலை செய்கிறது என்பதைத் தத்ரூபம் 'மாடல்'மூலம் காண்பித்திருக்கிறார்கள். அடேயப்பா! எவ்வளவு பயங்கரமான மலைச்சாரல்களையும் கதிகலங்கும் மலை நதிகளையும் பள்ளத்தாக்குகளையும் சட்டைசெய்யாது இலாகா ஊழியர்கள் பிரம்மபுத்திராடெல்டா ஸிக்கிம் முதலிய இடங்களில்கூட தந்திக் கம்பிகளை அமைத்திருக்கிறார்கள். தந்தி இலாகா வேலை ஆரம்பித்த மூன்று வருஷங்களில் 4,250 மைல்கள் தூரம் தந்திப் பாதை அமைத்தார்கள். இந்தியாவில் 'இந்தியர்கள்' என்ற உணர்ச்சியை ஏற்படுத்த இருந்த இதே தந்திமார்க்கம்தான் 1857-ல் ஏற்பட்ட முதல் சுதந்திர எழுச்சியைப் படுகுழியில் அமுக்கியது. 'மின்சாரத் தந்தியே நம்மைக் காப்பாற்றியது என்று ஆனந்தித்தார்கள் வெள்ளைச் சரித்திராசிரியர்கள்.

பாராங்கல் கம்பங்கள்முதல் மிக நவீன முறைகளுடன் 24 மணி நேரங்களும் அலறும் பம்பாய் தந்தி ஸ்தாபனம் வரை 'மாடல்கள்' மூலம் காட்டியிருக்கிறார்கள். உண்மையில் தற்போது கல்கத்தாவில் டெலிபோனுக்கு என்று கட்டப்படும் கட்டிடமே இந்தியாவில் மிகவும் பிரதானமாக இருக்கும் என்று தோன்றுகிறது.

1870-ஆம் வருஷத்திலேயே இந்தியா உலகத்தில் நான்காவது பெரிய தந்தி மார்க்கம் உள்ள நாடாக இருந்தது. இப்பொழுது இரும்பு, செம்பு, பித்தளைக் கம்பிகள் கொண்ட தந்தி மார்க்கம் 40,200 மைல் நீளம்வரை பரவி இருக்கிறது. இந்தியாவில்



ரேடியோ போட்டோக்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப உபயோகப்படும் யந்திரம்.

8,300 தந்தி ஆபீஸுகள் உள்ளன. 4,500 டெலிபோன் 'எக்ஸ்சேன்ஜுகள்,' 1,85,000 டெலிபோன்களும் உள்ளன.

தந்தியை முதல் முதலில் அனுப்பக் கண்டு பிடித்தவர் ஸ்ரீ டேவிட் மார்ஸ் என்பவர். அந்தக் காலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட 'கட்டுக் கட கட்டுக்கட்டு' முறைதான் இன்னமும் பல ஆயிரம் தந்தி ஆபீஸுகளில் சேவை செய்கிறது. ஆனால் டேவிட் மார்ஸ் தந்தியை ஆரம்பித்த காலம் கட்டை வண்டி ஓடிய காலம் என்றால் நவீன 650-மைல் வீதம் பறக்கும் ஆகாய விமானங்கள் உள்ள யுகத்தில் செய்தி அனுப்பும் முறை எவ்வளவு மாறுதல்களை அடைந்திருக்க வேண்டும்? அடைந்தும் இருக்கின்றன.

மனிதன் ஒரு நிமிஷத்தில்எவ்வளவு வார்த்தை வேகமாகப் பேச முடியும்? உளறாமல், இருந்தால், சுமார் 160வார்த்தைகள்வரைபேசலாம் என்று ஒரு மதிப்பு. ரேடியோ வேலை செய்கிறதே அந்த அலைகளைப் பயன்படுத்தி வார்த்தைகளை ரேடியோ சமிக்ஞைகள் மூலம் கனவேகமாகச் செய்திகளைப் பரப்புகிறார்கள். மார்ஸின் 'கட்டுக்கட' யந்திரம் சுமார் 30 வார்த்தைகள்தான் அனுப்ப முடியும்.

முதலில் வாசகத்தை ஒரு யந்திரம் மூலம் நீண்ட காகித டேப்புகளில் ஓட்டைகள் மூலம் சமிக்ஞைகளாக மாற்றுகிறார்கள். இவைகள் சுமார் 40 வார்த்தை வேகம் மாற்றப்படும். பிறகு இந்த ஓட்டைகள் கொண்ட டேப்புகளை மற்றொரு இயந்திரம் மூலம் ரேடியோ சமிக்ஞைகளாக மாற்றும் பொழுது வார்த்தைகள் நிமிஷத்திற்கு 200 வீதம் பறந்து சென்று, அன்னிய நாட்டு ஸ்தாபனங்களில் நேரடியாக ஒரு டேப்பில் வார்த்தைகளாக அடிக்கின்றன. இந்த முறையை இந்திய அந்நிய நாட்டுப் போக்குவரத்துச் சர்வீஸில் பெரிதும் உபயோகப்படுத்துகிறார்கள். "பூ இவ்வளவுதானா?" என்று கண்காட்சியை அலக்ஷியம் செய்த என் நண்பர்கூடப் பரீக்ஷார்த்தம் இலவசமாக ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு தந்தியை நீட்டினார். அதை நீட்டிய சில நிமிஷங்களுக்குள் தந்தியைப் பாரத்தில் ஒட்டி, மற்ற "அந்நிய நாட்டு" காரியாலயத்தில் கொடுத்தார்கள்.

இதுமட்டுமல்ல. இந்தச் சர்வீஸில் போட்டோக்களை ரேடியோ மூலம் அனுப்பும் இயந்திரங்களை வைத்திருக்கிறார்கள். குறிப்பிட்ட போட்டோவை ஒரு குழவியின் மேல் சுற்றுகிறார்கள். அந்த யந்திரத்தில் உள்ள ரேடியோ அலைகள் கறுப்பு வெள்ளைப் பாகங்களைக் கோடுகளாக மாற்றி அனுப்புகின்றன. எட்டு நிமிஷங்களில் ஒரு படம் பூராவும் இந்தியாவிலிருந்து லண்டனுக்கு அனுப்பிவிடுகிறார்கள். போட்டோக்களை அனுப்புவது போலவே முக்கிய தஸ்தாவேஜுகள், கணக்கு வழக்கு விவரங்கள் முதலியவைகளை அந்நிய நாடுகளுக்கு அனுப்பலாம்.

இந்தியத் தபால் இலாகா மூலம் போட்டோக்களும், மற்றும் தஸ்தாவேஜிகளும் ரேடியோ மார்க்கம் க்ஷணத்தில் மற்ற நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

தற்காலத்தில் பத்திரிகைகள் காரியாலயத்தில் 'டெலி பிரிண்டர்' என்ற இயந்திரம் வைத்திருக்கிறார்கள். இவைகளில் ஒரு கேந்திர ஸ்தானத்திலிருந்து அனுப்பப்படும் செய்திகள் ஒரே சமயத்தில் பல பட்டணங்களிலும் உள்ள தினசரிக் காரியாலயங்களில் கிடைக்கப்பெறுகின்றன. இது செய்திகள் சம்பந்தப்பட்டவரை ஒரு புரட்சிகரமான விஷயம். இந்த இயந்திரங்களைச் செய்தி ஏஜன்ஸிகள் வைத்திருப்பதுடன் தனிப்பட்ட தினசரிகளும் வைத்துக்கொண்டு இந்தியாவில் அவரவர்களுக்கு உள்ள மற்றக் கிளை ஸ்தாபனங்களுடன் தொடர்பு நிமிஷத்துக்கு நிமிஷம் வைத்துக்கொள்கிறார்கள். இந்த இயந்திரங்களை இயக்கும் சக்தி சாதாரண தந்தி மார்க்கங்களில்தான் உள்ளது. இவைகளையும் ரேடியோ அலைகள் மூலம் இயக்குவதற்குச் சீக்கிரம் ஏற்பாடு செய்யப் போகிறார்கள்.

கண்காட்சியில் உள்ள தனிப்பட்ட ஸ்டால்களில் இந்த மாதிரியான நவீன இயந்திரங்கள் மற்றும் செய்தி அனுப்பும் கருவிகள் முதலியவைகளைப்பற்றி ஜனங்களுக்கு விளக்குகிறார்கள். எல்லாவற்றையும்விட முக்கியமான அலுவல் என்னவென்றால் நம்நாட்டுத் தந்தி ஸ்தாபனத்துக்கு வேண்டிய பல்வேறு சாதாரண இயந்திரங்களையும் அவைகளின் பாகங்களையும் பூனா, ஜபல்பூர், அலிபூர் முதலிய இடங்களில் உள்ள சர்க்கார் தொழிற் சாலைகளிலேயே உற்பத்தி செய்கிறார்கள்.

என் நண்பரைக் கேட்டேன்: 'ஸ்வாமி, இந்த மாதிரி அரிய விஷயங்களைப்பார்த்துக் கூடவா உமக்கு இந்தக் கண்காட்சி மட்டம் என்று தோன்றுகிறது?' அவர் சொன்னார்: 'என் அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டு விட்டேன். ஆனால் இவைகளில் எல்லாம் உள்ள விஞ்ஞான சம்பந்தமான தத்துவங்கள் பூராவும் விளங்கவில்லை.'

இது ஓரளவு உண்மைதான். போக்குவரத்துச் சம்பந்தமான விஷயங்களில் ரேடியோ அலைகளைக்கொண்டு தினம் தினம் அபிவிருத்தி நடக்கிறது. தற்காலம் ஏரோபிளேன் ரேடியோவின் உதவியைக் கொண்டு பறக்கிறது. அதன் மூலம்தான் எங்கு இருக்கிறோம் என்பதை அறிகிறது. கீழே இறங்குவதிலும் ரேடியோவின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்துதான் இறங்குகிறது. இவைகளை ஆகாயப் போக்குவரத்து இலாகாவில் நன்கு காட்டியிருக்கிறார்கள்.

இந்த நாளில் சண்டையில்கூட எவ்வளவுக்கெவ்வளவு போக்குவரத்தைப் பலப்படுத்த முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு பலப்படுத்துகிறார்கள். சண்டையில் போர்க்களத்திற்கு அருகே இருந்து ஒரு சிப்பாய் தன் முதுகில் கட்டிய ரேடியோ சாமக்கிரியை மூலம் 10 மைல் பின்னால் உள்ள முகாமிற்குச் செய்தி அனுப்பலாம். இதைக்குறித்துத்தான் சென்ற சண்டையில் பெரிய வீரரான மார்ஷல் மான்ட் கோமரி சொன்னார்: எந்தப்பட்சத்தில் செய்தி மார்க்கம் சம்பந்தமான சௌகரியங்கள் ஜாஸ்தியோ அதுவே ஜயிக்கும். நம் இந்திய ராணுவத்தில் உள்ள ஸிக்னல் கார்ப்ஸ் (**Signals Corps**) மிகவும் முன்னேற்றமடைந்த ஸ்தாபனம். அதன் வேலையைப் பூராவும் சொல்ல ஒரு தனிக் கண்காட்சியே வேண்டும். ஆனால் ரேடியோ சம்பந்தமாக எவ்வளவு சுருக்கமாகச் செல்ல வேண்டுமோ அவ்வளவு சுருக்கமாகச் சொல்லுகிறார்கள் ஒரு ஸ்டாலில்.

நம் தந்தி இலாகாவைப்பற்றிய சில விஷயங்களைக் கேளுங்கள். உலகத்திலுள்ள கம்பி மார்க்கத்தில் மிகப் பெரியவைகளில் அது ஒன்று. பொதுஜன சௌகர்ய ஸ்தாபனங்களில் வெகு காலத்திற்கு முன்னால் இருந்தே தேசியமயமாக்கப்பட்டவைகளில் ஒன்று. ரயில்வேக்கு அடுத்தபடியான பெரிய பொதுஜன ஊழியம் செய்யும் ஸ்தாபனமும் கூட. இந்த வருஷம் அதன் வருவாய் 45 கோடி ரூபாய். செலவு 42 கோடி. மிச்சம் இரண்டு கோடி பொதுப்பட்ஜெட்டிற்குக் கொடுக்கப் பட்டது.

மிகவும் விசுவாசமாகப் பொதுஜனங்களுக்குச்சேவை செய்த ஸ்தாபனங்களில் தபால் தந்தி இலாகா முன்னணியில்உள்ளது. அதன் அபிவிருத்தித் திட்டங்களில் உள்ளவை நான்கு முக்கிய நகரங்களிலும் சக்தி வாய்ந்த ஒலிபரப்பிகள் வைப்பது, கடற்கரை ஓரம் உள்ள செய்தி அனுப்பும் ஸ்தாபனங்களை வலுப்படுத்துவது, அக்கம்பக்கங்களிலுள்ள நாடுகளுடன் டெலிபோன் வசதிகள் உண்டாக்குவது போன்றன. குறிப்பாக, இந்த இலாகாவின் ஐந்து வருஷத்திட்டத்தின் முக்கிய அம்சம் சரியான போக்குவரத்துக்களைக் கிராமாந்தரங்களில் ஏற்படுத்துவது. ஒருநூற்றாண்டில் அரிய பெரிய காரியங்களைச் சாதித்த இந்த இலாகா அடுத்த பத்தாண்டில் இதற்குமேல் சாதிக்கக் கடவுள் அருளவேண்டும் என்பதுதான் பொதுஜனக் கோரிக்கை.

காதலுக்குக் கண்கள் உண்டோ

ரா. ஸ்ரீ. தேசிகன்

வகுளாபுரம் என்ற நகரம் வைரவ நதிக் கரை மீது மிகுந்த எழிலுடன் நிற்கின்றது. வீடுகளின் பலகணிகளின் வழியாய் அவ்வாற்றின் அழகைப் பருகலாம். அந்த ஆற்றிற்கு அக்கரையில் மரங்கள் செறிந்த ஒரு தோப்புண்டு. அதிலிருந்து வரும் புட்களின் அரவம் மதுரமாய் அவ்வூர் மாந்தர்களின் செவிகளில் ஒலிக்கும். வனப்பைச் சொரியும் இயற்கை அன்னையின் மடியில் தாலாட்டப்பட்ட அவ்வூரில் புராதனமான குடும்பம் ஒன்றுண்டு. அதில் உதித்தவர்கள் அறிவிலே சிறந்தவர்கள். பழுத்த மனப்பண்புடையவர்கள். கருவிலேயே திருவுடையவர்கள் அந்தக் குடும்பத்தில் விளங்கியவர்கள் என்று சொன்னால் மிகையாகாது.

செல்லமையர் தாம் உதித்த குலத்திற்கேற்றவாறு நடந்துகொண்டார். அவருடைய மனைவியோ தந்தத்தில் செதுக்கப்பட்ட உருவத்தை ஒக்கின்றவள். அவளுக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தனர். ஒவ்வொரு பிள்ளையும் பார்த்தால், தெய்வப் பிறப்போ என்று சொல்லும்படி இருக்கும். மருந்திற்கு ஒரு பெண் பிறக்காதா? என்று மைதிலி ஏங்கின நாட்களுண்டு. அவள் ஆசை கருகாமல் மலர்ந்தது. மிக அழகு வாய்ந்த பெண் தோன்றினாள். அவளுக்கு வசந்தா என்ற பெயரைச் சூட்டினார்கள்.

அந்தக் குடும்பத்திற்குச் சமமான நிலையிலுள்ள மற்றொரு குடும்பத்திலும் சந்ததியில்லாத கவலை பிறந்தது. பல புண்ணியத் துறைகளாடிய பிறகு மரகதவல்லிக்குப் பிரியம்வதா என்ற பெண் தோன்றினாள். ஆனால் மரகதவல்லியின் புருஷன் பிரியம்வதா பத்தாம் பிராயத்தை எட்டுவதற்கு முன்பே காலமானார். குடும்பபாரம் மரகதவல்லிமீது விழுந்துவிட்டது. வசந்தாவும் பிரியம்வதாவும் நெருங்கிப் பழகிவந்தனர். வசந்தாவைவிட பிரியம்வதா அழகில் குறைந்தவளல்லள். படிப்பிலுஞ் சரி, சங்கீதத்திலுஞ்சரி, நாட்டியக் கலையிலுஞ் சரி மிகுந்த தேர்ச்சி பெற்றவள். ஆனால் ஒரு நிகழ்ச்சி, அவள் அழகிற்குக் கூற்றாய் வந்துவிட்டது. அவ்வூரில் பெரிய அம்மை காட்டுத்தீயைப் போல எங்கும் பரவிற்று. அக்கொடிய நோயால் அநேகர் மாண்டனர். வசந்தாவும் பிரியம்வதாவும் அவ்வியாதிக்கு ஆளாயினர். வசந்தாவை அவ்வியாதி மும்முரமாய்த் தாக்கவில்லை. அவள் மேனியில் இலேசாகத்தான் அது தோன்றிற்று.

பிரியம்வதாவுக்கு அம்மை கடுமையாய்க் கண்டுவிட்டது. அவள் பிழைப்பாளோ என்ற எண்ணம் எல்லோர் மனத்திலும் பாய்ந்தது. மரகதவல்லி ஓராயிரங் கோயில்களுக்குப் பிரார்த்தனை செய்து கொண்டாள். அவ்வூர் மகாமாயி அம்மனுக்கு அபிஷேகத்திற்குக் கொடுப்பதாகப் பூசாரிக்குச் சொல்லிவிட்டாள். திருமலையப்பனுக்குப் பணம் முடிந்துவைத்தாள். கண்கள் பாதிக்கப்படாமலிருந்தால், திருச்சானூர் அலர்மேல் நங்கைத் தாயாருக்குத் தங்கக் கண்கள் சாத்துவதாகத் தீர்மானித்தாள். அவள் தொழுததெய்வங்கள் அவள் வயிற்றில் பாலைக் கறந்தன. பெண் பிழைத்தாள். ஆனால் அழகு தாண்டவம் ஆடிய முகத்தில் பள்ளங்களும் குழிகளும் விழுந்துவிட்டன. அவளுடைய முகத்தின் திரு இருந்த இடந்தெரியாமல் போயிற்று.

* * *

வசந்தாவிற்குக் கலியாண ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. பெரிய மனிதர்கள் வீட்டில் நடக்கிற விஷயங்கள் ஊர் முழுவதும் பரவத்தானே செய்யும். பிரியம்வதா அகத்தில் இவ் விஷயம் சர்ச்சை செய்யப்படாது போகுமோ.

'அம்புஜப்பாட்டி, என் குழந்தை பிரியம் வதாவுக்குக் கல்யாணம் கார்த்திகை செய்து விட்டுப் போவேனா? அல்லது வறண்ட நிலத்தில் உதிர்ந்த பூமாதிரி என் குழந்தை வாடி மடிந்துபோய் விடுமோ.'

'அதென்ன அப்படிச் சொல்லறே. பிரியம்வதாவுக்கு யாரையாவது ஒருவனை முடிந்துபோட்டிருப்பான். கலியாணம் ஆகாமல் போய்விடாது கவலைப்படாதே'

'சந்திரனை மேகம் மூடுவதுபோல் என் குழந்தை முகத்தை இந்த வியாதி மூடிவிட்டதே பாட்டி'

'அதற்கென்ன செய்யமுடியும்? குழந்தையாவது பிழைக்காதா என்று நீ சொன்னது ஞாபகமிருக்கோ இல்லையோ?'

'மறந்தா போய்விடும் நன்னு நினைவிருக்கு'

'எனக்கென்னமோ மரகதம், முன்னத்தனை அழகில்லாது போனாலும், அழகு அவள் முகத்தில் அங்கங்கே எட்டித்தான் பார்க்கிறது.'

'குழந்தை மேலே வைச்ச வாஞ்சை மேலே சொல்லுகிறீர்கள். வசந்திக்குக் கலியாணம் நிச்சயமாயிருக்கிறது தெரியுமோ இல்லையோ?'

'நன்னாத் தெரியுமே. அந்தப் பையன்கூட என் ஆத்துக்காரர் வழியில் சொந்தமாம். பையன் ராஜா மாதிரியிருப்பானும்.'

மரகதவல்லி பெருமூச்செறிந்தாள்.

'இப்படியேன் பெருமூச்சு விடுகின்றாய்?'

'ஒண்ணுமில்லை: ஒத்த பெண்ணுக்குக் கலியாணம் ஆகிறபொழுது தனக்கு ஆகவில்லையே என்று பிரியம்வதா நினைப்பாளே என்று நான் எண்ணுகிறபொழுது எனக்கு ஏக்கமாயிருக்கிறது.'

'அதுவும் நம்குழந்தை தானேடி?'

'யார் இல்லை என்று சொன்னாள் பாட்டி. அந்தக் குழந்தைக்குக் கலியாணம் ஆகிறதில் எனக்குப் பொறாமையா? பிரியம்வதாவைக்கூட வசந்தா கூப்பிட்டாள். இவள்தான் போகலாமா? போகக் கூடாதா? என்று யோசித்துக்கொண்டிருக்கா'

'இரண்டும் சேர்ந்தாப்பலே விளையாடின குழந்தையில்லையோ? நகை நட்டைப் போட்டு அனுப்பு; அவளுக்கென்ன? ராஜாத்தி மாதிரி ஆகிவிடுவாள். உன் குழந்தை பாடினால் அதைக் கேட்டு எல்லோரும் பரவசமாய்ப் போய்விடுவா? இந்தப் பாட்டுக்கே ஒத்தன் வந்து கட்டிண்டு போய்விடுவான், கவலைப்படாதே'

'அப்படிச் சொல்லுங்கள் தங்கள் வாயாலே.'

"ஆத்துக்குப் போறேன் மரகதம். தோசைக்குப் போட்டிருக்கேன். அதை அரைக்க வேண்டும்."

'நாளைக்கு ஏகாதசியோ. நன்னா ஞாபகப்படுத்தினீர்கள். போயிட்டு வாங்கோ.'

* * *

அரண்மனைபோல் ஒரு வீடு விளங்குகின்றது. அதன் வாசலில் மாபெரும் பந்தல் போடப்பட்டிருக்கிறது. வாழை மரங்கள் பந்தலை அலங்கரிக்கின்றன. பந்தலின் விதானத்தின்மீது பலவர்ண மின்சார விளக்குகள் தொங்குகின்றன. அநேக நாற்காலிகள் பந்தலை நிறைத்திருக்கின்றன. சங்கீதக் கச்சேரிக்காக ஒரு தனி இடம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. மேளக்காரர்கள் இன்பமாய்க் கான மழையைப் பெய்வதற்கு ஒரு தனி இடம் வகுக்கப்பட்டிருக்கிறது. உலகத்தில் புகழ்வாய்ந்த பாண்டு வாத்தியக்காரர்களும் வந்திருக்கின்றனர். பெண்கள் பலநிறப் பட்டுப் புடவைகளை அணிந்துகொண்டு அங்குமிங்கும் நடமாடுகின்றனர். அப்புடவைகள் எழுப்பும் இன்னிசைச் சலசல வோசையில் கவிதைக் குரல் கேட்கின்றது. அவர்களுடைய முறுவல் நிலவொளியைப் பரப்புகின்றது. கைவளையல்கள் ஒலிக்கின்றன. மலர் மணம் எங்கணும் கமழ்கின்றது. ஊதுவத்திக்கள் எங்கும் எரிந்துகொண்டிருக்கின்றன. அவைகளிலிருந்து எழும்பும் புகை பிரார்த்தனைபோல மேலே சென்றுகொண்டிருக்கிறது. சிந்தின சந்தனக் குழம்பின் நறுமணம் மற்ற மணங்களுடன் கரைந்துவிடுகின்றது.

மாப்பிள்ளையை அழைக்கப் புறப்பட்டுவிட்டனர். காரைப் பூவால் போர்த்திவிட்டனர். கலியாணத்திற்கு வரவழைக்கப்பட்ட நாயனத்தைக் கேட்கப் பக்கத்தூர் ஜனங்கள் அருவி அருவியாக வந்து விட்டனர். ஒரு திருநாட் கூட்டம்போல ஜனங்கள் பொங்கிப் பரந்தனர். தூரத்திலிருந்து மிதந்துவரும் மோகனராகம் கேட்டோர் உள்ளத்தைச் சிறை செய்தது. நாயனத்தைச் சேணிலிருந்து கேட்டால் அதன் இன்பம் ஒரு தனி இன்பமன்றோ?

பெண்ணின் தகப்பனும் மாப்பிள்ளையின் தகப்பனும் முன் சென்றனர். பெண் வீட்டுக்காரர் உறவினரும் பிள்ளை வீட்டுப் பந்துக்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். ஊர்வலம் மெல்லப்போய்க்கொண்டிருந்தது. மாப்பிள்ளைக்குப் பக்கத்தில் போட்டி போட்டுக்கொண்டு சிறுவர்களும் உட்கார்ந்து கொண்டிருந்தனர். மாப்பிள்ளையின் அழகு எல்லோருடைய உள்ளத்தையும் கொள்ளைகொண்டது. பெண்ணிற்கேற்ற பிள்ளை; பிள்ளைக்கேற்ற பெண். இருவரும் பாக்கியம் புரிந்தார்கள் என்ற மங்கலகரமான சொல் அவ்வூர்வலத்தில் எழுந்தது.

மெல்ல நகர்ந்துகொண்டிருந்த ஊர்வலத்தைப் பிரியம்வதா ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தாள். அவள் கண்கள் மாப்பிள்ளை மீது பாய்ந்தன. பல எண்ணங்கள் அவள் மனத்தில் போராடின.

ஊர்வலம் அவள் வாசலை விட்டகன்றது. பிரியம்வதா ஒரு நிலைக்கண்ணாடி முன் வந்து நின்றாள்.

ஏனோ இந்த வியாதி என்னை விகாரப்படுத்திவிட்டது. என்னை அந்த வியாதி கொன்றிருந்தால் எத்தனை இன்பமாய் இருந்திருக்கும். ஏன்

இப்படி எண்ணுகிறாய் மனமே! வசந்தா கலியாணம் செய்துகொள்ளுவதில் உனக்குப் பொறாமையா? நாம்தான் இணைபிரியாத் தோழிகளாயிற்றே. அவளுக்குச் சந்தோஷம் வந்தால் எனக்கு வந்தது மாதிரிதானே. நானும் குடியும் குடித்தனமாய்த் திகழ்வேனோ? ஏன் கிடைக்காது? என்னைவிட விகாரமாய் இருக்கிற பெண்களுக்கெல்லாம் கலியாணமாகி, குழந்தை குட்டிகளோடு இருக்கின்றார்களே. எனக்குக் கிடைக்காமற் போகுமோ? நான் பிறப்பதற்கு முன்பே எனக்கு ஒருவன் பிறந்திருப்பான் என்ற வார்த்தையைச் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதில் எத்தனை உண்மையிருக்கிறதோ தெரியவில்லை. ஊர்வலத்தில் கலந்துகொள்ளுவதாகச் சொன்னேனே. வராதுபோனால் வசந்தா என்ன நினைத்துக் கொள்ளுகிறாளோ. கலியாண முகூர்த்ததிற்குப் போனால் போச்சு. என்ற எண்ணங்கள் அலைமோதின. அவைகளின்மீது மிதந்தே இரவுக் கடலை மெல்ல நீந்திக் கடந்தாள். கண்கள் அயரவில்லை. ஆறு, ஆற்றின் கரைச் சோலை, பொழில்களிலிருந்து வரும் மணம் சூழ்ந்துள்ள தெய்வீக அமைதி, புகலரும் அழகு இவையாவும் அவள் உள்ளத்தைத் தொடவில்லை.

* * *

காலையில் கலியாணம் மும்மரமாய் நடந்து கொண்டிருந்தது. வசந்தியின் கண்கள் தன் தோழி பிரியம்வதாவின் வருகையை நாடி நின்றன.

ஏன் வரவில்லை. தன்னை யாரேனும் பரிகசிக்கப் போகிறார்கள், என்ற நினைவா? அவளுக்கென்ன குறைவு. செல்வமில்லையா? நாளை நான்கு பேரோடு பிறந்தேன். அவளோ வீட்டிற்கு ராணியாயிற்றே. குணத்திற்குக் குறைவா? இல்லை. சங்கீதமோ, படிப்போ, நடனக் கலையோ எல்லாம் அவளிடத்தில் அப்படியே நடனமாடுகின்றனவே. ஏன் வரவில்லை?' வராமலிருப்பாளா? கட்டாயம் வருவாள். தாலிகட்டுகிற தருணம் பிரியம்வதா வந்தாள். வசந்தியின் முகம் அப்பொழுதுதான் மலர்ந்தது. கலியாணம் முடிந்தது. எல்லோரும் மலர் மழையைச் சொரிந்தனர். ஆசிகள் கூறினர். மணப்பிள்ளையும் மணமகளும் பெரியோர்களுக்கு நமஸ்காரம் செய்துவிட்டு அப்புறம் அகன்றனர்.

சற்று அவகாசம் ஏற்பட்டபொழுது 'பிரியம்வதா' இப்படித்தாண்டி நீ பண்ணறது என்று வசந்தா கேட்டாள்.

'ஏதோ காரியமாய் இருந்துவிட்டேன்' என்று சிரித்த வண்ணமாய்ப் பதில் சொன்னாள்.

சாயங்காலம் சங்கீதக் கச்சேரிக்கு ஏற்பாடு நடந்துகொண்டிருந்தது. பாடகர் செல்லமையருக்கு வேண்டியவர். வகுளாபுரத்திற்குப் பக்கத்திலுள்ள வைரவ புரத்தில் இவருக்குத் தகுந்த சொத்துண்டு. பணத்திற்காகக் கச்சேரி பண்ணுகிறதில்லை அவர். அக்கலையைத் தெய்வக் கலையாகப் போற்றி வருகிறார். அவருடைய ஞானத்திற்குக் கரையே இல்லை. பக்க வாத்தியம் வாசிப்போர்கள் அஞ்சியே வாசிப்பார்கள். அவருக்கு உற்றார் உறவினர் ஒருவருமில்லை. அவருக்கு ஒரு குறைதான். கண் தெரியாது. கண்ணாடி அணிந்து கொண்டிருப்பார். வடிவிலே அழகுள்ளவர்தான்.

இக்குறையால் அவருக்குப் பெண் எவரும் கொடுப்பதற்கு யோசித்தார்கள். வீட்டில் ஒரு சமையற்காரனைத் தவிர வேறு ஒருவருமில்லை. தகப்பனார் தவம் கிடந்து பெற்ற பிள்ளை இவர்.

உனக்குக் கண் இல்லாமற் போனாலும் உன் ஜாதகத்தின்படி ஓர் உத்தமி வாய்க்கப் போகிறாள். கவலைப்படாதே என்று சொல்லி அவர் மாண்டார்.

நாட்கள் பல தேய்ந்தன. தன் தகப்பன் இறுதி மொழி

நிறைவேறுமோ என்ற ஐயமும் இவர் மனதில் நுழையத் தொடங்கிற்று. வீட்டிற்கு விளக்கேற்ற யாராவது வரமாட்டார்களா? தம் தகப்பனார் சந்ததி தம்மோடு மறைந்துபோய் விடக் கூடாதே, என்ற எண்ணந்தான் அவர் மனத்தில் சதா புயலடிக்கும். இந்தப் பாடகர் சபாபதி ஐயருக்காக ஒரு நாற்காலி போடப் பட்டிருந்தது. அதில் அவர் அமர்ந்திருந்தார்.

நலங்கு வைத்தார்கள். பெண்கள் இன்பமாய்ப் பாடினர். அவர்கள் பாடிய பாட்டுகளை நாயனக்காரர்கள் ஊதிக் காண்பித்தனர். அங்குள்ளோர் பிரியம்வதாவைப் பாடச்சொன்னார்கள். முதலில் சற்றுத் தயங்கினாள். தொண்டை சரியாயில்லை என்றாள். வசந்தா சற்று மனத் தாங்கலோடு பிரியம்வதாவைப் பார்த்தாள்.

வசந்தா வருத்தப்படக்கூடாதென்றெண்ணிப் பாடுவதற்கு இசைந்தாள். அவள் பாடத் தொடங்கும்பொழுது ஓர் அமைதி நிலவிற்று. இத்தனை அழகாய்ப் பாடுகிற பெண் யார்? இத்தனை சாரீரம் எங்கிருந்து வந்தது? இத்தனை கர்நாடக சுத்தமாய் யார் பாடப் போகின்றார்கள்? சுருதியோடு குரல் எப்படி இழைந்து செல்லுகிறது? இம்மாதிரி சாவேரி ராகம் பாடக் கேட்டதில்லையே?' என்று வியந்தனர். பாட்டு ஓய்ந்ததும் அப்பாட்டை ஒட்டியே நாயனக்காரர்கள் வாசித்தனர். ஆனால் பிரியம்வதா பாட்டில் எழுப்பிய நயத்தைத் தங்கள் வாத்தியங்களில் கொண்டுவர முடியவில்லை.

பக்கத்தில் உட்கார்ந்திருந்த பாடகர் சபாபதி ஐயருக்கு நாயனக் கச்சேரி அத்தனை திருப்தி அளிக்கவில்லை. பாடின பெண் யார்? தெரியவில்லையே. அப்பொழுதுதான் கண் தெரியாத பாவத்தை நினைந்து நைந்தார். எனக்கு இந்தப் பெண் வாய்ப்பாளோ? ஐயோ கலியாணமான பெண்ணாய் இருந்துவிட்டால், இந்த எண்ணம் பாவத்தைத் தருமே. ஆனால் என்மனம் இது வரையில் கெடுதலை நாடவில்லையே. எப்படி நடக்கிறது பார்ப்போம் என்று எண்ணினார்.

பக்க வாத்தியக்காரர்கள் வந்துவிட்டனர். சபாபதி ஐயரை மெதுவாய்க் கையைப் பிடித்தழைத்துச் சென்றனர். பகவானைச் சற்றுத் தியானித்துவிட்டுப் பாடத் தொடங்கினார். ஒவ்வொரு பாட்டிலிருந்தும் இன்னிசை வெள்ளம் பெருகத் தொடங்கிற்று. பிரியம்வதா பாடின பாட்டையே பாடினார்.

சாவேரி ராகம் என்றால் இதுதான் சாவேரி ராகம். இவர் எனக்குப் புருஷனாய் வாய்ப்பாரோ? கலியாணமான புருஷனாயிருந்தால் நான் என்ன செய்வேன்? என்ற கேள்வியை அவள் மனம் கேட்டது.

* * *

கலியாணமான பிறகு எல்லோரும் ஊருக்குப் போய்விட்டனர். சில நாட்கள் சென்றதும் வசந்தியும் புக்ககத்திற்குப் போய்விட்டாள். மரகதம் அம்புஜப் பாட்டியோடு பேசிக்கொண்டிருந்தாள்.

'பாட்டி, பிரியம்வதா சபாபதி ஐயரைத்தான் கலியாணம் பண்ணிக்கொள்ளுகிறதாய்ச் சொல்லுகிறாள். அவருக்கும் இந்தப் பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொள்ள நிரம்ப ஆசையாம். நான் இருந்தும் இருந்து கண் குருடான புருஷனுக்கா என் பெண்ணைக் கொடுக்கிறது?'

'கண் குருடாயிருந்தால் என்ன, மரகதம்? சொத்துக்குக் குறைவில்லை. நாலு தலைமுறைக்குக் காணும். கலியாணமானால் குழந்தைகள் பிறக்காமல் போமா? கண்ணாடி போட்டுண்டா ஒண்ணும் தெரியவில்லை. ராஜா போல இருக்கான். கண் தெரிந்தால் அவன் பாட்டுக்கும் அவன் சொத்துக்கும் நான் நீன்னு விழுவார்கள். அவன்தான் ஒழுங்காயிருப்பானோ? பாடகர்களைப் பத்தித்தான் உனக்குத் தெரியாதா?'

'அதென்னமோ, பாட்டி, என் பெண் ஒத்தக் காலில் நிற்கிறாள். சாதகமும் பொருத்தமாயிருக்கு.'

'உடனே முடித்துவிடு'

* * * *

மருதாநல்லூரில் வசந்தாவுக்கு ஒரு கடிதம் வந்தது.

வகுளாபுரம்,

தை மாதம், 5

என் அன்புள்ள வசந்தி,

நான் ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டேன். சபாபதி ஐயரைக் கலியாணம் செய்துகொள்ளுவதாக என் தீர்மானம். அது தவறோ? அது சரியோ? எனக்குத் தெரியாது. என்னை ஏதோ ஒன்று தூண்டுகின்றது. அதை என்னால் தடுக்க முடியவில்லை. அவரிடத்தில் உள்ள குணம், படிப்பு, சங்கீத ஞானம்—எல்லாம் என் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டன. அவரை ஒரு லட்சிய புருஷனாக நான் கருதுகின்றேன்.

அன்புள்ள,

பிரியம்வதா.

வசந்தி கடிதத்தைப் படித்துப் படித்து இன்புற்றாள். தன் கணவரிடம் அதைக் காண்

பித்தாள். அவரும் அவளுடைய தீர்மானத்தை ஆமோதித்தார். மறு தபாலில் அவளுக்குக் கடிதமெழுதினுள்.

மருதாநல்லூர்

தை மாதம், 6-ஆம் தேதி,

என் அன்புள்ள பிரியம்வதா,

உன் கடிதங் கிடைக்கப் பெற்றேன். என் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. நீ செய்த தீர்மானம் தக்கதே, அவருடைய ஞானக் கண்ணிற்கு மதிப்பளித்து அவரைக் கல்யாணம் செய்யத் துணிந்த உன்னை நான் வாழ்த்தாமலிருக்கமுடியாது. கலியாணத்திற்கு நானும் என் கணவரும் வருகின்றோம்.

அன்புள்ள,

வசந்தி.

பிரியம்வதா இந்தக் கடிதத்தைத் தன் அன்னைக்குக் காட்டினுள். தாயும் சம்மதத்தை அளித்துவிட்டாள்.

வெகு சிறப்பாகத் திருமணம் வகுளாபுரத்தில் நடந்தது. சிலர் இந்த மணத்தை மெச்சினர். வேறு சிலர் இதைப்போலப் பைத்தியக்காரத்தனம் உண்டா என்று வருத்தப்பட்டனர். ஆனல் பிரியம்வதாவுக்கும், சபாபதி ஐயருக்கும் கிளர்ந்தெழுந்த உவகையோ சொல்லில் அகப்படாது. உவகை நறவைப் பருகி அப்படியே மெய்மறந்தனர். நாட்கள் தேய்ந்தன.

வாழ்க்கைப் புத்தகத்தில் குடும்ப அத்தியாயம் பிரியம்வதாவிற்குத் தொடங்கிற்று. வீட்டில் சமையல்காரன் இருந்தபோதிலும், தானே அவருக்குச் சாதத்தைப் பிசைந்து தருவாள். உண்டியில் உள்ள சுவையில் அவள் கைபட்டவுடனே ஒரு புதிய சுவை மலர்ந்து சபாபதி ஐயரை இன்புறச் செய்யும். அவருடைய வேஷ்டிகளைத் துவைத்துக் காயவைப்பாள். எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுவாள். புதிய ஆடைகளை அவருக்கு அணிவாள். ஒவ்வொரு காரியத்தையும் தானே செய்து வருவாள். அப்படிச் செய்வதில் அவளுக்குள்ள இன்பத்தை என்னவென்று இயம்புவது?

சபாபதி ஐயர் சில சமயங்களில் தம்மை மறந்து பாடுவார். பிரியம்வதா அப்பாட்டில் ஆழ்ந்து விடுவாள். அக் கான விருந்தை அருந்துவதில் அவளுக்குச் சலிப்பு ஏற்படுகிறதில்லை. கேட்கக் கேட்க அதில் ஒரு புதிய பசி தோன்றும், ஒரு புதிய தாகம் ஏற்படும். பிரியம்வதா பாடுகின்ற பொழுது அவளுடைய அமுத கீத வலையில் அப்படியே சிக்குண்டு கிடப்பார்.

என்னபாக்கியம் பெற்றேனே? என்னை மணந்த மனைவி ஒரு மனிதப் பிறவியாகத் தோன்றவில்லை. ஏதோ ஒரு தெய்வந்தான் என்பால் இரக்கங் கொண்டு, ஒரு பெண் வடிவை எடுத்து வந்திருக்கிறது என்றெல்லாம் எண்ணுவார். ஒருவர் மற்றொருவரைத் தெய்வமாகக் கருதி வந்தனர். இருவரும் இன்ப வெள்ளத்தில் மிதந்து கொண்டே போயினர்.

கால அளவில் இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. பையனுக்கு அசோகன் என்ற பெயரை வைத்தனர். பெண்ணிற்குச் சகுந்தலா என்ற பெயரைச் சூட்டினர். மழலை முற்ருத சொல்லால் இக் குழந்தைகள் கூப்பிடும். குழந்தைகளைக் கையால் தடவிப் பார்ப்பார் சபாபதி ஐயர்.

அசோகனின் கண்களைப் பார்த்தீர்களா? எத்தனை விசாலமான கண்கள். சகுந்தலாவின் அழகைச் சொல்லி முடியாது. அதைப்பார்த்தீர்களா? என்று உணர்ச்சி வேகத்தில்பேசி விடுவாள். பிறகுதான் தன் கணவனுக்குக் கண்ணில்லை என்ற ஞாபகம் வரும். என்ன இது மாதிரி கேள்வியைக் கேட்டுவிட்டேனே? அவர் மனம் புண்படுமே? என்று நினைப்பாள்.

எனக்குக் கண்களுண்டோ, இந்தக் குழந்தைகளைக் கண்டு களிக்க? என்று அவர் கூறும் சொல்லில் புகலரும் சோகம் தொனிக்கும்.

கணவனுக்குக் கண்களிருந்தால் எத்தனை இன்பமாயிருக்கும் என்ற எண்ணம் அவள் மனத்தில் எழும், கண்கள் வந்துவிட்டால் எங்களிடையில் நிலவியிருக்கும் நிலையில் மாறுதல் வருமோ என்ற ஐயம் சற்றுத் தலையைத் தூக்கும்.

குழந்தைகளின் வடிவுகளைக் கற்பனைக் கண்கள் கொண்டு சித்திரிப்பார் சபாபதி ஐயர். இப்படிக் கற்பனை செய்வதில் கவிக்கு வருகின்ற இன்பம் பிறக்கும்.

* * *

அந்த ஊரில் ஜேம்ஸ் என்ற ஒரு கண் வைத்தியர் வந்தார். மேனுட்டில் பெரிய, பெரிய பரீட்சைகள் எல்லாம் கொடுத்துப் பல பட்டங்கள் பெற்றவர். கண்கள் முழுதுமே தெரியாதவர்களுக்கு வேறு கண்களை அமைத்துக் குணப்படுத்தியிருக்கிருர். இறந்தவர் கண்கள் கெடுவதற்குமுன் அவைகளைத் தகுந்த முறையில் பத்திரப்படுத்தினுல், அக்கண்களைக் கண் அவிந்தவர்களுக்கு அளிக்கலாம் என்ற ஆராய்ச்சி செய்து அவ்வாராய்ச்சியின் பயனுக அநேகம் பேர்களைக் குணப்படுத்திய செய்தி எங்கும் பரவிற்று.

பிரியம்வதா இந்தச் செய்தியைக் கேட்டவுடன் டாக்டரைத் தன் வீட்டிற்கு அழைத்து வந்தாள்.

'டாக்டர் அவர்களே, என் கணவருக்குக் கண் பார்வை வருமா?'

'வராமல் என்ன அம்மணி. நான் குறித்த நாளில் குறித்த மணியில் வந்தால் வேறு கண்களை வைக்க முடியும். உங்கள் கணவரின் சம்மதத்தைக் கேளுங்கள்'

'என் கணவரைக் கேட்பானேன்? நான் சொன்னலே போதும். நான் வேறு அவர் வேறில்லை.'

டாக்டரின் உதடுகளின்மீது ஒரு புன்முறுவல் தவழ்ந்து விளையாடிற்று.

'என்ன இருந்தாலும் அவரை ஒரு வார்த்தை கேளுங்கள். ஆப்பிரேஷன் செய்து கொள்ளுகிற வர் நாமில்லையே, அவர்தானே'

'அப்படியே செய்கிறேன்.'

'டாக்டர் வந்திருக்கிருர்.'

'அப்படியா? வரச்சொல்லேன். 'டாக்டர்வாள் நமஸ்காரம்.'

டாக்டர் கண்களைப் பரிசோதிக்கிருர்,

'ஆப்பிரேஷன் செய்து கொள்ளுவதற்குத் தங்களுக்குச் சம்மதந்தான?' என்று கேட்கிருர்.

'பிரியம்வதா உன் சம்மதம்?'

'என் சம்மதமே. இப்படித்தான் டாக்டரிடம் சொன்னேன்.'

ஒரு புன்முறுவல் சபாபதி ஐயர் உதட்டில் அரும்பிற்று.

'டாக்டர், பார்த்தீர்களா? என் கணவன் நான் சொன்னத்தை ஆமோதித்ததை.'

'அதிருக்கட்டும், அம்மணி! நான் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நிமிஷத்தில் வர வேண்டும். இல்லாமற்போனல் அந்த அபூர்வமான பொருள் நஷ்டமாகிவிடும். என்னுடைய வேலையும் கெட்டுப்போய்விடும்.'

'நாங்கள் குறித்த நாளில் வந்து சேர்வோம். உறுதியாகக்கூறுகின்ருேம்' என்ருள் பிரியம்வதா.

ஆப்பிரேஷனுக்கு முதல் நாள் இரவு ஊர் ஓசை அவிந்துவிட்டது. எல்லாம் துயில் மந்திரத்தில் சிக்கிக்கண்வளர்கின்றன. ஆனல் பிரியம்வதாவிற்குத் தூக்கமே வரவில்லை.

'டாக்டரை அழைத்து வந்தவள் நானே. என் நாதனுக்குக் கண்கள் தெரிந்துவிட்டால், உண்மையில் என் குழந்தைகளைகண்டு இன்புறுவர். காணுத காட்சிகளையெல்லாம் காண்பார். கண்பார்வை இல்லாததால் கண்களுக்குக் கோசரமான பொருள்களின் இன்பத்தை நுகரமுடியாதே. அவர் கண்கள் திறந்து அவர் இன்புற்ருல் அந்த இன்பம் என் இன்பந்தானே. கண்கள் திறந்தால் என் கோரத்தைக்கண்டு என்னைத் தள்ளிவைத்தால் அதற்கென்ன செய்வேன்? என்னுடைய சுயநலத்திற்காக அவருடைய இன்பத்தைக் குலைப்பதா? ஓர் அழகான பாடகனுக்குக் கண்திறந்துவிட்டால் வேறு பெண்களின் மீது காதல்கொண்டுவிடுவார்களல்லவா? அப்பொழுது நான் தனிவாழ்வு நடத்த நேருமே! மனத்தில் இப்படி இன்பத்தை அனுபவிக்க வேண்டுமென்ருல் கண் திறந்தே அனுபவித்துத்தான் போகட்டுமே. மனத்தில் தூய்மை உள்ளவராயிருந்தால் எந்தவிதத்திலும் என்னை அவர் கைவிடமாட்டார். மனத்தில் தீய எண்ணங்களைக் கொழு கொழுவென்று வளர்ப்பதைக் காட்டிலும் தீய துர்நடத்தையில் இறங்குவதே நல்லதன்ருே? மனத்தினல் செய்யும் பாவத்தைக் காட்டிலும், சரீரத்தினல் செய்யும் பாவம் பாதகமில்லை. கண் திறப்பதால் அத்தகைய பாவம் சம்பவிக்கட்டுமே. ஆனல் அவரை அப்படி நினைப்பதே பாவமாயிற்றே. கள்ளங்கபடற்ற உள்ளமாயிற்றே, அவருடைய உள்ளம். சங்கீதத்தைத் தெய்வக் கலையாகப் பாவிக்கின்றவரைப்பற்றித் தப்பெண்ணம் கொள்ளுகிற எனக்கு இதைவிடத் தீச்செயல் வேறென்ன வேண்டும்? அவருக்கு எது உவப்போ அதைச் செய்வதாகவே அக்னிசாட்சியாய் மணம் புரிந்தேனே. அவருடைய இஷ்டப்படியே நடப்பேன்.'

இப்படி மாறி மாறி அடிக்கும் எண்ண அலைகள் மீது சென்ருள். அவள் இரவும் கடல் போல் விரிந்துகொண்டே போயிற்று.

சபாபதி ஐயரும் தூங்கவில்லை. என் கண்கள் திறந்தால், என் குழந்தை அசோகாவின் கண்ணழகைப் பருகும் பாக்கியம் கிடைக்கும். சகுந்தலாவின் சௌந்தரிய வெள்ளத்தில் திளைப்பேன். எத்தனையோ புண்ணியத் துறைகளாடிக் கோயில்களைத் தரிசிக்க முடியுமே. என் மனைவிக்கு நான் ஏதாவது சகாயம் செய்ய முடியுமே. அவளை எப்பொழுதும் வேலை வாங்கும்படியான துர்ப்பாக்கியத்தைப் பகவான் எனக்கு வைத்துவிட்டானே.

அவன் என்ன செய்வான். என் கர்மாதானே என் கண்கள் அவியும்படி செய்தது. கண் வந்து

எனக்கென்ன ஆகவேண்டும். சுவாதீனம் வந்தால் பராதீனத்திலிருக்கிற இத்தனை இன்பம் வருமோ? சுவாதீனம் வேண்டாம். எனக்குக் கண்கள் வேணுமா? அவள் கண்களால்தான் நான் பார்க்கின்றேனே. இப்பொழுது என் அகக்கண்ணிற்கு அவள் ஒரு தெய்வமணிபோலத் திகழ்கின்ருள். திறந்து பார்ப்பதில் வேறு விதமாய்த் தோன்றிஞல் என்ன செய்வேன்? எந்த விதத்திலும் தெய்வ நிலையைப் பார்க்க வேண்டுமென்று நம்முடைய மறைகள் கூறுகின்றனவே. எப்படியிருந்தாலும் அந்தத் தன்மையைப் பார்ப்பது தானே அறிவாளிகளுக்கழகு. கற்பனைக் கண்ணுல் சித்திரிக்கிற இன்பத்தைவிடப் புறக்கண் வேறு இன்பத்தை அளித்துவிடுமோ, எனக்குக் கண் வேண்டாம். ஆப்பிரேஷனில் உயிருக்கு ஆபத்து வந்தால் என் செய்வது? என் மீது உயிரை வைத்திருக்கிற அவளுடைய கதி என்ன ஆகும்? ஆமாம், பொம்மைதான் கோபுரத்தைத் தாங்குகின்றதோ என்ற குரல் அவர் மனத்தின் அடிவாரத்தினின்று மேல் தளத்திற்கு வந்தது.

எல்லாம் இருந்தபடி இருக்கட்டும். ஒன்றும் வேண்டாம் என்ற தீர்மானத்திற்கு வந்து விட்டார்.

பொழுது புலர்ந்தது. ஆப்பிரேஷனுக்குப் போகவேண்டிய குறித்த காலமும் நெருங்கிக் கொண்டிருந்தது. நல்லப் புடவையை அணிந்து கொண்டு தன் கணவரிடம் போய் நின்ருள்.

'போகலாமா?' என்ருள்.

'எங்கே?'

'ஆஸ்பத்திரிக்கு, நேற்றுச் சொன்னதை மறந்து விட்டீர்களா? டாக்டர் காத்துக்கொண்டிருப்பார். ஆப்பிரேஷன் செய்து கொள்ளாது போனுல் அவருக்கு நஷ்டம் ஏற்படும். நம் வாக்கை நிறைவேற்ற வேண்டாமா?'

'நம் சமையற்காரன் மூலம் கடிதம் அனுப்பி விட்டேன். வேண்டாம் என்று தெரிவித்தாய் விட்டது. நஷ்டம் வராமற் பார்த்துக்கொண்டு விட்டேன். ஆயிரம் ரூபாய் பணத்தையும் கொடுத்தாய்விட்டது'

'ஏன் அப்படிச் செய்தீர்கள்?'

'எனக்கு மனம் வரவில்லை.'

பிரியம்வதாவின் மனத்தில் ஒரு சந்தோஷம் எழுந்தது. என்ன பைத்தியக்காரத்தனம் .பிறர் குறைவிலே எழுகிற சந்தோஷம் சந்தோஷமாகுமா?

எத்தனை சுயநலம் என்று தன்னைக் கடிந்து கொண்டாள். சுயநல உணர்ச்சி, உவகை இவைகளைக் கடிகின்ற தூய நல்லறிவு எல்லாம் அவள் மன அரங்கில் போராடின. எந்தப் பக்கமும் சாயாத அலை உச்சியில் நிற்கும் துரும்பென அவள் உள்ளமிருந்தது.

'பிரியம்வதா என்னைப் பற்றிக் கவலைப்படாதே. உன் கண்களே எனக்குக் கண்கள். மேலும் வேறு கண்கள் வேண்டேன்.'

இம் மொழிகளைக் கேட்ட அவள் கண்களில் நீர் மல்கிற்று. அவளுடைய கன்னங்கள் மீது கண்ணீர் வழிந்தோடிற்று. அவளுக்குப் பெருமூச்சு வந்தது. வார்த்தைகள் நெஞ்சில் இறந்தன. வாளா அவள் நின்ருள்.

'ஏன் பேசவில்லை. இதற்காக மனம் நொந்து போகவேண்டாம். எல்லாம் அவன் செயல்.'

'எனக்கொன்றும் புரியவில்லை தங்களுடைய இஷ்டம்' என்று சொல்லி விட்டுத் தன் அறைக்குச் சென்று வாய் விட்டுப் புலம்பினுள்.

எத்தனை சுயநலம் எனக்கு! எத்தனை பெருந்தன்மை அவருக்கு! என்ற எண்ணம் அவள் மனத்தில் அலைமோதிற்று.

* * *

டாக்டர் இவர்கள் வருவதை எதிர்பார்த்துக் கொண்டே இருந்தார். வரக்காணும். அங்குள்ள கூட்டம் மோட்டார் சப்தம் கேட்கும் போதெல்லாம் சபாபதி ஐயர் வருகிருர் என்று எதிர்பார்க்கும், ஆனுல் ஏமாற்றந்தான். கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டங் கரைந்தது. சமையற்கார ராமு அங்கே போனதும் அங்கே கூடியிருக்கிற ஜனங்களுக்கு விஷயம் விளங்கிவிட்டது. டாக்டருக்கு ஒரு விஷயத்தில் மகிழ்ச்சிதான். கேட்ட ரூபாய்க்கு மேல் அவருக்குப் பணம் வந்து விட்டது. தம்முடைய புகழுக்குக் குறைவு வந்து விட்டதே என்றெண்ணினுர், ஆப்பிரேஷன் சரிவர முடியாது போனுல் அவருடைய புகழுக்குக் குறைவந்தாலும் வருமல்லவா? அவர் வந்திருந்தால் குணப்படுத்தியிருப்பேன் என்றும் சொல்லிக் கொள்ளலாமல்லவா?

அந்த அழகில்லாத அம்மணி சுயநலத்தால் அவரைத் தடுத்திருப்பாளா? அல்லது அந்த மனிதன் தன் உயிருக்குச் சேதம் வருமென்று வேண்டாமென நினைத்தாரா? கண்களில்லாமலிருந்தால் அவளுடைய அன்பிற்கு எப்பொழுதும் பாத்திரமாயிருக்கக் கூடும் என்று நினைத்தாரா? கண்கள் வேண்டாமென்று சொல்கிற இனத்தை என் வாழ்க்கையில் இப்பொழுதுதான் முதல் தரம் பார்க்கிறேன். இப்படி சிந்தித்தபடியே டாக்டர் வீடு சேர்ந்தார். இரவும் வந்தது. டாக்டர் அந்த அபூர்வ தம்பதிகளை நினைத்த படியே படுத்திருந்தார். விண்ணில் காதலுக்குக் கண்கள் உண்டோ என மீன்கள் பாடின அப்பாட்டிற்கு அண்ட சராசரங்களனைத்தும் எதிரொலி கொடுத்துக் கொண்டிருந்தன.

[என் கற்பனைச் சுடரைத் தூண்டியது ஆந்தரே மோர்லி சித்திரித்த ஒரு சம்பவமாகும்]

மீண்ட வாழ்வு

ஸி. ஆர். ராஜம்மா

என்னை அவர் எவ்வளவு ஆசையுடன் மணந்து கொண்டார். அன்பு காட்டி ஆதரித்து வந்தார். அவைகளை எல்லாம் நினைக்கவே இன்பமான எண்ணங்களால் உடல் புல்லரிக்கிறதே. இன்று எல்லாம் பகற்கனவாகவல்லவா போய் விட்டன. மீண்டும் அந்த நாட்கள் வருமா?

அந்த இன்ப நாட்களை மீண்டும் நீ அடையலாம். அவருடைய உள்ளத்து அன்பு உன்பால் வற்றிப்போய்விடவில்லை. அதை வற்றவைக்க நீ முயலுகிறாய், அவ்வளவுதான், என்று என்னுள்ளம் சொல்கிறது. அதே மனம் இன்னொரு முறை என்ன சொல்கிறது தெரியுமா? 'உமா நீ சுயநலக்காரி. கணவனுடைய அன்பைப் பெற வேண்டி என்னவேண்டுமானாலும் செய்துவிடலாமா? அதற்கும் ஒரு முற்றுப் புள்ளி—எல்லைக் கோடு என்பதெல்லாம் உண்டு' என்று சொல்லிற்று. நான் இரண்டில் எதைச் செய்வது என்று தெரியாமல் திண்டாடினேன். இந்த நிலையில் என் கணவரின் வெறுப்பும் உதாசீனமும் அதிகமாகிக்கொண்டு வந்தன. அவர் வீட்டிலில்லாத சமயங்களில் கடந்தகால இன்ப வாழ்வை எண்ணிச் சிறிதளவு சாந்தியடைவது பழக்கமாகிவிட்டது.

சந்திரன். அவர்தான் என் கணவர். எவ்வளவு அழகானவர். உருண்டையான அவர் முகத்தையும், திரட்சியான அங்க அவயவங்களையும் இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாமே. கம்பீரமான அவருடைய தோற்றமும், நாகரிகமான நடையுடை பாவனைகளும் என்னை எளிதில் கவர்ந்துவிட்டன. பெற்றோர்கள் வைத்துவிட்டுப்போன சொத்தை வைத்துக்கொண்டு சுகஜீவியாகக் காலம் கழித்து வந்தார் அவர். நான் கலாசாலையில் படிக்கும்போதுதான் என்னுடன் அவர் பழக்கமானார். 'உமா' என்று அவர் அன்புடன் அழைக்கும்போது 'ஏன்' என்றுகூடக் கேட்கமுடியாதபடி உணர்ச்சி வசமாவேன் நான். ஆனால் என் உள்ளத்து உணர்ச்சிகளை மூட்டை கட்டி வைத்துவிட்டு வெகு கட்டுப்பாடாகவே நடந்துகொள்ளுவேன். காரணம். எனக்கும் அவருக்கும் அந்தஸ்தில் மலைக்கும், மடுவுக்குமுள்ள வித்தியாசம் இருந்ததுதான். ஏராளமாகப் பணத்தை மொத்தமாகச் சேர்த்து செலவு செய்யமுடியாததினால்தான் நான் கல்யாணம் ஆகாமல் கலாசாலை மாணவியானேன். உபகாரச் சம்பளம் இருந்தும் குடும்பக் கஷ்டம் அதிகமாகவே இருந்ததால் படிப்பில் கவனம் செலுத்துவதில் சிரமமாகவே இருந்தது. வறுமையின் நடுவே பெற்றோருக்கு ஒரே பெண்ணாக இருந்த நான் படித்து உத்தியோகத்திலமர்ந்து குடும்பத்தை நல்ல நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணம் இருக்கும்போது சந்திரனை நான் எப்படி நேசிக்கமுடியும். அந்தஸ்து என்ற உயரமான மாடியில் உள்ள அவரைத் தரையில் இருந்த நான் நிமிர்ந்து பார்த்து பெருமூச்சு விடத்தானே முடியும். என் காதலை, கட்டறுத்த காட்டாறு போல அல்லாமல் அதிக ஆழத்துடன் கட்டுக்கடங்கி ஓடும் காவிரியைப்போல நிதானப்படுத்திக்கொண்டேன்.

அந்த வருஷம் பி. ஏ. முதல் கிளாஸில் படித்துக்கொண்டிருந்தேன். இந்தச் சமயத்தில் இடி போன்ற செய்தி ஒன்று என்னைத் தாக்கிப் பிரமை கொள்ளச் செய்தது. என் முன்னேற்றத்திலேயே கண்ணாக இருந்த தகப்பனார் விஷ ஜ்வரத்துக்குப் பலியானார். நான் படிப்பை இத்துடன் முடித்துக்கொண்டு தாயாரையும், என்னையும் காப்பாற்றிக் கொள்ள ஏதாவது வழிதேட வேண்டும் என்ற முடிவுக்குவந்தேன். இந்த முடிவைச் சந்திரனிடம் கூறியபோது அவர் திடுக்கிட்டுப் போனார். பிறகு குறும்பாகச் சிரித்தார். "உமா அவசரப்பட்டு ஏதாவது செய்துவிடாதே. உன் தாயாரை நாமிருவருமாகப் போய், பார்த்துவிட்டு வரலாம். உனக்குச் சம்மதம்தானே" என்றார். நான் மௌனமாக என் சம்மதத்தைத் தெரிவித்தேன்.

அடுத்த ஞாயிற்றுக் கிழமை சந்திரனுடைய காரிலேயே பன்னிரண்டு மைலிலுள்ள என்

பெற்றோரின் கிராமத்திற்குப் போனோம். அம்மா என்னையும் சந்திரனையும் கண்டு பிரமித்தே போனாள். கிராமத்து ஜனங்களுக்குக் கேட்கவா வேண்டும். என்னவோ குசு குசுவென்று பேசிக் கொண்டார்கள். நான் அம்மாவுக்குச் சந்திரனை அறிமுகம் பண்ணி வைத்துவிட்டு, சிற்றுண்டி தயாரிக்கச் சமையலறைப் பக்கம் போய்விட்டேன். சிறிது நேரத்திற்குப்பிறகு காப்பியுடனும் பலகாரத்தட்டுடனும் கூடத்திற்கு வந்தபோது சந்திரன் ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அம்மா நின்றுகொண்டிருந்தாள். "உமா' உத்தியோகம் வகிப்பதற்காக வேண்டி, படிக்கப் போய் ஒரு கணவனை வரித்து விட்டாயே. தன் மனைவி ஒரு பி. ஏ. யாக இருக்க வேண்டுமென்று அவருக்கு ஆசை. அதனால் உன் படிப்பை ஏற்றுக்கொள்ளுகிறாராம். படிப்பு முடியும்வரை கல்யாணத்திற்காகக் காத்துக்கொண்டிருக்கிறாராம்" என்றாள் அம்மா. என்னதான் படித்த பெண்ணாக இருந்தாலும் எனக்கு வந்த வெட்கத்தைச் சொல்லி முடியாது. ரேழி உள்ளுக்கு ஓடி விட்டேன். எனக்கு இவ்வளவு அதிர்ஷ்டத்தைக் கொடுத்த என் அழகைக் கண்ணாடியில் பார்த்துப் பெருமையடைந்தேன். சுருண்ட கூந்தலை வாரி விட்டுக்கொண்டேன். நீண்ட கண்களுக்கு மை தீட்டி, கண்ணாடிக் கன்னத்தைத் துடைத்துவிட்டுக் கொண்டேன். சந்திரனுக்குத்தான் என்னிடம் எவ்வளவு பிரேமை. என்ன நம்பிக்கை. எத்தனை பொறுமை என்று எண்ணி வியந்தேன். அம்மாவுக்கு இந்தக் கல்யாணத்தில் பூரண சம்மதமில்லை. "உமா, நம் அந்தஸ்த்துக்குத் தகுந்த இடத்தில் நாம் சம்பந்தம் வைத்துக் கொண்டால்தான் நமக்கு மதிப்பு" என்று நான் புறப்படும்போது மெதுவாகச் சொன்னாள் அவள். அவள் சொல்லுவது எனக்குப் பிடிக்கவில்லை என்பதை அலக்ஷ்யமான பார்வையாலும், மௌனத்தாலும் அவளுக்குத் தெரிவித்தேன்.

நாட்கள் பறந்தன. நான் பி. ஏ. பரீக்ஷையில் தேறினேன். சந்திரனுக்கும் எனக்கும் விமரிசையாகத் திருமணம் நடந்தது. விஸ்தாரமான பெரிய பங்களாவில் என் வாழ்வு இன்பமாக ஓடியது. அவர் வியாபாரத்தில் பணத்தைப் போட்டார். ஏகமாகலாபம் கிடைத்தது. டீ பார்ட்டி, வெளியூர்ப் பிரயாணம், நண்பர்களுடன் பிக்னிக்—இப்படியாக உல்லாச வாழ்க்கை நடத்தினோம். அவர் எங்கே வெளியில் செல்லவேண்டுமானாலும் சரி, நானில்லாமல் அவர் போகமாட்டார். உமா, உமா, என்று வாய் ஓயாமல் கூப்பிட்டுக் கொண்டே இருப்பார். என் நிறைந்த மனதில் ஒரு சிறு குறை இருந்தது, என் தாயாரை நான் என்னுடன் கூட்டிவைத்துக்கொள்ள அவர் அனுமதிக்காததுதான். மாதாமாதம் பணம் அனுப்பி வந்தேன். அடிக்கடி போய்வருவேன். இவ்வளவோடு சரி.

காலம் நகர்ந்தது. எனக்கு இந்த வாழ்க்கை மெள்ள மெள்ளச் சலிப்புத்தட்டத் துவக்கியது. டம்பப் பை, உதட்டுச் சாயம், குதி உயர்ந்த மிதியடி, இவைகளைக் கண்டால் வெறுப்புத் தோன்றும். அவைகளுக்கு நான் அடிமையாகிவிட்டது போன்ற ஒரு உணர்ச்சி. அவரோ என் இயற்கையழகுடன் செயற்கையழகையும் பார்க்க ஆசைப்படுகிறார், வற்புறுத்துகிறார், என்ற நிலைமை ஏற்பட்டது. எனக்கு நிம்மதியாகச் சிறிதுநேரம் வீட்டிலிருக்கவேண்டும்போல் இருக்கும். அந்தச் சமயங்களிலெல்லாம் தம் நண்பர்களை வீட்டில் கூட்டிவைத்துக்கொண்டு கொட்டமடிப்பார். நானும் நடுநடுவே அவர்களின் பேச்சில் கலந்துகொள்ளாவிட்டால் பிரமாத கோபம் வந்துவிடும். இதெல்லாமாகச் சேர்ந்து எங்கள் இருவருக்கும் நடுவே சௌஜன்யக் குறைவை ஏற்படுத்தியது.

நான் கர்ப்பவதியானேன். இதை அவர் அறிந்தால் என்ன சொல்லுவாரோ என்று பயந்தேன். என் அழகுக்கு அடிமையான அவர் நான் தாய்மை எய்துவதைவிரும்புவாரா? இதுதான் பெரியபிரச்னையாக இருந்தது. இதற்கு நான் ஒருமுடிவு காணுமுன்பே அவருக்கு என் நிலைமை தெரிந்துவிட்டது. இந்த விஷயம் நான் நினைத்ததுபோல் அவருக்கு வெறுப்பையோ, கோபத்தையோ உண்டாக்கவில்லை. அளவிடமுடியாத மகிழ்ச்சியைத்தான் உண்டாக்கியது. 'உமா, உன் குணம் மாறுபட்டுவருவதின் ரகசியம் எனக்குத் தெரிந்துவிட்டது. இந்தமாதிரி சமயங்களில் ஒவ்வொருவர் ஒவ்வொருமாதிரி இருப்பார்கள். என் தகப்பனாருக்கு அருமையாக ஆஸ்திகளை ஆள நான் ஒரே ஒரு பிள்ளைதான். அதேமாதிரி நமக்கும் ஒரே ஒரு செல்வம் வேண்டியதுதான்" என்று உணர்ச்சி பொங்கக் கூறிய அவர் அன்பு ததும்ப என்னைப் பார்த்தார். நான் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினேன்.

சேகர். அவன்தான் என் குழந்தை. அவன் பிறப்பதற்குள் அவர் குழந்தைக்காக வேண்டி எத்தனை சாமான்கள் வாங்கியிருப்பாரென்று கணக்கிட முடியாது. அவரிடம் கேமிரா உண்டு. குழந்தையை ஒவ்வொரு மாதமும் பல பல கோணங்களில் போட்டோ பிடிப்பதற்காக, பிலிம்கள் தயார் பண்ணி வைத்துக்கொண்டார். தினுசு தினுசான சின்னதும் பெரியதுமான பொம்மைகள் விளையாட்டுச் சாமான்கள், விலை உயர்ந்த துணிகளில் விதம் விதமான சட்டைகள். குழந்தை உன்னைப் போலத்தான் கண்கவர் அழகாய் இருக்கவேண்டும் என்பார் அவர். ஊஹும் உங்களைப் போலத்தான் மனதை மயக்கும் மன்மத ரூபமுள்ளதாக இருக்கவேண்டுமென்று நான் சொல்லுவேன். யாரைக்கொண்டு பிறந்தாலும்சரி, குழந்தை அழகாக லக்ஷணமாக இருக்க வேண்டும். என்று அம்மா கடிதமெழுதியிருந்தாள்.

குழந்தையை நாங்கள் எவ்வளவு ஆவலோடு எதிர்பார்த்தோமோ, எத்தனை ஆசையாக வளர்க்கத் திட்டமிட்டோமோ அது ஒன்றுமே

நடைபெருமல் போய்விட்டது. நான் ஆஸ்பத்திரியில் சேகரைப் பிரஸவித்தேன். நாங்கள் யாரும் விரும்பாமலேயே என் தாயார் என்னைப் பாதுகாக்க வந்துசேர்ந்தாள். 'அம்மா உனக்கு அவர் சரியான வரவேற்பு அளிக்கமாட்டாரே. நீ ஏன் வந்தாய்' என்று கேட்டு விட்டேன். என் தாயார் வருத்தப்படவில்லை. வெறுப்பாகச் சிரித்துக்கொண்டாள். 'உமா, நீ என் பெண். உனக்கு என்னுலான உதவியைச் செய்ய வந்திருக்கிறேன். இந்த விஷயத்தில் யாருடைய விருப்பு வெறுப்பையும் நான் லக்ஷ்யம் செய்யப் போவதில்லை' என்று அவள் கூறியபோது, நான் ஹோவென்று கதறிவிட்டேன். என் தாயார் எனக்கு ஆறுதல் சொன்னுள். 'உமா' எனக்கு முன்பே இப்படி நடக்குமென்று தெரியும். நான் பழங்காலப் பழக்க வழக்க முடையவள். என்னை உன் கணவன் பல பேருக்கு முன்னிலையில் அறிமுகப்படுத்த விரும்பமாட்டான். இதனுல்தான் நான் உன்னுடன் வந்திருக்க அனுமதிக்கவில்லை. நீ எப்படியும், சுகமாக இருந்தால் போதுமென்றுதான் இந்தக் கல்யாணத்தை நான் தடை செய்யவில்லை. உமா, இதெல்லாம் கடந்து போன விஷயம். பேசிப்பயனில்லை. இனிமேல் நடக்க வேண்டியதை கவனிக்கலாம். உன் குழந்தை—அவன் கதி என்ன? அதைப்பற்றிச் சிந்தித்து நீ ஒரு முடிவுக்குவா?' இதைச் சொல்லி விட்டுக் கண்களைத் துடைத்துக்கொண்டாள் அம்மா.

சேகரை ஒரே ஒரு முறைதான் வந்து பார்த்தார் அவர். அப்புறம் வரவே இல்லை. சேகர் நாங்களெல்லோரும் கற்பனை செய்ததுபோல அழகின் அவதாரமாக வந்து பிறக்கவில்லை. கன்னம் கரேலென்று தலையில் அதிகம் மயிரே இல்லாமல் சப்பை மூக்குடன் இருந்த அந்தக் குழந்தை என் கணவருக்கு எந்த வித மான பாசத்தையோ, ஆசையையோ உண்டாக்கவில்லை. இது நானும் எதிர் பார்த்ததுதான். ஆனல் அவர் நெஞ்சம் இவ்வளவு தூரம் கல்லாக இருக்கும் என்று நான் எண்ணவில்லை. அவர் அன்பு செலுத்தா விட்டால் போகட்டும், வெறுக்காமல் இருந்தால் போதும் என்றுதான் எண்ணினேன். அவர் குழந்தையை மட்டும் வெறுக்கவில்லை. அதைப் பெற்ற என்னையும் வெறுத்தார். சேகரை என் தாயாரின் வளர்ப்பில் விட்டுவிட்டு நான் பழையபடி இவருடன் உல்லாச வாழ்க்கை நடத்த வேண்டுமாம். அழகுக்கு அடிமையான இவர் உள்ளம் இன்னும் என்னவெல்லாம் நினைக்குமோ யார் கண்டது?

* * *

"சந்திரன்," என்று உமா என்னை அழைப்பாள். அந்த அழைப்பில்தான் எவ்வளவு இனிமை. நான் என்னை மறந்துபோவேன். சந்திரனின் மனைவி அழகானவள். படித்தவள் என்று எல்லோரும் சொல்லவேண்டும் என்பதற்காகவே நான் உமாவை மணந்தேன். எனக்கு டாம்பீகமாக வாழவேண்டிய வசதிகள் இருந்தன. என்னைக் கட்டுப்பாடு பண்ணச்சுற்றத்தாரோ, நெருங்கிய பந்துக்களோ கிடையாது. அப்படி யாராவது இருந்திருந்தால் உமா எப்படிப்பட்டவளாக இருந்தாலும் நான் அவளைக் கல்யாணம் செய்துகொண்டிருக்க முடியுமா? உமா கனவிலும் நினைக்க முடியாத சுகபோக வாழ்வையளித்தேன். எனக்கு மட்டும் குழந்தைப் பாசமில்லையா? இல்லாமலா நான் அவன் பிறப்பதற்கு முன்பே இவ்வளவு சாமான்களை வாங்கிக் குவித்தேன். யாரோ உமாவின் பாட்டியாம், எங்களை எல்லாம் விட்டு விட்டுச் சேகர் அவள் ஜாடையாகவா பிறந்து தொலைக்க வேண்டும்? நான் என்ன செய்யட்டும்; என் உள்ளம் என்னையறியாமலேயே அழகுக்கு அடிமையாகி விட்டது. இல்லாவிட்டால் நான் உமாவை மணந்து கொண்டிருப்பேனு? பிறர் புகழ்ச்சியில் மனம் மகிழக் கூடியவன் நான். என்னையும் உமாவையும் எல்லாவற்றிற்குமே புகழ்ந்து கூறுபவர்கள் முன்னுல் சேகரைக் கொண்டு போனல் எப்படியிருக்கும். தனக்கு மட்டும்தான் குழந்தையிடம் அன்பு உண்டு என்று எண்ணிக்கொண்டிருக்கிருள் உமா. அவள் வெளியே காண்பிக்கிருள். நான் காண்பிக்க வில்லை. சேகரை இன்னெருவர் பார்த்து நகைக்கும்படி நான் விடமாட்டேன்.

கொஞ்ச நாட்கள்வரை அவன் தன் பாட்டியிடம் வளரட்டும் என்று சொன்னல் உமா கேட்கமாட்டேன் என்கிருள். குழந்தையை விட்டுப் பிரிந்திருக்க அவளால் முடியாதாம். கோபமாக நடந்து கொண்டேன். அவள் மீது உதாசினமாக இருந்தேன். எதையாவது அவள் லக்ஷ்யம் செய்தால்தானே. சேகர் ஒருவன்தான் அவளுக்கு முக்கியமாகத் தோன்றினன்போலும். அவனுக்காக அவள் எதையும் பொறுத்துக் கொள்ளச் சித்தமாக இருந்தது எனக்கு உண்மையிலேயே ஆத்திரத்தைத்தான் மூட்டியது. என் உடைமையான உமாவை அவன் கவர்ந்து கொண்டது போன்ற ஒரு உணர்ச்சி தோன்றியதும் நான் பொருமையடைந்தேன். சதா நண்பர்களுக் கிடையே இருக்கும் நான் அவர்களிடமிருந்து விலகிக்கொள்ள நேர்ந்தது. எங்கே அவர்கள் அவலக்ஷணமே உருவான சேகரைப் பார்க்க வந்து விட்டாலோ என்ற பயம்தான். இதெல்லாமாகச் சேர்ந்து சேகரிடமும், உமாவிடமும் மெள்ள மெள்ள மனக் கசப்பை உண்டுபண்ணத் துவக்கியது.

கடைசியில் என் அலக்ஷ்யத்தின் கடுமையைத் தாங்க மாட்டாத உமா சேகருடன் பிறந்த வீட்டிற்குப் போனுள். அவள் போகும்போது குழந்தையுடன் கண்ணீர் மல்க என் முன் நின்ற

காட்சி என் மனக் கண்ணைவிட்டு அகலவே இல்லை. 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்ற பழமொழி பொய்க்காது. சேகரைவிட என் சுகம் எனக்குப் பெரியதல்ல. அதனால் மலர்ந்து மணம் வீசக்கூடிய என் வாழ்வைக் கசக்கி எறிந்துவிட்டுப் போகிறேன். ஆனால் எப்பொழுதும் என் ஹ்ருதயத்தைவிட்டு உங்கள் உருவம் மறையாது. உங்களிடம் கொண்டுள்ள அன்பும் குறையாது.' என்று சொல்லிவிட்டு உமா பிறந்தகம் போனாள். என் நெஞ்சை நான் கல்லாகச் செய்துகொண்டேன். தவறாமல் அவளுக்கு வேண்டிய பணத்தை அனுப்பி வந்த நான், உமாவைப்பிரிந்த துயரை மறக்கவீட்டிற்கு வராமல் வெளியிலேயே காலம் கழித்து வரலானேன். நாடகம், சினிமா, பாட்டுக் கச்சேரி, இப்படி ஒவ்வொரு நாளும் தவறாமல் வீட்டிற்கு வர இரவு வெகுநேரமாகிவிடும்.

அன்று அப்படித்தான் இரவில் வந்து படுக்கும் போது இரண்டு மணியாகி விட்டது. கண் விழித்தபோது விடிந்து வெகுநேரமாகி இருப்பது போலத் தோன்றியது. படுக்கையிலிருந்து எழுந்திருக்க முடியவில்லை. தலை கனத்தது, உடலெல்லாம் வலித்தது. வேலைக்காரன் எனக்குப் போர்த்திவிட்டுப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தான். மிகுந்த சிரமத்தின் பேரில் டாக்டருக்கு டெலிபோன் செய்தேன். அவரும் வந்தார். வெளிப்பட எனக்கு ஒரு குறைவும் இல்லை. வேளைக்கு வேளை மருந்து கொடுக்க நர்ஸ் இருந்தாள். ஆனாலும் என்னுள்ளத்தில் ஏதோ ஒருகுறை. அந்தக் குறை உமா இல்லாததினால் ஏற்பட்டதுதான் என்று நிச்சயமாக உணர்ந்துகொண்டேன் நான். எனக்கு இந்த ஜ்வரம் என்ன செய்துவிடுமோ என்று பயந்து பதறக்கூடிய ஒரு ஜீவன் இங்கே இல்லையே.

நான் ஜ்வரத்தில் படுத்து இருபது நாட்கள் ஆகியிருக்கவேண்டும் என்று தினக்காலண்டரை பார்த்து ஊகித்துக்கொண்டேன். இவ்வளவு நாட்களும் பிரஞ்ஞை இல்லாமல் கிடந்த என் உருவத்தைக் கண்ணுடியில் பார்த்துக்கொண்ட போது நான் ஏன் இந்த நோயில் இறந்து போகாமல் இருந்தேன் என்று தோன்றியது. அதிர்ச்சியால் ஹ்ருதயம் வெடித்துப்போகாமல் எப்படி இருந்தது. என்னைக் கொடிய அம்மை நோய் பற்றிக்கொண்டு தன்னாலானவரை கைவரிசையைக் காண்பித்திருந்தது. ஐயோ! நான்பழைய சந்திரனா? என் சிவந்த மேனி எங்கே? பள பளப்பான உடலெங்கே? உடலெங்கும் கருமையான புள்ளிகள் பெரிது பெரிதாக விழுந்திருந்தன. தலைமயிரெல்லாம் பார்ப்பதற்கே அசங்கியம் போல உதிர்ந்து போயிருந்தது. சேகர்—உமா—உங்களுக்கு நானிழைத்த கொடுமைக்குத்தகுந்த தண்டனை அடைந்து விட்டேன். என் லக்ஷணமற்ற தன்மையைக்கண்டு உலகத்தார் நகைக்கட்டும். அப்போதுதான் நான் செய்த பாபம் தீரும்.

உமாவைக்காணவேண்டும். என் உள்ளக்குறை நீங்கியதை அவளுக்குச் சொல்லவேண்டும். என்ற ஆவல் என்னை உந்தித் தள்ளியது. அவள் உண்மையிலேயே நான் சொல்வதை நம்பினால் நம்பட்டும். இல்லாதுபோனால் வேண்டாம். என் ஹ்ருதயத்தைத் திறந்து காட்டிவிடவேண்டும் என்று புறப்பட்டேன். சேகருக்கு இப்பொழுது மூன்று வயதாகி இருக்கும். என்னைக்கண்ட உடன் தன் விரோதியைக்கண்டதுபோல ஓடி ஒளிவான் அவன். உமாகூட என்னைக்கண்டவுடன் திகைத்துத்தான் போவாள். புகைவண்டியினூடே இல்லாறெல்லாம் என் எண்ணங்களும் ஓடின.

* * *

துயரம் குவிந்த உள்ளத்துடன் ரேழியில் உட்கார்ந்திருந்த என்னை வாசலில் குழந்தையழும் சப்தம் திடுக்கிடவைத்தது. ஓடிச் சென்று பார்த்தபோது நான் கண்டகாட்சி என்னைத் தூக்கி வாரிப்போட்டது. கன்னம் கரேலென்று குச்சி போலிருந்த அவனை என் கணவர் தூக்கிவைத்துக் கொஞ்சிக்கொண்டிருந்தார். முன்பின் அறியாத அவர் பிடியிலிருந்து குழந்தை தன்னை விடுவித்துக்கொள்ளத் திமிரிக்கொண்டிருந்தது. பரட்டைத்தலை, உடலெங்கும் அழுக்கு. அவனைத்தூக்க என் கணவருக்கு எப்படி மனம் ஒப்பியது. என்னைக்கண்ட அவர் 'உமா. சேகரை இப்படியா தெரு வாசலில் விளையாட விடுவது? உனக்கு அடங்கமாட்டேனென்கிறுனில்லையா?' என்றார் குழந்தையின் கன்னத்தைச் செல்லமாகத்தட்டிக்கொண்டே. குழந்தையினால் அவருடைய அழகான உடை பாழாகியதையும் அவர் கவனிக்கவில்லை, 'குழந்தையை முதலில் கீழே இறக்கி விடுங்கள். அப்புறம் பேசலாம். அழுதழுது அவன் தொண்டைவறண்டு விட்டது' என்றேன் நான். என் பேச்சைக் கேட்டு அவர் முகம் கறுத்து விட்டது. 'உமா, நீ என்னை இன்னும் பழைய சந்திரனாகவேதான் எண்ணிக்கொண்டிருக்கிறாயா,' என்று கேட்ட அவர் நாத் தழுதழுத்தது.

"உங்கள் குழந்தை சேகர் உங்கள் அன்பைப் பெறும் பாக்கியத்தைச் செய்யவில்லை. அவன் இறந்து போய் மூன்று மாதங்களுக்கு மேலாகிறது. உங்களிடமிருந்து வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்ட அவன் விஷயத்தை உங்களுக்கு தெரிவிக்க வேண்டாமென்று இருந்தேன், இப்பொழுது நீங்கள் தூக்கிய சிறுவன் வேலைக்காரி வீரம்மாவின்குழந்தை. கிட்டத்தட்ட அவனுக்கும் சேகரின் வயதுதான். வேலை செய்ய முடியாமல் தொந்தரவு கொடுத்ததினால் வாசலில் கொண்டு வந்து உட்காரவைத்திருந்தாள். அவள் புழக்

கடையில் வேலை செய்து கொண்டிருக்கிருள்' குனிந்தபடியே இதைச்சொல்லிவிட்டு நான் அவரைப் பார்த்த போது அவர் சேகரின் போட்டோவைக் கையில் வைத்துக் கொண்டு விம்மிக் கொண்டிருந்தார்.

"உமா, என் மாறுபட்ட உள்ளத்தை உனக்குத் திறந்து காட்ட வழியில்லாமல் சேகர் இறந்து விட்டான். அவன் இறந்து விட்டதை நான் எப்படியோ கேள்விப்பட்டு இங்கு வந்ததாக நீ எண்ணப்போகிருய்.' இதைக் கூறிவிட்டு அவர் என் முகத்தை ஆவலோடு நோக்கினர். நான் அப்படி நினைக்கமாட்டேன். உங்களுக்குச் சேகரிடம் அன்பு உண்டாகிவிட்டது என்பதை நான் நம்புகிறேன். இதற்கு அத்தாக்ஷி நீங்கள் வேலைக்காரியின் சிறுவனை வைத்துக் கொஞ்சியதிலிருந்தே தெரியவில்லையா? ஆனல் இந்த மாறுதல் எப்படி ஏற்பட்டது என்று தான் தெரியவில்லை.' என்று நான் சொல்லிக் கொண்டிருக்கும்போதே என் தாயார் கணவருக்குக் காப்பியை எடுத்துக்கொண்டு அறைக்குள் வந்தாள். என் கணவர் போய் அவள் பாதங்களில் சாஷ்டங்கமாக நமஸ்காரம் செய்து,' நான் எவ்வளவோ தவறுதல்கள் செய்திருக்கிறேன். எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ளுங்கள்' என்ருர்.

என் கணவர் தாம் கண்ட கனவைப்பற்றிச் சொன்னபோது எனக்குச் சொல்லமுடியாத பிரமிப்பு ஏற்பட்டது. தான் வைசூரியினல் பாதிக்கப்பட்டு, அவலக்ஷணமாகி விட்டது போன்ற கனவு ஒன்று கண்ட அவர் மனம் வெகுவாக மாறிவிட்டது. அதைக்கனவு என்றே அவரால் நம்ப முடியாதபடி இருந்ததாம். அந்த ஒரு நாள் கனவு பல நாளாக அழகுக்கு அடிமையான அவர் உள்ளத்தை அடியோடு மாற்றி விட்டதென்ருல் அதனுடைய சக்தியை என்னவென்று சொல்வது?

"வாருங்கள் போகலாம். நீங்கள் இனிமேல் தனியாக கஷ்டபடவேண்டாம்" என்று என் கணவர் அம்மாவை அழைத்தபோது அம்மாவின் கண்கள் என் பக்கம் திரும்பின. அதனுடைய அர்த்தத்தைப் புரிந்துகொண்ட அவர் நவநாகரிகமாகவே இருக்கப்பிடிக்கும் எனக்குப் பழங்கால பழக்க வழக்கங்களுள்ள உங்களைப் பிடிக்குமோ? என்று தானே யோஜிக்கிறீர்கள். நான் பழைய சந்திரனல்ல. எனக்குத் தெரியும். என்னுடைய குழந்தைகள் பெரியவர்கள் ஆகும்போது எவ்வளவோ விதம் விதமாக நாகரிகம் மாறுதலடையலாம். அப்பொழுது அவர்களுக்கு என்னைப் பிடிக்காது என்பதை எண்ணவே மனம் நடுங்குகிறது. மரத்தில் பழுத்துப் போய்க் கீழே உதிரும் தருணம் பார்த்துக் கொண்டிருக்கும் இலையைப் பார்த்து, அப்பொழுதுதான் துளிர்த்து வரும் இலை பரிகசித்ததாம். அது போலத்தான் இருக்கிறது. நாளைக்கு அந்தத் துளிர் இலைக்கும் இதே கதி என்பது தெரியாது போலும். உடனே புறப்படுங்கள்" என்ருர் அவர். என் தாயாரால் அவருடைய உருக்கமான வேண்டுகோளைத் தட்ட முடியவில்லை.

ஹாலில் பெரிதாக மாட்டியிருந்த சேகரின் படத்தைப் பார்க்கும் போதெல்லாம் என் கண்களில் கண்ணீர் வருகிறது. சேகர் அழகான வகையில் பிறந்திருந்தால் என் கணவரின் குணம் என்றும் போலத்தான் இருந்திருக்கும். அவலக்ஷணமாகப் பிறந்த அவன் தெய்வப் பிறவியாகத்தான் இருந்திருக்க வேண்டும். நம் புராணங்களில்கூட கடவுள் பிறருக்கு நன்மை வேண்டித்தான் பார்க்கவே சகிக்காத பல உருவங்களைத் தாங்கியதாக நாம் கேட்டதில்லையா? என் வாழ்வைப் புதுமையாக்கிய சேகர் அமரன் தான் என் வரையிலும். ●

"காவேரி" ஏஜண்டுகள் :–

K. V. வெங்கட்டரமணன்
7-B 2, தெரு, காவல்ரி ரோடு கிராஸ்,
பங்களூர் கண்டோன்மெண்ட்,
பங்களூர்.

K. ராமசாமி
5, பாண்டி ரோடு,
விழுப்புரம்.

N. முத்துவிநாயகம்
108, காளியப்பன் தெரு,
தூத்துக்குடி.

பிரதிகள் அந்தந்த ஊர்களில் சௌகர்யமாகப் பெறலாம்.

உள்ளமும் உருவமும்

ஏ. எஸ். ராகவன்

மனதிலே புரண்டு ஆர்ப்பாட்டம் செய்த வேதனை அலைகளின் ஊசலைத் தாங்மாட்டாது தவித்தேன். ஒருவித மயக்கம் என்னை ஆட்கொண்டிருந்தது. என் முன் எல்லாமே தலை கீழாக நிற்பதுபோன்ற பிரமை உலுக்கியது!

ஆபீஸ் 'பியூன்' ராஜவேலு அரை மணியாக என்னைக் கூப்பிடுவதாக அடுத்த 'ஸீட்' அண்ணுசாமி என்முதுகில் தட்டி அறிவிக்கவே திடுக்கிட்டுத் திரும்பினேன். ஆம், அவன்தான் பவ்யமாக நின்றுகொண்டிருந்தான். நிலைமையைச் சமாளிக்க முகத்தில் புன்முறுவலை வரவழைத்துக்கொண்டு, 'என்னப்பா? ரொம்ப நாழியா நிற்கிறயா?...கவனிக்கவே இல்லியே,' என்றேன்.

அவன் சிரித்தபடியே, 'ஆமாங்க...எசமான் கூப்பிடறாரு' என்றான். பிறகு தாழ்ந்த குரலில் 'எதையோ பறிகொடுத்தவர் மாதிரி அசந்து உக்காந்துட்டீங்களே...என்ன விசயம், சாமி?' என்று கேட்டான்.

அவன் கேட்டது சரிதான். ஆபீஸில் நான் ஒருவன்தான் எப்போதுமே சிரித்த முகத்துடனும், உபகாரம் செய்யும் சிந்தனையுடனும் இருப்பவன். அடுத்த ஸீட் அண்ணுசாமி சுயகாரியப்புலி. காரியம் ஆகிறவரையில் குழைவான். என்வழக்கம் அப்படியில்லை. ஆனால் இன்று நானும் எதையோ பறிகொடுத்துவிட்டுத்தான் தவிக்கிறேன். இல்லை, இல்லை பறிகொடுத்த மாதிரிதான். என் மனநிலை எல்லோருக்கும் பட்டவர்த்தனமாகப் புரிகிறதா?

இடத்தைவிட்டு எழுந்தேன். ஐந்து அடி மூன்றுஅங்குலம் உயரமுள்ள நான் அப்போது அந்த ஆபீஸில் மிகவும் பரிதாபத்திற்குரிய பிராணியாக எனக்கே பட்டது. மானேஜர் அறையை நோக்கி நடந்தேன். அவர் உள்ளே போனில் பேசிக் கொண்டிருந்ததைகூடக் கவனியாது உள்ளே நுழைந்தேன். அவர் என்னை ஏறிட்டுப் பார்த்தார். அப்போது அவர் முகத்தைக் கவனித்தேன். அதில் பிரதி பலித்தது என்ன என்று புரியவில்லை. ராஜவேலுவை ஒரு வார்த்தை கேட்டிருந்தால் எஜமானன் மனநிலையைப்பற்றிச் சரியான அபிப்பிராயம் தெரிவித்திருப்பான்.

நான் நடுங்கியபடி நின்றேன். போனைக் கீழே வைத்துவிட்டு அவர் என்னைப் பார்த்தார். 'என்ன, மிஸ்டர் சுவாமி, நீர் இந்த உலகத்தில்தான் இருக்கிறீரா?' என்று கேட்டார்.

அந்தக் கேள்வி என்னைத் திடுக்கிடச் செய்தது. என் மனநிலை எல்லோருக்கும் இவ்வளவு பட்டவர்த்தனமாகத் தெரிந்து விட்டதே!

"இல்லே ஸார்..."என்று உளறினேன்.

"என்ன, ஐயா, இது?...'அர்ஜண்ட்' என்று கொட்டை எழுத்தில் எழுதி அனுப்பினேனே, அந்தப் பேப்பருக்கு இன்னுமா பதில் போடாதிருக்கிறீர்?...ஹெட் ஆபீஸுக்கு இன்றைக்கு 'ரிடர்ண்' போகாவிட்டால் என்ன ஆகும் தெரியும் அல்லவா?' என்று கேட்டார் அவர்.

என் தலையில் யாரோ சுத்தியால் அடித்தது போலிருந்தது. அடடா! எப்படிப்பட்ட பிழை செய்துவிட்டேன்! இப்போது என்ன பதில் சொல்வது? நடுங்கியபடி நின்றேன்.

"உமக்கு என்ன வந்துவிட்டது? உடம்பு சரியில்லையா? பேயறைந்தது மாதிரி நிற்கிறீரே.. உம்... போய் சீக்கிரம் அனுப்பும்...வரவரப் பொறுப்பானவர்கள்கூடத் தலைகீழாக வேலை செய்கிறார்கள்," என்று அலுத்துக்கொண்டார் அவர்.

நான் வெளியேவந்தேன். ஆபீஸே என்னைக் கவனிப்பதுபோலப் பட்டது. பெரிய குற்றம் செய்துவிட்டு அதற்கான தண்டனையைப் பெற்றுக்கொண்டு திரும்பும் கைதிபோலத் தவித்தது மனது. இடத்தை அடைந்ததும் உட்கார்ந்தேன்.

அண்ணுசாமி என்னைப் பார்த்துச் சிரித்தபடி 'என்ன ஐயா, விஷயம்?' என்று கேட்டான்.

அவனை முறைத்துப் பார்த்துவிட்டு அலுப்புடன், "என்ன விஷயமாக இருக்க முடியும்?... என் மூளை சரியாக இல்லை என்று மானேஜர் அபிப்பிராயப்படுகிறார்" என்றேன்.

இந்தப் பதில் அவனைச் சிரிக்கச் செய்துவிட்டது. அவன் வாய்விட்டுச் சிரித்தபடியே, 'ரொம்ப சரி...இங்கே வேலை செய்ய அது தேவை இல்லை," என்றான்.

நான் அவனை மீண்டும் ஒரு முறை முறைத்துப் பார்த்துவிட்டு, 'அவசரம்' என்று பொறிக்கப்பட்ட அந்தக் காகிதத்தை எடுத்து, பதில் எழுதத் தயாரானேன். அதற்குத் தேவையான பல விஷயங்களைச் சேகரிக்க, காலை நேரம் பூராவும் சரியாகப் போய்விட்டது. ஒருவழியாகப் பதிலைத் தயார் செய்து கையெழுத்துக்கு அனுப்பிவிட்டு, டிபன் சாப்பிட எழுந்தபோது மணி இரண்டு அடித்தது.

கையில் டிபனுடன் சாப்பிடும் இடத்தை நோக்கி நடந்தேன். 'டே, சுவாமி, என்னடா

டிபன்?' என்று கேட்டபடி வந்தான் கிருஷ்ணன். இவன் டிபன் கொண்டுவரும் வழக்கமே இல்லை. என்னைப்போலப் பலரிடம் மாதிரி வாங்கிச் சாப்பிட்டே காலத்தை ஒப்பேற்றிவிடுவான்.

"அடேடே!...சர்க்கரைப் பொங்கலா?... பேஷ்! பேஷ்!" என்று குதூகலித்தான் அவன், நான் டிபனை எடுத்தபோது.

"நீ சாப்பிடு...எனக்கு வேண்டாம்," என்று அவனிடம் அதை நீட்டினேன்.

"ஏனடா?......உனக்கு வேண்டாமா? பசி இல்லையா?" என்றான் அவன்.

தலையை ஆட்டி எனக்குப் பசி இல்லை என்பதை உதட்டைப் பிதுக்கி அறிவித்தேன். அவன் ஆனந்தமாகச் சாப்பிட ஆரம்பித்தான் 'அடே, தேவாமிர்தமா இருக்குடா...கொஞ்சம் சாப்பிட்டுப்பாரேன்...என்ன இருந்தாலும் நீ அதிர்ஷ்ட சாலி உன் 'ஒயிப்' சமையல் அற்புதம்,' என்றான் அவன்.

அவனுடைய புகழ்ச்சி என்னைக் கலங்க வைத்தது. நான் அதிர்ஷ்ட சாலி! நிஜமாகவா? இல்லவே இல்லை... எந்த மனைவியின் சமையலை அவன் புகழ்கிறானே, அதே மனைவியால் தான் இன்று என் மனநிலைமை தலைகீழாக மாறி விட்டது என்பதை அவன் என்ன கண்டான்?

காபி மட்டும் குடித்து விட்டு, அன்றைய பொழுதை ஓட்டி விட்டு மாலை வீடு திரும்பினேன். ஆனால் வீட்டுக்குப் போகவே மனம் வரவில்லை. அங்குப் போவதால் என் துயரம் அதிகரிக்கத்தான் போகிறது. வீடு என்னைப் பொறுத்தவரை சிறையாகக் காட்சி அளித்தது!

லீலா கண்ணாடி முன் நின்று கொண்டு தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய முகத்தைக் கண்ணாடியில் பார்த்து நான் பிரமித்து நின்றேன். எத்தனை கவர்ச்சிகரமான முகம்! அவளுடைய கண்களில் தான் எவ்வளவு கவர்ச்சி, எத்தனை கிறுகிறுப்பு! தந்தத்தால் செய்த சிலை போன்ற அவள் உடல் அழகைக் கண்டு நான் பொறாமை அடைந்தேன்.

நான் வந்ததை அறிந்ததும் அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள். அப்போது அவள் முகத்தைப் பார்த்தேன். திடீரென்று அது ஏன் விகாரமாக மாறிவிட்டது! என் நெஞ்சை ஏதோ ஒன்று 'குப்' என்று அடைத்துக்கொண்டது.

அவள் உள்ளே சென்றாள். வழக்கம்போல, காபியும் டிபனும் வரும். ஆனால் இந்த இயந்திரம் போன்ற அவள் செய்கை எனக்கு உற்சாகம் ஊட்டவில்லை. கடமையின் அடிப்படையில் குடும்பம் நடப்பதைவிட, அன்பின் அரவணைப்பில் குடும்பம் நடவாதிருப்பது எவ்வளவோ சந்தோஷத்தைத் தரும் அல்லவா?

அவள் கொண்டு வைத்த டிபனையும், பலகாரத்தையும் நான் தொடவே இல்லை. ஈஸி சேரில் நான் சாய்ந்து கிடந்தேன்.

"உடம்பு சரியாக இல்லையா?" என்று கேட்டாள் அவள். சம்பிரதாயமான கேள்வி தான்.

"கொஞ்சம் தலை வலிக்கிறது" என்றேன்.

"இவ்வளவுதானே! காபி சாப்பிடுங்களேன்; ...சரியாகிவிடுகிறது," என்றாள் அவள்.

என்ன அலட்சியம்! ஒரு மனைவி புருஷனின் உடல் நலக்குறைவைப்பற்றிக் கவலைப் படுகிற லட்சணமா இது?

"வேண்டாம்..." என்றேன்.

அவள் சற்று நேரம் அப்படியே நின்றாள், அவள் இருந்த பக்கமே நான் பார்க்கவில்லை. பார்த்தால் அவள் அழகு என்னைக் கவர்ந்துவிடும். என் முடிவும் சிதறிப் போகும்!

"நான் ஒன்று கேட்கிறேன்... கோவிச்சுக்க மாட்டீர்களே?" என்று கேட்டாள் அவள்.

எப்படி இருக்கிறது? எதற்கெடுத்தாலும் இவளிடம் கோபித்துக்கொண்டா நிற்கிறேன் நான்?

"என்ன?" என்று கேட்டேன்.

அவள் சற்று நிதானித்தாள். அந்தச் சிறிது நேரத்தில் என் மனநிலையை ஆராயும் பணியில் அவள் ஈடுபட்டிருக்கவேண்டும்.

"வந்து... காமு இன்னிக்கு எக்ஸ்பிஷனுக்குப் போகிறாளாம். நானும் போயிவிட்டு வரட்டுமா?" என்று கேட்டாள்.

நான் அவளைப் பார்த்தேன். 'நீங்களும் வருகிறீர்களா?' என்று அவள் என்னைக் கேட்டிருந்தால் கூட என் மனம் மகிழ்ந்து போயிருக்கும். ஆனால் அப்படிச் செய்யாது அவள் மட்டும் போவதாகச் சொன்னதுதான் மனதை வாட்டியது. இரண்டு நாட்களாகக் குமிறிக் கொண்டிருந்த அது இப்பொழுது கும்மாளம் போட்டது.

"ஆஹா... தாராளமாகப் போயிட்டுவாயேன்," என்றேன் பட்டென்று.

அவள் சந்தோஷத்துடன் நகர்ந்தாள். 'உங்களுக்குச் சாப்பாடு ரஸத்தில் பிசைந்து வைத்திருக்கிறேன்... தலைவலிக்கிறது என்றீர்களே! மோர் வேண்டாம்... போய்விட்டுச் சீக்கிரம் வந்துவிடுகிறேன்," என்றாள்.

நான் பல்லைக் கடித்துக் கொண்டே, பெருமூச்சு விட்டேன். என்ன அக்கறை, என்ன பரிவு!

"அதை எல்லாம் நான் பாத்துக்கறேன். நீ போ. நேரமாயிடப் போறது," என்றேன். எப்படியாவது அவள் போனால் போதும் என்று மனது ஆசைப்பட்டது.

அவள் புறப்பட்டுப் போனுள். நான் வீட்டில் தனியே உட்கார்ந்திருந்தேன். காபி ஜில்லென்று ஆறிப் போயிருந்தது. அதைக் காலால் எட்டி உதைத்தேன். டம்ளர் அலறிக் கொண்டு ஒரு மூலையைச் சரண் அடைந்தது. டிபன் வைத்திருந்த பிளேட் மட்டும் காதலியை இழந்துவிட்ட கதாநாயகன்போலத் துயரத்துடன் மேஜை மீது வீற்றிருந்தது.

நான் லீலாவைக் கல்யாணம் செய்துகொண்டு நான்கு வருஷங்கள் ஆகின்றன. இதுவரை இப்படி மனது கலங்கியதே இல்லை. அவளுடைய அழகு எனக்குப் பொருத்தமில்லாததுதான். நான் உருவத்தில் குள்ளமானவன். அதுமட்டுமல்ல? நிறமும் கறுப்பு. போதாத குறைக்கு ஒரு கை சற்றுக் குட்டை. இதை எல்லாம் பொருட்படுத்தாது என்னை மணந்த லீலா எனக்கு எவ்வளவோ ஆனந்தம் அளித்தாள். அவள் அழகைக் கண்டு நான் இறுமாந்தேன். பெருமை கொண்டேன். ஆனல் நாளடைவில் என் விகார ரூபம் அவள் மனதில் பெரும் புயலை எழுப்பி விட்டுவிட்டது.

நேற்று ஆபீஸிலிருந்து திரும்பும்போது வீட்டிற்குள் பேச்சுக் குரல் கேட்டது. அவளுடைய சிநேகிதி காமுதான் பேசிக் கொண்டிருந்தாள். 'என்னமோ, லீலா... உன் அழகுக்கு இவரைப் போல அமைந்திருக்க வேண்டாம்... என்ன செய்யறது? யார், யார் தலை எழுத்து எப்படியோ அப்படித்தானே நடக்கும்..." என்ருள் அவள்.

லீலா பெருமூச்சு விட்டாள். 'என்னம்மா செய்யறது? என் அப்பா சாதாரண வேலையில் தான் இருந்தார். இந்த வரனே என் நிலைமைக்கு உயர்ந்த இடம்தான்...' என்ருள்.

"வாஸ்தவமா, அன்னிக்கு நீயும், அவரும் தெருவில் நடந்து போனபோது என் மனசு தவிச்சுப் போச்சு... பொருத்தமே இல்லே. விக்ரஹம் போல நீ எங்கே, மூஞ்சூறுபோல அவர் எங்கே?...உம்..." என்ருள் காமு.

அதற்குமேல் அவர்களைப் பேசவிடாது என் செருப்புச் சப்தம் கலேத்தது. காமு நாணிக்கோணி வெளியே ஓடினுள். நான் உள்ளே நுழைந்தேன். லீலா சிரித்தபடி வரவேற்ருள். ஆனல் அந்த முகத்தில் களையே இல்லை.

கண்ணுடியில் என் உருவத்தைப் பார்த்தேன். அடேயப்பா, என்ன விகாரம்! அதுவும் ஆபீஸிலிருந்து திரும்பிய என் முகத்தில் வேலை செய்த களைப்பும், எண்ணெய் வழிந்த அசட்டுக் களையும் தாண்டவமாடியது. புழக்கடைப்புறம் சென்று முகத்தை அலம்பிக் கொண்டு திரும்பினேன்.

இரவு நல்ல நிலா வீசிக்கொண்டிருந்தது. மொட்டைமாடியில் படுத்து, வெகுநேரம் சிந்தனை அலைகளில் திளைத்துக் கொண்டிருந்தேன். பன்னிரண்டு மணி அடித்ததும் கீழே இறங்கி வந்தேன்.

லீலா படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தாள். குழந்தைபோன்ற அவள் முகத்தைப் பார்த்தேன். எடுப்பான மூக்கு, சின்னஞ் சிறியவாய், அழகான மோவாய்க்கட்டை, கடைந்தெடுத்த கழுத்து, நெளியும் கைகால்கள், எடுப்பான உடற்கட்டு— இந்த லீலா என் மனைவி!

குனிந்து அவள் முகத்தைப் பார்த்தேன். தூங்கும் நிலையில் அவள் முகம் பரிசுத்தமாகக் காட்சி அளித்தது. இந்த லீலாவை நான் கோபிப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

திடீரென்று விம்மும் சப்தம் கேட்டது. அதை அடுத்து லீலாவின் கண்டம் மேலும், கீழும் புரள்வதைப் பார்த்தேன். வாய்மெல்ல அசைந்தது. கண்களிலிருந்து கர, கரவென்று கண்ணீர் புரண்டு ஓட ஆரம்பித்தது.

நான் திடுக்கிட்டேன், அவள் மனம் கலங்கி அழுகிருள் எதற்காக?... எனக்குப் புரிந்துவிட்டது. நான் அவளுக்கு வாய்த்தது பெரும் தவறுதல்தான்... அவளுக்கு நான் ஏற்றவன் அல்ல,

பேசாது படுத்தேன், தூக்கமே வரவில்லை. புரண்டு தவித்தேன்: சிறிது நேரத்திற்குப் பிறகு மெல்லிய கை ஒன்று என்மேல் விழுந்தது. பஞ்சு போன்ற கை! அதில் அணிந்திருந்த இரட்டை வளையல்கள் கைக்கு அழகு செய்தனவா, அல்லது அந்தக் கையால் அவை அழகு பெற்றனவா என்பதை என்னுல் தீர்மானிக்க முடியவில்லை.

என் ஆசை அளவு கடந்தது. லீலா பேரில் பிசகு இல்லை. அவள் மனம் தவிப்பது நியாயம் தான் என்று எனக்குப்பட்டது.

"லீலா!" என்று அழைத்தேன்.

அவளுக்கு நல்ல தூக்கம். மீண்டும் அழைத்தேன்... 'உம்...' என்ற பதில் மட்டும் வந்தது. அவள் உடலை அசைத்து 'லீலா!' என்று கூப்பிட்டேன்.

அவள் திடுக்கிட்டு விழித்தாள். விடிவிளக்கின் மங்கிய ஒளியில் அவள் முகம் வன தேவதையின் முகம்போலக் காட்சியளித்தது. 'என்னைக் கண்டால் உனக்குப் பிடிக்கவில்லையா?' என்று கேட்டேன். அசட்டுத்தனமான கேள்வி!

அவள் உதட்டைப் பிதுக்கினுள். 'இதற்காகத் தானு என்னை எழுப்பினீர்கள்?... பிடிக்காவிட்டால் கல்யாணம் செய்துகொண்டிருப்பேனு?' என்ருள். பிறகு சுருண்டு படுத்துவிட்டாள்.

அவளை மறுபடியும் எழுப்ப எனக்கு இஷ்டமில்லை. ஆனல் அவள் கூறிய பதில் எனக்குத் திருப்தி அளிக்கவில்லை. பிடிக்காவிட்டால் என்ன

மணந்திருக்கமாட்டேன் என்று அவள் உறுதியாகச் சொல்ல முடியாது. அவள் தந்தை சாதாரண ஒரு குமாஸ்தாதான். குடும்பம் பெரியது. பெண்ணுக்கு நிறையச் சீர் செனத்திகள் செய்ய வசதியில்லை. எனக்கோ அங்கஹீனம் இருந்தாலும், சொத்துக் கொஞ்சம் இருந்தது. வேலை செய்யவேண்டுமென்கிற அவசியம்கூட இல்லை. ஆகவே என்னை மணந்து கொள்ள லீலா சம்மதித்ததற்குக் காரணம் அவள் என்னை விரும்பியதாக இருக்க முடியாது என்பது வெளிப்படை.

காலையில் நான் எழுந்திருக்கும்போது மணி ஏழாகி விட்டது. லீலா சீக்கிரமே எழுந்து காபி தயாரித்திருப்பாள். நான் புழக்கடைப் புறம் சென்று பல் துலக்கிவிட்டு, சமையலறைக் கருகில் வந்தபோது உள்ளே பேச்சுக் குரல் கேட்டது.

"என்னமோ அம்மா, சௌகரியமாக இருந்தால் அதுவே போதும்...அழகுதான் நமக்குச் சோறு போடப் போகிறதா?" என்று வயது வந்த ஒரு ஸ்திரீயின் குரல் கேட்டது.

அதை அடுத்து ஒரு இளம் பெண் சிரித்தபடி பேசியது என் நெஞ்சில் குத்தியது. 'இந்த அம்மாவே இப்படித்தான். இவர்களுக்குப் பணம்தான் வேணும். ஆனு கண்டிப்பாச் சொல்றேன், அம்மா. எனக்கு இப்படி ஒரு இடத்தைப் பார்த்தயானல் கட்டாயம் கல்யாணம் பண்ணிக்கவே மாட்டேன்... லீலா படற கஷ்டம் போதும்,' என்ருள் அவள்.

லீலா சாவதானமாகப் பேசினுள்: 'நான் ஒன்றும் கஷ்டமே படவில்லை, பத்மா. சௌகரியமாகத்தான் இருக்கேன்'.

இச்சமயம் நான் மெல்லக் குரல் கொடுத்தேன், 'லீலா காபி ஆயிடுத்தா?' என்று.

அவள் காபி கொண்டுவந்தாள்.

"யார் அவர்கள்?" என்று கேட்டேன்.

"என் அத்தை... மதுரையிலே இருந்தார்களே தெரியாதா?... பத்மாவை 'மெடிகல் காலேஜி'ல் சேர்க்கப்போகிருர்களாம்...காலையில் வந்தார்கள். நீங்கள் நன்ருகத் தூங்கிக் கொண்டிருந்தீர்கள். அதனுல் எழுப்பவில்லை," என்ருள் அவள். தன் அத்தை வீடு தேடி வந்ததில் அவளுக்குப் பரம திருப்தி என்று பட்டது,

காலைச் சாப்பாடு விசேஷமாக இருந்தது. அதனுல்தான் எனக்கு டிபனுக்குச் சர்க்கரைப் பொங்கல்கூடக் கிடைத்தது. சாப்பிட்டுவிட்டு அத்தை புறப்பட்டுப் போனுள். பத்மாவை நான் கவனித்தேன். போஷாக்காக வளர்ந்த பெண். லீலாவைப் போல இல்லாவிட்டாலும் [illegible] சிவப்பாக அழகாக இருந்தாள். தன் அழகைப் பற்றிக் கர்வப்பட அவளுக்கு உரிமை இருந்தது.

இந்த நினைவுகள் வந்து என்னை அமிழ்த்திவிட்டன. லீலா எக்ஸிபிஷனுக்குப் புறப்பட்டுப்போய் விட்டாள். இனி நான் எப்படிப் பொழுது போக்குவது? வீட்டில் தனியே உட்கார்ந்திருப்பது பெரும் அவஸ்தையாக இருந்தது.

துண்டை எடுத்துப்போட்டுக்கொண்டு புறப்பட்டேன், கால்கள் இழுத்த பக்கம் நடந்தேன். என்னையும் அறியாது எக்ஸிபிஷன் அருகில் வந்து விட்டேன். உள்ளே போகலாமா, வேண்டாமா என்று சிறிது நேரம் மனதிற்குள் போராட்டம் நடந்தது. கடைசியில் டிக்கட் வாங்கிக்கொண்டு உள்ளே நுழைந்தேன்.

என் கண்கள் லீலாவைத் தேடின. என்னை அங்குக் கண்டால் அவள் ஆச்சரியப்படுவாள். ஏதாவது அபூர்வ வஸ்துவை வாங்கவேண்டுமென்று அவள் ஆசைப்பட்டுக் கேட்டால் வாங்கித் தரவேண்டும் என்று நினைத்துக்கொண்டேன். ஒவ்வொரு இடமாகப் பார்த்துக்கொண்டே சென்றபோது லீலாவைக் கடைசியில் ஒரு கடையின் முன் கண்டேன்.

அவள் அருகில் காமு நின்றுகொண்டிருந்தாள். அவளுக்கு அருகில் அவள் கணவன் ராமநாதன் நின்ருன். காமுவுக்கு ஏற்ற ஜோடியாக அவன் ஒளிவீசும் ஜாஜ்வல்யத்தில் பிரகாசித்தான். இவர்களோடு ஏன் லீலா வரவேண்டும்?

அதோ அவன் லீலாவை ஏதோ கேட்கிருன். அவன் கையில் இருக்கும் ஜார்ஜட் துணியை லீலா தொட்டுப் பார்த்து ஏதோ அபிப்பிராயம் தெரிவிக்கிருள். அதைக் கேட்டுக் காமுவும், அவள் கணவனும் சிரிக்கின்றனர். பிறகு அவன் ஏதோ வற்புறுத்திச் சொல்கிருன். லீலா 'வேண்டாம்' என்ற பாவனையில் தலையசைக்கிருள். காமு அவள் தோளைப் பிடித்து ஆட்டி ஏதோ கூறுகிருள். இதற்குள் ராமநாதன் கடைக்காரனிடம் உத்தரவிடுகிருன். அந்தத் துணியில் 2 கஜம் கிழிக்கப்பட்டு, நன்ருகப் பார்ஸல்செய்யப்பட்டு, லீலாவிடம் வந்து சேருகிறது. ராமநாதன் பர்ஸைத் திறந்து பணம் தருகிருன்.

என் தலை சுழன்றது. லீலா என் மானத்தை விலைபேசுகிருள்! கேவலம் இந்த ஜார்ஜட் துணி தனக்கு லாயக்கற்றது என்று அவள் ஏன்கூற வேண்டும்? அதை நான் வாங்கித்தர மாட்டேனு?

நான் வேகமாக வெளியே வந்தேன். வீட்டுக்குச் செல்ல மனம்வரவில்லை. கால் போன பக்கம் நடந்தேன். கண்ட இடங்களில் ஏதோதோ சாப்பிட்டேன். தலை கனத்தது. வீடு திரும்பும்போது மணி [illegible] ஆகிவிட்டது. வீடு பூட்டியபடியே [illegible] உள்ளே நுழைந்தேன்.

வெறிச்சோடியிருந்த ஹாலில் விடிவிளக்கை மட்டும் போட்டுவிட்டு ஈஸிசேரில் சாய்ந்தேன். சுவர்க்கடிகாரம் டக், டக் என்று ஒலித்துக்

கொண்டிருந்தது. அந்த ஒலி என் இருதயத்தின் ஒலியோடு போட்டியிட்டது.

மணி பன்னிரண்டை நெருங்கியது. வாசல் புறம் ஏதோ பேச்சுக் குரல் கேட்டது. அதை அடுத்து லீலா உள்ளேவரும் சப்தம் கேட்டது.

"எங்கே போயிருந்தீர்கள்?... சாவியை அடுத்த வீட்டிலாவது கொடுத்திருக்கக் கூடாதா?" என்று கேட்டாள் லீலா, என் அருகில் வந்து.

என் ஆத்திரம் எல்லை கடந்தது. 'வீடு பூட்டியிருந்தால் என்ன?... உனக்குத் தங்க இடம் இல்லையா?... இப்போது மட்டும் இங்கே ஏண்டி வந்தாய்?... அங்கேயே தொலைவது தானே?...' என்று சீறி விழுந்தேன்.

அவள் மிரண்டு விட்டாள். நான் கோபமாக இருக்கிறேன் என்பதைப் புரிந்து கொண்டாள். மெல்ல என் முகத்தில் கைவைத்து, 'அடேயப்பா! உடம்பு கொதிக்கிறதே... இந்த உடம்போடு ஏன் வெளியில் போனீர்களாம்?' என்று கேட்டாள்.

நான் சிரித்தேன். அந்தச் சிரிப்பின் எதிரொலி பயங்கரமாக என் காதருகில் ஒலித்தது. 'வெளியில் போகாதிருந்தால் உன்னைப் பார்த்திருக்க முடியுமா?... எக்ஸிபிஷனில் என்ன வாங்கினே?' என்று கேட்டேன்.

"ஒன்றும் வாங்கவில்லையே!" என்றாள் அவள்.

"பொய்... நிஜமாகவே நீ எதுவும் வாங்கவில்லையா? சொல்லு," என்று கத்தினேன் ஆத்திரத்துடன்.

"நான் எதுவும் வாங்கவில்லை... அவள் தான் இந்த ஜார்ஜெட் துணியை வாங்கிக்கொள் என்று பிடிவாதமாகத் தலையில் கட்டி விட்டாள்,' என்று தன் கையிலிருந்த பொட்டலத்தைக் காட்டினாள் லீலா.

நான் சிரித்தேன். அதில் வெறுப்புப் புரையோடியது. 'உம் இந்தத் துணிக்குகூட விதியில்லை உன் புருஷனுக்கு! அப்படித்தானே?...' என்று இரைந்தேன்.

'ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? உண்மையாக நடந்ததை உங்ககிட்ட சொல்றேனே...காமுவைப் பற்றி நான் ரொம்பப் பெருமையா எண்ணிண்டிருந்தேன். அவளுடைய குடித்தனமும்,புருஷனின் வண்டவாளமும்நேற்றுத்தான் தெரிந்தது...எப்ப பார்த்தாலும் அவளைச் சீண்டி ஏதாவது சண்டை போட்டுண்டே இருக்கார் அவர். ஏண்டாப்பா அவர்களுடன் போய் சேர்ந்தோம் என்று சங்கடமாப் போயிடுத்து' ,என்றாள் லீலா.

"உம்... என்று ,சுள்' கொட்டினேன்.

அவள் என்னை ஏறிட்டுப் பார்த்தாள். கண்களில் நீர் சுரந்து நின்றது. பரிதாபகரமான அம்முகத்தைப் பார்த்ததுமே எனக்கு நெஞ்சை, 'குப்' என்று அடைத்தது.

"உங்களுக்கு உடம்பு சரியில்லாத போது நான் புறப்பட்டுப் போனது தப்பு... பெண்புத்தி பின்புத்தி தான்... ஏதோ இதிலெல்லாம் அர்த்தமில்லாத ஆசை. போனதுக்கு நல்லபலன் கிடைத்தது!... காமுவின் புருஷன் அசல் கோட்டான் மாதிரி பார்க்கிற பார்வையும், பேசற பேச்சும் சகிக்க வில்லை." என்றாள் லீலா.

நான் சிரித்தேன். 'அவனையே கோட்டான் என்கிறாயே என்னை என்ன சொல்வாய்?' என்று கேட்டேன். என் நெஞ்சு பட்,பட் என்று அடித்துக் கொண்டது,

அவள் முகத்தில் அதிசய மாறுதல் ஏற்பட்டது. அதில் வெட்கமும், சந்தோஷமும், மன நிறைவும் கலந்திருப்பதாக உணர்ந்தேன். 'என்ன இப்படிக் கேட்கிறீர்கள்?... உங்கள் மனசுக்கும் அன்புக்கும் இணையாக எப்படி உவமை சொல்றது?' என்றாள் அவள்.

"அடே!"

"என்னால் சொல்லமுடியாது. நீங்கள் கேலி பண்ணுகிறீர்கள்." என்றாள் அவள்.

"லீலா, நீ என்னை வெறுத்தால் என்னால் வாழ முடியாதடி, கண்ணே..." என்றேன்.

"ஐயோ என்ன பேசுகிறீர்கள்? உங்களை நான் வெறுப்பதா?... இது என்ன பேச்சு!... நீங்கஇல்லாம நான் வாழமுடியாது. உங்க அன்பு இல்லாம..." என்று கூறியபடி லீலா என் கால்களைப் பற்றினாள்.

லீலாவைப் பார்த்தேன். அவள் அழகு எனக்குப் படவில்லை. அவள் உள்ளத்தைக் கண்டேன். மாசற்ற அம் மணவறையிலே மன்மதனை நான் வீற்றிருக்கக் கண்டேன். உருவத்தை எண்ணாது உள்ளத்தையே கோரும் என் லீலாவை அன்புடன் அணைத்துக்கொண்டேன். ●

வெற்றி யாருக்கு!

கிருஷ்ணா

திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் எழும்பூர் ஸ்டேஷனைவிட்டுப் புறப்பட்டது. பிரபல எழுத்தாளர் 'பாரி' (புனைபெயர்) அவர்கள் இடது கையில் குவித்து வைத்துக்கொண்டிருந்த வாசனைப் புகையிலையை வலது கையின் இரு விரல்களினால் வெகு நாசூக்காக எடுத்து, தமது வாயில் அடக்கிக் கொண்டார். கையைக் கை குட்டையில் துடைத்துக் கொண்டபின் தமது இடத்தில் அமர்ந்து நாற்புறமும் கண்ணோட்டம் விட்டார்.

பிறகு திருப்தியுடன் தமது பையிலிருந்து "ஸாரஸீருஹம்" மாத இதழை எடுத்துப் பிரித்து, படிக்க ஆரம்பித்தார். பிரசித்திபெற்ற ஸாரஸீருஹத்தில்தான் பிரசித்தி பெற்ற எழுத்தாளராகிய 'பாரி'யின் 'மனப்படகு' என்ற அருமையான நாவல் தொடர்கிறது.

"ஏன் ஸார்! ஸாரஸீருஹம் லேட்டஸ்ட் இதழா? கொஞ்சம் தயவு செய்து கொடுங்கள் ஸார்! 'மனப்படகை மட்டுமாவது படித்துவிட்டுத் தருகிறேன்! என்று ஆவலே வடிவமாக ஒரு குரல் பாரியின் காதுகளில் ஒலித்தது. புத்தகத்தைத் தணித்துக்கொண்டு குரல் வந்த திசையை நோக்கினார்.

ஒரு வாலிபன்! வயது இருபத்து ஏழு இருக்கலாம். பிரதிக்காக நீண்ட அவனது கைகள் நீண்டபடியே இருந்தன. புத்தகம் தனக்குக் கிடைக்கும் என்பதில் அவனுக்கு அவ்வளவு நம்பிக்கை!

அவனை நோக்கி, பிரபல எழுத்தாளர்களுக்கே உரிய தாயதொரு அடக்கப் புன்னகையை வீசிவிட்டுப் புத்தகத்தையும் அவன் கையில் கொடுத்தார் பாரி.

"தாங்க்ஸ்" என்ற ஆங்கிலச் சொல் ஒன்றின் மூலம் தன் நன்றியைத் தெரிவித்துக்கொண்ட அவ்வாலிபன் மறுகணமே புத்தகத்தைப் பிரித்து மனப்படகில் லயிக்கலானான்.

ரயில் ஓடிக்கொண்டேயிருந்தது. பாரி சிந்தனையில் மூழ்கினார். 'மனப்படகைப் படிப்பதற்குத்தான் அந்தப் பையனுக்கு எவ்வளவு ஆவல்! மனப்படகைப் படிப்பதற்கே இவ்வளவு ஆவல் கொண்டிருக்கிறானே! அதை எழுதிய 'பாரி'யிடம் தான் நாம் பேசினோம்! பாரிதான் நம் எதிரில் உட்கார்ந்திருப்பவர், என்பதை அவன் அறிவானா? உலகம் ஏன் இவ்வளவு குருடாக இருக்கிறது? அருகில் நெருங்கியும்கூட ஒருவரையொருவர் புரிந்துகொள்ளமுடியவில்லையே! ஏன்? அது என்ன தத்துவம்? ஆயுசு வரையிலும் மனம்விட்டுப் பழகவேண்டிய புருஷன்-மனைவிகூட சில சமயங்களில் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளாமல் வீண் மனஸ்தாபம் அடைகிறார்கள். ஆம்! ஒரு விதத்தில் எளிதில் புரிந்துகொள்ள முடியாத தத்துவத்திலும் ஒரு நன்மை இருக்கிறது. அதனால்தானே தனக்கு, தன்னை, தன் எழுத்தை, உலகம் எப்படி ரசித்து மகிழ்ந்து, மதிக்கிறதென்பதை மறைவிலிருந்தே கண்டு பூரிக்க முடிகிறது! சட்! இதென்ன உபயோகமற்ற சிந்தனை...

வண்டி கடக்! கென்ற ஒரு குலுக்கலுடன் செங்

கற்பட்டில் நின்றது. சிந்தனை கலைந்த பாரி தம் வாயில் சமாதியிருந்த வெற்றிலை புகையிலைக் கூட்டுச் சரக்கை, சாவகாசமாக ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டி தூ! வென்று துப்பினார். யார் யாரோ ஏறுவதும் இறங்குவதுமாக அந்தப் பிளாட்பாரத்தைக் கலகலப்பும், சுறுசுறுப்பும் நிறைந்த இடமாக ஆக்கினர் ஜனங்கள். எல்லோருக்கும் ஒரே அவசரம்! எதற்குத்தான் இந்த அவசரமோ!

வண்டி புறப்பட்டது!

தலையை உள்ளே இழுத்துக்கொண்டே 'பாரி' நிதானமாக மீண்டும் பெட்டியினுள் கண்ணோட்டம் விட்டார். சிலர் இறங்கியிருந்தார்கள்! பலர் ஏறியுமிருந்தார்கள். அந்தப் பலரில் பாரியின் ஸீட்டுக்கு எதிரில் வந்து அமர்ந்திருந்த பெண்ணும் ஒருத்தி.

இப்பொழுது அவரது கண்கள் தம் எதிரில் உட்கார்ந்திருக்கும் பெண்ணை எடை போட்டது.

கலைந்த கேசம்! மருண்ட விழிகள்! குவிந்த அதரம்! பிறைமதி! விற்புருவம்! இவ்வளவுமிருந்தும் பீதியினாலும் கலவரத்தினாலும் வெளிறிய முகம்! துவண்ட, மெல்லிய உடல்! பாரிக்கு, தாம் முந்தி ஒரு சித்திரச்சாலையில் கண்ட சித்திரம் ஒன்று நினைவுக்கு வந்தது.

விராட ராஜனின் மனைவி சுதேக்ஷ்ணை, சைரந்திரியிரிடம் க்ஷீர தாம்பூலாதி கனி வர்க்கங்களைக் கையில் கொடுத்துக் கீசகனின் அறைக்குள் செல்லும்படி தைரியம் கூறிப் பிடிவாதமுடன் அனுப்ப முயலும் அந்தச் சித்திரத்தில் இருந்த சைரந்திரியின் முகபாவம் எப்படிப் பீதியினாலும், பயத்தினாலும் அவருடைய மனதைக் கவர்ந்ததோ, அதே போல, தம் எதிரில் இருக்கும் அழகு மங்கையின் அசல் முகமும் காட்சியளித்தது. ரவிவர்மாவின் தூரிகையினின்றும் உருவாகிய அதே சைரந்திரிதான் சித்திரத்திலிருந்து குதித்து வந்து தம் முன் உட்கார்ந்து கொண்டிருக்கிறாளோ? என அவர் ஐயம்கொண்டார்.

அவளது நெஞ்சுக்குள் பூட்டி வைத்துக் கொண்டிருக்கும் அந்தத் துன்பம்தான் என்ன? அது எந்த உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும்? அதன் விவரங்களை மட்டும் அவர் அறிந்து கொண்டு விட்டால்!...

அவள் முகத்தில் தோன்றும் பாவங்களைக் கொண்டு மதிப்பிட்டால், ஒரே சமயத்தில் வீடு, மாடு, மனை, புருஷன், குழந்தைகள் முதலிய சகல உலக பந்தங்களையும் இழந்து தானும் தன் உயிரை இழக்கத் தயாராக இருப்பவள் போலல்லவா இருக்கிறது.

இந்த வயசில் இந்த அழகுப் பிம்பத்திற்கு ஏன் இவ்வளவு சோகம்! வயது சுமார் பதினெட்டு அல்லது இருபது தானிருக்கலாம். பூரண பூரிப்புடைய யௌவனம். இச்சமயத்தில் காதல் சிக்கலைத் தவிர வேறு என்ன துன்பம்தான் ஒரு பெண்ணைப் பாதிக்க முடியும்?

நெற்றியின் மேல் ஆள் காட்டி விரலையும், கட்டைவிரலையும் ஊன்றியபடியே அந்தச் சுந்தரியைக் கீழ்க் கண்ணால் கடாக்ஷித்தார், பாரி.

ஆம்! நல்ல அழகியே அவள்! ஓர் ஆடவனால் சகல விதத்திலும் காதலிக்கத் தகுந்தவளே! ஒரு வேளை காதலித்தவன் யாராவது கை விட்டிருப்பானோ? ஆதலால் மனம் வெறுத்து இவள் ஏதாவது தற்கொலை முயற்சியில்...சே! இருக்காது! அப்படி நிச்சயமாகச் சொல்ல முடியுமா? ஏதாயிருந்தாலும் அப்படி ஏதாவது விபரீதம் நேர்ந்துவிடாமல் நாம் அவளைக் கண்டிப்பாகக் காப்பாற்ற வேண்டும்!...

"ஸார்! டிக்கட்! என்ற கண்டிப்பான குரல் மீண்டும் பாரியின் சிந்தனையைக் கலைத்தது. தம் மணிபர்ஸிலிருந்த டிக்கட்டை எடுத்து, பரிசோதகரிடம் நீட்டி அதில் அவருடைய பிரம்மலிபியைப் பெற்றுக் கொண்டார் பாரி.

"அம்மா! எங்கே உங்கள் டிக்கட்? எடுங்க சீக்கிரம்! என்று அடுத்ததாக அந்த அழகியிடம் தாவினார் பரிசோதகர்.

அழகி அவரை நோக்கி, பரிதாபகரமாக விழித்தாள். அவளது அந்த விழிகள்! அதில் மிதந்த உணர்ச்சிகள்! ஆயிரம் கதைகள் பேசின.

ஆனால் டிக்கட் பரிசோதகர் கண்களுக்கு அந்த அழகின் நிறைவு புலப்படவில்லை. 'ஏம்மா! ஆந்தையைப்போல விழிக்கிறாய்! வித்-அவுட்டா நீ! பேஷ்! ரயில்வே ஒங்க பாட்டன் வீட்டு துன்னு நினைச்சயா!, என்று தம் ரஸானு பாவத்தைக் கொட்டி அதிகாரம் பண்ணினார் அவர்.

"ஸார்... நான்... வந்து..." என்று ஏதோ சொல்ல வாயெடுத்தாள் அந்த அணங்கு! அதற்குள் துக்கம் அவள் இதயத்தை அமுக்கியது. உதடுகள் துடித்தன! கண கலம் நீரை... அல்ல... ரத்தத்தையே பெருக்கின.

இனிமையான குரல்!... என்று மதிப்பிட்டுக் கொண்டார் பாரி.

டிக்கட் பரிசோதகரின் முகத்தில் ஓர் ஏளன-இகழ்ச்சிப் புன்னகை மின்னலிட்டது. பார்த்தார் பாரி! அவளது கண்ணீர் அவரது இதயத்தைக் கரைத்தது. எடுத்தார் தமது மணிபர்ஸை!

"ஏம்மா! உனக்கு எந்த ஊருக்குப் போகவேண்டும்?" என்று துணிந்து ஒரு கேள்வியையும் போட்டுவிட்டார் அவர்.

"மதுரைக்கு!" என்றாள் அவள்!

மணிபர்ஸைத் திறந்து மூன்று ஐந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்துப் பரிசோதகரிடம் நீட்டினார் பாரி.

சென்னை எழும்பூரிலிருந்து மதுரை வரையி லுள்ள சார்ஜை எடுத்துக்கொண்டு மீதியைப் பாரி யிடம் நீட்டி ரசீதும் கொடுத்தார் பரிசோதகர். வண்டி முழுவதும் பரிசோதித்துவிட்டுப் போகும் சமயம் அவரது கண்கள் பாரியையும் அந்தப் பெண்ணையும் சந்தேகத்துடன் பன்முறை பார்த்தன. அவர் என்ன நினைத்துக் கொண்டாரோ! யாருக்குத் தெரியும்? அவர் வேலை அவருக்கு! வண்டி நின்றவுடன் அடுத்த பெட்டிக்குத் தாவி விட்டார்.

"என்னால்... உங்களுக்கு சிரமம்! என்றாள் அந்தக் குரலழகி.

"பரவாயில்லே!" என்றார் பாரி! சும்மாவா! அவருக்கு ஒரு அபூர்வ கதையல்லவா அங்கே காத்துக்கொண்டிருக்கிறது! அது பதினைந்து ரூபாய்கூடவா பெறாமல் போய்விடும்!

"மதுரைக்கு என்ன காரியமாகபோகிறீர்கள்!" என்று மெதுவாகப் பேச்சுக்கொடுத்தார் பாரி.

"விசேஷமாகச் சொல்லும்படியாக ஒன்று மில்லே!" என்று பதில்வந்தது. ஓஹோ! என்றார் அவர்.

விசேஷமாகச் சொல்லும்படியாக ஒன்றுமில்லே யென்றால் சொல்லக் கூடாதமுறையில் அதி விசேஷமாக ஏதோ ஒன்றிருக்கிறது. என்று அர்த்தம் செய்துகொண்டது அவரது எழுத் தாள மனம்.

இதற்குள் அந்த வண்டியில் உள்ளவர்கள் சகலரும் இந்த விஷயத்தைச் சுவாரஸ்யமாகக் கவனிக்க ஆரம்பிக்கவே, மேற்கொண்டு அது சம்பந்தமாக,பேச்சுக்கொடுக்காமல், நிதானமாகத் தமது சிறிய வெள்ளி வெற்றிலேச் செல்லத்தைத் திறந்து வெற்றிலேபோட ஆரம்பித்தார் பாரி.

"மிஸ்டர்!" என்று கூப்பிட்டான் புத்தகப்புழு. நிமிர்ந்து பார்த்தார் பாரி.

"புத்தகம் இந்தாருங்கள் ஸார்! இந்தத் தடவை 'மனப்படகை' ஒரு சிக்கலான கட்டத்தில் நிறுத்தியிருக்கிறார் ஸார் மிஸ்டர் பாரி! என்ன இருந்தாலும் சொல்லுங்கள் எழுத்து மன்னன் என்றால் பாரிக்குத்தான் தகும். அவர் கையிலிருப் பதுதான் உயிருள்ள பேனா! மற்றவர்கள் கையி லிருப்பதெல்லாம் வெறும் பிளாஸ்டிக்பொம்மைப் பேனாக்கள்! ஏன் ஸார்! உங்கள் அபிப்பிராயம் எப்படி!" என்றவாறே ஸாரஸீருஹத்தைப் பாரி யிடம் நீட்டினான் அந்தப் பாரிபக்தன்.

"என்ன ஸார், இவுங்களெல்லாம் பிரமாதமாக எழுதராங்க! ஒவ்வொருத்தனும் தனக்குத் தானே ஷேக்ஸ்பியர்—காளிதாசன்னு நினைச் சுண்டிருந்தாபோதுமா! நான் என்னமோ இது மாதிரி விஷயங்களிலே ஈடுபடறதேயில்லே. ஏதோ பிரயாணசமயத்திலே பொழுதுபோக் காக இருக்கட்டும் என்று இந்தச் சஞ்சிகையை வாங்கினேனேயொழிய இது மாதிரி விஷயங் களிலே சர்ச்சைசெய்யும் அளவுக்கு எனக்குப் பாரியைப்பற்றியோ அவருடைய பேனாவைப் பற்றியோ தெரியாது!" என்றார் பாரி.

"ஓஹோ! அப்படியா! ஐ ஆம் சாரி!" என்று முகவாட்டத்துடன் கூறினான், தன்னெதிரில் இருப்பவர்தான் பாரி என்பதை அறியாத அந்தப் பாரிபக்தன்.

பாரி தமக்குள் மீண்டும் சிரித்துக்கொண்டார். வண்டியும் திருச்சிராப்பள்ளி ஜங்ஷனை அடைந் தது. ஸ்டேஷன் கடிகாரத்துடன் தமது கைக் கடிகாரத்தையும் ஒத்துப் பார்த்துக்கொண்ட அவர் திருப்தியுடன் இரண்டு கைகளையும் பின்னால் மடக்கி ஜன்னல் மேல் வைத்து அதன் மேல் தலையைத் தாங்கியவாறே அரைக்கண் தூக் கம் போட்டார்! அதாவது அப்படித் தூங்குவதாக நடித்தார் அவ்வளவுதான். மனமும் மற்றொரு அரைக்கண்ணும் அந்தச் சுந்தரியிடமே லயித்து அவள் செய்கைகளையே கவனித்து வந்தன. அந்தப் புத்தகக் கிறுக்குப் பையனும் கொட்டக் கொட்ட விழித்திருந்தான். ஆனால் அவன் ஒன்றையுமே கவனித்ததாகத் தெரியவில்லே. அவனுடைய மனம் எந்தப் பிரபல எழுத்தாளரின் சிக்கலான கதைப் பிரச்னைக்கு முடிவு தேடிக் கொண்டிருந்ததோ!

வண்டி புறப்பட்டது திருச்சியை விட்டு.

அந்த அழகி கண்களைக் கொட்டினாளா இல்லையா என்பதே பாரிக்குச் சந்தேகமாக இருந்தது. அப்படி ஸ்திரமாக விழித்திருந்தாள் அவள். சோக அலைகளை வெளிப்பரப்பும் அவளுடைய துக்க எல்லைக்கு ஒரு முடிவே இருக்காதோ! என்று தவித்தார் பாரி. ஏதாவது ஒரு முடிவு இருக்கும்! அது அவர் எண்ணுகிறபடி விபரீத முடிவாக இருந்தால்........இருக்காது! அதைத் தடுக்கத்தான் அவர் துணிந்துவிட்டாரே!

தண்டவாளங்களை வெகு துரிதமாகப் பின்னடை விட்ட அந்தத் துரித வண்டி வெகு விரைவிலேயே திண்டுக்கல்லே அடைந்துவிட்டது. சிரமபரிகார மாக ஒரு நீண்ட பெருமூச்சும் விட்டது. அதற்கல்லவா தெரியும், தான் ஓடி, ஓடி, ஓடி, ஓடாய்ப் போகும் வருத்தம்!

கார்த்திகை மாதத்திய காலே ஐந்து மணி. இருள் பிசாசு உலகைவிட்டு, "போவேனா! போவேனா" என்று அடித்துகொண்டிருக்கும் சமயம் திண்டுக்கல் பிளாட்பாரத்தில் இறங்கி, பல் தேய்ப்போரும், காலேக் காபியை ஒரு கை பார்ப்போருமாகப் பலரும் தம் தம் அலுவல்களை அவசர அவசரமாகக் கவனித்துக்கொண்டனர்.

"காபி வாங்கி வரட்டுமா? என்றார் பாரி!

"வாங்கலாம்!... ஆனல் ...எதற்கு?" என்றாள் அந்த அதிசய நாரீமணி."

"எதற்கா? எல்லோரும் எதற்கு வாங்குகிறார்களோ அதற்குத்தான்! அதாவது நீங்களும் நானும் சாப்பிடுவதற்கு!"

"சரி! என்று தலையை அசைத்த அவள் அந்தச் சோகத்திலும் பாரியின் பேச்சை ரஸித்து ஒரு மென்னகை தூவினாள்.

இருள் பரவும் மாலை வேளையில் நீல நிறமான பிரம்மியூட்டும் மலையிலிருந்து வெண்ணிறமாய் விழும் அருவியைத் தூரக் காட்சியாக நின்று பார்ப்பது போலிருந்தது பாரிக்கு அந்த மெல்லியலாளின் மென்னகை.

கையில் கூஜாவுடன் அவர் பிளாட்பாரத்தில் இறங்கினார். ஐ. ஆர். ஆர்க்குச் சென்று ஸ்டராங் காபியாக மூன்று 'கப்'பும், சூடான இட்லியும் வாங்கிக்கொண்டு பெட்டியை நோக்கி வேகத்துடன் திரும்பியவர் ஜன்னல் வழியாக உள்ளே பார்த்ததும் திடுக்கிட்டார்.

அந்தச் சுந்தரியைக் காணவில்லை. அதற்குள் இறங்கி எங்கேயோ போய்விட்டிருந்தாள். ஏமாற்றத்துடன் வண்டிக்குள் ஏறித் தமது பையையும் துண்டையும் எடுத்துக்கொண்டு மீண்டும் பிளாட்பாரத்தில் இறங்கி நாற்புறமும் கண்களை ஓட்டினார். தூரத்தில் ரெயில்வே இரும்புக் கிராதியோரமாகப் போகும் அந்தப் பெண் உருவத்தை முனிஸிபல் விளக்கின் ஒளியில் கண்டு கொண்டன அவரது கூரிய கண்கள்.

நிம்மதியுடன் அவளைப் பின் தொடர்ந்தார் அவர். வளைந்திருந்த இரும்புக் கிராதியினூடே தனது மெல்லிய சரீரத்தை நுழைத்து அப்பால் சென்றுவிட்ட அவள் வெகு வேகமாக நடக்க ஆரம்பித்தாள். அவர்! பாவம்! இரும்புக் கிராதிக்குள் புக முடியாமல் லெவல் கிராஸிங் வரையிலும் வந்து வெகு வேகமாக ஓடி அவளைப் பின் தொடர்ந்தார்.

அவர் அவளைப் பின் தொடர்ந்தார். அவரைப் புத்தகப் புழு கையில் காபி கூஜாவுடன் பின் தொடர்ந்தான். அதை அவர் கவனிக்கவில்லை.

அந்தச் சுந்தரியோ ஒன்றையும் கவனிக்காமல் ரோடு வழியாக வேகமாக நடந்து பாறைக் குளத்தின் கரையோரமாக இறங்கி, குறுக்கு வழியாகச் சரித்திரப் பிரசித்திபெற்ற ஊமையன் கோட்டைக் குன்றின் அடிவாரத்தை அடைந்து விட்டாள்.

அவளுடைய எண்ணம் பாரிக்கு நிரந்தரமாகப் புரிந்துவிட்டது. ஊமையன் கோட்டை மலைக் குன்றைப்பற்றி அவர் நன்கு அறிவார். அதன் உச்சியில் ஏறி விழுந்தாலும் மரணம் நிச்சயம், அல்லது அதனுள் இருக்கும் மடுவில் விழுந்தாலும் சடலம்கூடக் கண்டுபிடிக்க முடியாத திவ்யமான மரணம் அனாயாசமாகக் கிட்டிவிடும்.

விடியற்காலையில் அந்தச் சிலு சிலுப்பு வேளையில், இதை நினைத்தவுடன் அவரது உடல் கெட்டியைப்போல விறைத்தது, அவளுக்குத்தான் என்ன தைரியம்! அந்தத் தைரியம் வரக் காரணமாயிருந்த அந்தப் பெரிய துக்கம்தான் என்ன?

அவள் ஒவ்வொரு படியாக வேகமாக ஏற ஆரம்பித்தாள். இருள் பிரிந்து வெளிச்சம் பரவு முன் அவளது காரியம் முடிந்துவிடவேண்டுமல்லவா! அவளைப் பின்தொடர்ந்து ஏறிய பாரி மேலும் மேலும் அவள் உயர ஏறுவது ஆபத்து என்பதை உணர்ந்து எது வந்தாலும் வரட்டும் என்ற துணிவுடன், 'சுந்தரீ!' என்று அவளைக் கூப்பிட்டார்.

திடுக்கிட்டுத் திரும்பினாள் அவள். கையும் களவுமாகப் பிடிபட்ட கைதியைப்போல திருதிருவென்று விழித்தாள். ஆயினும் தைரியத்தைக் கைவிடவில்லை. "யாரையா நீர்? நான் வண்டியில் ஏறியது முதல் என் மேலேயே ஒரு கண்ணை இருக்கிறீர்! போனால் போகிறது என்று பார்த்தால் என் பெயரையே சொல்லிக் கூப்பிடுகிறீரே! உமக்கு என்ன துணிச்சல் ஐயா?" என்று எடுத்தெறிந்து அதட்டினாள் அவள்.

பாரி சமாளித்துக்கொண்டார்.

"சுந்தரீ! உன்பெயர் அதுவாகத்தானிருக்கும் என்று நினைத்தேன். உன்னை முதலில் கண்டவுடனேயே உன்மேல் எனக்குச் சந்தேகம் விழுந்துவிட்டது! அதனால்தான் உன்னை நான் இவ்வளவு தூரம் கண்காணித்தேன்! நீ தற்கொலை முயற்சியில் இறங்குகிறாய். இது மகத்தான பாவம்! அதுமட்டுமல்ல! சட்டவிரோதம்! தெரியுமா? இந்த ஒரு குற்றத்திற்காகவே உன்னை நான் இங்கேயே, இப்பொழுதே கைது செய்யலாம்! தெரியுமா?" என்று அதிகாரத்துடன் ஒரு போடு போட்டார் பாரி.

"ஆ! வென்று அலறிவிட்டாள் அவள். நீங்கள்... நீங்கள்... போலீஸா..." என்று அவள் வாய் குழறியது.

"ஆம்! போலீஸேதான்! சாதாரணப் போலீஸல்ல! உன் போன்றவர்களைக் கண்காணிக்கவென்றே அரசாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கும் ரகசியப் போலீஸ்! நான் ஒரு ஸி. ஐ. டி! என்றார் பாரி கம்பீரமாக.

ஐயா! என்றாள் அவள் வெண்ணெயை விழுங்கிய குரலில். "நான் என்னசெய்யவேண்டுமென்று சொல்லுகிறீர்கள்! எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை! நான் செய்யத் துணிந்தது என்னமோ தவறுதான். ஆனால் அதைத் தவிர எனக்கு வேறு வழியில்லையே! ஐயா! தயவு

செய்து என்னைப் போலீஸில் பிடித்து ஊராருக்கு முன் கோர்ட்டில் நிறுத்திவிடாதீர்கள்! என்று அழுதவாறே அவர் எதிர்பார்க்காத சமயம் 'சடக்'கெனக் குனிந்து அவரது இரு காலை கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள்.

"எழுந்திரம்மா! முதலில் நீ இப்பொழுது உயிர்விடத் துணியவேண்டிய அவசியம் என்ன? அதை முன்னால் கூறு. உன் விஷயமாக என்ன துன்பம் இருந்தாலும் தலையிட்டு நான் தீர்த்து வைக்கிறேன்!" என்று உறுதியும் உத்சாகமும் ததும்பும் குரலில் பாரி கூறினார்.

"உம்! உங்களால் என் விஷயத்தில் இனிமேல் உதவியொன்றும் செய்துவிடமுடியாது. ஆனாலும் சொல்கிறேன்!" என்றவாறே கீழே உட்கார்ந்துவிட்டாள் ஒரு பெருமூச்சுடன். பாரியும் தமது துண்டை விரித்து அதன் மேல் உட்கார்ந்து கதைகேட்கத் தயாரானார்.

* * *

மறையூர் மாரநாதம்பிள்ளையைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்களென்று நினைக்கிறேன். அவருடைய ஒரே புதல்வி நான். என் பெயரைத் தான் நீங்கள் தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிறீர்களே! அதுதான் சுந்தரி.

நானும் என் அத்தான் பாலுவும் சின்னஞ் சிறு வயதிலிருந்தே ஒன்றாக விளையாடிப் பழகியவர்கள். எனக்கு அவ்வளவாகப் படிப்பு வராது. அச்சமயத்திலெல்லாம் பாலுவின் உதவிதான் என்னை வாத்தியாரிடமிருந்து காப்பாற்றும். எங்கள் இருவருடைய நேசத்தையும் கண்டு மனம் மகிழ்ந்த எங்கள் பெற்றோர்கள் எங்கள் நேசம் வளர்வதையே மனப்பூர்வமாக விரும்பி அதற்கு அன்பினால் உரம் இட்டார்கள்.

நேசம் வளர்ந்து, பூத்து, காய்த்து, கனிபறிக்கும் பருவமும் வந்தது. ஐயோ! என் விதியின் விஷப்புழு எங்கள் அன்பு விருக்ஷத்தின்

ஆணிவேரையே அரித்துவிடப் போகிறதென் பதை நான் கண்டேனு?

ஐயா! என் தந்தையின் மனம் திடீரென்று மாறிவிட்டது. என் பாலுவின் தந்தை ரொக்கம் போட்டிருந்த பாங்கி திடீரென்று முறிந்துவிட்டதும் அவர்கள் சொத்துரிமை விஷயமாகத் தொடுத்திருந்த வியாஜ்யம் தோற்று விட்டதுமே என் தந்தையின் மனம் மாறியதற்குக் காரணம். அவருடைய அருமைப்பெண்ணை அவர் ஒரு ஏழைக்கு மணம்செய்து கொடுப் பதை அவர் விரும்பவில்லையாம்! ஏழை என்பதற்காக எங்கள் காதல் செத்துவிடுமா? நாங்கள் அன்பிட்டு வளர்த்த காதல் மடிவதை விட நாங்களே மடிந்துவிடுவது மேலல்லவா! என் பாலுவும் துணிந்துசெய்து விட்டார்! நான் இனிமேல் செய்யப்போகிறேன்!

எனக்குக் கல்யாணத்திற்கு முகூர்த்தம் பார்த் தார்கள்! பாலுவுக்கல்ல! எனக்கும் வேருெரு கோடீசுவரனுக்கும்! இதை அறிந்த என் பாலு மனம் முறிந்து விஷத்தின் மூலம் தமக்கு விடுதலை தேடிக்கொண்டு விட்டார்! பாவி! நான்! என்னைக் கட்டுக்காவலில் வைத்து விட்டார்கள்! இன்றைக்குத்தான் அவர்கள் எனக்கு முகூர்த்தம் வைத்த நன்னுள்! அந்த நன்னுளிலேயே நானும் பாலுவுடன் கலக்கத் தீர்மானித்துப் புறப்பட்டு வந்துவிட்டேன்!

ஐயோ! என் பிரிய பாலு!... பாலு!" என்று அரற்றினுள் அவள். அடைபட்டிருந்த அவளது துக்கவெள்ளம் அணைகடந்ததுபோல் பெருகிற்று. விம்மி விம்மி அழுதாள் அவள்.

பாரியின் நிலை தர்மசங்கடமாகிவிட்டது. விஷ யம் என்னவோ அவர் யூகித்தபடிதான் நடந் திருக்கிறதென்ருலும், இந்த விஷயத்தில் அவ ரால் அவளுக்கு என்ன சமாதானம் கூறமுடியும்?

சில நிமிஷங்கள் சிந்தித்தபின் பேசினுர்:

"சுந்தரீ! காதல் என்பதும் அது நிறைவேற வில்லையென்பதற்காகத்தற்கொலைக்கு முயல்வதும் வெறும் கோழைத்தனம்! காதல் என்பது அன் பின் முதிர்ந்த உணர்ச்சியே! அது உனக்குப் பாலுவின் மேல் ஏற்பட்டுவிட்டது. அது நிறைவேருததினுல் அந்த உணர்ச்சிகளின் கொந்தளிப்பை உன்னுல் தாங்கமுடியவில்லை. நீ மனம் மாறி, அதே உணர்ச்சியை உலகின் மீது, செலுத்து, அன்புள்ளம் கொண்டாயானுல் விரைவில் அமைதியும் கிடைக்கும்.

அன்பு! அதுவும் குழந்தைகளின் மீது செலுத்தும் அன்பிற்கு அழிவே கிடையாது. அது நாளொரு இன்பமும் பொழுதொரு புகழு மாக விளங்கும். நான் வயதில் பெரியவன். அனுபவஸ்தன். பேசாமல் நான் சொல்லுவதைக் கேட்பாயா?" என்ருர் பாரி.

"கேட்கிறேன்!" என்ருள் சுந்தரி பரிதாபமாக.

"இதோ இங்கேயே அருகில் ஒரு சேவாசி ரமம் இருக்கிறது. நான் உன்னை அங்கே கொண்டு சேர்த்துவிடுகிறேன். நீ மேலும் நன்ருகப் படி! உள்ளத்தைப் பண்படுத்து! சேவைபுரியக் கற்றுக்கொள்! வாழ்வில் ஒரு புதிய இன்ப உதயத்தைக் காண்பாய்!" என்ருர் பாரி உபதேசம் செய்யும் தோரணையில்.

திறந்த வாய் மூடாமல் அவரையே உற்று நோக்கினுள் சுந்தரி. கீழ்த்திசையில் ஆதவன் உதயமானுன். செவ்வண்ணமுடைய அந்தக் காலை கதிரவனையும் பாரியையும் மாறி மாறிப் பார்த்தாள் சுந்தரி.

"ஐயா! தாங்கள் யாரோ எனக்குத் தெரியாது! ஆனுல் அதோ அருணன் இருளைப்போக்கிவிட்டு உதயமாகிருன் அதுபோல இருளடர்ந்திருந்த எனது உள்ளத்திலும் தாங்கள் அருணேதயம் ஏற்படுத்திவிட்டீர்கள்! தங்கள் இஷ்டப்படியே நான் செய்கிறேன்! ஆனுல்..."

"என்ன ஆனுல்..."

"ஒன்றுமில்லை! எனக்குக் கொஞ்சம் சிந்திக்க அவகாசம் கொடுங்கள்! மத்தியானம் ஒன்றரை மணி வண்டிக்கு நான் தங்களை ஸ்டேஷனில் சந்திக்கிறேன்! அப்பொழுது நான் வரட்டுமா? இனிமேல் தற்கொலைசெய்து கொள்வேனே என்ற பயம் தங்களுக்கு வேண்டாம்! எனக்குப்புத்தி வந்தது! நான் போய்வருகிறேன்! மத்யானம் ஒன்றரை மணி! ஞாபகமிருக்கட்டும்!" என்று கைகூப்பி, பாரிக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு, அவர் ஏதும் கூறுவதற்கு முன்னுலேயே அவரைப் பின்னிட்டுக்கொண்டு ஒரு சிட்டுக் குருவியைப்போலக் கீழே இறங்க ஆரம்பித்து விட்டாள்.

"ஏய்! சுந்தரீ!... சுந்தரீ! நில்!– என்று பாரி போட்ட சப்தம் அவள் காதில் விழுந்ததாகவே தெரியவில்லை. பாரியும் வேகமாக இறங்கலானுர். ஆனுலும் அவளைத் தொடர முடியவில்லை. காலை நேரத்தில் ஜன நடமாட்டம் அதிகமாகிவிட்ட தால் அவள் எத்தனையோ சந்து பொந்துகளில் நுழைந்து பாரியின் கண்களில் மண்ணைத் தூவி விட்டாள்.

ஏமாற்றத்துடன் திரும்பிய பாரி, கிருஷ்ணு கபேயில் சாப்பாட்டை முடித்துக்கொண்டு, சரி யாக ஒன்றேகாலுக்கு ஸ்டேஷனுக்கும் வந்து பார்த்தார். அங்கே சுந்தரியைக் காணவில்லை. ஒன்றரை மணி வண்டிமட்டும் குறித்த சமயத் தில் வந்துபோயிற்று.

தம்மை அவள் ஏமாற்றிவிட்டாளென்பதை உணர்ந்தார் பாரி! பதினைந்து ரூபாய் தெண்ட மானுலும் 'பெண் இதயம்' என்ற தலைப்பில் ஒரு கதை அவருக்கு உதயமாக நிலைக்களமாக

அமைந்துவிட்டது இச்சம்பவம். அந்தத் திருப்தியுடன் அவர் ரயிலேறி, போகவேண்டிய ஊருக்குப் போய், ஆகவேண்டிய காரியத்தை முடித்துக் கொண்டு மீண்டும் சென்னை வந்து சேர்ந்தார்.

* * *

மாலை வெயிலின் மஞ்சள்நிறப்பூச்சினுல் பொன் வர்ணமாகக் காட்சியளித்தது பாரியின் அழகிய சின்னஞ்சிறு பங்களா. வாசற்புறம் அமைந்துள்ள தமது பிரத்யேகமான எழுதும் அறையில் அமர்ந்தபடி 'பெண் இதயத்தை, திட்டிக்கொண்டிருந்தார் 'பாரி'. அச்சமயத்தில் வாசலில் ஒரு அழகிய மோட்டார் வண்டி வந்து நின்றது. அதினின்றும் அழகே உருவாக இறங்கிய ஒரு யுவனும் யுவதியும் பாரியின் பங்களாவினுள் நுழைந்தனர்.

சிந்தனை கலந்த பாரி அவர்களை நோக்கி, 'வரவேண்டும்;' வரவேண்டும்!' என்று வரவேற்ருர். அவர்கள் யார்? என்று கூர்ந்து பார்த்த அவருக்கு அவர்களுடைய முகம் எங்கேயோ பார்த்த முகம்போலத் தோன்றியது.

"எங்களை அடையாளம் தெரியவில்லையா ஸார்!" என்று புன்னகையுடன் இருவரும் கேட்டனர். அந்தப்பெண் கையில் திண்டுக்கல்லில் இவர் தவற விட்ட காபி கூஜா இருந்தது.

"ஆ! தெரிந்துவிட்டது அவருக்கு! அதே குரல்! ஆம்! அவர்களேதான்!

"அடேடே!...நீங்கள்...நீங்கள் இருவரும்... அன்று...தயங்கினுர்" அவர்.

"ஆம் மிஸ்டர் பாரி! நாங்களேதான். நான் தான் நடிகன் ரூபகுமார். இவள் என் மனைவி ரூபமதி.! ஓ! உங்களுக்கு இப்படிச்சொன்னுல் புரியாது! விவரமாகக் கதையைச் சொல்கிறேன் கேளுங்கள்."

நாங்கள் இருவரும் பிரபல நடிகர்கள் எனப் பெயர் வாங்கியவர்கள்! எங்கள் கம்பெனியில் ஒரு புதுப்படம் எடுக்கப்போகிருர்கள்! அதில் வரும் கதாநாயகி பெரிய சாகஸக்காரியாக இருக்கவேண்டும். அதோடு சோக நடிப்பில் சிறந்தவளாகவும் இருக்கவேண்டும்...

என் மனைவி பிரபல நடிகையில்லையென்று நான் சொல்லவில்லை. ஆனுலும் மேற்படி பாத்திரத்தை ஏற்று நடிக்க அவளால் முடியாது என்றேன் நான். என்னுல் முடியும்' என்று விவாதித்தாள் அவள். விவாதம் வலுத்தது.

எங்கள் முதலாளி இந்தச் சிக்கலைத் தீர்க்க ஒரு யுக்தி கூறினுர். பலவிதக் கதாபாத்திரங்களைச் சிருஷ்டிக்கும் பிரபல எழுத்தாளராகிய தங்களை இவள் தன் நடிப்பால் ஏமாற்றிவிட்டால், மேற்படி பாத்திரத்தை இவளுக்குக் கொடுப்பதாகக் கூறினுர். அதன்படி நாங்கள் நிகழ்த்திய நாடகம்தான் அன்று நடந்த நிகழ்ச்சி. மேக்-அப் இல்லாமலும் கூடுமான வரையில் மாறுத ஓடனும் தான் நாங்கள் அன்று வெளிக் கிளம்பினேம்!

நடந்த விஷயங்களையெல்லாம் முதலாளியிடம் கூறிவிட்டோம். அவர் மேற்படி பாத்திரத்தை மட்டுமல்ல, டைரெக்ட் செய்யும் பொறுப்பைக் கூட என்னிடம் ஒப்புவித்துவிட்டார்! இப்பொழுது இவள் கூறுகிருள், இவள் நன்கு நடித்ததினுல்தான், அவளுக்கு அந்தப் பாத்திரமும் எனக்கு டைரெக்ஷனும் கிடைத்ததென்று பெருமையுடன். நீங்களே சொல்லுங்கள்! இதில் வெற்றி எனக்கா அவளுக்கா? என்ருன் குதூகலத்துடன்.

பாரி வியந்தார்! மகிழ்ந்தார்!

"மிஸ்டர் ரூப்! வெற்றி உங்கள் இருவருக்குமல்ல! எனக்குத்தான்! இதோ பாருங்கள்! முதலாளியிடமிருந்து கடிதம்! என்னை ஸ்டூடியோவுக்கு உடனேயே வரச்சொல்லி! ஆமாம்! நீங்கள் தேர்ந்தெடுத்த கதை 'மனப்படகு' தானே! அது விஷயமாகத்தான் பேச முதலாளி அழைத்திருக்கிருர்! அதில் வரும் கதாநாயகி சரசாவுக்குத்தானே மேற்படி சாகஸ நடிப்புத் தேவை! உம்! சரி! எப்படியோ ஒரு சிறந்த நடிகை, ஆசிரியை, இவ்விருவரையும் ஒரே சமயத்தில் தேர்ந்தெடுத்த எனக்குத்தான் முதல் வெற்றி என்ருர் பாரி. மூவரும் சேர்ந்து குலுங்கக் குலுங்க நகைத்தனர்.

* * * *

ரூபகுமாருடனும் ரூபமதியுடனும் அவர்களுடைய அழகான 'பியூக்'கில் ஸ்டூடியோவை நோக்கி மனநிறைவுடன் சென்ருர் பிரபல எழுத்தாளர் மிஸ்டர் பாரி—என்ற பரமசிவம்.

உங்கள் எதிர்காலம்

ஸி. பி. பொன்னுசாமி முதலியார்

16- 12- 53 முதல் (மார்கழிமாதம்) 13- 1- 54 வரை

1. மேஷ ராசி

(அசுவதி, பரணி, கார்த்திகை முதல் பாதம் முடிய)

அதியோககாரகர்களான, சூர்யன், குரு, இலக்னாதிபரான, குஜன், குரு, இவர்கள் முறையே 6, 8 ஆக, சார கதியில் பல மற்றுக்காணப்படுவதால், 2-ல் ப்ரவேசித்த குரு பூர்ணமான இன்பத்தைத்தர இயலாதவராகிறார். சதிபதிகளின் சேர்க்கை, மேலதிகாரிகளின் பரஸ்பர அன்னியோன்யம், சோதர வாஞ்சை, சோதரிகளின் சுபா சுபம், சரீர நலப் பாது காப்பு, ஜீவனத்தின்போக்கு, வசிக்கும் இடத் தன்மை, நண்பர்களின் கூட்டுறவு இத்யாதி அம்சங்களில் மன அமைதியைக் குலைக்கும். என்றாலும் டிஸெம்பர்–மீ -25உ காலை மணி எட்டிலிருக்து குரு பலம் பெறுவதால் காரிய வெற்றி, நாணயச் சேர்க்கை, அரசாங்க நடவடிக்கைகளில் சந்தோஷச் செய்தி, தீவாந்தரத்திலிருந்து நன்மையான தகவல்கள், குழந்தைகளின் நலம். அபிவிர்த்தியும், சந்தான ப்ராப்தம், முதலிய அம்சங்களில் சூழ்நிலை திருப்திகரமாய் இருந்துவரும். 3, 6 இவ்வீட்டதிபர் அஸ்தமனம் ஆவதால் எதிரிகளின் சூழ்ச்சி இவர்களைப் பாதிக்காது. வெகுசிக்கனமுள்ள இந்த ராசிக்காரர்கள் சுக், குரு, பார்வையின் காரணமாகத் தவிர்க்கமுடியாத செலவினங்களை ஏற்க நேரும். 10-ம் வீட்டோன் தனக்கு 10-ம் இராசிக்கு 7-மாக மாரக க்ஷேத்திரத்தை அடைந்தபடியால் காரணமற்ற திகில் மனதில் இருந்துவரும். 1954 ஜனவரி 1உ முதல் அஸ்தமன கிரஹம் (பு. சு.) ஒன்று சேர்ந்திருப்பதால் திடுக்கிடும் சம்பவங்கள் பந்துக்கள் வகையராக்களில் நிகழக்கூடும். பொதுவில் இவர்களுக்குத் துன்ப ரேகைகள் கலந்த இன்பத்தை அனுபவிக்கும் மாதமாகும்.

சந்த்ராஷ்டம நாள்:— பாதிக்கப்படமாட்டார்கள். இந்த நாட்களில் தனப்ராப்தம், வாக்கு மேன்மை, ப்ரயாணமும் கூடும். 1–1–1954 வெள்ளிக்கிழமை காலை ம 8 நி 51 முதல் 3—1—1954 ஞாயிற்றுக்கிழமை மாலை ம 6 நி 6 வரையில்.

சிறந்த நாட்கள்:— ஜனவரி, 6, 8, 9, 10 தேதிகள்.

N. F:- இலாபத்திற்கு இலாபோன்...சனி...குரு. விரயத்திற்கு விரயோன் குரு......சனி. இவ்விருவருமே 6, 8 ஆக ஸஞ்சரிப்பதால் சிக்கலான அமைப்பு. காரணமாகத்தான், வரவும் அமோக செலவும், ப்ரயாணத்தில் வெற்றி, திரும்புவதில் தோல்வி முதலிய அம்சங்கள் மாறி மாறி நிகழும்.

2. ரிஷப ராசி

(கார்த்திகை. 2, 3, 4, ரோஹிணி. மிருகசீரிஷம், 1, 2, பாதமும்)

பலகாரணத்தால் சிறைவாசமிருந்து வெளிவந்த இந்த ராசிக்காரர்கள் இராஜயோக அம்சத்தின் ஒரு பகுதிக்கு வெகு அருகில் இருக்கிறார்கள் என்றாலும், மறுபுறம், பிரிவாற்றாமையின் சோகத்தினால் கலக்கமடைய நேரும், சரீர இளைப்புக் காட்டும், ப்ரபல எழுத்தாளர், காவியம், ஓவியம், வழக்கறிஞர், நடிக நடிகைகள் சங்கீத வித்வான்கள், ஜோதிஷ வைத்திய மாந்த்ரீகம் முதலிய அம்சங்களில் ஈடுபட்ட இவர்களுக்கு: உழைப்புக்குத் தகுந்த பலன் அடைய மாட்டார்கள். முறையே இவர்களின், ஆசானோ, குடும்பத் தலைவரோ, கட்சித் தலைவரோ (குறிப்பாக விஷ்ணுவின் அம்சத்தைச் சேர்ந்தவர்கள்) தந்தையோ இந்த ஸ்தானங்களில் உள்ளவர்களின் நிலைமை படுமோசமானதாகும். ஒரு சிலருக்கு மாறின பதவியில் மகிழ்ச்சியும், மனையாளின் வர்க்க உதவியும் கிட்டும். கோர்ட் விவகாரங்கள் இன்னும் நீடிக்கலாம். தாய்வழி வர்க்கத்தாரின் உறவில் ஏற்பட்ட மாறுதல் இம் மாத இறுதியில் நிவாரணம் ஏற்படும். இளம் தம்பதிகள் சந்தானப்ராப்தம் அடைவார்கள்: தொழில் மூலம் இவர்கள் ஒரு ப்ரயாணத்தை ஏற்கக்கூடும். டிஸெம்பர். 23உ முதல்: தனப்ராப்தம் ஜீவன மேன்மை, பொதுமக்களின் ஆதரவு, வெளியிடத்துப் புகழ், எதுவும் இஷ்டப்படி நிறைவேற்றுதல், வீடு, நிலம், கார், கல்வி இவ்வித அம்சங்களில் சந்தோஷமான போக்கே காணப்படும். பொதுவில் வியாபாரிகளுக்கு பருப்பு வகையராக்களில் இலாபம் காணமுடியாது. விவசாயிகளுக்கு: குறிப்பாகக் கால்நடைகளில் கறவை மீசுர பலன் தராது. பொதுவில் இவர்கள் விஷ்ணுப்ரீதி செய்ய நன்மைகள் கிட்டும்.

சந்த்ராஷ்டம நாள்:- 3-1-54 மாலை மணி 6.6 முதல்- 6-1-54 காலை 1-மணி வரையில்

இருந்த இடத்தில் நன்மை உண்டு. சிறு ஆதாயம் கிடைக்கும்.

சிறந்த நாட்கள்:- டிஸெம்பர் *18, 19, 23, 27.* ஜனவரி *2, 11* தேதிகள்.

3. மிதுனம்

(மிருகசீரிஷம். 3, 4. ஆருத்ரா. புனர்வஸு, 1, 2, 3, பாதமும்)

இலக்னதிபரான, புதன், சுபரான சுக்ரன், ஆழ்ந்த நித்திரையில் காணப்படுவதால் போதிய பலன் எழுத இயலவில்லை. என்றாலும் 10-க்கு 10த்தோனுகிய குரு கேந்திராதிபத்ய தோஷத்தினின்று நீங்கினதே விசேஷ நன்மையாகும். உத்தியோகம் ஏற்பது, கூட்டுத்தொழில் ஆரம்பம், தொழில்விட்டு மறு தொழில் அடைவது இதுபோன்ற அம்சங்கள் சுமுகமாய் நடைபெறும். சு. செ. இவர்களின் பரிவர்த்தனம் உகந்ததென்றாலும் க்ரஹங்களின் பார்வை, சந்திப்பு, என்ற பேதாபேதத்தினுல், வெகு ப்ரயாசையின்மேல் வெற்றியைக் காண நேரும். பற்பல ப்ரதேச ஆசாரவாசியான இவர்கள் இம்மாதப் பிற்பகுதியில் ஓய்வு எடுத்துக்கொள்வது நலம். உத்தியோகஸ்தர்களாயின் (Self Driving) கூடாது. ப்ராண காரகராகிய சூர்யன் கேதுவின் காலில் மாரகத்தில் காணப்படுவதால், மார்பு, மர்மஸ்தானம், சிரசு ஸம்பந்தப்பட்ட ஐம்புலன்கள் இவ்வித அம்சங்களின் கோளாறுகளைக் கனிவுள, சனியின் பார்வையால் உடன் நிவர்த்தியும் ஆகும். விவசாயிகளானுல் கால்நடைகள் சேதமும், வியாபாரிகளுக்கு: பச்சைப்பயிறு, அவுரி, வெற்றிலை, வாழை இவற்றால் நஷ்டமும், களவும் காணும். (Shroff) உத்தியோகம் வகிப்பவர்களுக்கு மிக மிகக் கவனம் தேவை. முரட்டுக் குணமுள்ள குழந்தைகளுக்குக் கண்காணிப்பு அவசியம் இம்மாதத்தில் தேவை. ஸ்திரீகளாயின் ஆபரணங்களிலும், புருஷனிடம் சுமுகமான வாழ்வையும் மேற்கொள்வதில் சிரத்தைகொள்வது நலம். மாணவ மாணவிகளுக்கு விளையாட்டில் கவனம் தேவை. வைதிகர்கள்: ஆசாரம் தவறினுலும் பாதகமில்லை. வீட்டைவிட்டு வெளியேருமல் ஆறுதலாக இருக்கவும்.

சந்த்ராஷ்டம நாள்:– *6–1–54 1* A. M. tc *8–1–54 5-15* A. M. வரையில்: சகடயோக சந்த்ராஷ்டம் ஆனதால்: ப்ரயாணம் கூடாது. வண்டி, வாகனம், விற்கலாம், வாங்குவது கூடாது.

மிகச் சிறந்த நாட்கள்:- டிஸெம்பர், *22*-உ இரவு முதல் *24–12–53* முடிய.

—:வேண்டுகோள்:—

N. B. இந்த ராசிப் பலன் எழுத ஆரம்பித்த நேரம், பல இடைஞ்சல்கள், ஏற்பட்டதால்: மிஷனரீஸ், ட்ரைவர்ஸ், நெருப்பில் பழகுபவர்கள், குறிப்பாக வைஷ்ணவ வைதீகர்கள், யுவதிப் பெண்கள், உல்லாச ப்ரயாண ஆசிரிய ஆசிரியை, மாணவ மாணவிகள், கூடுமானவரையில் ஜாக்ரதையாய் இருக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

4. கடக ராசி

(புனர்வஸு. 4, புஷ்யம். ஆயில்யம்.)

அதியோககாரகராகிய குஜன். குரு உங்கள் இராசிக்கு முறையே, *4, 11*-ல், *6, 8* ஆக இருப்பது பலஹீனமாகும். இதனுல் பெற்றோர்களின் தேக நலம் பாதிக்க நேரும். இவர்களே தந்தை என்ற ஸ்தானத்தில் இருந்தால்: தகப்பன், பிள்ளை என்ற உறவில் பெரும் பிளவு ஏற்படும். *10*-க்கு *10*த்தோனின் உச்சம். உடன் தொழிலில் ஓர் வெளிச்சம் தோன்றும். இதன் பலன் உத்தராயண ஆரம்பத்திலிருந்து அனுபவிக்க நேரும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பகையை ஏற்க நேரிட்டாலும் பாதிக்கப்பட மாட்டார்கள். ஸூர்யன் வலுத்ததே இதற்குக் காரணம். தேக நலத்தைப்பாதுகாக்க ஒரு சிலர் ப்ரயாணம் ஏற்க நேரும். விவாகமான புதிய தம்பதிகளுக்குப் புத்ரோற்பத்தியின் சூசனைகள் தென்படுகின்றன. பொருளாதார வசதி மிதமாகவும் திருப்திகரமாகவும் இருக்கும். பூமி ஸம்பந்தமான நடவடிக்கைகளில் மாறுதல் ஒன்றும் காணும். மகரத்தில் இருக்கும் இராஹு நிகர பலன் தராவிட்டாலும் கோதண்ட ராகுவாக வரும் சமயம் நல்ல பலனைத் தரும் என்பது நிச்சயம். P. W. D. or Revenue இதில் உத்யோகம் வகிப்பவர்கள் உயர்த்தப்படுவார்கள். விவசாயிகள், வியாபாரிகள், மாணவ மாணவிகள் யாவர்க்கும் நல்லபலனேயாம்.

சந்த்ராஷ்டம நாள்:— *8-1-54* காலை மணி *5-15* முதல், *10-1-54* காலை மணி *8-20* வரையில் மனதிற்குப் பீதியைத்தரும் நாள். அரசாங்க விவகார சம்பந்தம் கூடாது. இவரே இலக்னதிபதி யாதலால் எதிர்பாராத வகையில் சிறு தனப்ராப்தம் உண்டு.

சிறந்த நாட்கள்:— டிஸெம்பர் *18, 22, 28, 30* ஜனவரி *8, 10.*

5. சிம்ம ராசி

மகம், பூரம், உத்ரம் 1- ஆங்கால்

குஜனும், சுக்ரனும் ஆரம்பத்தில் பரிவர்த்தனமடைந்தும் சரியொத்த பலன் தர மயங்குவதில் ஒரு கலக்கம் காண்பீர்கள். டிஸெம்பர் *25*-க்கு மேல் குரு, சுக்ரன் பரிவர்த்தனத்தில் மகிழ்ச்சியையும் காண்பீர்கள். கடனென்ற பள்ளத்தில் வீழ்ந்து உயர்நிலைக்குவர இயலுமா? என்கிற பீதியுடன் இருப்பவர்களுக்கு, ஆச்சர்யப்படத்தக்க அளவில் நிவாரணம் காண்பார்கள். உச்சமான சனி நோக்கே இதற்குக் காரணமாகும். தொழிலின் விலாஸம் மாறுதல், இடம்

மாறுதல், பதவி மாறுதல், குணம் மாறுதல், இத்யாதி அம்சங்கள் நிகழக்கூடும். இரஸாயனம் இயந்திரம், கம்பெனி ஏஜெண்டுகள். நடிக, நடிகைகள் முறையே தொழிலில் அபிவிர்த்தி காட்டும். இளங்குழந்தைகளின் தேகநலம் குறைந்து காட்டும். டிஸெம்பர் 30உ முதல் சத்துருக்களின் உபத்ரவம் பூரணமாய் விலகும். 8-க்கு 8ட்டோன் இவ்விருவரின் பரிவர்த்தனம், குழந்தைகளின் நலம் சிறிது பாதிக்கப்படும். அவசியமான சிகிச்சை தேவை, சோதர சோதரிவகை ஒத்துழைப்பில் கவனம் தேவை.

சந்த்ராஷ்டம நாள்:— 10-1-54 காலை 8-20 முதல் 12-1-54 காலை மணி 10-40 வரை. அட்டமிதிதியும் கூடுவதால். எத்துறையிலும் ஜாக்ரதை தேவை.

இலாபகர நாட்கள்:— டிஸெம்பர். 22, 23, 24.

6. கன்யா ராசி

(உத்ரம் 2, 3, 4 ஹஸ்தம், சித்திரை 1, 2 பாதமும்)

9-ம் வீட்டில் ஸஞ்சரிக்கும் குரு. நாணயம், கௌரவம், புகழ், செய்யும் பணிக்குப் பாராட்டுதல் முதலிய அம்சங்களில் வெளிப் பார்வையில் திருப்திகரமேதான். ஆழ்ந்த ஆராய்ச்சியில் கவனித்தால் 20—3—1954-க்குப் பிறகு சஞ்சலத்தைப்போக்கும். நல்லதொரு மார்க்கத்தை க்ரஹங்கள் வகுத்துத்தரும் என்பதே என் கருத்து. 2-க்கு 8-ஆகவும் 4-க்கு 6-ஆகவும், 7-க்கு 3-ஆகவும் ஏன்? தன் ஸ்தானத்திற்கே 6, 3-ஆகவும் மறைந்து, தானும் கட்டுப்பட்டு, வேதனையுடன் காட்சி யளிக்கிறுர். என்ற காரணத்தினுல் முறையே உடற்கோளாறு, மனைவி வாதனை, தாய் வழிக்கு ஏற்படும் சோதனை, வாகனத்தின் முடக்கம், வசிக்குமிடத்தால் ஏற்படும் தொல்லைகள், தொழிலில் அபார சக்தியைக் காட்டுவதில் ஒரு தளர்ச்சி. நண்பர்களின் வஞ்சனையான சூழ்ச்சி. முதலிய அம்சங்களில் வில்லங்கம் ஏற்படாது என்று சொல்வதற்கில்லை. தொழில் மட்டும் எந்தவிதத்திலும் தடைபடாமல் நல்ல விதத்தில் பலன் தரும். சந்தேகம் தேவையில்லை. புதன் அஸ்தமனமாவதால், கூட்டு உள்ளவர்களுடன் பகை நேராமலும், நிலையான புத்தியைச் சிதற விடாமலும் பொருள் ரிக்கார்டுகளில் போதிய கவனமும் தேவை. மாணவ மாணவிகள் படிப்பில் கவனக்குறைவும் **Pen, wrist** முதலியவைகளால் சோரமும் மில் சம்பந்தப்பட்டவர்களுக்கு இயந்திரத்தினுல் எதிர்பாராத செலவுகள் ஏற்கநேரும்.

சந்த்ராஷ்டம நாள்:— இம்மாதம் 2 தடவை சம்பவிக்கும்.

1. 16—12—1953 முதல் 18—12—1953 காலை மணி 5 நி 7.

2. 12—1—1954 காலை மணி 10 நி 40-முதல் 14—1—1954 பகல் மணி 1 நி 20-வரை.

N.B:-இரண்டாம் சந்த்ராஷ்டமம் முடிவுறும் நாள் பொங்கல் ஆதலால் இந்த ராசிப் பெண்கள் எந்த வேலையிலும் ஈடுபடாமல் இருப்பது நலம்.

சிறந்த நாட்கள்:— டிஸெம்பர் 22, 23, 24, 26 ஜனவரி 5, 11.

7. துலாராசி

(சித்திரை 3, 4, ஸ்வாதி, விசாகம் 1, 2, 3, பாதமும்)

3. 6-க்குடைய குரு, 8-ம் வீட்டில் தமக்கு 3. 6. ஆக ஸஞ்சரிப்பதின் போக்கு, உருவாகும் ஒரு புதிய திட்டத்தின் வெற்றியைக் காட்டுவதே யாம். 4-க்கு 4. இவ் விரு வீட்டதிபர்களும் ஒன்று கூடியிருப்பதால், நண்பர்களின் உதவி, கூட்டுறவில் புதியதோர் வெளிச்சம், நாணய மேன்மை, ப்ரபுக்களின் ஆதரவு. சோதர வாத்ஸல்யம், கௌரவம், புகழ் இத்யாதி அம்சங்களில் திருப்திகரமான போக்கே தென்படுகிறது. ஒரு சிலர் தொழிலிலிருந்து ஓய்வு எடுத்தவர்கள் இன்னும் ரஜாவிலேயே இருந்துவர நேரும். 7-க்கு 4-ல் கேது ஸஞ்சரிப்பதால் மனைவியின் தேக நலத்தில் சிரத்தைகொள்ள நேரும். தனுதிபன் தன் வீட்டை நோக்குவதால் பொருளாதார நிலைமை சீர்படும். இயந்திர சாலைகள், அச்சாபீஸ். புகைப்பட நிலையம், இயந்திர வாகனத் தொழில்: இது சம்பந்தமான புதிய ஸ்தாபனங்கள் நிறுவுவதில் மகிழ்ச்சியைக் காண்பீர்கள். உங்கள் இராசிக்கு, 4-ல் உள்ள ராகு: ஐம்புலன்களில் சிறு கோளாறுகள் இன்னும் நீடிக்கலாம்! பொதுவில்: தைர்யஸ்தானத்தில் இராகு வருமளவும் மனச்சோர்வு ஒருபுறம் இருக்கத்தான் செய்யும். இது தற்காலிகமானதே.

சந்த்ராஷ்டம நாள்:- 18-12-1953 காலை மணி 5. நி 7-முதல், 20-12-1953 காலை மணி 9, நி 6. வரையில். குரு சந்திரன் கூடினதால் கெடுதல் இல்லை. தனப்ராப்தம் உண்டாகும்.

சிறந்த நாட்கள்:- டிஸெம்பர் 19, 24, 28. ஜனவரி 7, 12.

8. விர்ச்சிக ராசி

(விசாகம் 4. அனுஷம், கேட்டை)

கூட க்ரஹங்கள் ஆரோஹணத்தில் ஸஞ்சரிப்பதால் இம்மாதத்தில் ஓர் அத்ருஷ்டக் காற்று வீசக் கூடும். தனுதிபரான குரு இலக்னுதிபன் காலில் காணப்படுவதால் தேகசுகம், ஜீவனவிர்த்தி விவசாய லாபம். ஆளடிமைச் சேர்க்கைகள், சுறுசுறுப்பான ஆர்வம், நாணயம், புகழ் முதலிய அம்சங்களில் நல்லவிதமான போக்கே தென்படுகிறது. இலக்னுதிபனுன குஜன் 8-ம் பார்வையாக நோக்குவதால், அவசரப்பட்டு எதையும் செய்வதில் தவறு நேர்வது ஸஹஜம். நிதானம் நிவாரணம் செய்யும் என்பதை உணர வேண்டும். உயர் வாகனச் சேர்க்கைகள் உண்டு. கறவை மட்டும் நல்ல பலிதம் தராது. இளம் வயது உடையவர்களுக்கு விவாகத்திற்குண்டான பேச்சுகள் நடைபெறும். பெண்களாயின் சுபகார்யம் தடைபடும். வாழ்க்கையில் இருப்பவர்களும் பிரிக்கப்படுவார்கள். 5-க்கு 8-ஆகவும், 7-க்கு 6-ஆகவும் சனி, செவ்வாய் ஸஞ்சரிப்பதால், முறையே குழந்தை, மனையாள் இவர்களின் க்ஷேமாபிவிர்த்திக்குப் பண விரயம்காட்டும். 12வயதுடையவர்களுக்கு T. B.என்ற வியாதி பெரும் அபாயத்தை ஏற்கநேரும். குறிப்பாக உத்தியோகஸ்தர்களாயின் Food Control, Revenue, Transports and Customs, இதுசம்பந்தப்பட்டவர்கள் உயர்த்தப்படுவார்கள்.

சந்த்ராஷ்டம நாள் :— 20-12-53 காலை 9-6 முதல் 22-12-53 மாலை மணி 3-4 வரையில் விசேஷ பலிதம் இல்லை.

சிறந்த நாட்கள்:-டிஸெம்பர் 3, 27. ஜனவரி 6,7.

9. தனுர் ராசி

(மூலம், பூராடம், உத்ராடம், 1-ஆங்கால்)

டிஸெம்பர் 25வ வரையில் வாழ்க்கையில் இயந்திரம்போல் உழலவேண்டியதே. இடம், தொழில் மாறினதில் மகிழ்ச்சி காணுத அம்சம். குரு சுக்ரன் பார்வை காரணமாக உமது பொருள் வெளியேற்றமாகும். ஒரு சிலருக்கு வீண் விரயங்களைத் தரும். 10-க்கு 10த்தோன் அஸ்தமனம். தொழிலில் சூன்யத்தைக் காட்டுகிறது. 'சித்திரத்துக் கொக்கும் ரத்தினத்தை விழுங்கும்' என்ற பழமொழி உங்களுக்குப் பொருத்தமானதே. உழைப்பு அதிகம். ஊதியம் குறைவு. இலாபத்தில் சஞ்சரிக்கும் குஜன், சனி ஏனோ இன்னும் கருணையைச் செலுத்தவில்லை. நிகழ்ச்சிகள் உருவாகும். அமுலுக்கு வரத் தாமதமாகும்.

சந்த்ராஷ்டமம்:– 22-12-53 மாலை மணி 3, 4 முதல் 24-12-53 இரவு மணி 11-26 வரையில் எதிர்பாராத தன வரவு நல்ல தகவல்கள் நண்பர்களின் சந்திப்பும்.

10. மகர ராசி

(உத்ராடம் 2, 3, 4 சிரவணம், அவிட்டம், 1, 2. பாதமும்)

பு. சு. சந்திப்பின் காரணமாக, செய் தொழில் இலாபம், ஆர்வத்தோடு எதையும் செய்வதில் வெற்றி. வாக்கு மேன்மை, ப்ரபலஸ்தர்களின் ஆதரவு, பகையாளர் மறைவு. பொது மக்களின் தொடர்பு, நாணயம், புகழ், ஸ்பெகுலேஷன், ரேஸ் முதலிய போட்டியினங்களின் வெற்றி, வியாபார விஸ்தரிப்பு, முதலிய அம்சங்களில் திருப்தி காணப்படுகிறது. என்ருலும் ஒரு சிலர் வீடு, நிலம், தோட்டம், வாகனம், இவ்வித வகையராக்களைக் கிரயமோ, அல்லது ஈடாகவோ, விரயம் செய்யநேரும். கோர்ட் விவகாரங்கள் இன்னும் சில மாதங்கள் நீடிக்கக் கூடும். இது சமயம் நடுநிலைமையில் இருந்து வருவதுடன் ராசி செய்வற்குண்டான சூசனைகள் தென்படுகின்றன. ஒரு சிலருக்குத் தாய், அம்மான் இந்த வர்க்க உறவில் குழப்பமாகவே இருந்துவரும். இதுவரை உங்களை வாட்டின வியாதிகள் மறையும் காலம் இதுவேயாம். இளம்வயதுதம்பதிகளின் வாழ்வில்சிலநன்மைகள் உண்டாகும். புத்ரசோகம் நீங்கும். வியாபாரிகளுக்குப் பலசரக்கு, மில், தரகு, ரஸாயனம், இவ்வித அம்சங்களினுல் இலாபம் காட்டும். விவசாயிகளுக்கு எவ்விதத்திலும் குறைவு ஏற்படாது.

சந்த்ராஷ்டம நாள்:– 24-12-53 இரவு மணி 11 நி 26 முதல் 27-12-53 காலை மணி 10 நி4 வரையில். புதிய வாகனசவாரி, நண்பர்களின் சந்திப்பும் கிடைக்கும் தகவலில் மனம் குதூகலமும்.

சிறந்த நாட்கள்:— டிஸெம்பர் 17, 24 ஜனவரி 3, 5, 12.

N. B:— குஜன் 10-ல் ஸஞ்சரிப்பதால். செய்வகை முயற்சிகளில், தடைபட்டுப் பின் நிறைவேறும்.

11. கும்ப ராசி

(அவிட்டம், 3, 4. சதயம், பூரட்டாதி, 1, 2, 3, பாதமும்)

அவசரப்பட்டுச் செய்த காரியங்களில் சிக்கலை மேற்கொண்ட இந்த ராசிக்காரர்கள் குஜசுக்ரன் பரிவர்த்தனத்தால் ஒருவாறு சுதாரித்துக் கொள்ளும் சக்தியைப் பெறக்கூடும். புருஷன், மனைவி, குழந்தை என்ற பந்தபாசப் பிணைப்பில் இன்னமும் ஒரு பிளவு இருக்கத்தான் செய்கிறது: பாக்யத்திலுள்ள சனி 6-ம் வீட்டை நோக்குவதால் துஷ்டர்களின் உபத்திரவம் ஏற்படினும் 6-ம் வீட்டில் உள்ள கேதுவால் உடனுக்குடன் நிவர்த்தி ஏற்படும். பிதுரார்ஜிதங்களில் ஏதேனும் ஒன்றைக்கிரயம் செய்யக்கூடும். கண்ட்ராக்டர்களுக்கு இது ஏற்றமான மாதமல்ல: பொதுவில் இந்த ராசிக்காரர்களை 12-ல் இருக்கும் இராகு 11ல் வந்தவுடன் நல்ல நிலைமையில் சந்திப்போம்–

N. B:– தேகசுகத்தில் கவனம் தேவை.

சந்த்ராஷ்டம நாள்:– 27-12-53 காலை மணி 10. 4. முதல் 29-12-53 இரவு மணி 9. 47. வரையில். முயற்சிகளில் ஜயம். எதிர்பாராத தனவரவு நண்பர்கள் சந்திப்பும் ஏக போக சுகம். இந்தச் சந்திராஷ்டமத்தில் ஏற்படும்.

12. மீன ராசி

பூரட்டாதி 4 உத்ரட்டாதி, ரேவதி.

யோககாரகர்களாகிய குஜன், குரு 6, 8, ஆக இருப்பதில் இனமறியாத குழப்பம் மனதில் குடிகொள்வதும், முயற்சிக்கும் காரியங்களில் தடைபட்டு வெற்றி காணுவதும் விவகாரங்களில் தோல்வியும், மீண்டும் மேல் இடத்துக் கோர்ட்டில் ப்ரவேசிப்பதும் குழந்தைகளின் உடற்கோளாறுகள் இன்னும் நீடிப்பதும். இம்மாதக் கடைசியில் க்ஷேமாபிவிர்த்தியைக் கொடுக்க க்ரஹங்கள் சாதகமான நிலைமையில் திரும்புவதும் புருஷன், மனைவி, என்ற இரகஸ்ய வாழ்க்கையில் வெறுப்பு ஏற்படுதலுமான சூழ்நிலையைக் காட்டுகிறது. 10-ல் இருக்கும் சூர்யனுல் 'தொழிலில்' ஒரு மாற்றம் புதிய வெளிச்சம் தோன்றும். பொதுவில் இந்த ராசிக்காரர்களுக்குச் சோதர சோதரி போன்றவர்களின் உதவியினுல் முன்னேறக் கூடும். தூரத்து உறவினர்களின் துக்கச் செய்திகள் வரக்கூடும். அட்டமச்சனி சூர்யனைப் பார்ப்பதால் பெரிய தொழிலில் பிணைப்பு ஏற்படுவதில் நிதானம் தேவையாகும். விவசாயிகளுக்குக் கால்நடைகளில் பலிதம் இல்லை. சேதம் காட்டும்.

சந்த்ராஷ்டம நாள்:— 29—12—53 இரவு மணி 9-47 முதல்.

தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள
கிருமிகளிலிருந்து உங்கள் ஆரோக்கியத்தைக்
காப்பாற்றிக்கொள்ளுங்கள் ...
லைப்பாயின்
பாதுகாக்கும்
நுரையினால்!
LIFEBUOY SOAP
LIFEBUOY SOAP
நீங்கள் எவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தாலுங்கூட, தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள கிருமிகளின் அபாயத்துக்குள்ளாக நேரிடும். லைப்பாய் சோப் உபயோகித்துத் தவருமல் ஸ்னானம் செய்து உங்கள் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். லைப்பாய் சோப்பின் பாதுகாக்கும் நுரை அழுக்கிலிருக்கும் கிருமிகளை விரட்டுகிறது. உங்களை நாள்முழுவதும் புத்துணர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது.
லைப்பாய் சோப்
தினசரித்தொல்லையான கிருமிகளிலிருந்து தினமும் உங்களைக்காப்பாற்றுகிறது
L. 227A-50 TM

காஃபி-ஹவுஸ்

தமிழாக்கம்: D. ராஜன்

ஸூரத்தில் ஒரு சத்திரம். வெகுதூரத்திலிருந்து வரும் பிரயாணிகள் அங்கு வந்து தங்குவார்கள். பிரயாணிகள், ஏதாவது தர்க்கம் செய்துகொண்டிருப்பார்கள். ஒரு தடவை ஈரான் தேசத்திய யாத்திரீகன் அங்குத் தங்கினான். அவன் மத விஷயங்களை நன்று கற்ற அறிஞன். தன் காலத்தைக் கடவுள்பற்றிய ஆராய்ச்சியில் செலுத்தி, மத நூல்களைப் படித்தும், நூல்கள் எழுதியும் வந்தான். அவன் கற்ற நூல்களும். இயற்றிய நூல்களும், அனந்தம். அளவிலா 'ஆராய்ச்சியின்–இறுதி', அறிவு மழுங்கியதுதான் மிச்சம்! சிக்கலான ஆராய்ச்சியில் அளவுக்கு மீறி ஆழ்ந்திருந்ததனால் கடைசியில் 'கடவுளின் இருப்புத்தன்மையிலேயே' நம்பிக்கை இழந்துவிட்டான்! ஈரானிய அரசனுக்கு இது தெரிந்ததும் அந்த அறிஞனை நாட்டை விட்டு விரட்டிவிட்டான்.

ஆழ்ந்த ஆராய்ச்சியின் பயன் மூளை கெட்டுவிட்டதென்பதை உணருவதற்குப் பதிலாக, சிருஷ்டி ஒரு அகண்ட சக்தியின் தூண்டுதலால் தான் இயங்குகிறதென்பது 'முடியாத காரியம்' என்ற முடிவிற்கு வந்துவிட்டான்.

இந்த அறிஞனுக்கு ஒரு அடிமை உண்டு. அவன் நீக்ரோ. எப்பொழுதுமவன் அறிஞனிடமே இருந்தான். அவன் சத்திரத்தில் தங்கின சமயம், அவன் சத்திரத்தின் வெளியே தங்கியிருந்தான். வாசற்படிக்கு வெளியே வெய்யில் காய்ந்துகொண்டிருந்தது. நீக்ரோ ஒரு கல் மீது உட்கார்ந்து மொய்த்துக்கொண்டிருக்கும் ஈக்களை ஓட்டிக்கொண்டிருந்தான். எஜமானன் சிற்றுண்டி கேட்டான். அதில் அபினும் கலந்திருந்தது. வயிறு நிரம்பியதும், அபின் மூளையிலே, தன் வேகத்திறமையைக் காட்டியது. உடனே அடிமையை உரக்க அதட்டிக் கேட்டான்—

"டேய், சொல்லடா கடவுள் உண்டா இல்லையா?"

"ஏனில்லை? அடிமை, தன் கோட்டிலிருந்து ஒரு மரப் பொம்மையைக் கையிலெடுத்தவாறு—இதோ பாருங்கள் எஜமான்! இதுதான் கடவுள்! இவர்தான் ஆயுள் முழுதுமே என்னைக் காத்தவர். எங்கள் நாட்டிலே, ஒரு குறிப்பிட்ட தூய மரத்தைப் பூஜிக்கின்றனர். இந்தக் கடவுளின் சிலை, அத்தூய மரத்தின் கிளையினால் செய்யப்பட்டது." என்றான்.

சத்திரத்தில் தங்கியவர்களுக்கு, இவர்களுடைய உரையாடல் வியப்பையூட்டியது. கேள்வியைவிட, அவனுடைய பதில்தான் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது.

அங்குள்ள ஓர் அந்தணனுமிதைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் கோபத்துடன் அடிமையைப் பார்த்து உரத்த குரலில் கூறினன்—

"அட, சனியன் பிடிச்ச முட்டாள்! கடவுளை ஒரு கோட்டு சட்டையிலே அடச்சு வச்சூடலா மென்று எண்ணுகிருய்! கடவுள் ஒருவனே—அவனே பிரம்மா! அவனே இந்த உலக சிருஷ்டியைவிடப் பெரியவன். எல்லாத் தேவதைகளையும் விடச் சிறந்தவன். பவித்திரமான கங்கையின் கரையிலே அவனுடைய கோயில் அமைந்திருக்கிறது. அங்கேதான் பிரமாவின் மெய்யன்பர்களாகிய பிராமணர்கள், அவனை அர்ச்சிக்கின்றூர்கள். பிராமணர்கள்தான் அவனுடைய மஹிமையை அறிவார்கள். வேறு யாராலும் அறிய இயலாது. லக்ஷோபலக்ஷம் வருஷங்கள் சென்றுவிட்டன! கற்பங்களனேகம் கடந்து விட்டன! ஆனாலும் அந்தணர்களின் கல்வித் திறமையும் அறிவும்—இன்றும் நிலைத்திருக்கின்றன. ஏன் தெரியுமா? பிரம்மாவே அவர்களைக் காப்பாற்றுகிறூர்! வாஸ்தவத்தில் பிரம்ம தேவன்தான் ஈச்வரன்!"

இதை மற்றவர்கள் ஏற்றுக்கொள்வார்களென்று அந்தணன் நினைத்தான். அங்கிருந்த யூத வியாபாரி ஒருவன் இந்தப் பதிலைக் கேட்டு வியப்புடன் கூறினன்—

"இல்லவே இல்லை! கடவுளின் உண்மையான வீடு இந்தியாவில் கிடையாது. கடவுளே அந்தணர்களைக் காப்பாற்றுகிறுனென்பதையும் நம்பமாட்டேன்! கடவுள் ஆபிரகாம் ஈஸாக்—யாகோபியருக்கே சொந்தம்! கடவுள் இஸ்ராயில் நாட்டினரைத்தான் காப்பாற்றுகிறுன். அவர்கள்தான் அவனருளடியார்கள். உலகம் தோன்றியதிலிருந்து இதுவரை ஆண்டவன் எங்களைத்தான் நேசித்துவருகிறுன். மற்றவரையில்லை.

இன்று யூதர்களாகிய நாங்கள் உலகில் ஒரு தேசத்தையும் தாயகமாகக்கொள்ளாமல் நாடோடிகளாக, அலைகின்றேமே! என்று கேட்கலாம். அதற்குக் காரணம் ஆண்டவன் எங்களைச் சோதனைச் செய்கிறுன். ஆண்டவன் எங்களுக்கு வாக்களித்திருக்கிறுன்—ஒரு நாள் அவனுடைய பக்தர்களையெல்லாம் எருஸலத்திலே ஒன்று சேர்ப்பான். எருஸல நாட்டு, ஆலயங்களனைத்தும் அதன் பழம்பெரும் கம்பீரத்துடன் விளங்கும். ஒரு காலத்திலே இதைக் கண்டு உலகம் வியக்கப்போகிறது. மறுபடியும் உலகத்திலே, 'இஸ்ராயில்-ராஜ்யம்' நடக்கப் போகிறது!" இதைக்கூறும்பொழுது அவன் அழுதேவிட்டான். இன்னுமேதோ பேச எண்ணினன். நடுவே ஒரு இத்தாலியப் பாதிரியார் பேசத் தொடங்கிவிட்டார்:—

"நீ சொல்வது பொய்! நீ கடவுளை நியாய மற்றவரென்கிறுய். அவர் உங்களை மற்றவர்களைவிட அதிகமாக நேசிப்பதில்லை! ஒரு வேளை ஏற்றூலும் 1900-ஆண்டுகளாகவே, அவர் உங்கள் மீது கோபம் கொண்டிருக்கிறூர். அதனால்தான் அவர் உங்கள் சமூகத்தைச் சிதறடித்துவிட்டார்! இப்பொழுது யாரும் உங்கள் மதத்தை நம்புவதில்லை. கிட்டத்தட்ட உங்கள் மதம் தேய்ந்து விட்டது! கர்த்தர் ஒரு சமூகத்தைவிட மற்றென்றை அதிகமாக நேசிப்பதில்லை. கர்த்தரின் பாதையிலே சென்று 'இரட்சண்யம்' பெறவேண்டுபவர் கத்தோலிக்க மதத்தைத் தான் பின்பற்றவேண்டும்! இதைவிட எந்த மதமும் 'இரட்சிப்பின் வழியைக் காட்டவே முடியாது' என்று அவர், யூத வியாபாரியை நோக்கிக் கூறினர்.

இதைச்சொல்லி நிறுத்துவதற்குள் அங்கிருந்த புரோட்டஸ்டண்ட் பாதிரியார் அவர் மீது பாய்ந்தார்.

"என்ன உளறுகின்றீர்! உங்கள் மதந்தான், இரட்சிப்பின் வழியைக் காட்டுமென்று யார் சொன்னது? விவிலிய வேதாகம நூலில் (பைபிள்) கூறியிருப்பதுபோல் எவர் தேவனுகிய கர்த்தரைச் சேவிக்கிறூர்களோ அவர்கள்தான் இரட்சிப்பை அடையமுடியும்! மெய்யன்புடன் யார் அவரை நேசிக்கின்றனரோ, அவரே மோட்சப் பாக்கியத்தையடையமுடியும். கர்த்தராகிய ஏசு எப்படி, நடந்து காட்டினரோ அதன் பிரகாரமே நடக்கவேண்டும்." என்று.

அந்தக்காஃபி-விடுதியில் தங்கியிருந்த சுங்கவரி அதிகாரி ஒரு முஸ்லீம். அவர் 'ஹூக்கா'ப் பிடித்துக்கொண்டிருந்தார். இந்த உரையாடல்களைக்கேட்டுத் திரும்பினர். கிறிஸ்துவ குருமார்களிருவருமே அவருக்குமுன் தாழ்ந்தவர்களென்று எண்ணும் தோரணையில் அவர் கூறினர்.

"உங்கள் ரோமன் மதக் கொள்கை முற்றிலும் அர்த்தமற்றது. 1500-ஆண்டுகளுக்கு முன்பே 'கிறிஸ்துவத்தின்' இடத்தை ஒரு உண்மையான மதம் பிடித்துக்கொண்டுவிட்டது. அந்த மதத்தின், அமைப்பாளரே ஹஜரத் முஹம்மது நபி நாயகம். உங்களாலிந்த உண்மையை எப்படி மறைக்க முடியும்? இன்று ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் மாத்திரம் இல்லை. பரந்த மனப்பான்மைகொண்ட சீன தேசத்திலுங்கூட 'இஸ்லாம்' பரவி வருகிறது. யூதர்களிடம் கடவுள் கோபங்கொண்டுள்ளாரென்பதை இருவருமே ஒப்புக்கொண்டீர்கள். அவர்கள் மதம் தேய்ந்து வருகிறதையும் அறிவித்தீர்கள். அப்படியிருக்க 'இஸ்லாம்' ஒன்றுதான் இன்று மிகவும் முன்னேற்றமடைந்திருக்கிறதென்ற மகத்தான உண்மையை ஏன் ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறீர்கள்? இன்று உலகில் ஏராளமான மக்கள் இந்த மதத்தை ஏற்று வருகின்றனர். ஹஜரத் முஹம்மது நபி நாயகத்தைப் பின்பற்றுகிறவர்களைத்தவிர வேறு யாரும் முக்தியடைய முடியாது. அவர்தான் கடவுளின் கடைசித் தூதர்! ஹஜரத் அலியைப் பின்பற்றுபவர்கள் எங்களுக்கு முற்றிலும் மாறுனவர்கள்:"

ஒரு ஈரானிய தேசத்தான் இதற்குப் பதில் சொல்ல விரும்பினன். ஏனெனிலவன் ஹஜரத் அலியைப் பின்பற்றுகிறவன். (ஷியா) மற்றும் பல மதங்களைச்சேர்ந்தவர்கள் அங்கு இருந்தனர். அவர்களிடம் வாக்கு வாதங்கள் நடந்தன வேகத்துடன்! அங்கு அபிஸினிய நாட்டுக் கிறிஸ்துவர்களிருந்தனர். திபேத் லாமக்களிருந்தனர். இஸ்மாயிலி மதத்தினர் இருந்தனர். தீயை வணங்கும் பார்ஸிகளுமிருந்தனர். கடவுளின் உண்மையான ரூபம் எது? எந்த வழியில் கடவுளை வழிபடுவது? என்ற சர்ச்சை யேற்பட்டது. ஒவ்வொரு ஜாதியினரும் தாமே உண்மையான கடவுளை அறிந்திருப்பதாக எண்ணினர்.

தம்வழிதான் கடவுளின் மெய்யானவழியென்றும் கருதினர் ஒவ்வொருவரும்.

ஒரு சீனதேசத்தவரைத் தவிர மற்றவர்கள் கடுமையான தர்க்கத்திலீடுபட்டிருந்தனர். அவர் மஹாத்மா கன்ஃபூஷியஸின் சீடர். ஏகாந்தமாகத் தேநீர் அருந்திக் கொண்டிருந்தார். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டுதானிருந்தார். ஆனாலொன்றும் பேசவில்லை!

முஸ்லிம் அதிகாரி அவரிடங்கேட்டார்—

"என் நண்பரே, நான் கூறுவதையெல்லாம் தாங்கள் ஏற்றுக் கொண்டீரென்று நம்புகிறேன். உங்கள் ஊர் அதிகாரிகள் எங்கள் சுங்கச் சாவடிக்கு வருகின்றனர். அவர்கள் வாயிலாக நானறிந்தேன். எத்தனையோ மதங்கள் தோன்றின. ஆனால் சீனமக்கள் 'இஸ்லாம்' மதத்தைத்தான் மிகச் சிறந்ததாக நினைக்கின்றனர். மகிழ்ச்சியுடனவர்கள் இந்த மதத்தை ஏற்கின்றனர். தயவுடன் தங்கள் கருத்தைக், கடவுளின் தத்துவத்தை விளங்குங்கள்"

அங்கிருந்தமற்றவர்களும், அவருடைய கருத்தைக் கூறும்படி கேட்டார்கள்.

சீனதேசத்தவர் சற்று நேரம்வரை கண்களை மூடி யோசித்தார். பிறகு கண்களைத் திறந்து 'தொள தொளத்த' கோட்டிலிருந்து கைகளை வெளியே எடுத்தார். கைகளைக் கட்டிக்கொண்டு மிகவும் அமைதியுடன் மெல்லிய குரலில் கூறத் தொடங்கினர்—

"பாருங்கள், பலமதத்தினர் சமரசமாகப் போகாததற்கு அவர்களுடைய அகங்காரமே காரணம்! நீங்கள் உத்தரவளித்தால் நான் ஒரு கதை சொல்லுகிறேன். பிரச்னை தெளிவாக விளங்கிவிடும்."

சீனவிலிருந்து ஆங்கிலேயக்கப்பலில் இங்கு வந்தேன். கப்பல் உலக முழுவதும் சுற்றிவிட்டுத் திரும்பியது. வழியில் சாமான்களை ஏற்றிக்கொள்ள 'சுமத்ரா'த்தீவின் கரையிலே 'நங்கூரம்' போட்டார்கள். மத்தியான வேளை நாங்கள் கப்பலை விட்டிறங்கினேம். கரையிலிருந்த தென்னதோப்பிலமர்ந்து, இளைப்பாறினேம். பக்கத்திலே ஒரு ஊர். எங்களில் பல நாட்டினர் இருந்தோம்.

அந்தச் சமயம் ஒரு குருட்டு மனிதன் எங்களிடம் வந்தான். அவன் நீண்டகாலமாகச் சூரியனை யே, உற்றுப்பார்த்துக்கொண்டிருந்ததினல் குருடனகிவிட்டான். சூரியனுடைய உண்மையான ரூபந்தான் என்னவென்ற ஆராய்ச்சியிலீடுபட்டிருந்தான். ஆராய்ந்து சூரிய ஒளியைத் தனக்காகவே 'சேகரம்' செய்து கொள்ள எண்ணினன்.

இந்த முயற்சியில் நெடுங்காலம் சென்றது. விடாமல் சூரியனை இமைகொட்டாமல். பார்த்துக் கொண்டுதானிருந்தான். அந்த ஒளியின் தீவிரத்தினல் அவன் கண்கள் பழுதடைந்தன. அவன் குருடனனன்.

அவன் நினைத்தது இதுவே—சூரியன் திரவப் பொருளாக இருக்கமுடியாது. இருந்தால் பாத்திரத்தில் கொட்டிவிடலாம்! நீரைப்போன்றே காற்றில் கலங்கிவிடும். சூரிய ஒளி தீயாகவுமிருக்கமுடியாது. அப்படியிருந்தால் தண்ணீர் பட்டு அணைந்துவிடும்! அது காற்றாகவுமிருக்க முடியாது. கனபதார்த்தமாகவுமில்லை. இருந்தால் அசைக்கமுடியுமே! ஆகையால் அது ஒன்றுமில்லை!

விடாமல் சூரிய ஆராய்ச்சியிலிடுபட்டதினல் கண்கள் மாத்திரம் பாழாகவில்லை; அறிவுங் கூடத்தான்!

முழுக்குருடனனபொழுது அவன் சூரியனே கிடையாதென்றமுடிவுக்கு வந்தான். அவனுக்கு ஒரு வேலையாளுண்டு. அவன் எஜமானனை நிழலில் உட்காரவைத்தான். ஒரு தேங்காயை யெடுத்து ஒரு விளக்கு தயாரித்தான். அதன் நார்களால் 'திரி'செய்து தேங்காய் எண்ணெயைப் பிழிந்து விளக்கையேற்றினன். இவன் நடுவே எஜமானன் வந்தான். ஒருநீண்ட மூச்சுடன் 'பார்த்தியா! நான் சொன்னது நிஜமாகப்போச்சு! எங்கும் ஒரே இருட்டு! அப்படியிருந்தும் ஜனங்கள் சூரியனிருப்பதாகச் சொல்லுகிறார்களே! சூரியன் என்றாலென்ன?' என்று கேட்டான். வேலையாளோ பதில்கூறினன்: 'எனக்குச் சூரியன் எதுவென்றெல்லாம் தெரியாது. தெரிந்து கொள்ளவும் வேண்டாம். ஆனல் வெளிச்சம் எதுவென்று எனக்கு நன்ருகத் தெரியும்! ஒரு விளக்கு செய்தேன் பாருங்கள்!

இந்த விளக்கின் உதவியால் நான் உங்களுக்குச் சேவை செய்ய முடியும். குடிசைக்குள் எந்த இருட்டிலும் சாமான்களைத் தேடி எடுக்க முடியும்' என்று கூறி வேலையாள் விளக்கைத் தலைக்குமேல் தூக்கிப் பிடித்து, இதுதான் என்னுடைய சூரியன்! என்ருன்.

ஒரு நொண்டி அங்கே, கழிகளுடன் உட்கார்ந்திருந்தான். இதைக்கேட்டதும் அவன்

சிரித்தான். குருடனைப்பார்த்து—நீ பிறவிக் குருடன்மாதிரி யல்லவா பேசுகிறாய்! சூரியன் என்ன தெரியுமா? அது ஒரு 'தீ உருண்டை' அது தினம் கடலிலிருந்து வெளியே வருகிறது. மாலையில் எங்கள் தீவிலிருக்கும் மலைகளுக்குப் பின்னால் மறைகிறது. நாங்கள் இதை நன்றாகப் பார்த்திருக்கிறோம். உனக்குப் பார்வையிருந்த போது நீயும் பார்த்திருப்பாயே என்றான்.

இதை அங்கிருந்த ஒரு செம்படவன் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் நொண்டியைப் பார்த்துச் சொன்னான்:— நீ இந்தத் தீவை விட்டு எங்கும் வெளியே சென்றதில்லையென்று தெரிகிறது. நீ நொண்டியில்லாமலிருந்து, என்னைப்போலப் படகுகளிலேயும், கட்டு மரங்களிலேயும் அமர்ந்து சென்றிருந்தால் உனக்குத் தெரிந்திருக்கும். சூரியன் மலைகளுக்குப்பின்னால் மறைவதில்லை. காலையில் கடலிலிருந்து வருவது போலவே மாலையிலும் கடலிலே மறைகிறது. நான் சொல்வது நிஜந்தான். இதை நான் தினமும் பார்த்து வருகிறேன். எங்களுடன் ஒரு இந்தியனுமிருந்தான். அவனிதைக்கேட்டு ஆச்சரியமடைந்தான். "இப்படி வீண் வாதம் செய்வதைக்கண்டு வியப்படைகிறேன்! ஒரு 'தீ உருண்டை' கடலில் முழுகுவதால் அணைந்து போகுமா இல்லையா? சூரியன், தீ உருண்டை யன்று. அவன் தேவன்! அவனைத்'திவாகரன்' என்கிறோம். அவன் தினம், ரதத்திலமர்ந்து மேரு-பர்வதத்தையே இடைவிடாமல் சுற்றிக் கொண்டிருக்கிறான். சில வேளைகளில் 'ராஹு-கேது' என்ற இரு நாகங்கள் அவனைத்தாக்கி விழுங்கிவிடுகின்றன. அப்பொழுது உலகமே இருண்டுவிடுகிறது, அப்பொழுது பிராம்மணர்கள் சூரிய தேவனை விட்டுவிடும்படி பிரார்த்தனை செய்கின்றார்கள். சூரியன் விடுதலையடைகிறான். உங்களைப்போல, வேறு தேசங்களுக்குப் போகாத முட்டாள்கள்தான் சூரியன் அவரவர் நாட்டுக்காகவேதான் ஒளி தருகிறான் என்று எண்ணுவார்கள்" என்றான்.

பிறகு அங்கிருந்த, எகிப்திய நாட்டுக் கப்பல் தலைவன் பேச ஆரம்பித்துவிட்டான். 'இல்லை; இல்லை. தவறு. சூரியன் தேவனன்று! அவன் இந்தியாவையோ அதன் பவித்திரமான— பர்வதத்தையோ சுற்றிக்கொண்டிருக்கவில்லை. நான் வெகு தூர தேசங்களைச் சுற்றிப் பார்த்திருக்கிறேன். கருங்கடலைச் சுற்றி வட்ட மிட்டிருக்கிறேன். அராபியக் கடலோரத்தினிலே பிரயாணம் செய்திருக்கிறேன். மடகாஸ்கருக்கும், பிலிப்பைனுக்கும் போயிருக்கிறேன். சூரியன் இந்தியாவிற்கு மாத்திரம் சொந்தமில்லை! உலக முழுவதற்குமே ஒளி தருகிறது! அது எந்த மலையையும் சுற்றவில்லை. கிழக்கே ஜப்பானிய நாட்டுத் தீவின் மறுகரையிலே, தோன்றி இங்கிலாந்தின், தீவைத் தாண்டி மறைகிறது மேற்கிலே! இதனால்தான் ஜப்பானியர்கள் தங்கள்

நீரிழிவு

ஏழு நாட்களில் குணமாகும்

●

சிறு நீரில் அதிக சர்க்கரை இருப்பின் நீரிழிவு (**DIABETES**) என்று சொல்லப்படும் இப் பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிறான். இதை நிவர்த்திக்க டாக்டர்கள் இன்ஸுலின் இன்ஜக்ஷன் ஒன்றைத்தான் கண்டுபிடித்தார்கள். இதைக் குத்திக்கொள்வதால் பூரண குணம் ஏற்படுவதில்லை; இன்ஜக்ஷன் மருந்து உள்ளவரை சர்க்கரை தற்காலிகமாக மறைந்து விடுகிறது.

அபரிமிதமான தாகம், பசி, அடிக்கடி சிறுநீர் சர்க்கரையுடன் போதல் எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதியின் முக்கிய அறிகுறிகள். வியாதி முற்ற ராஜபிளவை கட்டிகள், சாலே ஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும். **வினஸ்சார்ம்** நவீன விஞ்ஞான அதிசயமாகும். இதை உபயோகித்ததால் பலர் மரணத்தினின்று தப்பியுள்ளனர்.

வினஸ்சார்ம் உபயோகித்த 2வது அல்லது 3வது நாளில் சிறுநீரில் சர்க்கரை குறைந்து அடிக்கடி போகும் சிறுநீரும் குறைகிறது. 3வது அல்லது 4வது நாளில் வியாதி பாதிக்குமேல் குணமடையும். இந்த மருந்துக்குப் பத்தியம் கிடையாது. இன்ஜக்ஷன் கிடையாது. நன்கு விளக்கும் இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்.

50 வில்லைகள் கொண்ட
புட்டி 1க்கு ரூ. 6-12-0
(பாக்கிங், தபாற் செலவும் இனம்)

வினஸ்ரிஸர்ச்லாபரட்டரி(C.R)
தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா.

நாட்டை 'நிப்பன்' என்றார்கள். அதன் பொருள் 'சூரியனின் பிறப்பிடம்' என்பதாகும். எனக்கு இது நன்றாகத் தெரியும். பல நாடுகளைப் பார்த்தவன். தவிரவும் அநேக விஷயங்கள் என் பாட்டனார் சொல்லியிருக்கிறார். அவர் உலகின் மூலை முடுக்குகளையெல்லாம் சுற்றிப் பார்த்தவர்' என்று.

அவன் இன்னுமெதோ சொல்ல நினைத்தான். இதற்கு நடுவே எங்கள் 'ஆங்கிலேயக் கப்பலோட்டி பேசத் தொடங்கினான்.' உலகில் யாருமே சூரியனின் போக்கைப்பற்றி நாங்கள் அறிந்ததைப்போன்று அறியவேயில்லை! இங்கிலாந்திலுள்ள ஒவ்வொரு ஆங்கிலேயக் குழந்தைக்கும் நன்றாகத்தெரியும். சூரியன் எங்கிருந்தும் வரவில்லை, எங்கும் மறைவதில்லையென்று! அது பூமியை நாலா புறங்களிலும் சுற்றி வருகிறது. இதில் சந்தேகமே கிடையாது. ஏனெனில் நாங்கள் உலக முழுவதும் சுற்றிப் பார்த்தவர்கள்.

ஆனால் ஒருதடவையாவது சூரியனுடன் மோதிக்கொண்டதில்லை! நாங்கள் சென்ற இடங்களிலெல்லாமே சூரியன் இங்கு உதயமாகிறது போலவே தோன்றி மாலையில் மறைகிறது."

இதைக் கூறியதும் ஒரு குச்சியில், மணலில் 'வட்டம்' வரைந்து, தெளிவாக்க முயற்சி செய்தான். சற்று நேரம் முயன்று பார்த்துவிட்டு, கப்பலின் 'பைலட்டை' சைகைசெய்து—என்னை விட அவர் இன்னும் நன்றாக விளக்கந்தருவார்" என்றான்.

'பைலட், அறிவாளி. அவன் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டுதானிருந்தான். நாங்கள் ஒன்றும் கேட்காதவரையில் அவன் வாயே திறக்கவில்லை. கடைசியில் அவன் விளக்கத் தொடங்கினான்—

"நீங்களிதுவரையில் ஒருவர் மற்றவரைத் தவறான பாதையில் செலுத்தியிருக்கிறீர்கள். தவிரவும் உங்களையே ஏமாற்றிக்கொண்டிருக்கிறீர்கள்! சூரியன் ஒன்றும் நாலாபுறங்களிலும் சுற்றிக் கொண்டிருக்கவில்லை. பூமியின் நடுவே சக்கரத்திலிருப்பதுபோல ஒரு 'அச்சு' இருக்கிறது. அதனால்தான் பூமி சூரியனை நாலாபுறங்களிலும் சுற்றுகிறது. உங்கள் தீவுகளான, சுமத்ரா, ஜப்பான், பிலிப்பைன் மாத்திரமில்லை; ஐரோப்பா ஆஃபிரிக்கா, அமெரிக்கா, மற்றும் வேறு நாடுகள் 24 மணி நேரத்தில் சில சமயங்களில் சூரியனுக்கெதிர்படுகின்றன. சூரியன் ஒரு தீவிற்கோ மலைக்கோ கடலுக்கோ பூமிக்கோ மாத்திரந்தானா ஒளி தருகிறது? நட்சத்திரங்களுக்கும் கிரஹங்களுக்குங்கூட ஒளி தருகிறது. காலடியில் இருக்கும் நிலத்தைப்பற்றி ஆராய்வதைப் போல வான இயல்பைப் பற்றியும் தெரிந்துகொண்டால் இது நமக்கு வெகு எளிதில் புலனாகும். தன் நாட்டிற்கு மாத்திரம்

தான் ஒளிவீசுகிறதென்று தவருக எண்ணி யிருக்க மாட்டீர்கள் 'வானசாஸ்திரத்தைப் புரிந்துகொண்டிருந்தால்!" என்று.

அந்தப் பைலட் உலகஞ் சுற்றியவன். வான சாஸ்திர வல்லுநன் என்று கூறி, சீன அறிஞர் நிறுத்தினர்......

சற்று நேரம் ஒரே மவுனம். மீண்டும் தொடர்ந்து கூறினர்: "மத விஷயங்களில் நமக் குள் மனத்தாங்கல் ஏற்படுவதினல்தான் இதைக் கூறுகிறேன்.

பல மதங்களில் சச்சரவேன் தெரியுமா? அவர் களுடைய அகங்காரந்தான் காரணம்! சூரியனைப் பற்றிய உண்மைதான் கடவுளைப்பற்றியதும். ஒவ்வொருவனுமே, தனக்காகவே தனிக்கடவு ளும் தனி ஜாதியும் வேண்டுமென்கிருன். கடவுளுக்குத் தங்க இந்தப் பரந்த உலகமே போதாது! அப்படியிருக்க ஒவ்வொரு மதமும் ஜாதியும் கடவுளையே தன் கோயில்களிலே அடைத்துத் திணிக்க விரும்புகிறது!

பல மதங்களை இனங்களைச் சேர்ந்தவர்களை யெல்லாம் 'கடமை-நம்பிக்கை'யென்னும் கயிற் றிலே பிணைத்து வைத்த கடவுளின் கோயிலாகிய இந்த உலகக் கோயிலுக்குச் சமமாகுமா மனிதன் கட்டிய கோயில்கள்?

அந்த மகத்தான சிற்பியின் பிரதிகளே மனி தன் கட்டிய கோயில்கள்! ஒவ்வொரு கோயிலுக் கும் ஒரு நீர் நிலையமோ, குளமோ உண்டு. கோயிலுக்குமேல் கூரையுண்டு; விளக்குமுண்டு. சித்திரங்களுண்டு, சிலைகளுண்டு, தனி மத நூல் களுண்டு, தனித்தனியான வழிபாட்டு முறை யுண்டு, திரு ஆராதனைப் பீடமுண்டு, தனித்தனி யாகப் பூஜை புரிகின்றவருமுண்டு.

சமுத்திரத்திற்குச் சமமான குளமோ நீர் நிலையமோ உண்டா அக் கோயில்களில்? அல்லது ஆகாயத்திற்கு இணையான கூரைதானுண்டா? வானவிளக்குகளான, சூரியன். சந்திரன் நட்சத் திரங்களுக்கு ஈடாகுமா இக் கோயில் விளக்குகள்? அவன் வானையும் வையகத்தையும் படைத்திருக் கும் சிற்பி! அவன் சிருஷ்டித்த சித்திரங்களை யும் மூர்த்திகளையும் இவ்வுலகில் காணும் அழியும் பொருட்களுடன் ஒப்பிடலாமா? பிறருக்கு உத வும் நட்பை வளர்க்கும் பண்புடைய தீர்க்கதரிசி களையும் முக்தியளிப்பவர்களையும் ஒப்பிடலாமா? கூறுங்கள்! கடவுளின் சிருஷ்டியைவிடச் சிறந்த நல்லுரை எங்காவது உண்டா? அவன் செய்த நன்மைகளுக்கீடாக ஏதாவது இங்குண்டா? அன்புவயப்பட்ட ஆண்களும், பெண்களும் ஒரு வர் மற்றவர்களுக்குச் செய்யும், தியாகத்தை விடச்சிறந்த 'பலிபீடம்' இருக்கிறதா. மனிதன் நன்மைக்குக் கடவுள் செய்திருக்கும் காரியங்கள்– தியாகங்களுக்கிணையான ஒரு பொருளும் இவ் வுலகத்தில் இல்லையே! அவனுடைய தூண்டுத லால் இயங்கும் செயல்களுக்குச் சமமாக என்ன இருக்கிறது? மனித இதயங்களில் இயங்கும் 'ஸத்யத்தை' விளக்கும் மதநூல்களேதாவது உண்டா?

மனிதனின் கற்பனை கடவுளைப்பற்றி எத்தனை மடங்கு உயர்ந்திருக்கிறதோ அத்தனை எளிதில் அவன் கடவுளை உணர்வான். கடவுளை எவ்வ ளவதிகம் உணருகிருனே அவ்வளவுக்கவ்வளவு நற்காரியங்கள் புரியவும், மற்ற மனிதர்களை அதிகம் நேசித்து இரங்கும் தன்மைக்கும் தூண் டுகோல் ஏற்படுகிறது.

உலகம் முழுவதற்கும் ஒளி வழங்கும் சூரியனின் உண்மையை உணர்ந்தவர்கள் எவரையும் வெறுக் கக் கூடாது. குருட்டு நம்பிக்கையில் ஆழ்ந்துள் ளவரையும் இகழக்கூடாது, தன் கற்பனையில் சிருஷ்டித்த சிலையில், அம்மாபெரும் ஒளியின் (அகண்டஜோதி) சிறு கதிரை (கிரணத்தை)த் தான் காண்கிருர்கள்! ஆகையால் நாஸ்திகர்க ளையும் வெறுக்கக்கூடாது. சூரியனின் ஒளியை முற்றிலும் காணமுடியாத பார்வையிழந்தவர்க ளையும் இகழக்கூடாது."

சீன தத்துவஞானி கன்ஃபூஷியஸின் மாணவ ரின் உரைகளைக் கேட்டு அந்தக்–காஃபிஹவுஸில் இருந்த எல்லோருடைய சந்தேகங்களும் தவிடு பொடியாகிவிட்டன! அவர்கள் அவ்வுரைகளைப் பற்றி நன்ருகச் சிந்தித்தார்கள். அதற்குப் பிறகு அவர்களில் எவரும் 'யாருடைய மதம் சிறந்தது' என்ற விஷயத்தைப்பற்றி வீண்வாதம் செய்ய வில்லை.

விஞ்ஞானத் துணுக்குகள்

நா. கி. நாகராஜன்

ஹைடிரஜன் குண்டைவிடக் கொடியது!

ஹைடிரஜன் குண்டைவிடப் பன்மடங்கு கொடியபடைக்கலம்ஒன்று இருப்பதாக அமெரிக்க விஞ்ஞானியொருவர் தெரிவித்திருக்கிறார்.! "ஹைடிரஜன் குண்டு இன்னும் உருவாகாமலே இருக்கலாம். ஆனால் அதைப் பற்றிக் கவலையில் ஆழ்ந்திருக்கும் நாம் இந்த ஆபத்தைப்பற்றிச் சிந்திக்காமலே இருப்பது என்ன மதியீனம்!'' என்று இவர் கூறுகிறார். ஆனால் இவர் போர்க் கலங்களைப் படைக்கும் நாச வேலையில் ஈடுபட்டிருக்கும் விஞ்ஞானிகளில் ஒருவர் அல்லர். இவர் ஒரு மருத்துவ அறிஞர்! இந்த மாய வெடிகுண்டுக்கு 'ஜ' வெடி குண்டு ('O' Bomb) அல்லது 'ஜனப் பெருக்கக் குண்டு' (Population Bomb) என்று பெயரிட்டிருக்கிறார்! 'ஜ' குண்டு வெடிப்பதால் ஒவ்வொரு வருஷமும் $2\frac{1}{2}$ கோடி புதிய உயிர்கள் உலகில் தோன்றிவிடுகின்றனவாம்! இவர்களைப் பட்டினி அரக்கனினின்றும் காக்க $2\frac{1}{2}$ கோடி ஏக்கர் புது நிலங்களில் சாகுபடி செய்ய நேருகிறது, இந்த நிலத்திற்கு எங்கே போவது? பட்டினிப் பிணியின் தாண்டவம் நடைபெறும் உலகில் அமைதிக்கும், மகிழ்ச்சிக்கும் இடமேது? 'நாள் ஒன்றுக்கு 68,000 புதிய நடிகர்கள் தோன்றும் இந்த நாடகம் மனிதவர்க்கத்தை ஏழையாக்கி, இறுதியில் அதை அழித்தே விடும்' என்று அமெரிக்காவிலுள்ள மிச்சிகன் சர்வ கலாசாலையைச் சேர்ந்த இப்பெரியார் எச்சரிக்கிறார்.

பொம்மைக் கொலுவில் புயல்

பொம்மைக் கொலுவில் ரயில் ஓடச்செய்வதும், நீர் அருவிகளை அமைப்பதும் நமது வீடுகளில் பார்ப்பவைதாம். ஆனால் வருகிற நவராத்திரியின் போது, கொலுவில், புயலின்போது தோன்றும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் பொம்மைகளை வைத்துக்கொண்டு காட்டினால் புதிதாக இருக்கும் அல்லவா? கானடாவில், டோரான்டோ நகரில் நடந்த மாநாடு ஒன்றில், பெரிய தொட்டிகளையும், மரம், வீடு முதலியவற்றின் பொம்மை உருவங்களையும், சிக்கலான ரேடியோக் கருவிகளையும் வைத்துக்கொண்டு, மூன்று வருஷங்களுக்குமுன் அமெரிக்காவில் வீசிய கொடிய புயல் ஒன்றின்போது தொடக்கத்திலிருந்து இறுதிவரை நிகழ்ந்த விளைவுகள் அனைத்தையும் வானிலைஅறிஞர் ஒருவர் செய்து காட்டினாராம். இதை அவர் செய்தது வெறும் பொழுதுபோக்கிற்காக அல்ல. ஓரிடத்தின் வானிலை குறிப்பிட்டதொரு வகையில் அமைந்திருந்தால் என்னென்ன விளைவுகள் நேரும் என்பதை, சிக்கலான கணக்கீடுகளால்தான் அறிய முடியும். இந்தக் கணக்குகளைப் போட்டு முடிவதற்குள் நாம் எதிர்பார்க்கும் வானிலை விளைவுகள் நிகழ்ந்து முடிந்துவிடும்! ஆனால் 'மின்னணு மூளைகள்' (Electronic Brains) என்ற சில ரேடியோக் கருவிகள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவை பேரறிஞர்களையும் பலநாள் திண்டாடவைக்கும் கணக்குகளை நொடிப் பொழுதில் போட்டுமுடித்துவிடுகின்றன. இவற்றைக்கொண்டு வானிலை விளைவுகளைச் சில நாட்களுக்குமுன்னரே கணித்தறிய முடிகிறது. இக்கருவிகளைப்பொம்மை உருவங்களோடு தக்கபடி இணைத்து, இனி வரவிருக்கும் வானிலையை நேரில் கண்டறிய முடிகிறது. இந்த நவீன முறைகள் வழக்கத்திற்கு வந்துவிட்டால் வானிலை ஹேஷ்ய அறிக்கைகளில் தவறு என்பதே இல்லாமற்போய், வானிலை அறிஞர் விகடத் துணுக்குக்கு இலக்காகும் காலமே மறைந்துவிடும்.

நீரின்மேல் நடப்போம்!

'மாயமில்லே, மந்திரமில்லே இப்போ நான் தண்ணிமேலே நடக்கிறேன் பார்!' என்று ஒருவன் சொல்லிக்கொண்டே தண்ணீரின் மேல் நடந்து போவதைக் கண்டு நாம் திகைத்து நிற்கும் காலம் வந்துவிட்டது! நீருக்குள் அமிழ்ந்து போகாது நடக்க உதவும் தனிவகை ஜோடுகளை கைகர் (Geiger) என்ற அமெரிக்கர் கண்டுபிடித்திருக்கிறாராம். இந்த ஜோடுகளுக்கு அமெரிக்க ராணுவம் ஏற்கனவே உத்தரவு கொடுத்திருக்கிறது. இதைப் பல வடிவங்களில் அமைக்கலாம் என்று இவற்றைக் கண்டுபிடித்த கைகர் சொல்கிறார். இந்த ஜோடுகளில் ஒன்றே ஒரு பெரிய மனிதனின் எடையைத் தாங்க வல்லது. ஆகையால் நடக்கும்போது காலைத் தூக்கி, இன்னொன்றை ஊன்றி, முன்னே அடி எடுத்து வைக்கும்போது எங்கே நீரில் அழுந்தி விடுவோமோ என்ற பயமே வேண்டாம்! இந்த ஜோடுகளின் ஒரு வடிவத்தில், அவை சிறு தொட்டிகள்போல் அமைக்கப்படும், தொட்டியைக் கவிழ்த்து, அதை நீருக்குள் அழுத்தினால் அதற்கும், நீருக்கும் இடையேயுள்ள காற்றினால் அது நீரில் அமிழாது மிதக்கிறது. கைகர் கண்டுபிடித்திருக்கும் 'நீர் ஜோடுகள்' இத்தத்துவத்தையே அடிப்படையாகக் கொண்டவை. உள்ளே அடைபடும் காற்றே மனிதனது எடையைக் கூடத் தாங்கி அது மிதக்க உதவுகிறது. இதைத் தவிர ஜோடுகளுக்குள் காற்றை நிரப்பி அது இன்னும் நன்றாக மிதக்குமாறு செய்கிறார்கள். நீந்தத் தெரியாதவர்கள் ஆறு, குளங்களைக் கடக்க

உதவுவதோடு, பாலங்கள், அணைகள் முதலியன கட்டுவோர்க்கும் இந்த ஜோடுகள் மிகவும் ஏற்றவை.

சாக்கடை தரும் வளர்ச்சி மருந்து

சாக்கடை நீரிலிருந்து பயிர்களைச் செழிக்க வைக்கும் உரங்களைத் தயாரிப்பது நாற்றம் வீசும் சாக்கடை வாயுவிலிருந்து மின்சாரத்தை ஆக்கும் இயந்திரங்களை ஓட்டுவது முதலிய சாதனைகளின் காலமிது. ஆனால் ரசாயன அறிஞன் கழிவுப் பொருள்களை இத்துடன் விட்டுவிடுவதாக இல்லை! வைட்டமின்கள் என்ற இன்றியமையாத பொருள்களில் 'பி'$_{12}$ என்பதும் ஒன்று. இது உடல் வளர்ச்சியில் முக்கியமான பங்கு வகிக்கிறது. இப்பொருளைச் சாக்கடை நீரிலிருந்து மலிவாகத் தயாரிக்கலாம் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இறைச்சிக்காகக் கொழுக்கவைக்கும் விலங்குகளுக்குத் தற்போது இந்த மருந்தை ஊட்டி வருகிறார்கள். ஆனால் இதையே அழகிய சீசாவில் நிரப்பி, புதியதோர் பெயர்கொடுத்து, கண்ணாடித் தாளைச் சுற்றிக் கடைகளில் வைத்துவிட்டால் 'இது சாக்கடை மருந்து என்று நமக்கு எப்படித் தெரியும்?

மிட்டாய்க் கடை நாற்றம்

'பூக்கடைக்கு விளம்பரம் எதற்கு?' என்பார்கள். திருவல்லிக்கேணியில், நான் முன்பு குடியிருந்தபோது அருகிலிருந்த மிட்டாய்க்கடை ஒன்றைப் பற்றி நான் இவ்வகையில் நினைத்ததுண்டு! ஏனென்றால் அங்குத் தயாராகும் பண்டங்களின் காரல் எண்ணெய் நாற்றம் அரை மைல் தூரத்திற்கு வீசும். சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் ரசாயனப் பொருள்கள் சில, இந்த நாற்றத்தை அறவே போக்கவல்லவை. திருவல்லிக்கேணி மிட்டாய்க் கடையின் அருகே வசிப்பவர்கள் ஒரு நிதிதிரட்டி, இப் பொருள்களைக் கடைக்காரர்களுக்கு இலவசமாக வழங்கலாம்! காற்றிலுள்ள பிராணவாயு எண்ணெயுடன் வினைப்பட்டு, அதில் மாறுதல்களை விளைவித்து, இந்த நாற்றத்தைத் தோற்றுவிக்கிறது. சில ரசாயனப் பொருள்களின் உதவியால் இந்த வினை நிகழாது தடைசெய்யலாம். எண்ணெயில் தயாரித்த பொருள்கள், நெடுநாட்கள்வரை கெடாமலும் இந்தப் பொருள்கள் பாதுகாக்கும். உணவுகள் தயாரிப்பதிலும் கொழுப்புக்களைப் பயன்படுத்தும் வேறு பல தொழில்களிலும் இவற்றைப் பயன்படுத்தலாம். இத்தகைய பொருள்களில் ஒன்று ஒருவகை ஆரஞ்சுப் பழத்திலிருந்து தயாரிக்கப்படுகிறது. செயற்கைப் பொருள்கள் சிலவும் இப்போது தயாரிக்கப்படுகின்றன.

மாட்டுக் கூட்டத் தலைமை

மிருக வைத்தியர் ஒருவர் பல வருஷங்கள் ஆராய்ச்சி நடத்தி, விலங்குலகத்தில், தலைமைப்பதவி எப்படிக் கிடைக்கிறது என்று கண்டு பிடித்திருக்



Retail Branches:

285, China Bazaar Road,
MADRAS.

71, Pondy Bazaar, T. NAGAR.

கிறார். மாடுகளின் மந்தைகளில், எந்த மாடு நீண்ட காலமாக ஒரு மந்தையில் உள்ளதோ அது தலைமைப் பதவி வகிக்கிறது. மந்தையில் அதைவிட வயதான மாடு இருந்தாலும், அது மந்தையின் 'சீனியருக்கு'க் (Senior) கீழ்ப்படிய வேண்டும். ஆதி மனித சமுதாயத்தில், மற்றோரை விடப் பலம் பொருந்தியவனே தலைவனாக இருப்பது வழக்கம். இந்த நியதி மாடுகளில் இல்லை. வலிமை வாய்ந்த மாடு ஒன்றை ஒரு மந்தையிலிருந்து பிரித்து, இன்னொன்றில் அவர் விட்டுவைத்தார். அது அந்த மந்தையின் 'பயில்வானாக' இருந்தும்கூட அதை மற்ற மாடுகள் மதிக்கவில்லை.

கோழிகளின் சமூகம் ஏறக்குறைய மனித சமூகத்தை ஒத்துள்ளது. அதில், மற்றக் கோழிகள் அனைத்தையும் கொத்துவதில் வெற்றிபெறும் கோழிக்கு அவை தயக்கமின்றித் தலைமைப் பதவியை அளித்து விடுகின்றன! இத்தகைய கொத்தும் சோதனை குஞ்சுகளுக்கு ஆறுவாரமாக இருக்கும்போதே நடைபெற்று, தலைவர் தேர்தல் முடிவடைந்துவிடுகிறது.

வாயை விட்டகலாத சிற்றுயிர்கள்

விளம்பரத்தைக் கண்டு மயங்கி, விசேஷப் பண்புகள் கொண்டது என்று எண்ணி, ஒன்றுக்கு இரண்டாக விலைகொடுத்து வாங்கிய பற்பசையைப் பயன்படுத்தினாலும் வாயிலுள்ள சிற்றுயிர்கள் சில, நீங்குவதே இல்லை என்று மேனாட்டுப் பல் வைத்தியர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். ஒரே உயிரணுவால் ஆன இந்தச் சிற்றுயிர்வகை அமீபா (Amoeba) எனப்படும். அமீபாவகை உயிர்கள் குடலிலும் உள்ளன. வாயிலுள்ள அமீபாக்கள் அதிலுள்ள நுண்மங்கள் சிலவற்றை நாடி வாழ்கின்றன. இந்நுண்மங்கள் வாயில் எஞ்சும் உணவுப் பொருள்களைச் சிதைத்து, அமீபாக்களுக்கு உணவு தயாரித்துத் தருகின்றன. கோடிக்கணக்கில் ஒவ்வொருவரது வாயிலும் உள்ள இந்த அமீபாக்கள் உடலுக்கு எவ்வகையிலும் தீங்கு விளைவிப்பதில்லையாம்! ஆகையால் அவை இருந்துவிட்டுப்போகட்டும். சில ஜீவன்களுக்கு இருக்க இடமும், உண்ண உணவும் அளிக்கும் புண்ணியமாவது நமக்குக் கிடைக்கிறதே!

சண்டைக்காரக் குழந்தை

உங்கள் குழந்தை, பிற குழந்தைகளை அடித்து, வம்பை விலைக்கு வாங்கிவரும் குணமுடையதாக இருக்கிறதா. அப்படியானால் குழந்தை உள்ள நிபுணரான டாக்டர் நெல்லி பெர்கின்ஸ் என்ற பெண்மணி கூறுவதைத் தெரிந்துகொள்ளுங்கள்:— உங்கள் குழந்தை இன்னொன்றை அடித்தது என்பதற்காக அதைப்போட்டு அடிக்காதீர்கள். இந்தத் தண்டனைக்கும், தனது குற்றத்திற்கும் உள்ள தொடர்பை அது அறிந்துகொள்ளாது. உலகத்திலுள்ள மூத்தோர் அனைவரும் தன்னை அடிக்கப் பிறந்தவர்கள் என்ற வெறுப்புணர்ச்சி தோன்றவே இது காரணமாகும். அதைப் பயமுறுத்தி, 'இனி நான் அப்படிச் செய்யவில்லை' என்று சொல்லுமாறு அதைக் கட்டாயப் படுத்துவதும் கூடாது. பலவந்தமாக அதை இவ்வாறு சொல்லச் செய்வதில் நாம் வெற்றிபெற்றாலும் அதற்கு உள்ளூர ஆத்திரம் பொங்கும். இதனால் உங்களுடன் அது கொள்ளும் உறவு; கெட்டுவிடும்.

குழந்தை இன்னொன்றை அடிப்பதைக் கண்டால் 'அப்படி நீ செய்யக்கூடாது. அந்தக் குழந்தைக்கு வலிக்கும்' என்று கோபப்படாமல் சொல்ல வேண்டும். குழந்தை உங்கள் மேலேயே தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கினால், 'என்னை அடிக்கிறாயே, எனக்கு எப்படி வலிக்கிறது தெரியுமா?' என்று கூற வேண்டும். பிறரை அடித்தால் அவர்களுடன் விளையாட முடியாது என்று அது அறியும் வகையில், அதைத் தனியே பிரித்துவிடவேண்டும். இந்தத் தண்டனை குழந்தைக்கு நன்கு புரியும். அடிக்கும் வெறியில் குழந்தைக்குப் பராக்குக் காட்டி அதை மறக்க வைப்பதும் நல்ல முறை.

(இவ்வளவும் சொன்ன நிபுணர், அடிபட்ட குழந்தையின் பெற்றோர் நம்மிடம் சண்டைக்கு வந்தால் எப்படிப் பதில் சொல்வது என்றுமட்டும் சொல்லவில்லை)

நாளுக்கு நாள் அதிக தெளிவான, எழிலோங்கும் சருமம்

ரெக்ஸோனுவிலுள்ள **கேடில்** இந்த அற்புத வேலையைச் செய்யட்டும்

தினமும் ரெக்ஸோனு சோப் உபயோகியுங்கள். இதன் கேடில் கலந்த நுரை உங்கள் சருமத்தை நாளுக்கு நாள் அதிக மிருதுவாகவும், தெளிவாகவும் இருக்கச் செய்யும்.

ரெக்ஸோனு

கேடில்* கலந்த சோப் இது ஒன்றே

* சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.

R.P. 109-50 TM

ரெக்ஸோனு ப்ரொப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது

"புயலுக்குப் பின்...."

"ரவிப்ரியா"

அன்று இரவு வைத்தியநாதன் வீட்டில்.

"நீ சாப்பிடும்போது எதையும் தொடக்கூடாது. உனக்கு எத்தனை முறை சொல்லுவது? நீ என்ன பச்சைக் குழந்தையா?"

"ட டங்......டங்"

"சொல்லச் சொல்ல ஏன் அப்படிச் செய்கிறாய் ராமு! புத்தியில்லே?"

"..............."

"எருமையாட்டமா வளர்ந்திருக்கிறாய், சொன்னதைக் கேட்டால் என்ன?"

"சரி, சரி, வாயை மூடிக்கோ."

"எதற்காக வாயை மூடிக்கிறதாம். பிள்ளை செய்வது உங்களுக்குச் சரியாயிருக்கலாம். எனக்குப் பிடிக்காது. நீங்கள் கொடுக்கும் இடம்தான் இத்தனையும்."

"சாப்பிடும்போது ஒன்றும் சொல்லாதே என்று உனக்கு எத்தனை தரம் நான் சொல்லியிருக்கிறேன்."

"நான் அப்படித்தான் சொல்வேன். இப்பொழுது சொன்னால்தான் தெரியும். பின் எப்பொழுது சொல்வதாம். அவன் செய்வது உங்களுக்குத்தான் நன்றாயிருக்கிறது"

"எனக்குச் சரியாயிருக்கிறது. அவன் அப்படித்தான் செய்வான். அதுதான் சொல்லக்கூடாதென்கிறேன். நீ வேண்டுமானால் அவன் சாப்பிடும்போது எதிரில் இருக்காதே!"

"ஏனோ? நீங்கள் சொல்வதைக் கேட்கமுடியாது. எங்கள் வீட்டில் இப்படியெல்லாம் நடக்காது"

"எங்கள் வீட்டில் அப்படித்தான் நடக்கும்."

"நடந்தால் நான் சொல்லத்தான் சொல்லுவேன். இம்மாதிரியெல்லாம் எங்கள் வீட்டில் நடந்தால்......"

"உங்கள் வீட்டு வழக்கத்தை இங்கே கொண்டுவராதே. இங்கு இப்படித்தான் நடக்கும்."

"அப்படின்னா...என்னை எங்க பிறந்தகத்திற்கு அனுப்பிவிடுங்கள்..."

"தாராளமாய்ப் போ! இப்பவே......" என்று சீறினார் வைத்தியநாதன்.

"போவதற்குத்தான் கட்டிக்கொண்டு வந்தீர்களா?" என்று கையிலிருந்த கரண்டியை வீசி எறிந்து, தட்டின் முன்பே வெட்டுண்ட மரம்போல் தரையில் வீழ்ந்து சத்தியாக்கிரகம் செய்தாள் கற்பகம்.

அவளின் இத்தனை அட்டகாசத்திற்கும் வாய் திறக்காமல் தட்டில் பரிமாறப்பட்டிருந்த உணவுப் பதார்த்தத்தைக் கிளறியபடியே அமர்ந்திருந்த பதினேழு வயது சிறுவன், அவள் சத்தியாக்கிரகம் செய்ய ஆரம்பித்ததும் பரபரவென்றெழுந்து தட்டிலிருந்த சாப்பாட்டைக் குழாயடியில் கொட்டிவிட்டு, அவசர அவசரமாய்த் தட்டை அலம்பி வைத்துவிட்டு வெளியே சென்றுவிட்டான்.

எழுந்து சென்ற பிள்ளையையும், சத்தியாக்கிரகி போல் இலைமுன் நெடும்சாண்கிடையாய்க் கிடக்கும் மனைவியையும், திறந்துகிடந்த உணவுப் பதார்த்தங்களையும், தம் தட்டிலிருந்த சாப்பாட்டையும் மாறிமாறிப் பார்த்தார் வைத்தியநாதன். அவருக்கு ஒன்றும் வேண்டியிருக்கவில்லை. தாமும் சாப்பாட்டை எடுத்துக்கொட்டிவிட்டால் என்ன? சற்றுச் சிந்தித்தார். மருந்தைப்போல் நான்குவாய் அள்ளிப்போட்டுக்கொண்டார். தட்டை எடுத்துக் கொண்டெழுந்தார். அடுக்களைக் கதவு படீரென்று சாத்தப்பட்டது, வைத்தியநாதன் மனைவியின் சாம்ராஜ்யச் சிறையில் அடைக்கப்பட்டார்.

"வழியை விடு..."

"........."

"விடு...விடு...ஊம்...விடு வழியை, எச்சிற்கையை அலம்பவேண்டும்"

"........."

"புத்தியில்லாத்தனம்...போய் சாப்பிடு........."

"போதும். யாருக்குப் புத்தியில்லே...?"

"யாருக்கானால் என்ன? உனக்கு எத்தனை தரம் சொல்வது? இலையில் சோத்தைப் போட்டு ஒன்றும் சொல்லாதே என்று"

"நீங்க என்ன சொன்னாலும் சரி. நான் அப்படித்தான் சொல்வேன். அப்பொழுது சொன்னால்தான் உறைக்கும், புத்தி வரும். பாக்கிச் சமயத்தில் சொன்னால் ஏறாது"

"உன்னுடன் யார் பேசுவார்கள்? விவேகமிருந்தால்..." என்று கதவைத்திறந்துகொண்டு வெளியில் வந்தார். அவளின் சீற்றத்தின் வேகத்தைக் காட்டுவதுபோல் அந்தக் கதவு மறுபடியும் வீரிட்டுக்கொண்டு; தடாரென்று மூடிக்கொண்டது.

* * * *

கூடத்திலிருந்த ராமு சொல்கிறான்.

நான் என்ன தகாத காரியம் செய்தேன். சாப்பிடும்போது இடது கையால் துவையல் எடுத்துப் போட்டுக்கொண்டது தவறா? அப்படியும் கையால் தொடவில்லையே. கரண்டியால் தானே எடுத்துப் போட்டுக்கொண்டேன். அது எப்படி எச்சிலாகும்? சாப்பிடுவதற்குமுன் உதட்டில் ஒட்டிக்கொண்டிருந்த தூசியை எடுத்தெறிந்தேன். அதற்கா......அவள்......சித்தி...... அப்படிப் பேசுவது? அப்பாவின் முன் அத்தனை ரோஷ த்வேஷமாய்ப் பேசினாளே! 'சாப்பிடும் போது ஒன்றும் சொல்லாதே!' என்று அப்பா சொன்னால் 'அப்படித்தான் சொல்வேன். அப்பொழுதுதான் உறைக்கும்' என்கிறாளே! நான் என்ன சிறு குழந்தையா? பதினேழு வயதாக வில்லை? அடுத்த வருஷம் ஆனர்ஸில் சேரப் போகிறேன். நான் இவளிடம் குடிக்க ஒரு கோப்பை தண்ணீர்கூடக் கேட்பதில்லையே. இவள் வந்தபின் அப்பாவே எனக்கு நண்பன் நிலையில்தானே இருக்கிறார். நான் விருந்தினனைப் போல் அப்பா சாப்பிடக் கூப்பிட்டால் அவருடன் சாப்பிடுகிறேன். அப்பா நானிருக்கும் இடத்திற்கே (தெரு வெராண்டா) காப்பியைக் கொண்டு வந்து கொடுத்தால் குடிக்கிறேன். காலை ஒரு தரம் அழையாமல் அந்த அறையில் நுழைய வேண்டியிருக்கிறது. இரவு படுத்த படுக்கையை எப்படித் தெரு வெராந்தாவில் வைத்துவிட்டு, காலேஜுக்குப் போவேன். அதை வைத்துவிட்டு, அப்பொழுதே துவாலையை எடுத்துக்கொண்டு குளிக்கச் சென்றுவிட்டால்...உடையை மாற்றிக் கொண்டு வந்துவிடுகிறேன். அப்பாவுடன் சாப்பிட இரண்டு வேளை செல்வேன். அவசியமிருந்தால் வெகு சங்கடத்தின் பேரில் ஒரு முறை போனால் போவேன். அது கூடவா அவளுக்குக் கஷ்டமாயிருக்கு?

உம். நான் என்ன செய்வேன்? என் நிலை. பூமியில் பிறந்த ஐந்தாண்டுகளில் அன்புருவான என் தாய்க்கு அந்தப் பொல்லாக் கொடிய நோய் (எலும்புருக்கி) வரவேண்டுமா? அத்துடன் பத்தாண்டுகள் நலிந்து நமன் வீடு செல்ல வேண்டுமா? ராமர் வனவாசம் சென்று பதினான்கு வருடங்கள் அவஸ்தைப்பட்டால், நான் பதினைந்தாண்டுகள்......இடைவிடாத நோயாளியான அம்மாவைக்கண்டு தாத்தா வெறுக்க, தூர தேசத்திலிருந்த அப்பா தம் சம்பாதனை முழுவதும் அம்மாவின் வைத்தியத்திற்காக அனுப்பி, தாம் கைச்சமையலும் ஹோட்டலுமாய், கர்மயோகிபோல் திண்டாட, இத்தனைக்கிடையில் அப்பாவின் அமைதியான குணத்திற்குப் பெருமைகொண்டு, அவர் நடத்தும் தனி வாழ்க்கைக்கு பொருமிக்கொண்டு, தன் நோயைக் கண்டு தன்னைத் தான் வெறுத்துக் கொண்டு, அனைவரும் இருந்தும் அகதிபோல் இருக்கும் என்மேல் தாயன்பு முழுவதும் சொரிந்த என் தாய் ஒருநாள் என்னைக் கடிந்துகொண்டாளா?

காற்றாடிக்கு வால்கட்ட அவள் வாயில் புடவையைக் கிழித்தேன். என் நண்பர்கள் வந்துவிட்டால் அம்மாளுக்கு வாங்கிவைத்திருக்கும் பழங்கள், பிஸ்கட்ஸ், பப்பிரமிண்ட்ஸ் அனைத்தையும் அள்ளிக் கொண்டோடுவேன். அம்மாளுக்குத் துணை இருக்கிறேன் என்று நண்பர்களுடன் அவள் முன் அமர்ந்து கேரம் ஆடுவேன். ஒரு வார்த்தை கடிந்து கொள்வாளா? இரைதின்ற பாம்புபோல் படுத்திருக்கும் சித்தி பகல்நேரத்தில் கதவைத்திறந்து உள்ளே சென்றால் அவள் தூக்கம் கெட்டுவிட்டதாக வாய்க்கு வந்தபடியல்லவா பேசுகிறாள். இத்தனைக்கும் அவளை அழைத்து நாலுகை ஒரு பேச்சுப் பேசாமல் இருக்கும்போதே இப்படிப் பேயைப்போல் பிடித்து உலுப்புகிறாள். அத்தனை விஷமக்காரனாயிருந்த என்னைப் படுக்கையுடன் படுத்திருந்த அம்மாள் தன்னையறியாதாயினும் முகம் கடுத்திருப்பாளா? இந்த மகராஜீ வாய் மூடாமல் எப்பொழுதும் 'மிஷின்கன்'போல் வெடித்தபடி இருக்கிறாளே!

மூன்றாவது வீட்டு முகுந்தன் அணிந்திருந்த 'ஸ்வெட்டர்' மாதிரி வேண்டுமென்றேன். எப்படிப் போட்டாளோ? அம்மாளின் நோயைக் கண்டு பயந்தவர்கள் மாதிரிகூடக் கொடுக்க மறுத்தார்கள். புத்தகத்தை வாங்கி வைத்துக்கொண்டு முகுந்தனின் 'ஸ்வெட்டரை'விட அழகிய 'ஸ்வெட்டரும்' 'க்ளோவ்சும்' போட்டுக்கொடுத்தாள். அம்மாளின் கைப்படப் போட்டுக் கொடுத்தது பெட்டியில் தூங்குகிறது. அம்மாள் முன்யோசனைக்காரி. அந்த 'ஸ்வெட்டரைப்' பெரியதாய்ப் போட்டுவிட்டாள். அது பெரிதாயிருக்கிறதென்று வீசி எறிந்து எத்தனை ரகளை செய்தேன். கோபித்துக்கொண்டாளா?

"ராமு! சின்னதாய் வேறு போட்டுத் தருகிறேன். நீ பெரியவன்தான் ஆவாய். சின்னவனாகமாட்டாய். அதுவும் இருக்கட்டும்" என்று எத்தனை பொறுமையாய்ச் சொன்னாள். அந்த அன்புருவை எத்தனை சண்டித்தனம் செய்து கொன்றேன். இப்பொழுது காரணமற்றதற்கெல்லாம் இவள் கடுமொழிகளைப் பேசி வதைக்கிறாள். வேடுவன் வலைக்குள் சிக்காமல் தப்பித்துக் கொள்ளும் பறவையைப்போல் நான் அவள் எதிரில் கூடப்போகாமல் இருக்கும்போதே ஏதோ காரணத்தைக்கொண்டு சச்சரவு செய்கிறாள். அவள் ஆனந்த வாழ்க்கைக்கு நான் குறுக்காய் நிற்கவில்லையே!

* * *

போர்டிகோவில் போயமர்ந்த வைத்திய நாதன் நினைக்கிறார். நான் நாற்பத்திரண்டாண்டுகளை இப்படியே நாக்கைப்பிடித்துக் கொண்டு நகர்த்திவிட்டேன். ஊம், நானா நகர்த்தினேன், இல்லை. கால வெள்ளம் என்னைச் சுழற்றிச் சுழற்றி அடித்துத் தள்ளிவிட்டது.

இருபது வயதில் இண்டரை எட்டிப்பார்த்து முட்டிக்கொண்டு உத்தியோக வேட்டையில் இறங்கியபோது, மாப்பிள்ளை வேட்டையிலிறங்கிய அந்த மகானுபாவன் தூண்டில் போட்டு மீனைப் பிடிப்பதுபோல் 'உத்தியோகம் செய்து வைக்கிறேன். இன்பமாய் வாழ இல்லக்கிழத்தியைத் தருகிறேன்' என்ருர். இளம் வயது. நான் வேண்டியதோ உத்தியோகம். உத்தியோகமும், மனைவியும் ஏக காலத்தில் கிடைக்கவே என்னுள் தோன்றிய ஆனந்தக் கிறுகிறுப்பு...... அப்பா...... அந்த மாதிரி ஓர் இன்ப உணர்ச்சி இனி இந்த ஜன்மத்திலேது?

வசந்தா வந்தாள், வையகமே எனக்கு வாகையுடனிருந்தது. வசந்தத்தைத் தவிர்த்து வேறு அறியேன். அழகிய ரங்கூன் நகரம், அமுல் செலுத்தும் 'ஸி. ஐ. டி' டிபார்ட்மெண்டில் வேலை. அன்பைச் சொரியும் மனைவி. மாமியார் வீட்டில் மரியாதையுடன் நடத்தப்படும் மூத்த மாப்பிள்ளை, குடும்பப் பொறுப்பறியாக் கும்மாள வாழ்க்கை. எனக்கிணை யாருமேயில்லை. வசந்தாவும் நானும் ஜோடிப் பறவைகள்போல் கவலையற்றிருந்த அந்தக்காலமும் வருமோ?

மூன்ருண்டுகள் ஒரு மூச்சு விடுவதற்குள் மறைந்தன. எங்களிருவரின் பிணைப்பை அதிகப்படுத்த ராமு தோன்றினன். அவன் பிஞ்சுக் கரங்களைப்பற்றிப் பரவசமடைந்தோம். அவன் மழலைச் சொற்களைக் கேட்டுக் களித்தோம். அவன் அழகிய முகத்தைக்கண்டு அவள் அளவு கடந்த ஆனந்தமடைந்தாள். நாங்கள் சொர்க்க சுகத்தையே அடைந்துவிட்டதாக நினைத்து ஆசைக் கோட்டைகள் ஆகாயமளாவும் கட்டினேம். ஆனல்......

யார் செய்த பாபமோ, ராமுவைப் பள்ளியில் சேர்க்கத் திட்டமிட்டுக்கொண்டிருந்தபோது அவள் ஜுரத்தில் படுத்தாள். எங்கள் நினைப்பு நடப்பில் வரவில்லை. அந்த ஜுரம் எலும்புருக்கிக்கு எருவாகிவிட்டது. சின்னஞ்சிறு ராமு. என் அதிர்ஷ்டத்தின்மேல் எரிந்துவிழுந்து என்னைச் சினத்துடன் நோக்கும் மாமனர். உலக மகா யுத்தப்போர் நெருக்கடி. காரியாலயத்திலோ கழுத்தை முறிக்கும் வேலைகள். இத்தனைக்கிடையில் எப்படியோ நாட்களை நகர்த்திக்கொண்டு வந்தால் ரங்கூன் மேல் ஜப்பானியர்கள் படையெடுக்கவேண்டுமா? என் வாழ்க்கையைப் பாழ்பண்ண.

வசந்தா பெற்ருேர்களுடன் குழந்தை ராமுவை அழைத்துக்கொண்டு தாய்நாடு சென்ருள். நான் கடைசி நிமிஷம் வரை ரங்கூனிலேயே இருந்து நிராதரவான நிலையில், மணிபூர் வழியாய் எத்தனையோ சிரமத்துடன் வந்து சேர்ந்தேனே. அப்பொழுதே என் மூச்சு காற்றுடன் கரைந்திருக்கலாகாதா? யுத்தம் ஓய்ந்தது. வேலைக்காக வேட்டையாடினேன். குடியரசு எனக்கொரு முடியரசின் கீழ் வேலையளித்தது. வசந்தா வியாதியோடு தென் துருவத்தில், நான் வசந்தாவை உயிர்ப்பிக்க, நான் வாழ, என் மைந்தனை வாழ வைக்க வட துருவத்தில் வேலையேற்றேன்.

வேலையேற்றும் சுகமுண்டா? பொருள்கள் விலை உயர்ந்து, வியாதிக்கார மனைவிக்கு வைத்தியத்திற்குப் பணமனுப்பி, வளரும் பையனுக்குப் படிக்க வசதி செய்து, தனி மனிதனுய் எத்தனை யாண்டுகள் கஷ்டப்பட்டேன். 42 முதல் 52 வரை.

வசந்தா புவியில் வாழ நமனை மருந்துகளால் தடுத்தாள். அவனும் இடம் கிடைக்கும் போதெல்லாம் இங்கிதமாய் அடியெடுத்துவைத்து அவளை நொறுக்கிவிட்டான். அவள் ஈமச் சடங்குகள் முடிந்ததும் அவள் ஆனந்தத்திற்காக விட்டு வைத்த என் ராமுவை அழைத்துக்கொண்டு வந்து இருந்தேனே. அப்படியே இருக்கக் கூடாதோ? அம்மா வார்த்தையைக் கேட்டு என் புத்தி பேதலிப்பானேன்?

கற்பகத்தைத் தேர்ந்தெடுத்து அவள் கரம் பற்ற வரும்படி 'கம்பி' அடித்தாள், நாற்பது வயதிற்குமேற்பட்ட எனக்காகத்தான் முப்பத்தைந்து வயது வரை மணமாகாது காத்திருந்தாள் போலும் கற்பகம். ஏழைக் குடும்பத்தில் பிறந்து எவ்வித பசுமையும் காணுது வறண்டு கிடந்தவளை மணம் முடித்தாள் என் தாய். என் வாழ்வையும் வளம்பெறச் செய்து தானும் தளிர்த்துத் தண்மையுடனிருப்பாள் என்று நினைத்தேன். என் நினைவு · கனவாயிற்று. இயற்கையாய் வளர்ந்த பெண்மை தேய்பிறையில் புகுந்த பின் அவளிடம் இளமையின் அச்சம், நாணம், ஊடல் இவைகளை எதிர்பார்த்த நான் சுத்த அவிவேகிதான். இல்லையேல் அவள் என் முன் அத்தனை தைரியமாய் அவனைக் கடிந்துகொள்வாளா? அவள் இல்லத் தலைவி. அவள் ஆட்சிக்கு அங்குத் தடங்கல் கிடையாதென்று நினைத்துத்தான் அப்படி தைரியமாய்ப் பேசுகிருள். என்ன இருந்தாலும் ராமு தாயை இழந்தவனன்ருே? நான்தான் என்ன சுகப்பட்டேன். மனைவியிருந்தும் மனைவியற்றவன்போல் வாழ்ந்தேன், அவள் பெண்மை பூத்துப் பருவப்படியில் குலுங்கி நிற்கும்போது அவள் மணாளன் கிடைக்காமல் மரத்து நின்ருள். இருவரின் நிலையும் ஒன்றுதான், ஆனல் அதற்காக ......இப்படியா எதற்கெடுத்தாலும் சண்டித்தனம்.

* * *

கற்பகம் பொருமுகிருள்.

இவருக்கேன் இந்த பாரபக்ஷம்? நானும்தான் கணவன் கிடைக்காமல் கல்லான கோபுரத்தைக் காலால் வலம் வந்து, மரத்தைச் சுற்றி, செடியை வணங்கி, கொடியை நட்டு, எத்தனை எத்தனையோ கனகாரியங்களைச் சாதித்தேன். காசு செலவில்லாத கணக்கற்ற நோன்புகளை, கடும் பட்டினியாய் நோற்றேன். உடலை ஒடுக்கினேன், உற்ருர் உற

வினர்கள் இவளுக்கு அகமுடையான் பிறக்க வில்லை. கன்னிமாடம்தான் கட்டவேண்டு மென்று காதில்படச் சொன்னார்கள். அச் சமயங் களில் எத்தனை துடி துடித்திருப்பேன்? நல்லவர் கள், பெரியவர்கள் செய்த பூஜாபலன் இவர் கிடைத்தார். பேர்மட்டில் இளையாளே ஒழிய அவருக்காகப் பிறந்திருந்த நான் இத்தனை நாள் காத்திருந்தேனல்லவா? காலாகாலத்தில் நானும் அவரும் ஒன்றுபட்டிருந்தால் இந்த ராமு என் வயிற்றில் பிறக்கவேண்டியவன்தானே! இப் பொழுது சொன்னாற்போல் அப்பொழுதும் சொல் லித்தான் இருப்பேன். இவரின் லாப நஷ்டத்தில் பங்குள்ள எனக்கு ராமுவைத் திருத்துவதில் இல்லையா? அது ஏன் அவருக்குத் தெரியவில்லை. ஒரு சில நாட்களாகிலும் இன்பமாய்......இளமை யில் தம் வாழ்க்கைப் பாதையில் பிரயாணம் செய் திருக்கிறார் இவர். நான்...... என்னதைக் கண்டேன். சுகமெங்கே? இன்பமெது? என்று ஆராயவேண்டிய நிலையிலல்லவா இருக்கிறேன். முடவன் கொம்புத்தேனை எடுக்க முயல்வது போல்...... என்ன இருந்தாலும் அவன் முன் அப்படி அவர் பேசலாமா? அவன் எனக்கு என்ன மரியாதை வைப்பான். இப்பவே பிறந்தகம் போ!' என்றாரே. அதே இளம் மனைவி யாயிருந்தால்...இருபது வருடங்களுக்கு முன்னால் வசந்தாவை அப்படிச் சொல்லியிருப்பாரா? ஒவ்வொரு நிமிஷமும் அவருக்கு அச்சமயம் உவப்பானதன்றோ? அவ்வளவு இல்லாவிடினும் சிறிதேனும் எனக்கு......

என்ன இருந்தாலும் ஆடவர்கள் பொல்லாதவர் கள். தங்கள் சுகத்திற்காகவும் சுயநலத்திற் காகவுமே பெண்ணை மணக்கிறார்கள். 'இளை யாளாய் வாழ்க்கைப்பட்டால் இன்பமாய்க் குடித்தனம் செய்வார்கள்' என்றார்கள், அத்தை யும், அம்மாவும். இன்பம் வேண்டாம், இங்கித மாயினும் வேண்டாமா? அதுவுமா இல்லாமல் போகவேண்டும். இதைவிடக் கலியாணமே இல்லாமல் காலத்தைக் கழிக்கலாமே!

* * *

இரவு மணி டாண், டாண், என்று பத்து முறை அடித்து ஓய்ந்தது, திடுக்கிட் டெழுந்து உள்ளே சென்றார். கும்பிடு சட்டியிலிருந்த பாலை ஒரு டம்ளரில் ஊற்றிக் கொண்டு, 'ராமு!' என்றழைத்துக்கொண்டே வெராந்தாவிற்கு வந்தார். 'சார்பாயில்' படுக்கை சுற்றிவைக்கப்பட்டிருந்தது. படுக்கையின் மேல் உறையிட்ட கடிதமொன்று அவர் பேருக்கு, அவசர அவசரமாய்ப் பிரித்துப் பார்த்தார்.

அப்பா!

எப்பொழுதாவது புயல் தோன்றினால் புயலுக் குப்பின் தோன்றும் அமைதியை ஆனந்தமாய் எதிர்பார்க்கலாம். ஆனால் இந்தப் புயல்......... சர்வ நாசத்தைத்தான் காணத் துடிக்கிறது. ஆகையால்......என்றும்போல் நான் உங்களை விட்டே விலகியிருக்கிறேன். அன்று அன்னையின் மனச்சாந்திக்காக, ஆனந்தத்திற்காக விட்டு வைத் தீர்கள். இன்று அன்னை ஸ்தானத்தில் நின்றுள்ள உம் மனைவியின் ஆனந்தத்திற்காக உம்மை விட்டுப் பிரிகிறேன். வருந்தாதீர்கள், வாழ்வில் சுகத்தைக் காணாது வாடிய உங்கள் உள்ளத்திற்குச் சாந்தி யளிக்கத்தான் செல்கிறேன். எனக்கு ஆசி கூறுங்கள்.

உங்கள் அன்பு மைந்தன்,
"*ராமு*"

வைத்யநாதனின் உள்ளம் குமுறியது. உதடு துடிக்க, 'ராமு! நீ தியாகியடா! நான் போகி. அது தான் போக்கிடமற்றுத் தவிக்கிறேன்' என்று வாய் விட்டுக் கதறினார்.

கணவனின் குரலைக்கேட்டு ஓடிவந்த கற்பகம் அவர் காலருகிலிருந்த கடிதத்தை எடுத்துப் பார்த்தாள். அவள் கண்களிரண்டும் உடைப் பெடுத்துக்கொண்டன, அவள் கற்சிலையாய் நின்றாள். ●

கட்டுரையாளர்கள் கவனிக்க வேண்டுவது

தங்கள் கதை, கட்டுரைகளுடன் அனுப்பிவைக்கும் (திரும்பப் பெறுவதற்காக) தபால்தலைகளைத் தனியாகத் தங்கள் விலாசமிட்ட ராப்பரில் ஒட்டி அனுப்பிவைக்கக் கோருகிறோம். இல்லாவிடில் தபால் அதிகாரிகளால், கம்பல்ஸரி ரிஜிஸ்ட்ரேஷன் செய்யப்பட்டு, அதிகப் படியான செலவுகளுக்கு உள்ளாக நேரிடும் என்பதை நேயர்கள் அறிய வேண்டுகிறோம்.

ஆசிரியர்.

டால்டா வனஸ்பதி எல்லா சமையல்களுக்கும் மிகச்சிறந்தது

"நான் இப்பொழுது டால்டா உபயோகித்துச் சமைப்பதால் என் குடும்பத்தினர் ஒருபொழுதும் அவ்வுணவைச் சாப்பிடத் தவறுவதில்லை."

சிறந்த தின்பண்டமான சேம்பு இலை வடை

தயாரிக்க டால்டா செய்முறைக் குறிப்பை தவறவிடாதீர்கள்!

½ கப் கடலைமாவு, சிட்டிக்கை பேகிங் பௌடர், மஞ்சள் பொடி, ருசிக்குத்தேவையான உப்பு இவை களைக்கலந்து கெட்டியான தோசைமாவுப்பருவத் திற்கு தயாரித்துக்கொள்ளவும். சேம்பு இலையில் மாவைப்பூரத்தி துருவிய தேங்காயைத் தூவவும். இலையின் ஓரத்தை மடக்கி சுருட்டவும். பிரிந்து விடாமலிருக்க சிரம்பைக் குத்தவும். ½ மணி நேரம் ஆவியில் வேகவும். பரிமாறுவதற்கு முன் துண்டு களாக குறுக்கே வெட்டி குழிவு குறைந்த வாணலி யில் சிறிது டால்டாவில் பொரிக்கவும்.

முக்கிய அறிவிப்பு! டால்டா சமையல் புத்தகம் – தமிழ், வங்காளி, ஹிந்தி, ஆங்கிலம் என்ற நான்கு பாஷைகளில் இப்பொழுது கிடைக்கிறது – 300 செய் முறைக் குறிப்புகள் – ரூ. 1/– தபால் செலவு அணா 10 தனி. இன்றே எழுதுங்கள்:
தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ், தபால்பெட்டி நெ: 353, பம்பாய் 1

டால்டா

எல்லாச் சமையல்களுக்கும் உகந்த ஆதர்ச சமையல்-வஸ்து

10, 5, 2, 1, பவுண்டு டின்களில் கிடைக்கிறது

VM. 201-X52 TM

12. பாதையும் மாற்றமும்

சந்திரா கனவு கண்டு கொண்டிருந்தாள். அவள் பள்ளிக்கூடத்தில் வாசித்து வந்த நாட்கள். வீட்டில் பழுத்த வாழைப்பழங்களைக் கொண்டுபோய் ரெங்கநாதன் வீட்டில் கொடுக்கத் தம்பி கிளம்பிக்கொண்டிருக்கிறான். 'சந்திரா, சந்திரா அக்கா என்று அழைக்கிறான். ஏன் அம்மா கத்துகிறான்?' என்கிறாள் சந்திரா அலுத்துக்கொண்டே. சார், சார் வீட்டிற்குப் போகிறான். உன்னையும் கூப்பிடுகிறான் என்கிறாள் தாய். மீண்டும் சந்திரா சந்திரா என்று கத்துகிறான்.

"இதோ வந்துவிட்டேன்!" என்று பதில் சொல்லிக்கொண்டே சந்திரா விழித்துவிட்டாள். எதிரே குணசேகர முதலியார் நின்று கொண்டிருந்தார். அவர் முகத்தில் ஒரு தெய்வீகச் சந்தோஷம் குடிகொண்டிருந்தது.

"எங்கே அம்மா சந்திரா போகப் போகிறாய்?"

"போங்கள் அப்பா கனவு அப்பா...!"

"சரி, நான் நிசமாகவே கூப்பிடுகிறேன் வருகிறாயா?"

"எங்கே அப்பா."

"நம் சர்க்கரைத் தொழிற்சாலைக்கு...!"

"ஆமாம் அப்பா, அங்கே நிலைமை எப்படி இருக்கிறது. சாந்தியடைந்து விட்டதா?"

"அங்கு ஒரு சங்கடமுமில்லை. ஏற்பட்ட சங்கடமும் அந்த மகானுபாவனால் தீர்ந்து விட்டது."

"எந்த மகானுபாவன்? மானேஜர் முகுந்தனா."

"ஆம், அவனும் மகாராஜன்தான். தற்பெருமை பாராட்டாத அவன் குணம்தான் அந்த ரத்தினத்தின் மகிமையை நாம் அறிய முடிந்தது."

"என்ன அப்பா புதிர் போடுகிறீர்கள்?"

"இருக்கட்டும், எல்லாம் சொல்லுகிறேன். முதலில் இன்று ஏதாவது தபால் வந்ததா? சொல். பார்த்துவிட்டுப் பேசலாம்."

முதலியார் ஆபீஸ் அறைக்குச் சென்று அமர்ந்தார். பல கடிதங்கள் வந்திருந்தன. அதில் ஒரு கடிதம் நடராஜன் எழுதியிருந்தான். அத்தைக்கு வணக்கம், சந்திராவுக்கு அன்பு, செலுத்திவிட்டு அவன் நீண்ட கடிதம் எழுதியிருந்தான். தான் திருந்தியிருப்பதாக எழுதிவிட்டுத் தனக்குச் சர்க்கரை மில்லில் வேலை கிடைத்தால் கண்டிப்பாக நல்ல பிள்ளையாக நடந்து கொள்வதாக எழுதியிருந்தான். அதைப் படித்து, சூட்டுநாளில் உஷ்ணமானியில் ஏறும் பாதரஸம்போலக் கோபம் ஏற அதைக் கிழிக்கக் கையில் எடுக்கும் சமயம் எதிரே சந்திரா வந்து அமர்ந்தாள். ஆகவே எண்ணம் மாறி அதை ரகசியமாகச் சட்டைப்பையில் வைத்துக்கொண்டு மேலே பேச ஆரம்பித்தார்.

சந்திராவும் சாதுர்யமாகவே அதைப்பற்றிக் கவனியாதவள்போல் பேச்சைக் கேட்க முற்பட்டாள்.

அண்ணியும் அங்கே வந்து சேர முதலியார் சொல்ல ஆரம்பித்தார்,

தொழிலாலைக்கு ஆறு மைல் தூரத்தில் டவுன் இருக்கிறது. அதன் நடுவில் ஒரு பரோபகார மூலிகைச் சாலை ஒன்று இருக்கிறது. அதன் பெருமையைப்பற்றி நேரே பார்த்தால்தான் முற்றிலும் தெரிந்துகொள்ள முடியும். அந்த ஆசிரமத்தை ஒரு பிர்ம்மசாரி நடத்துகிறார். அவருக்குத் துணையாக ஒரு டாக்டரம்மாவும்

இருக்கிறாளாம். அவரைப்பற்றியே எங்கும் பேச்சாம். அவர் தினந்தோறும் மாலை நேரத்தில் பிரார்த்தனை நடத்திப் பேசவும் பேசுகிறாராம். ஒரு முறை பேச்சைக் கேட்டவர்கள் மீண்டும் வாழ்வில் துன்பமடைய மாட்டார்களாம். அவரைப்பற்றி அங்கேமட்டுமல்ல, சர்க்காரே நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறது. அவர் பெருமையால்தான் நமக்கு வந்த சங்கடம் நீங்கிற்று. நம்முடைய மானேஜரும் தொழிலாளிகளும் அவருக்கெதிரே பேசித்தான் முடிவு செய்தார்களாம். அந்த முடிவுப்படிதான் முதலாளியிடம் வாங்கித்தரச் செய்வதாகச் சொல்லி மானேஜர் வாக்களித்திருக்கிறார். ஒரு வாரம் டயம் கேட்டிருந்தாராம். அதற்காகத்தான் எனக்குத் தந்தியடித்திருக்கிறார். விளக்கமாக எழுதியிருந்த கடிதம் தொடர்ந்து வராமல் தப்பி எங்கோ தொலைந்து விட்டது. அதனால்தான் கலவரம் எல்லாம். அதனால் ஒன்றும் கெட்டுவிடவில்லை, நான் உன்னைக் கோபித்துக் கொண்டிருக்க வேண்டாம் சந்திரா...!

சந்திரா சிரித்தாள். "கடமை செய்யாதது தவறுதானே அப்பா......"

தந்தை: "மில்லும் உன்னுடையதுதானே!"

"சரி, மேலே சொல்லுங்கள்."

"அதைத்தானே சொல்லுகிறேன். நான் போனதும் ஆட்களை அழைத்து என்ன சேதி என்று கேட்டேன். அவர்கள் நடந்ததைச் சொன்னார்கள். நான் கேட்டுவிட்டு, "சரி, மானேஜர் சொன்னதைச் செய்யவேண்டிய கடமை உண்டு. ஆனால் நான் தனியே ஒன்றும் செய்யமுடியாது. என் மகள் மில் இது. அவளைக் கேட்க வேண்டுமே என்றேன். அவர்கள் என்ன பதில் சொன்னார்கள் தெரியுமா?"

"அப்படியே செய்யுங்கள் எசமான். எங்கள் சுவாமிகள் சொல்லியிருக்கிறார்கள்: கடமையைச் செய்கிறவனுடைய நியாயமான உரிமையை மறுக்க யாராலும் ஆகாது. நியாயமாய்க் கேட்டுவிட்டாலோ ஆண்டவன்கூடத் தரிக்கமாட்டார் என்று. நாங்கள் ஸ்ட்ரைக் செய்ததே பிசகு என்று நம்பிவிட்டோம். ஆகவே காலதாமதம் பிராயச்சித்தம் என்று எண்ணிக்கொள்கிறோம்..."

"நீங்கள் அந்தச் சுவாமிகளை பார்த்தீர்களா அப்பா?"

"போகவில்லை. எல்லோரும் சென்று பார்க்கலாம் என்று வந்துவிட்டேன். கொஞ்ச நாள் தங்கும்படி நாம் போகலாமா?" என்று கேட்டு முடித்தார் முதலியார்.

இலங்கையில்

"காவேரி"

சப் ஏஜன்ஸி எடுக்க விரும்புவோர் கீழேகண்ட ஸோல் ஏஜண்டுக்கு எழுதக் கோருகிறோம்

த. தம்பித்துரை

நியூஸ் ஏஜண்டு

No. 226 ஆஸ்பத்திரி ரோடு

யாழ்ப்பாணம், சிலோன்.

"அவசியம்" என்றார்கள் அண்ணியும் சந்திராவும். மறுநாள் மாலை காரிலேயே கிளம்புவதாக ஏற்பாடு செய்துகொண்டு பிரிந்தனர். முதலியார் கடிதத்தை மறந்துவிட்டார்.

மறுநாள் காலை வண்ணான் வந்தான். வழக்கப்படி சந்திரா துணிகளை எடுத்துப்போட்டாள். பைகளைச் சோதித்தாள். அநேகமாக முதலியார் கோட்டுச் சட்டைப் பைகளில் ஒன்றும் விட்டு வைக்கிற பழக்கம் இல்லை. பித்தான்கள் கர்சிப் மட்டும்தான் இருக்கிற வழக்கம். அன்று சட்டைப் பையில் அந்தக் கடிதம் இருந்துவிட்டது. சந்திரா, நேற்று முதலியார் அதைக் கிழிக்க முயன்றதையும் பிறகு சட்டைப் பையில் வைத்ததையும் பார்த்திருந்தாள். ஆகவே ஓர் ஆவல் தூண்ட அவள் அதை எடுத்துப் படித்துவிட்டாள். பத்திரமாக அப்பா பிரைவேட் லெட்டர் 'பைலில்' வைத்துவிட்டு, அழுக்குகளை எடுத்து எண்ணி எழுதிக்கொண்டு போட்டுவிட்டாள்.

மறுநாள் மாலைவரையில் முதலியாருக்கு ஒழியவேயில்லை. கிளார்க்குகளுக்குச் செய்ய வேண்டிய வேலைகளைச் சொல்லவும் மற்ற ஏற்பாடுகளைச் செய்யவும் அவர் நேரம் போதாமல் இருந்து விட்டது. மாலையில் கிளம்பும் நேரம் வந்துவிடவே கோட்ஸ்டாண்டில் தயாராயிருந்த சட்டையையும் கோட்டையும் மாட்டிக்கொண்டுவிட்டார். அவர் உள்ளத்திலிருந்து அந்த லெட்டரைப்பற்றிய எண்ணமே நழுவி விட்டது. பெரியஸெடான் காரில் அவர் குடும்பம் மாலை ஆறுமணிக்குக் கிளம்பிவிட்டது. இரவு ஒன்பது மணிக்கு நல்ல நிலவில் இறங்கி, ஒரு கோவிலடியில் கொண்டு வந்திருந்த சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டு இரவு இரண்டு மணிக்குத் தொழிற்சாலை இருக்கும் ஊருக்குவந்து சேர்ந்தார்கள்.

முகுந்தலால் வழக்கம்போல் இரவு தொழிற்சாலையைச் சுற்றிவிட்டு வரும்போது முதலாளி வீட்டுவாசலில் கார் வந்திருப்பதைக் கண்டு அதிசயித்து உள்ளே சென்றான்.

முதலியார் முகுந்தலாலைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். நான் வரப்போவது உங்களுக்கு எப்படித் தெரியும்? என்று கேட்டார்.

"இங்கு வந்துதான் தெரிந்து கொண்டேன்"

பிறகுதான் முகுந்தலாலின் இந்த வழக்கம் தெரியவந்தது. அதிசயப்பட்டுக் கொண்டே முதலியார் தம் மனைவி பெண் இவர்களை அறிமுகப்படுத்தினார்.

அண்ணி, நல்லபையன் என்று அபிப்பிராயம் கொண்டாள்.

சந்திரா, சரியான ஆண்பிள்ளை என்று நிச்சயம் செய்தாள்.

முகுந்தலாலோ சந்திரா அழகிலே சொக்கி விட்டான்.

முகுந்தலால் உடனே அங்கிருந்து ஆபீசுக்குப் போன்பண்ணி இரண்டு ஆளை வரவழைத்தான். அவர்களை அங்கே இருத்தி, அவன் போக யத்தனிக்கும் சமயம், முதலியார் 'நாளைக்கு மூலிகைச் சுவாமிகளைச் சென்று பார்க்க வேண்டுமே!' என்றார்.

"தனித்துச் சந்திப்பீர்களா?"

"இல்லை குடும்பத்துடன்..."

"அது சரி, பிரார்த்தனைக் கூட்டத்துக்குப் போவோமா அல்லது............"

"என்ன சந்திரா! என்ன சொல்கிறாய்?"

"முதலில் பிரார்த்தனைக் கூட்டத்துக்கே போக லாம்......"

"அதுவும் சரிதான்......"

"சரி. எதற்கும் நான் அவருக்கு முன்கூட்டிச் சமாசாரம் சொல்லி அனுப்பிவிடுகிறேன்." என்று சொல்லிவிட்டு அவன் நகர்ந்துவிட்டான்.

களைப்படைந்த அந்தக் குடும்பம் அப்படியே தயாரான படுக்கைகளில் படுத்துத் தூங்கச் சென்றனர். ஆனால் முதலியாருக்குமட்டும் உடனே தூக்கம் வரவில்லை.

முதலியார் முகுந்தலாலின் சுவாமி பக்தியை மனதுக்குள் மெச்ச ஆரம்பித்தார். கடவுளைப் பற்றிய ஞாபகம் வந்தது அவருக்கு. என்ன புண்ணியம் செய்தாரோ, முதலியார் அவர் வாழ்க்கை நல்லவர்களிடையே செல்கிறது. நல்ல மனைவி கிடைத்தாள். நல்ல குழந்தைகள் பிறந்தன. நல்ல நண்பர்கள் கிடைத்தனர். நல்ல ஊழியர்களும் கிடைத்திருக்கின்றனர். யார் செய்த புண்ணியம் இது?

ஒரே ஒரு முள். பெண்ணும் நல்ல நிலைமையில் இருந்திருந்தால் எல்லாம் அழகாய் இருந்திருக்கும். குழந்தை மனம் சங்கடப்பட்டால் பெற்றோர் எப்படி இன்பம் அடையமுடியும்? சந்திரா கோலாகலச் சூறாவளி எழுப்பியபோதும் மணந்து கொள்ளும் எண்ணம் அவள் உள்ளத்தில் எழ வில்லையே. அந்த டிபுடி கலெக்டர் ராமநாதன் I. A. S. இடம் அவள் பழகியவிதம் அவனே ஏமாந்துவிடும்படி இருந்ததே. முதலியாரும் ஆகட்டும் என்றுதானே எண்ணினர். அவள் மனம் அசைந்து கொடுக்கவில்லையே!

பூத்துக் குலுங்கும் மரம் காய்க்காமல் போனால் என்ன லாபம்?

முதலியார் கண்களில் வழிந்த நீர்த்துளிகளைத் துடைத்துக்கொண்டார்.

முகுந்தலாலும் பிர்ம்மசாரிதான். வடக்கத்தியானாயிருந்தால் என்ன? சந்திராவா சம்மதிப்பாள்!

"சரி, பார்க்கலாம். இந்தச் சுவாமிகளுடைய சந்திப்பினால் சந்திரா மாறுகிறாளா பார்க்கலாம்!......

கடிகாரம் நாலு அடிக்க, இளம் குளிர்ந்த காற்று வீச ஆரம்பித்தபிறகுதான் முதலியார் உஷ்ணம் தணிந்து தூங்க ஆரம்பித்தார்.

ஆசை அழைப்பும் அதன் சங்கடமும்

மாலை ஆறு மணிக்குப் பிரார்த்தனைக் கூட்டம். சிகித்ஸாலயத்தின் பெரிய கொட்டகைக்கு எதிரே உள்ள மைதானத்தில் மக்கள் கூடுகிற வழக்கம். சுவாமிகள் மேடையில் அமர்ந்ததும் பல பாட்டுக்கள் பாடப்படும். பிறகு உபநிஷத்துக்களிலிருந்தோ கீதையிலிருந்தோ ஏதோ ஒரு சுலோகம் சொல்லி, அதிலிருந்து ஆரம்பித்துச் சுவாமிகள் சரியாகப் பதினைந்து நிமிஷங்கள் பேசுவார்கள். பிறகு ஏதாவது ஒன்றிரண்டு கேள்விகளுக்குப் பதில் அளிப்பார்கள். சரியாக ஏழு மணிக்குக் கூட்டம் முடிந்துவிடும்.

அன்று காலையில்தான் ஆனந்தனுக்கும் அமுதத்திற்கும் கலியாணம் நடந்திருந்தபடியால் சுவாமிகள் அன்று கலியாணத்தைப் பற்றியே பேசினார்கள்.

ஜனங்கள் எல்லாரும் மிகுந்த கவனத்துடன் கேட்டார்கள். கலியாணத்தைப்பற்றிய பல சிக்கல்களையும், நம் நாட்டில் கலியாணத்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பெருமையைப்பற்றியும், அவர் மிகவும் உபயோகப் படக்கூடிய கருத்துக்களையும் அறிவுரைகளையும்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்.

சந்திராவும் வந்திருந்தாள். அவள் தந்தை தாய் தம்பிகள் எல்லோரும் வந்திருந்தனர்.

சந்திரா கண்டுகொண்டுவிட்டாள். அவள் ரெங்கநாதனை எப்படி மறக்கமுடியும். நரம்புகள் எல்லாம் முறுக்கேறி மனதில் எல்லா உணர்ச்சிகளையும் சிறையிட்டு அவள் கவனித்தாள்.

பிறகு சுவாமிகள் அன்று ஆசிரமத்தில் நடந்த கலியாணத்தைப்பற்றியும் பேசினர். பிறகு தம்பதிகள் மேடைக்கு அழைத்துவரப் பட்டனர்,

"எனக்குத் தெரியும்

லக்ஸ் டாய்லட் சோப் உங்கள் சருமத்தையும் எழிலோங்கச் செய்யுமென்று."

இவ்வாறு கூறுகிறார்

மாலதி

மாலதி கூறுவதாவது: "இந்த சுத்தமான, வெண்மையான சோப் என் சருமத்திற்கு அளிக்கும் நறுமணத்தை நான் மிகவும் விரும்புகிறேன். சோபைமிக்க சரும அழகைப்பெற நான் செய்வதுபோல் நீங்களும் செய்யுங்கள். உங்கள் சருமத்திற்கு லக்ஸ் டாய்லட் சோப்பின் தினசரி பாதுகாப்பை அளியுங்கள்."

லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 383-X30 TM

"ஆசிரமம் என்ற பெயர் மக்கள் தந்தது. இந்தச் சிகித்ஸாலயம் பரோபகார சுவாமிகளின் செல்லப்பிள்ளை. அதை இனி இந்தத் தம்பதிகளே நடத்துவார்கள். ஏழைகள் எளியவர்கள் யாரும் எப்பொழுதும் வந்து வழக்கம்போல் சிகிச்சை பெறலாம்......"

என்றதும் சுமார் ஆயிரம் மக்கள் அடங்கிய அந்தக் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. சந்திரா மக்களின் மரியாதையையும் நம்பிக்கையையும் கவனித்தாள்.

சுவாமிகள் சலசலப்பைக் கண்டு மீண்டும் சொன்னார்:

நீங்கள் சொல்ல விரும்பாது போனாலும் உங்கள் மனதில் ஒரு எண்ணம் எழுந்துவிட்டது. அதற்கு ஆனந்தமே பதில் சொல்லுவார் என்றார்.

ஆனந்தமும் அமிர்தமும் எழுந்து நமஸ்காரம் செய்தனர். ஆனந்தம் மக்களைப் பார்த்து.

"சுவாமிகள் மனதை நீங்கள் நன்கு அறிவீர்கள். நல்ல காரியங்கள் கடவுளால் மக்கள் மூலம் நடந்தேறுகின்றன. ஆகவே அவர்கள் என்றும் தாமே இந்தச் சிகித்ஸாலயத்தைச் சாசுவதமாக நடத்த விரும்பியதில்லை. ஆனாலும் உடனேயே அவர்கள் நம்மைவிட்டுப் போய்விடமாட்டார்கள். என்னை எல்லாவிதத்திலும் தகுதி என்று கண்டால்தான் வைத்துவிட்டுப் போவார்கள். அவர்கள் விரும்பினால் நான் எதிர்விருப்பம் விரும்ப முடியாது. ஆகவே அவர்கள் இடும் பணியை அவர்களே என்னைவிட்டு நடத்திக்கொள்வார்கள்!"

எல்லோரும் கேட்டார்கள். பஜனையுடன் கூட்டம் முடிந்தது. எல்லாரும் எழுந்து சென்றனர். சுவாமிகள் உள்ளேபோய்விட்டார்.

கூட்டம் முடிந்தவுடன் சந்திராவும் கூட்டத்துடன் எழுந்தாள், முதலியார் தம்பதிகளும் எழுந்தனர். முகுந்தலாலும் எழுந்தான். அவன் முதலாளிகளுடன் வெளியேறத் திரும்பிய சமயம் ஒரு மாணவன் வந்து, 'சுவாமிகள் தங்களை அழைக்கிறார்கள்!' என்றான்.

"தனியாகவா?"

"அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை."

"எல்லோரும் போகலாமா?" என்று கேட்டான் அவன் சந்திராவைப் பார்த்துக்கொண்டே.

சந்திரா முதலியாரைப் பார்த்தாள். முதலியார் அண்ணியைப் பார்த்

தார். அண்ணி 'போகலாம் சுவாமிகளிடம் விபூதி வாங்கிப்போகலாம்' என்ருள்.

முதலியார் சரி என்ருர்.

சந்திராமட்டும், "வேண்டாம் அம்மா, அவர் தனியாகப்போய் வரட்டும் ஏதாவது ரகசிய மாயிருந்தால் கேட்டுவிட்டு வரட்டும்!" என்ருள். முகுந்தலால் தனியாகச் சென்ருன்.

சுவாமிகள் பக்கத்தில் தங்கமும் இருந்தாள். முகுந்தலால் சென்று நின்ருன்.

"முகுந்தலால்! உன் முதலாளியைக் குடும்பத்துடன் நாளைக் காலையிலேயே அழைத்து வா!" என்ருர் சுருக்கமாக.

முகுந்தலால் வணங்கிச் சென்றுவிட்டான்.

சுவாமி தங்கம் பக்கம் திரும்பி, 'தங்கம், நாளை யார் வருகிருர்கள் தெரியுமா? என்ருர்.

"எனக்கு ஜோசியம் தெரியாதே!" என்ருள் அவள்.

"போகட்டும். சந்திரா வருகிருள். அவள் தந்தையும் தாயும் தம்பிகளும் வருகிருர்கள்."

"யார் சந்திரா?"

"உனக்கு ஜோசியம்தான் தெரியாதென்று நினைத்தாயல்லவா, ஞாபக சக்திகூடக் குறைவு!" என்று சிரித்தார் சுவாமிகள்.

"ஓகோ; ரெங்கநாதனின் சிஷ்யையா?"

சுவாமிகள் தங்கத்தை நிமிர்ந்து பார்த்தார். அவள் தன் பயமின்மையை உணர்ந்து தலையைக் கீழே குனிந்தாள்.

"ஏன் இந்த நாணம். சொன்னது சரிதான். அவள்தான. நாளை அவளை வரவேற்கத் தயாராக இரு. அவள் முதலில் உன்னிடம்தான் வர வேண்டும். ஆசிரமத்தில் அசட்டுத்தனமான ஒரு செயலும் நடக்கக்கூடாது"

தங்கம் சரி என்று சொல்லிவிட்டுச் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்யப் போய் விட்டாள்.

அங்கே காரில்போய் உட்கார்ந்ததும் முகுந்தலால் முதலாளியிடம் சுவாமிகள் விருப்பத்தைத் தெரிவித்தான்.

"நாளை வருவோம்!" என்ருர் முதலியார். 'சந்திரா, நீயும் வருகிருயா?'

"சரி, நாளை யோசித்துத்தான் சொல்ல வேண்டும்"

"ஏன்?"

சந்திரா பதில் சொல்லவில்லை.

கொஞ்ச தூரம் போனவுடன் சந்திரா 'அப்பா அவர் யார் என்று தெரிகிறதா?' என்று கேட்டாள்.

முதலியார், 'சந்தேகமாகவிருக்கிறது. நிச்சயமாக எப்படிச் சொல்வது?' என்ருர்.

"அப்பா, நன்ருய் யோசித்துப் பாருங்கள்."

"ஆமாம்டி பெண்ணே. அவரிடம் ரெங்கநாதன் சாயல் அடிக்கிறது. இருட்டில் நன்ருய்க் கவனிக்கவில்லை!" என்ருள் அண்ணி.

முதலியாருக்கும் ஞாபகம் வந்துவிட்டது. "ஆமாம் சந்திரா, நம்முடைய ரெங்காநாதனே" தான். ஆனல் அவன் இப்படிப் பருமனுக இல்லையே...!"

"வருஷங்கள் ஆருகிவிட்டன. தவிர ஒடிந்த எலும்பை மூட்ட வைக்கும் மூலிகைகளின் நடுவே இருக்கிருர். இந்திரியங்களை எல்லாம் அடக்கி இருக்கிருர். மக்கள் இன்பத்தில்

நினைக்கிறார். அவர் அப்படி இருப்பதில் என்ன ஆச்சரியம்? ஆனால் அவர் குரல்..."

"அதுகூட மாறித்தான் இருக்கிறது, ஆனால் நாங்கள்கூட ஏமாறலாம். உன் இதயம் ஏமாறாது!" என்றார் முதலியார்.

முகுந்தலால் இடையே புகுந்தான்.

"சுவாமிகள் கருத்துக்களே அர்த்தம் புரியாமல் இருக்கின்றன, அதை நாம் ஆசிரமம் என்று கருதினோம். அங்கே மணம் செய்வித்திருக்கிறார்"

"ஆமாம். ஆ! அது எப்படி? எங்களுக்கெல்லாம் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது!"

"அது மட்டுமா? இதை அவர் பேணி வளர்க்கிறாரே தவிர அதில் பற்றே கிடையாது."

"ஆம், இன்றுதான் அவரே சொன்னாரே!"

"எல்லாவற்றையும்விட அதிசயம் அவரே மணந்துகொள்ளத் தயாராகியிருந்தார்."

எல்லோரும் காது கொடுத்துக் கேட்டனர்.

"யாரை?" என்றாள் அண்ணி.

"தங்கம் என்று ஒரு டாக்டர் இருக்கிறாள். கெட்டிக்காரப் பெண். சோதனைச்சாலை தற்பொழுது அவள் வசம்தான் இருக்கிறது."

"பிறகு?" என்றார் முதலியார்.

"தங்கம் அவரை மணக்கத் தயாராக இல்லையாம்." சந்திரா தனக்குள் 'வேண்டும்' என்று சொல்லிக்கொண்டாள். பிறகு இரைந்து, 'ஏன் தங்கம்தான் தவம் கிடந்தாளே!" என்றாள்.

எனக்கு முழுக் கதையும் தெரியாது. தங்கம் இங்கே வந்த கதையே தனி என்று முகுந்தலால் தான் அறிந்தவற்றைச் சொன்னான்.

சந்திரா கதையைக் கேட்டு மனம் நெகிழ்ந்தாள்.

முதலியார் சந்திராவைப் பார்த்து 'சந்திரா, உனக்குத் தங்கத்தைத் தெரியுமா?'

"என்ன அப்பா, அப்படிக் கேட்கிறீர்கள்? ரெங்கநாதனுக்கு அவளை மணம் செய்யத்தானே அவர் தாயார் துடிதுடித்துக்கொண்டிருந்தார்கள்."

"ஓகோ, அந்த மதராஸ் பெண்ணா? ஏன் அவள் அவரை மணக்க மறுத்தாளாம்?"

முகுந்தலால் இதற்குத் திட்டமான பதில் தெரியாது என்றான். ஆனால் ஆசிரமத்தில் அவர் எதையும் ஒளித்தது கிடையாது. ஆகவே அவ்விடத்திலுள்ளவர்கள் சொல்கிறார்கள் ஒரு கதையாக. சுருக்கமாகத் தங்கம்தான் சுயநலம் காரணமாக அந்தச் சுவர்க்கலோகத் தேவதையை நரகத்துக்கு அழைக்கத் தயாராக இல்லையாம். தான் பூலோகத்துக்கே லாயக்கில்லாதபோது அப்படி நான் முயலுவது பாபம் என்றாளாம். தான் பிராயச்சித்தமும் தவமும் செய்ய விரும்புகிறாளாம்......"

அதற்குள் கார் நிற்கவேண்டிய இடம் வந்துவிடவே பேச்சு நின்றது.

எல்லோரும் வீட்டுக்குப் போனவுடன், "நாளைக்கு 'எட்டு மணிக்குக் கிளம்பலாமா?' என்றான் முகுந்தலால்.

'சரி' என்றாள் சந்திரா முதலில். ஆச்சரியப்பட்ட முதலியார் சரி என்றார் தாமும். முகுந்தலால் போய்விட்டான்.

நாயின் வாலும் வாலின் கோணலும்

மறுநாள் காலையில் எல்லோரும் புறப்படுவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தனர். சந்திராமட்டும் சோம்பலாகவே இருந்தாள்.

முதலியார் 'என்ன சந்திரா?' என்று கேட்டார்.

"என்ன அப்பா?"

"நீ தயாராகவில்லை? மணி ஏழு அடிக்கப் போகிறதே!"

"நான் எங்கே போகத் தயாராக வேண்டும்?"

"ஆசிரமத்துக்குப் போக வேண்டாமா?"

"போங்களேன்."

"நீயும் வருவதாகச் சொன்னாயே!"

"எங்கே சொன்னேன்? நேற்று இரவேதான் சந்தேகமாகச் சொன்னேனே?"

"கடைசியாக முகுந்தலாலுக்கு நீ தானே சமயம் நிச்சயித்தாய்."

"நான் உங்களுக்காகவல்லவா சொன்னேன்."

"அப்படியானால் நீ வரவில்லையா?"

"வேண்டாம் என்று பார்க்கிறேன்."

முதலியார் யோசித்தார். ஆம், அவளை எப்படிப் பிடிவாதம் செய்வது?

"சரி, அப்படியானால் நானும் போகவில்லை போ......!"

"அப்பா அவர் ஏதாவது எண்ணிக் கொள்வார்......"

"ஏதாவது காரணம் சொல்லி அனுப்பலாம்...!"

"அம்மா மட்டும் போகட்டும்."

அம்மாவும், சரி நீங்கள் இல்லாமல் நான் போகமுடியாது என்று சொல்லிவிடவே, அவர்கள் அன்று போவதில்லை என்று முடிவு செய்துவிட்டனர்.

முகுந்தலால் சரியாக எட்டு மணிக்கு வந்தான். 'போவோமா?' என்றான்.

முதலியார் தாம் வருவதில்லை என்று சொன்னார். சந்திரா 'ஒருவருமே இன்று போகப் போவதில்லை' என்று சொன்னாள்.

"சரி. சுவாமிகளுக்குச் சொல்லி அனுப்பி விடுவோமா?"

"சொல்லி அனுப்பவேண்டாம். நீயே போய்ச் சொல்லி விடு."

"வேண்டாம். ஆபீஸ் நேரத்துக்குள் திரும்பி வரமுடியாது.,,

"ஒரு நாள் பரவாயில்லை. நான் பார்த்துக் கொள்கிறேன்." என்றார் முதலியார்.

"இல்லை, சுவாமிகள் வருத்தப்படுவார். நானே போனில் சொல்லி விடுகிறேன்"

"போன் இருக்கிறதா ஆசிரமத்துக்கு?"

"இருக்கிறது" என்று சொல்லிவிட்டு, அவன் போன்செய்யச் சென்றான்.

ஆசிரமத்தில் தங்கம் சுவாமியிருக்கும் இடத்துக்கு வந்தாள். சுவாமி அங்கேயே இருப்பதைப் பார்த்து, 'சந்திரா வரநேரம் ஆய்விட்டதே' என்றாள்.

"ஆம் ஆகிவிட்டது. ஆனால் வரப்போவதில்லை!"

தங்கம் பரக்க விழித்தாள்.

"ஆச்சரியம் ஒன்றுமில்லை. நேற்று இரவே அவள் குணத்தைக் காட்டிவிட்டாள். முகுந்தலால் அழைக்கும்போது அவள் இங்கே வரமறுத்துவிட்டாள். அங்கே நடந்ததைக் கோபாலனைக்கேள், தெரியும்" என்றார்.

அதே சமயம் போன்மணி கணகண என்று அடித்தது.

"நீயே கேள் தங்கம். அங்கிருந்துதான் வந்திருக்கிறது."

"சந்திரா பேசினால்...!"

"பேசமாட்டாள். முகுந்தலால் பேசுவான்...

"என்ன பதில் சொல்வது..."

"பரவாயில்லை, சந்தர்ப்பம் வரும்போது வரலாம் என்று சொல்லு."

குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்
டோங்ரேயின் பாலாம்ருதம்

K. T. டோங்கரே அண்கோ., பம்பாய்-4.

அதே பதிலைக் கேட்ட முகுந்தலால், சுவாமிகளின் பெருந்தன்மையை வியந்தான் என்று தங்கமே அறிந்து கொண்டாள். மீண்டுவந்து தங்கம் சுவாமிகளைக் கேட்டாள்.

"சந்திரா வரவேமாட்டாளா?"

"வருவாள்"

"இஷ்டத்துடன் தானே!"

"கடவுள் இஷ்டத்துடன்!"

தங்கம் மேலே கேட்கவில்லை. தன் வேலையைச் செய்யப்போய்விட்டாள்.

அங்கே முதலியார் ஸ்நானம் செய்து கொண்டிருந்தார். திடீர் என்று ஞாபகம் வர, சந்திராவை அழைத்தார்.

"என்ன அப்பா?"

"அன்று சட்டைப் பையில் ஒரு கடிதம் வைத்திருந்தேன்"

"ஆம். நம் ஊரில் தானே!"

"அதுதான் நடராஜனின் கடிதம்......!"

"அதைப் பத்திரமாக, 'பைலில்' வைத்திருக்கிறேன்.

"அதை எதற்குப் பத்திரமாக வைத்தாய்? கழுதை மீண்டும் வருகிறானம்...!"

அண்ணி "குளித்துக் கொள்ளும் நேரம் கூடப் பேச்சா!" என்று கேட்டுக்கொண்டே வந்தவள் நடராஜன் பேரைக் கேட்டதும் 'பாவம்! எங்கே இருக்குதோ, தகப்பனில்லாப் பிள்ளை!' என்றாள்.

"அப்பா அந்தக் கடிதத்தை நான் படித்தேன். நீங்கள் வரும்படி எழுதியிருப்பீர்கள் என்றல்லவா நினைத்தேன்.!"

"போ, அம்மா. அந்தக் கழுதையை மீண்டும் இங்கே வருவிக்கலாமா?"

என்று பேசிக்கொண்டிருக்கும்போதே வாசலில் நடராஜன் குரல் கேட்டது.

உள்ளே தடதட என்று வந்துகொண்டே 'சந்திரா என்ன அப்பா இல்லையா! அவுங்க என்னை மன்னிச்சுட்டாங்களே!' என்று சத்தம் போட்டுத் தன் வணக்கத்தைத் தெரிவித்தான்.

சந்திரா புன்முறுவலுடன் வரவேற்றாள்.

அண்ணி, "வா தம்பி, அம்மா சௌக்கியமா?" என்று வரவேற்றாள்.

முதலியார் அடங்கியே, விட்டார்.

வேறு வழியின்றி நடராஜனுக்கு முதலியார் அங்கே ஒரு வேலை செய்துதரச் சொல்ல வேண்டியதாயிற்று. முகுந்தலால் சங்கடப் பட்டார். சுவாமிகளிடம் சென்று சொன்னார்.

சுவாமிகள், "நீங்கள் பயப்படவேண்டாம். ஒரு நாள் நடராஜன் சந்திராவின் கணவனாகியிருக்க வேண்டியவன்." என்றார்.

"அது சரி, அவன் போக்கு, பார்வை ஒன்றும் சரியில்லையே!"

"அதற்குப் பயப்பட வேண்டாம். அவன் இங்கே வருவான். அவன் நடத்தை திருந்திவிடும்" என்றார் சுவாமிகள்.

"நம் ஆட்கள் சங்கடப்படுத்துவார்களே!"

"புது இலாகா ஒன்று ஏற்படுத்தி அதில் அவனுக்கு வேலை கொடுத்துவிடுங்கள்!"

முகுந்தலால் யோசித்தான்.

"அவனை வெல்பேர் ஆபீசராகப்போட்டு விடும்!"

"ஆட்கள் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்வானே!"

"நீர் விரும்பும் எந்த வேலையையும் கொடும். நீர் எதற்கும் பயப்பட வேண்டாம்......"

முகுந்தலால் மேலே பேசவில்லை. முதலியாரிடம் சுவாமிகளின் வார்த்தைகளைச் சொல்லி விட்டு, அவனை வெல்பேர் ஆபீசராக்கிவிட்டான்.

அந்த வேலை அவனுக்குத் தக்கதாயிருந்தது. அந்த ஆலையில் வெல்பேர் ஆபீசருக்கு வேலை இல்லை. திட்டங்கள் எல்லாம் சுவாமிகள் போட, முகுந்தலால் நிறைவேற்றி வந்தான். ஆகவே நடராஜன் நிம்மதியாய்ச் சுற்ற முடிந்தது.

முதலியார் மட்டும், "முகுந்தலால் சொல்கிறபடி நடந்தால் மரியாதையாய் இங்கே இருக்கலாம். இல்லையானால் உன்பாடு மீண்டும் ஆபத்துத்தான்" என்று எச்சரித்தார்.

"சரி, மாமா" என்று அவன் தலையை ஆட்டினான். நாட்கள் சென்றுகொண்டிருந்தன.

சுவாமிகளைப் பார்க்க வருவதாகச் சொல்லி இரண்டு வாரங்கள் கடந்துவிட்டன. நாளை மறுநாள் என்று சொல்லிக்கொண்டே நாட்கள் கழிந்தன.

முகுந்தலால்மட்டும் அடிக்கடி போய் வந்தான், சுவாமிகள் மற்றப் பேச்சுப் பேசுவாரே தவிர. அவர்கள் வராததைப்பற்றிக் கேட்டதில்லை.

(தொடரும்)

B/G/232A

SCISSORS

மூன்று தலைமுறைகளாகப் பிரசித்திபெற்றது

பருத்திக் கொட்டையிலிருந்து

அ. ராம்கோபால்

நம் நாட்டில் பயிரிடப்படும் பலதரப்பட்ட பணப் பயிர்களில் பருத்தி முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. பஞ்சாப், மேற்கு உத்தரப் பிரதேசம், மத்ய பாரதம், மத்ய பிரதேசின் மேற்குப் பகுதி, ஹைதராபாத், பம்பாய் மாகாணத்தில் அஹமதாபாத், புரோச், சூரத், பீஜபூர், பெல்காம், தார்வர், சோலாப்பூர் ஜில்லாக்கள், மைசூரைச் சேர்ந்த சித்தல் துர்க்கம், பெல்லாரி ஜில்லாக்கள், ஆந்திரத்தைச் சேர்ந்த கர்நூல், அனந்தபூர், கடப்பை' குண்டூர் ஜில்லாக்கள் முதலியவைகளில் பருத்தி மிகுதியாக விளைகிறது. நம் மாகாணத்தில் கோவை, மதுரை, திருநெல்வேலி முதலிய மூன்று ஜில்லாக்களில் மிகுதியாகவும், சேலம், திருச்சி, ராமநாதபுரம் முதலிய மூன்று ஜில்லாக்களில் சிறிதளவும் பயிராகிறது. நம் நாட்டில் பருத்தி பயிராகும் மொத்தப் பரப்பு சுமார் 116·7 லட்சம் ஏக்கர், இதிலிருந்து கிடைக்கும் பருத்தி சுமார் 22 லட்சம் பேல்கள். ஒரு பேல் என்பது சுமார் 400 ராத்தல் எடை உள்ளது, இப்பருத்தியிலிருந்து வருடாவருடம் சுமார் 16 லட்சம் பேல் பருத்திக்கொட்டை கிடைக்கிறது. 1500 ராத்தல் பருத்தியை அரைத்தால் அதிலிருந்து சுமார் 1000 ராத்தல் விதையும் 500 ராத்தல் சுத்தமான பருத்தியும் கிடைக்கும்.

நம் நாட்டில் பருத்திக் கொட்டைக்கு இரண்டே விதமான உபயோகங்கள்தான் உண்டு. நிலங்களில் விதைப்பதற்காகப் பயன் படுத்துவது ஒன்று. கால் நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுவது மற்றது. மொத்தம் கிடைக்கும் 16 லட்சம் பேல் பருத்திக் கொட்டையில் சுமார் 3·5 லட்சம் பேல்தான் விதைக்காகப் பயன் படுத்தப்படுகிறது. எஞ்சியுள்ள சுமார் 12·5 லட்சம் பேல்களில் ஒரு சிறு பகுதிதான் கால்நடைகளுக்கு உணவாக உபயோகப்படுகிறது. பெரும்பகுதி மற்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தோ அல்லது உள் நாட்டிலேயே வீணுக்கவோ படுகிறது.

அமெரிக்காபோன்ற மேல் நாடுகளில் பருத்திக் கொட்டையை இவ்விதம் வீணுக்குவதில்லை. மற்ற எண்ணெய் வித்துக்களைப் போல் பருத்திக்கொட்டையிலிருந்தும் ஒரு வகை எண்ணெய் வடிக்கிருர்கள். இப்பருத்திக்கொட்டை எண்ணெய் உணவுக்காகவும், சோப்பு, செயற்கை வெண்ணெய், மெழுகுவர்த்தி முதலியவை தயாரிக்கவும் பயன்படுகிறது. பருத்திக்கொட்டைப் புண்ணுக்கு நிலத்திற்கு உரமாகவும், கால்நடைகளுக்குத் தீனியாகவும் பயன்படுகிறது. ஒரு உயர்ந்த ரக பேப்பர் தயாரிக்கப் பயன்படுகிறது. பருத்தியே விளையாத பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனிபோன்ற நாடுகள் நம்நாடு, எகிப்து, பாகிஸ்தான் போன்ற முன்னேற்றமடையாத நாடுகளிலிருந்து பருத்திக் கொட்டையை வாங்கிப் போய் மேலே கூறியபடி தங்கள் நாட்டில் பற்பல தொழில் வளர்ச்சிக்குப் பயன் படுத்திக் கொள்கின்றன. மரமிங்கே மலர் அங்கே என்ற இந்நிலை இனியும் நீடிக்க நாம் அனுமதிப்பது சரியல்ல. நம் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குப் பருத்திக்கொட்டை ஏற்றுமதியாவதை நிறுத்தி, மேல் நாடுகளைப்போல் நம் தொழில் வளர்ச்சிக்கு அதைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும்.

வெளி நாடுகளில்

நம் நாட்டை நீக்கி, பருத்தி விளைவிக்கும் மேல் நாடுகளில் அமெரிக்காவே பிரதானமானது. அங்கே வருடம் சுமார் 139 லட்சம் பேல்கள் பருத்தி உற்பத்தியாகிறது. ஒரு பேல் என்பது அங்கே 500 ராத்தலாகும். இவ்வளவு பருத்தியிலிருந்து கிடைக்கும் விதை அவ்வளவும்—அதாவது விதைக்கப் பயன்பட்டது போக, பாக்கி எல்லாம் 1834 வரை வீணுக்கப்பட்டே வந்தது. பருத்திக்கொட்டை கால்நடைக்குச் சிறந்த உணவு என்பதுகூட அக்காலத்தில் அமெரிக்கருக்குத் தெரியாது. தன் ஆட்சிக்கு உட்பட்டிருந்த இந்தியா, எகிப்து, சூடான், உகாண்டா முதலிய நாடுகளில் வீணுகும் ஏராளமான பருத்திக்கொட்டையிலிருந்து எண்ணெய் வடிக்க முடியுமா என்பதை முதன்முதலாகப்பத்தொன்பதாவது நூற்றுண்டின் ஆரம்பத்தில் பிரிட்டன் ஆராய ஆரம்பித்தது. இதைத் தொடர்ந்து அமெரிக்கா, ஜெர்

மனி, பிரான்ஸ், இத்தாலி போன்ற மற்ற மேல் நாடுகளிலும் ஆராய்ச்சிகள் நடந்தன. இவற்றின் பயனுகப் பருத்திக்கொட்டையிலிருந்து எண்ணெய் வடிக்கும் பல தொழிற்சாலைகள் அந்நாடுகளில் தோன்ற ஆரம்பித்தன. 1834-ல் முதன் முதலாக அமெரிக்காவில் நாட்செஸ் மிஸ் (Natchez Miss) என்னுமிடத்தில் பருத்திக்கொட்டை எண்ணெய் வடிக்கும் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. 1870-ல் இது 26 ஆகவும், 1880-ல் 45 ஆகவும், 1890-ல் 119 ஆகவும், 1900-ல் 357 ஆகவும் பெருகிற்று. தற்சமயம் 700க்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் உள்ளன. உலகிலேயே பருத்திக்கொட்டை எண்ணெய் உற்பத்தியில் இன்று அமெரிக்காவே முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. வருடா வருடம் சுமார் 8 லட்சம் டன் எடையுள்ள பருத்திக்கொட்டை எண்ணெயை வெளி நாடுகளுக்கு அது தற்சமயம் ஏற்றுமதி செய்தும் வருகிறது. மற்ற ஐரோப்பிய நாடுகளைவிட அமெரிக்காவில் இத் தொழில் மிகத் துரிதமாக வளர்ச்சி அடைந்ததற்கு ஒரே முக்கிய காரணம் அந்நாட்டிலேயே வேண்டிய பருத்திக்கொட்டை கிடைத்ததே. மற்ற ஐரோப்பிய நாடுகள் நம்மைப் போன்ற அந்நிய நாடுகளின் கையை எதிர்பார்த்து வாழவேண்டி இருந்தது. நம் நாட்டில் வேண்டிய பருத்திக்கொட்டை கிடைப்பதால் நாம் இத்துறையில் கவனம் செலுத்தினுல் அமெரிக்காவைப்போல் நாமும் துரிதமாக முன்னேற நல்ல வாய்ப்பு இருக்கிறதென்றே கூற வேண்டும்.

எண்ணெய் வடிக்கும் முறைகள்

பருத்திக்கொட்டையிலிருந்து சாதாரணமாக மூன்று வகையாக எண்ணெய் வடிக்கலாம். (1) ஹைட்ராலிக் பிரஸ் முறை (Hydraulic Press) (2) எக்ஸ்பெல்லர் முறை (Expeller) (3) சால்வென்ட் முறை (Solvent extraction). இம் மூன்று முறைகளில் முதல் முறையே மற்ற எல்லா முறைகளையும்விட அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. இரண்டாவது முறையும் நம் நாட்டில் கையாள ஏற்றதே. மூன்ருவது முறை மேல் நாடுகளுக்குத்தான் ஏற்றது. நம் நாட்டுக்கு ஏற்றதல்ல, ஏனெனில் இம்முறைக்குப் பயன்படுத்தப்படும் நெப்தா (Naptha), கார்பன் பை சல்பைடு (Carbon bi sulphide) போன்ற ரசாயனப் பொருள்கள் நம் நாட்டு வெப்பநிலை தாங்காது சீக்கிரம் ஆவியாகப் போய் விடக் கூடியவை.

எண்ணெய் வடித்தல்

பருத்திக்கொட்டையிலிருந்து எண்ணெய் வடிக்குமுன் கொட்டைகளில் ஒட்டிக் கொண்டுள்ள பருத்தி(lint)யை முதன் முதலாக நீக்கவேண்டும். இதற்கு லின்டர்ஸ் (linters) என்னும் ஒருவகை இயந்திரம் இருக்கிறது. இவ் இயந்திரத்தின் உதவியால் 24-மணி நேரத்தில் 16—20 டன் கொட்டைகளைப் பருத்தி நீக்கிச் சுத்தம் செய்யலாம். இப்படிக் கொட்டையிலிருந்து பிரிக்கப்பட்ட பருத்தியெல்லாம் இயந்திரத்தின் அடியிலுள்ள கன்டென்ஸர் (condenser) ஒன்றில் போய்ச் சேரும். அங்கே அது பருத்திச் சுருள்களாக (cotton rolls) சுற்றப்படும். லின்டரிலிருந்து பருத்தி நீக்கி வெளிவரும் கொட்டையை ஹல்லர் (huller) என்னும் மற்ருெரு இயந்திரத்திலிடுவார்கள். இவ் இயந்திரம் உருளை வடிவிலிருக்கும். உள்ளே ஏராளமான கத்திகள் பொருத்தப்பட்டிருக்கும். இதற்குள்ளே மற்ருெரு உருளை இருக்கும் அதிலும் ஏராளமான கத்திகள் பொருத்தப்பட்டிருக்கும். இரண்டு உருளைகளிலும் உள்ள கத்திகள் ஒன்றை ஒன்று எதிர்நோக்கி இருக்கும். இரண்டுக்கும் இடைவெளி 3/16 அங்குலம் தானிருக்கும். இயந்திரத்தை இயக்கும்போது இரண்டு உருளைகளும் நிமிடத்திற்கு 850 சுற்றுக்கள் சுற்றும். ஆகையால் இவ் இயந்திரத்திலிடப்பட்ட பருத்திக் கொட்டையெல்லாம் நுண்ணிய துண்டுகளாக வெட்டப்படும். இப்படி வெட்டப்படும்போது கொட்டையை மூடியுள்ள ஓடும் வெட்டப்படும். இதன் ஓடு பருப்போடு ஒட்டிக்கொண்டிருக்காது. தனியாகவே இருக்கும். ஆகையால் வெட்டப்பட்டவுடன் தனியாக அது மேலேயே தங்கி விடும். பருப்புகள் மாத்திரம் சல்லடைக் கண் போன்ற துவாரங்களின் வழியாகக் கீழே உதிர்ந்துவிடும். ஓடெல்லாம் இயந்திரத்தின் ஓரமாக (Bail) வந்து சேர்ந்துவிடும்.

வெட்டப்பட்ட ஓட்டின் பெரும்பாகம் ஹல்லரிலேயே தனியாகப் பிரிந்துவிடும். ஒரு சிறு பாகம் வெட்டப்பட்ட பருப்போடு ஒட்டிக்கொண்டு கீழே வந்துவிடுவதுண்டு. இப்படி வந்த ஓடுகளைச் சிப்டர்ஸ் (Sifters) என்னும் சல்லடையில் இட்டுத் தனியாகப் பிரித்துவிட்டுச் சுத்தமான பருப்பை அரைக்கும் இயந்திரங்களில் (crushers) கொடுத்து நன்ருக அரைப்பார்கள். இப்படி அரைத்து, பசைபோலாக்கப்பட்ட பருப்பை நீராவிக்குழாய்கள் பொருத்

திய பெரிய அண்டாக்களில் (**Steam-jacketed Kettles**) போட்டு 20-30 நிமிடம் வேக வைப்பார்கள். இப்படி வேக வைப்பதால் பருப்பிலுள்ள நீர் அம்சம் குறைவுபடுவதோடு எண்ணெய் அம்சமும் பொங்கிக் கசிய ஆரம்பிக்கும். இந்நிலையில் பருப்புப் பசையை எடுத்து உருண்டைகளாக உருட்டி இதற் கென்றுள்ள பிரத்தியேகமான மயிர் துணி களில் (**Hair cloth**) வைத்து மூடி ஹைட் ராலிக் பிரஸ்களின் உதவியால் சதுர அங் குலத்துக்கு 3000–4000 ராத்தல் அழுத்தம் (**Pressure**) பிரயோகிப்பார்கள். அப்பொழுது எண்ணெய் தனியாக வடிந்து விடும். வடிந்த எண்ணெயோடு காஸ்டிக் சோடா கலப்பார் கள். இப்படிக் கலந்தால் அசுத்தங்கள் எல்லாம் தனியாகப் பிரிந்து அடியில் வந்து தங்கிவிடும். பிறகு பில்டர் பிரஸ் (**filter Press**) களிலிட்டு எண்ணெயை வடிகட்டி எடுத்துக் கொள்வார்கள். இவ்விதம் எண் ணெய் வடிக்கும் முறைக்கே ஹைட்ராலிக் முறை எனப் பெயர்.

எண்ணெயின் உபயோகம்

எகிப்து நாட்டுப் பருத்திக்கொட்டையில் 25% அமெரிக்கப் பருத்திக்கொட்டை 20% நம் நாட்டுப் பருத்திக்கொட்டையில் 18% எண்ணெய்ச் சத்து அடங்கி இருக்கிறது. 1000 ராத்தல் பருத்திக்கொட்டையிலிருந்து சுமார் 20 காலன் (1 காலன் = 2·5 படி) எண்ணெய் கிடைக்கும். இவ் எண்ணெயைக் குளிரச் செய்தால் அதிலிருந்து லேசான மஞ்சள் நிறமுள்ள ஒருவகைக் கொழுப்பு கிடைக்கும். இக் கொழுப்புக்குப் பருத்திக் கொட்டைக் கொழுப்பு அல்லது தாவரக் கொழுப்பு (**Cotton-seed fat or Vegetable stearine**) எனப்பெயர். இது செயற்கை வெண்ணெய், மெழுகுவர்த்தி, சோப்பு, செயற்கைத்தோல், இன்சுலேடர், பெயிண்ட் கள், சாயங்கள், வனஸ்பதி நெய் முதலியவை தயாரிக்கப் பயன்படுகிறது.

கழிவுகளின் உபயோகம்

இதில் கிடைக்கும் கழிவுப் பொருள்களில் முக்கியமானவை மூன்றே. 1. பருத்தி 2. புண்ணாக்கு 3. ஓடு. இவற்றில் பருத்தி பாட்டிங் காட்டன் (**Batting Cotton**) செய் யப் பயன்படுகிறது. புண்ணாக்கு நிலத்திற்கு உரமாகவும், கால் நடைகளுக்கு உணவாக வும் பயன்படுகிறது. ஓடு உயர் ரக பேப்பர் செய்யப் பயன்படுகிறது. சமீபகாலத்தில் பருத்தியிலிருந்து செயற்கைப்பட்டு, பெய்ண்ட் முதலியவையும் தயாரிக்க ஆரம்பித் திருக்கிறார்கள். பருத்திக்கொட்டையின் உப யோகங்களைச் சுலபமாக ஓரேபார்வையில் தெரிந்துகொள்ளுவதற்கு வசதியாக அவற் றைக் கீழே தொகுத்துக் கொடுத்திருக்கிறேன்.



கால்நடைகளுக்கு

நம் நாட்டில் கால்நடைகளுக்கு முக்கியமாக உழவுமாடு, வண்டிமாடு, செக்கு மாடு, கறவை மாடு முதலியவைகளுக்குப் பருத்திக்கொட்டை வைப்பது நீண்டகாலமாக ஒரு வழக்கமாக இருந்துவருகிறது. ஆனால் சமீபகால ஆராய்ச்சியின் பயனாகக் கால்நடைகளுக்குப் பருத்திக் கொட்டையைத் தீனியாகக் கொடுப்பதைவிட, பருத்திக் கொட்டைப் புண்ணாக்கைத் தீனியாகக் கொடுப்பது சிலாக்கியம் எனத் தெரியவந்திருக்கிறது. ஏனெனில் பருத்திக்கொட்டையைப்போல் பருத்திக்கொட்டைப் புண்ணாக்கில் சுமார் இரண்டு மடங்கு சத்து அடங்கி இருக்கிறது. மற்றப் புண்ணாக்குகளைவிடப் பருத்திக்கொட்டைப் புண்ணாக்கு சத்து மிகுந்ததாக இருக்கிறது. மேலும் பருத்திக் கொட்டையிலிருந்து அதிக உபயோககரமான எண்ணெயும் மற்றப் பொருள்களும் பிரித்தெடுக்கப்பட்டுவிடுவதால் கொட்டையைவிடப் புண்ணாக்கு மலிவானதும் ஆகும். இதுமட்டுமல்ல. நாட்டுக்குப் புதிய வருவாயும், பலருக்குப் பிழைக்க புதிய தொழிலும், குடியானவர்களுக்குப் புதிய வருமானம் ஒன்றும் கிட்ட இதனால் வழியும் பிறக்கும். பருத்திக் கொட்டைப் புண்ணாக்கோடு மற்றக் கால்நடைத் தீனிகளை ஒப்பிட்டுப் பார்த்து, தராதரத்தை அறிந்துகொள்ள வசதியாகக் கீழே சில விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

தீனி	புரோடீன்	கொழுப்பு	கார்போஹைட்ரேட்	சத்துயுனிட்
(1) வைக்கோல்.........	2·58%	——	29·74%	36
(2) எள்ளுப்புண்ணாக்கு...	27·50%	11·25%	16·66%	114
(3) பருத்திக்கொட்டை	11·77%	16·22%	15·57%	86
(4) ,, புண்ணாக்கு...	44·09%	14·32%	20·85%	166

(புரோடீன், கொழுப்பு இரண்டு சத்தின் அளவையும் கூட்டி 2·5 ஆல் பெருக்கி அதோடு கார்போஹைட்ரேட் சத்து அளவைக் கூட்டினால் சத்து யுனிட் கிடைக்கும்.

நம் நாட்டில்

நம் நாட்டில் பஞ்சாப், மத்யபிரதேசம் முதலிய பகுதிகளில் இப்பொழுது பருத்திக் கொட்டை எண்ணெய் மில்கள் சில தொழில் படத் தொடங்கியுள்ளன. தமிழ் நாட்டில் கோவை, மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் இத்தொழில் வளர நல்ல வாய்ப்பு உண்டு. பருத்தி அரைக்கும் தொழிற்சாலைகள் (Ginning factories) வைத்து நடத்துபவர்கள் இத் தொழிலைச் சுலபமாக மேற்கொள்ளலாம். தினசரி ஒரு டன் விதை ஆட்டக்கூடிய மில் நடத்தவேண்டிய இயந்திர சாதனங்கள் வாங்க, சுமார் 500 டாலர் (ஒரு டாலர் சுமார் நாலேமுக்கால் ரூபாய்) ஆகும். 30-40 டன் ஆட்டக்கூடியதற்குச் சுமார் 16000 டாலர் ஆகும். நம் நாட்டுத் தேவைக்கு சிறு மில்களே போதுமானவை. உள் நாட்டில் தற்சமயம் சோப்பு, வனஸ்பதி, பெயின்ட், சாயம் போன்ற தொழில்கள் நாளுக்குநாள் வளர்ச்சியடைந்துவருகின்றன. ஆகையால் இவ் எண்ணெய்க்குப் போதுமான உள்நாட்டுக் கிராக்கியும் உண்டு. வெளி நாட்டுக் கிராக்கியும் உண்டு. ஆகையால் நாமும் நம் அரசாங்கமும் இத்துறையில் கவனம் செலுத்தினால் நாடும் நாமும் நலமுற இது பெரிதும் உதவக்கூடும். எண்ணெய் வித்துகளை இன்னும் அதிகமாகப் பயிரிட முயற்சிகள் மேற்கொள்ள ஆகும் செலவும் சிரமமும்கூடக் குறையும். ●

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள்நாடு			மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு		
	ரு.	அ.	பை.	ரு.	அ.	பை.
ஒரு வருஷம்	6	0	0	7	8	0
அரை வருஷம்	3	0	0	3	12	0
தனிப் பிரதி	0	8	0	0	10	0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாசிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

சம்மானம்

மேகவண்ணன்

துங்கபத்திரை நதி மிக அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது. காலை வெய்யிலின் கைவர ஒளி துங்கபத்திரையையும், விஜய நகரத்தின் மாட மாளிகைகளையும் அழகுக்கு அழகு செய்து கொண்டிருந்தது.

வெகு தூரத்தே விரூபாக்ஷர் கோயிலில் காலைப் பூஜைக்கான கண்டா மணி ஒலித்துக் கொண்டிருந்தது. அம்மணி எழுப்பிய ஓம், ஓம் என்ற பிரணவ நாதம் அந்த அதிகாலைத் தென்றலில் மிதந்து வந்தது.

நகரத்தின் ராஜ வீதிகளில் போவோரும் வருவோருமாக, அந்த அதிகாலை நேரத்திலேயே மிக்க சுறுசுறுப்பாகக் காட்சியளித்தது. விஜய நகரம்.

நிழல் தரும் மரங்களை இரு ஓரமும் கொண்ட ராஜ வீதிகளில் சாரை சாரையாக ஜனங்கள் சென்றுகொண்டிருந்தார்கள். வரிசைவரிசையாகப் பல்லக்குகள் போய்க் கொண்டிருந்தன. அந்தப் பல்லக்குகளில் விஜய நகரத்தின் பிரபல பெரும் வணிகர்கள் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். குதிரைகள் அணி அணியாகச் சென்றன. அவ்வப்போது சிறு சிறு மலைக் குன்றுகள் நகருவதைப்போல யானைகளும் சென்று கொண்டிருந்தன.

சாதாரண நாட்களில் காணப்படாத இந்தச் சுறுசுறுப்பு விஜய நகரத்தில் அன்று ஏற்படக் காரணம் நகரில் சந்தை கூடியதுதான்.

விஜயநகரத்தின் சந்தை அந்தக் காலத்தில் மிகவும் பிரசித்திபெற்றது. பொன்னும் மணியும் மலைமலையாகக் குவித்துவைத்து அங்கே வியாபாரம் செய்வர். யானை முதல் பானை வரையிலும் அங்கு எல்லாப் பொருள்களையும் விற்கவோ, வாங்கவோ முடியும்.

அப்பொழுது விஜயநகர சாம்ராஜ்யத்தைக் கிருஷ்ணதேவராயர் அரசாண்டு வந்தார். இந்தியாவில் மட்டுமன்றி வெளி நாடுகள் சிலவற்றிலும் அவரது ஆட்சியின் நேர்மையும் திறமையும் பிரபலமாகி இருந்தது. ஆகவே வெளிநாடுகளிலிருந்து பல வியாபாரிகளும் கலைஞர்களும் அவ்வப்போது விஜயநகரத்திற்கு வந்து போவதுண்டு. குறிப்பாக இம் மாதிரி சந்தை கூடும் சமயங்களில் அவர்களது நடமாட்டம் சற்று அதிகமாகவே இருக்கும்.

சூரியன் உதயமாகி இரண்டு நாழிகை நேரம் சென்றிருக்கும், அரண்மனையில் கிருஷ்ணதேவராயர் ஸ்நானம் செய்து பூஜையை முடித்துவிட்டு வந்திருந்தார்.

“அப்பா!...” என்று கூப்பிட்டுக்கொண்டே அங்கு ஓடோடியும் வந்தாள் மோகனாங்கி. கிருஷ்ணதேவராயர் எப்படிக் கல்வி கேள்விகளில் வல்லவராக இருந்தாரோ அதே போல் அவரது மகள் மோகனாங்கியும் இத்துறைகளில் சிறந்து விளங்கினாள். அவளது தந்தையைப்போலவே கலைவிஷயங்களில் அவளுக்கு ஒரு தனிப் பற்றுதல் இருந்துவந்தது. அவளே கவிதைகள் இயற்றும் ஆற்றல் படைத்தவள். அவளது கவிதைகள் அரசாங்க சபையில் அரங்கேற்றப்பட்டிருக்கின்றன.

நகரச்சந்தையில் யாரேனும் புதிய கலைஞர்கள் வந்திருப்பார்கள்; அவர்களது ஓவியங்களோ, சிற்பங்களோ சந்தையில் இடம்பெற்றிருக்கலாம் ஏன் சில கவிஞர்கள்கூட அங்கு வருவதுண்டே. ஆகவே இவர்களையெல்லாம் சந்திக்க வேண்டும் என்ற ஆவல் கலையார்வம் கொண்ட மோகனாங்கியின் உள்ளத்தில் எழுந்தது.

மோகனாங்கியின் குரலைக் கேட்டு, கிருஷ்ண தேவராயர் திரும்பிப் பார்த்தார். ‘என்னம்மா. ஏதேனும் புதுச் செய்தி உண்டா?’ என்று அன்போடு கேட்டார்.

“செய்தி ஒன்றும் இல்லையப்பா, நமது நகரச் சந்தை இன்று கூடியிருக்கிறது. அங்குப்போய் விட்டு வரலாம் என்ற ஆசை எழுந்தது. உங்கள் அனுமதிக்காகத்தான்.........” என்று இழுத்தவாறே கண்களைச் சிமிட்டினாள் மோகனாங்கி.

“சந்தையில் அப்படியொன்றும் விசேஷமிருப்பதாகத் தெரியவில்லையே!”

“இல்லையப்பா! சந்தைக்குப் புதுச் சிற்பிகள் யாரேனும் அயல்நாடுகளிலிருந்து வந்திருக்கலாம். கவிஞர்கள், ஓவியர்கள் ஆகியோர் அங்கு வருவதற்கும் இடமிருக்கிறதே. அதனால்தான் அங்குப்போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்று நினைத்தேன்......” என்றாள் மோகனாங்கி.

தன் குமாரியின் கலை ஆர்வத்தை உணர்ந்த சக்ரவர்த்தி அன்போடு அனுமதி தந்தார். மறுகணம் மான்குட்டிபோலத் துள்ளிக் குதித்துக்கொண்டு ஓடினாள் மோகனாங்கி.

கால் நாழிகை நேரம் சென்றிருக்கும். விஜய நகரத்தின் சந்தையை நோக்கிச் செல்லும் விஸ்தாரமான ராஜபாட்டையில் இளவரசி

மோகனாங்கியின் பல்லக்கு அன்னம்போலத் தவழ்ந்து சென்று கொண்டிருந்தது. அடிக்கொருதரம் பல்லக்கின் திரைச் சீலையைத் தூக்கித் தெருவில் போவோரையும் வருவோரையும் பார்த்துக்கொண்டே வந்தாள் மோகனாங்கி. தன் பிரயாண வழியிலேயே யாரேனும் கலைஞர்கள் தென்படுவார்களோ என்ற எண்ணத்தினாலேயே மோகனாங்கி அவ்வாறு செய்து வந்தாள். அப்படி அவள் திரைச்சீலையைத் தூக்கிப் பார்த்த ஒவ்வொரு தடவையும் சாலையிலிருந்தவர்கள் இளவரசிக்குத் தலை வணங்கி மரியாதை செய்தனர். இளவரசியும் புன்னகையுடன் பதில் மரியாதை செய்து வந்தாள்.

துங்கபத்திரையின் தெற்குப் புறமாகத்தான் விஜய நகரத்தின் அரண்மனையும், மற்றும் பிரதான ராஜ வீதிகளும் இருந்தன. வடக்குப் புறம் விட்டலராயர் கோயிலும், யா(ஆ)னை குண்டம் கோட்டையும் இருந்தன. சந்தை நதிக் கரையின் வடக்குப் புறத்தே அமைந்திருக்கும் பெரிய மைதானத்தில்தான் நடப்பது வழக்கம்.

அந்தப் பிரம்மாண்டமான சந்தையின் மத்தியில் நெடிதுயர்ந்து வளர்ந்து நின்றது ஒரு அரசமரம். அந்த அரசமரத்தைச் சுற்றி, செம் மண்ணினால் மேடை ஒன்று எழுப்பப்பட்டிருந்தது. சந்தைக்கு வெளியூர்களிலிருந்து வந்திருந்த வியாபாரிகள் அக்கு உட்கார்ந்து இளைப் பாறிக்கொண்டிருந்தார்கள். வியாபாரத்தை முடித்தவர்கள் பணத்தை எண்ணி மூட்டை கட்டிக்கொண்டிருந்தனர்.

ஆனால் இவர்களை எண்ணிக்கையில் மிஞ்சக் கூடியஅளவுக்கு மேடையின் தெற்குப் புறத்தில் கூட்டம் கூடியிருந்தது. அந்தக் கூட்டத்திடையே ஆழ்ந்த அமைதி நிலவிவந்தது. அவர்களெல்லோருக்கும் நடு நாயகமாக அங்கே ஒரு வாலிபன் நின்றிருந்தான். அவன் கையில் சில ஏட்டுச்சுவடிகள் இருந்தன. அவற்றைப் பிரித்து வைத்துக்கொண்டு தனது மதுரமான குரலில் அந்தச் சுவடிகளில் காணப் பட்ட கவிதைகளைப் பாடிவந்தான் அந்த வாலிபன். அவனது மதுரக் குரலில் மகுடி முன் நின்ற நாகத்தைப்போல் அசைவற்றுக் கிடந்தார்கள் அங்குக் கூடியிருந்தவர்கள். ரஸிகத் தன்மையில் ஒருபடி முன்னேறியவர்கள் தலையை ஆட்டிப் பலமாக ரஸித்து வந்தார்கள்.

அந்த வாலிபனின் இடது கரத்தில் மூன்று ஏடுகள் காணப்பட்டன. வலது கையில் மற்றொரு ஏடு காணப்பட்டது. அதைப் பார்த்துப் பாடிக்கொண்டிருந்தான் அவன்.

அப்போதுதான் இளவரசியின் பல்லக்கு அங்கே வந்தது. பல்லக்கு மெதுவாகவே சென்று கொண்டிருந்தது. பல்லக்கின் உள்ளேயிருந்த ராணிக்கு அவையெல்லாம் தெரிந்ததுடன், அந்த வாலிபன் பாடிக்கொண்டிருந்ததும் கேட்டது. அவனது இனிய குரலிருக்கட்டும்; எத்தகைய அர்த்தபுஷ்டியான பாடல் அது! 'தான் சந்தையைச் சுற்றி வந்ததெல்லாம் விரயமாகிவிட்டதே!' என்று எண்ணிக் கொண்டு சோர்வுடன் அரண்மனைக்குத் திரும்பிக்கொண்டிருந்த மோகனாங்கிக்கு அந்த வாலிபனின் பாடல்கள் ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கின. மெள்ளத் திரைச் சீலையைத் தூக்கி எட்டிப் பார்த்தாள் இளவரசி. அந்த வாலிபனின் பாட்டைக்கேட்டு மது உண்ட வண்டென மயங்கிக் கிடந்த மக்கள் கூட்டமும் அவள் கண்களுக்குத் தெரிந்தது.

பல்லக்கைக் கீழே இறக்கச் சொல்லிவிட்டு, மேடையை நோக்கிச் சென்றாள் மோகனாங்கி. அப்பொழுதுதான் வாலிபன் அந்தப் பாட்டைப் பாடி முடித்திருந்தான்.

இளவரசியின் வருகை கண்டு கூட்டத்தினர் எழுந்து நின்று வணங்கினர். அவர்களுக்குப் பதில் வணக்கம் செய்யக்கூட அவளுக்குத் தோன்றவில்லை. அவளது மனம் அந்தப் பொருள் பொதிந்த பாடலிலேயே ஆழ்ந்து கிடந்தது.

வாலிபனிடம் நான்கு பாடல்கள்தாம் இருந்தன. அதுவும் கவியொருவர் தன்னிடம் கொடுத்துச் சந்தையில் பாடச்சொன்னதாகச் சொன்னான் அவன். கவியின் இருப்பிடத்தைத் தெரிந்துகொண்டு, அந்த நான்கு பாடல்களுக்கும் நாலாயிரம் வெள்ளியைக்கொடுத்துவிட்டு, அவற்றை வாங்கிக்கொண்டாள் இளவரசி. ஆரம்பத்திலிருந்த சோர்வு மறைந்து, அரண்மனைக்குத் திரும்புகையில் இரட்டிப்பு மகிழ்ச்சி இளவரசியிடம் காணப்பட்டது.

பல்லக்கு அரண்மனையைச் சேர்ந்ததும் ஓடோடியும் தந்தையிடம் சென்றாள் மோகனாங்கி. பகல்போஜனம் அருந்துவதற்காக வேதியர், மந்திரிகள் குழாமுடன் தயாராக இருந்தார் கிருஷ்ணதேவராயர்.

சந்தையிலிருந்து திரும்பி வந்த மோகனாங்கி, கிருஷ்ணதேவராயரிடம் அந்த நான்கு ஏடுகளையும் கொடுத்தாள்.

"அப்பா! சந்தையில் ஒரு வாலிபன் இவற்றை வைத்துப் பாடிக்கொண்டிருந்தான். அப்பா! கவிதைகள் எவ்வளவு அழகாகவும் அர்த்தபுஷ்டியுடனும் புனையப்பட்டிருக்கின்றன தெரியுமா? இந்தக் கவிதைகளை இயற்றியவர் நமது அரண்மனை வடக்குப் புறத்தே இருக்கிறாராம். அப்பா! அவரை அழைத்துவரச் சொல்லுங்கள்" என்று சிறுகுழந்தையைப்போல் தந்தையிடம் கேட்டாள் மோகனாங்கி. அவள் குரலில் ஆர்வம் ததும்பியது.

"சரி மோகனாங்கி! ஆளை இப்பொழுதே அனுப்புகிறேன்" என்றார் சக்ரவர்த்தி.

* * *

மாலை சூரியனின் பொன்னொளி விஜயநகரத்திற்குத் தங்கமுலாம் பூசிக்கொண்டிருந்தது.

அரண்மனையின் மந்திராலோசனை அறையில் கிருஷ்ணதேவராயரும், மற்றும் சில முக்கியமான மந்திரிகளும் அமர்ந்திருந்தார்கள். அவர்களுடன் மோகனாங்கியும் இருந்தாள். அடிக்கொரு தடவை அறையை விட்டு வெளியே வந்து அரண்மனையின் பிரதான வாயிலை எட்டிப் பார்த்து வந்தாள் அவள். ஆம், கவியின் வரவைத்தான் அவள் அப்படி ஆவலுடன் எதிர்பார்த்தாள்.

ஆனால் அவளது விருப்பத்திற்கு நேர் மாறாகக் கவியை அழைத்துவரச் சென்ற சேவகர்கள் சோர்ந்த முகத்துடன் திரும்பி வந்துகொண்டிருந்தார்கள்.

கவியை ஆவலுடன் எதிர்பார்த்த மோகனாங்கிக்குச் சேவகர்கள் மட்டுமே திரும்பி வந்தது பெரிய ஏமாற்றத்தை உண்டாக்கியது. அவளுக்கு ஏற்பட்ட துயரம் சொல்லி முடியாது.

கிருஷ்ண தேவராயர் தம் இருப்பிடத்தை விட்டு எழுந்து வந்தார். மோகனாங்கி சொன்னதால் மட்டுமல்ல; கவிதைகளின் உயர்ந்த கருத்தும் நடையும் அந்தக் கவியின் மீது சக்ரவர்த்திக்கு விசேஷ மதிப்பேற்படச் செய்திருந்தன.

கவியை அழைத்துவரச் சென்ற சேவகர்கள் "கவி ஸ்ரீரங்கப்பட்டணம் போய்விட்டதாக அவரது வீட்டில் தெரிவித்தார்கள்" என்று சொன்னபோது மோகனாங்கிக்குப் பூவுலகமே சுழல்வது போலிருந்தது.

அடுத்து, கவியைத் தேடிப் பிடித்து வர ஸ்ரீரங்கப்பட்டணத்திற்கு ஆட்கள் பறந்தனர்.

இம்முறை நமது முயற்சி பலித்துவிடும் என்று ஆனந்தத்தில் ஆழ்ந்திருந்தாள் மோகனாங்கி. அவள் எதிர்பார்த்ததற்கு இம்முறை ஏமாற்றம் ஏற்படவில்லை.

ஒட்டி உலர்ந்த உதடும், சுருங்கிய தோளும், அதள பாதாளத்தில் மங்கிய ஒளி வீசும் கண்களும், தளர் நடையும் கொண்ட ஒரு உருவத்தை ஸ்ரீரங்கப்பட்டணத்திற்குச் சென்ற சேவகர்கள் அழைத்து வந்தார்கள். அவர் உடலிலே அங்கும் இங்குமாகக் கிழிந்துபோய், அழுக்கடைந்த பழைய ஆடைகள் ஒட்டிக் கொண்டிருந்தன.

அந்த நொந்த உருவத்தைப் பார்த்த மோகனாங்கியின் கண்களிலே ரத்தக்கண்ணீர் வடிந்தது. கிருஷ்ணதேவராயர் எழுந்து ஓடோடியும் வந்தார்.

"வணக்கம் பிரபு!" என்று ஆயாசத்துடன் சொல்லிக்கொண்டே அருகிலிருந்த ஆசனத்தில் அமர்ந்தார் கவி.

மோகனாங்கி சக்ரவர்த்தியின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். கவி சொல்லப்போவதை ஆவலுடன் கேட்கத் தயாராக இருந்தாள் அவள்.

"கவிஞரே! தங்கள் கவிதைகளில் சிலவற்றை மோகனாங்கி என்னிடம் கொண்டு வந்தாள். சந்தையில் ஒரு வாலிபன் இவற்றைப் பார்த்துப் பாடிக்கொண்டிருந்தானும்" என்று சொல்லிவிட்டு, தம் கையிலிருந்த நான்கு ஏடுகளையும் கவிஞரிடம் நீட்டினார் கிருஷ்ண தேவராயர்.

நடுங்கும் கைகளுடன் அவற்றை வாங்கிக் கொண்டு தம் கண்கள் அருகே கொண்டுபோய், கூர்ந்துபார்த்தார் கவி. அவரது மங்கிய கண்களிலே இப்பொழுது ஒரு புது ஒளி!

"பிரபு! இந்தக் கவிதைகளைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? "என்று ஆவலோடு கேட்டார் கவி.

"நான் கேட்ட அற்புதக் கவிதைகளின் தரத்திலே இவையும் இருக்கின்றன. இல்லாவிட்டால் என் மோகனாங்கி இவற்றுக்கு நாலாயிரம் வெள்ளி கொடுத்திருப்பாளா?" என்றார் சக்ரவர்த்தி.

"ஆ! நாலாயிரம் வெள்ளிகளா?" என்றார் கவி.

"ஏன், கவிஞரே! சக்ரவர்த்திக்கு கவிதையின் நயம் தெரிந்து மதிப்புப் போடத் தெரியாது என்ற அர்த்தத்தில் கேட்கிறீரா, இல்லை கலைஞர் விஷயத்தில் பஞ்சப்பாட்டு பாடுபவர் அவர் என்ற எண்ணத்திலா?" என்று கேட்டாள் மோகனாங்கி!

"இல்லை இளவரசி! என் கவிதைக்கும் நாலாயிரம் வெள்ளிகள் கிடைத்தனவா என்ற ஆச்சர்யத்தினாலேயே இப்படிக் கேட்டேன். ஆஹா! என் பாக்கியமே பாக்கியம்!" என்றார் கவி.

"என்ன, இப்படிச் சொல்லி விட்டீர்கள்?" என்று ஆச்சர்யத்தோடு கேட்டார் சக்ரவர்த்தி.

"ஆம், பிரபு! இந்தக் கவிதைகளைத் தங்கள் சமுகத்திற்குக் கொண்டுவர நான் எவ்வளவு முயற்சித்தேன் தெரியுமா? அப்பொழுதெல்லாம் என் கவிதை பூராவுக்குமே இவ்வளவு பெரிய தொகை கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இப்பொழுது எனது கவிதை ஒன்றுக்கு ஆயிரம் வெள்ளிகள் கிடைத்திருக்கிறது என்பதை அறியும்போது ஆச்சர்யமே ஏற்பட்டது" என்றார் கவி.

"என்னைப் பார்க்க முயற்சி செய்தீரா? ஏன் தகவல் எனக்குக் கிடைக்கவில்லை" என்று கேட்டு, மோகனாங்கியின் பக்கமாகத் திரும்பிப் பார்த்தார் சக்ரவர்த்தி.

கவியின் பசையற்ற உதடுகளில் ஒரு வறண்ட புன்னகை நெளிந்தோடியது.

"சக்ரவர்த்தி! அப்பொழுது சாம்ராஜ்ய விஷயமாகத் தாங்கள் மும்முரமாக இருந்தீர்கள். எனக்குச் சமுகத்தின் பேட்டி சமீபத்தில் கிடைக்காது என்று சொல்லி விட்டார்கள்." என்றார் கவி.

சக்ரவர்த்தி தம் உதட்டைக் கடித்துக்கொண்டார். என்ன துர்ப்பாக்கியம் கவிக்கு!

"பிரபு! என் வறுமைக்கு வழிபிறக்கும் என்று சமூகத்திடம் வந்தேன். ஆனால் சந்தர்ப்பம்தான் இடையூறு செய்துவிட்டது"

"அதனால் என்ன கவிஞரே! நீங்கள் எழுதியிருக்கும் கவிதை பூராவையும் நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். மோகனாங்கியின் தீர்ப்புப் படியே ஒவ்வொரு கவிதைக்கும் ஆயிரம் வெள்ளிகள் தருகிறேன்" என்று பெருமிதத்தோடு கூறினார் கிருஷ்ண தேவராயர்.

"அந்தப் பாக்கியம் இப்போது எனக்கில்லை சக்ரவர்த்தி!" என்று கண்களில் நீர் பெருக, நாத் தழுதழுக்கக் கூறினார் கவி.

"என்ன! ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று பரபரப்புடன் கேட்டார் கிருஷ்ண தேவராயர். மோகனாங்கி கவி என்ன பதில் சொல்லப்போகிறாரோ என்று அவர் உதட்டையே கவனித்து வந்தாள்.

"என் வறுமைக்கு வழி காட்டமாட்டாயா ரங்கநாதா? அதற்கு வேண்டுமானால் இதோ என் காணிக்கையாக இக்கவிதைகளை உனக்கு அர்ப்பணித்துவிடுகிறேன் என்று ஸ்ரீரங்கம் வாழ் என் ரங்கநாதனுக்கு அவற்றை அர்ப்பணித்துவிட்டேன்" என்று உணர்ச்சி வேகத்தில் கூறி நிறுத்தினார் கவி.

கால் நாழிகை நேரம் அந்த இடத்தில் ஒரே மௌனம் குடிகொண்டிருந்தது.

சக்ரவர்த்தி மெதுவாகப் பேசஆரம்பித்தார்.

"கவிஞரே! ரங்கநாதன் உங்கள் வறுமையைப் போக்கிவிட்டான். உங்கள் கவிதைகளை ரங்கநாதன் ஏற்றுக்கொண்டு விட்டான். உங்கள் வறுமையைப் போக்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டுவிட்டேன்." என்று சக்ரவர்த்தி சொன்னபோது கவியின் கண்களிலே ஆனந்தக் கண்ணீர் வழிந்தோடியது.

கவிக்கு மட்டுமா ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று? இல்லை, கிருஷ்ணதேவராயரின் மகளும், கலையை ரஸிக்கும் மகத்தான பேறுபெற்றவளுமான அந்த மோகனாங்கிக்குக்கூடத்தான் ஆனந்த பாஷ்பம் பெருக்கெடுத்தோடியது!

அந்தக் கவியின் பாடல் தொகுப்புத்தான் இன்றையதினம் தெலுங்கு இலக்கியத்தின் தலைசிறந்தவைகளுள் ஒன்றான 'கவி கர்ணரஸாயனம்' என்பதாகும்! ●

SANKAR IC BRAND

சங்கர் பிராண்ட்

போர்ட்லண்ட் ஸிமெண்ட்

திடத்திலும் தரத்திலும் தேர்ந்தது

உறுதியும், அழகும் அமைந்த கட்டிட திட்டங்களுக்கு இன்றியமையாதது.

தயாரிப்பவர்:

இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:-
11/12, ஸெகண்ட் லைன்பீச்,
மதராஸ்.

தொழிற்சாலை:-
சங்கர் நகர்,
திருநெல்வேலி ஜில்லா.

நாடெங்கும் IC ஸ்டாகிஸ்டுகள் மூலம் வினியோகிக்கப்படுகிறது.

சீக்கிரமே நுரையும் ஸன்லைட் அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்யும்

"வாத்தியார் அம்மாள் என் சுத்தமான தோற்றத்தை புகழ்கிருள். என் தாய் என் பிராக்குகளை ஸன்லைட் சோப்பினுல் பளிச் சென்று வெண்மையாக சலவை செய்வதுதான் இதற்குக்காரணம்."

"என் வகுப்பில் நான்தான் அதிக சோபையுடன் விளங்குகிறேன். என் கலர் பிராக்கை ஸன்லைட் சோப் எவ்வளவு பிரகாசமாக சலவை செய்திருக்கிறதென்று பாருங்கள்!"

ஸன்லைட் சோப்

துணிகளைக்காப்பாற்றுகிறது, சிரமத்தைக் குறைக்கிறது, பணத்தை மிச்சப்படுத்துகிறது

S. 219-X52 TM

காலம் தோற்றது

ஜெயகாந்தன்

வைகை நதி நிலவொளியில் பளபளக்கிறது! அதன் சலசலப்பு, மனிதர்களின் அவல வாழ்க்கையை எண்ணி, தனக்குள்ளே சலிப்புடன் முணுமுணுத்துக்கொள்வதுபோல் இருக்கிறது.

கரையோரத்தில் தென்னை மரத்தின் கீற்றுகள் மினுமினுக்கின்றன! நிலவு, ஒளி பொங்கி வழிகிறது!

வட்டவடிவ நிலாவுக்குச் சற்று கீழிறங்கி, கீழ் வானத்தில் அல்ல, கொஞ்சம் மேலே ஒரு தங்கப் பாறை! அதைச் சுற்றிக் கோலம்போட்டது போல் தாரகைப் புள்ளிகள்! அந்தத் தங்கப் பாறை—மேகத்திட்டு—லட்சியங்கள் சிதைவதைப் போல, விரிகிறது, வியாபிக்கிறது, கரைகிறது, மறைகிறது!

ஆற்று நீரைக் கடந்து, மணலில் நிழல்போல் ஒரு உருவம் அசைகிறது!

ஒரு கிழவர்!

கைத்தடியை மணலில் ஊன்றிக்கொண்டு நடந்து செல்கிறார். அவர் கையில் ஒரு மல்லிகைச் சரம்! ஊதுவத்திகள்...

மல்லிகையின் மணம் அவரைப் போதையில் ஆழ்த்துகிறது!

அவர் போகிறார்!

இப்பொழுது அவர் நிற்கும் இடம் இடுகாடு! அவரைச் சுற்றிக் கல்லறைகள்! யுகயுகாந்தரகாலமாக மனிதவர்க்கம் விழுந்து விழுந்து அடைக்க முடியாத மரணத்தின் பயங்கர வாய்...

அதில் முளைத்திருக்கும் பற்களா, இந்தச் சமாதிகள்?

அதோ!

அந்தக் கிழவர், தம் கைத்தடியைக் கீழே வைத்துவிட்டு, ஒரு சமாதியின்மீது மல்லிகை மலர்களைத் தூவுகிறார்! அதிலுள்ள சிலுவையின் மீது மல்லிகைச் சரத்தைச் சாத்துகிறார்......காற்றில் அது அசைந்தாடி மணம் பரப்புகிறது!

ஊதுவத்தி துயரப் புகையைக் கக்கி, சாம்பலை உதிர்க்கிறது! மல்லிகையின் மணமும், ஊதுவத்தியின் புகைச்சலும் சேர்ந்து அங்கே ஒரு துர்க்கந்தம் வீசுகிறது!

அந்தச் சமாதியில் பதிக்கப்பட்டிருக்கும் சலவைக் கல்லை அக்கிழவரின் சுருக்கம் விழுந்த கரங்கள் தடவுகின்றன.

அவர் உதடுகள் மெள்ள அசைகின்றன:...

“வைலட் ராணி...

பிறப்பு ஜூலை இருபத்தியேழு 1897.

மறைவு. டிசம்பர் இருபத்தெட்டு, 1914

அவர் கண்களில் கண்ணீர் வழிந்தது...

கல்லறைக்கு முன்பு மண்டியிட்டு வணங்கினர்...

தோளில் கிடந்த பையிலிருந்து பைபிளை எடுத்துக் கைகளில் பிரித்துவைத்துக்கொண்டு, வானைப்பார்த்து ஏதோ புலம்பினர்...

மீண்டும் அவர் சிரம் கவிழ்ந்தது...

முணுமுணுப்பு...

ஜபம் முடிந்தது!

கல்லறைக்கு அருகே கிடந்த ஒரு கருங்கற் பாறையின் மீது அமர்ந்தார்...

கல்லறைக்கருகே வளர்ந்திருந்த பன்னீர் மரம் தன் மலர்களை, கல்லறையின் மீதும், அந்தக் கிழவர் மீதும் வர்ஷித்தது! காற்று, மெல்லக் கனிவாய் வீசியது!

மெல்லிய பூங்கரம் தன்னைத் தழுவுவது போல் அவருக்குப் பிரமை! அவர் உடல் முழுதும் ரோமாஞ்சலி செய்கிறது!

சிலுவையில் ஊசலாடும் மல்லிகைச் சரத்தை முகத்தோடு அணைக்கிறார். அது அவர் கண்ணீரில் நனைகிறது!

மாலை அறுந்து அவர் கரத்தில் கிடக்கிறது! இவர் நெஞ்சு துணுக்குற்றது!

திடீரென அச்சிலுவை வளர்ந்தது............ பிரமாண்டமாக அவர் முன்னே நின்றது...... அதில் ஒரு யுவதி அழகிய யுவதி அறையப்பட்டுத் துடிக்கிறாள்!

அவள் ஸ்தனங்களிலும், பாதங்களிலும், உள்ளங்கைகளிலும் உதிரம் பெருகி வழிகிறது! சிகை அவிழ்ந்து மார்பில் வழியும் உதிரத்தில் குழம்பிக் கிடக்கிறது! தரையில் வழிந்தோடும் ரத்தத்தில் பன்னீர்ப் பூக்கள் மலர்ந்திருக்கின்றன!

அந்த யுவதியின் முகத்தை அவர்—கிழவர் பார்த்தார்! எல்லையற்ற துன்பத்தின் சாயை...

தணியாத ஏக்கத்தில் மூழ்கித் தவிக்கும் அந்த முகத்தில் லேசான ஒரு மென்முறுவல்...... வேதனையைச் சகித்துக்கொண்டு, கிழவரைக் கண்டதினுல் ஏற்பட்ட ஆவல் ததும்பும் புன்சிரிப்பு;

அதில் சோகம் நெளிந்தது!

கிழவரின் கண்களிலிருந்து பனி நீர்போல் கண்ணீர் 'பொல பொல'வென உதிர்ந்தது!

"ராணீ..." என அவர் உரக்கக் கூச்சலிட்டார். அவருடைய சப்தம், அமைதி நிலவும் மயானத்தில் கிளம்பிக் காற்றில் கலந்தது!

மீண்டும் அங்கே பழைய மௌனம். ஒன்று மற்ற சூன்யவெளியை உற்று நோக்கியவாறு அவர் அழுதுகொண்டிருந்தார்.

அவருடைய பிரமை தெளிந்தது. மீண்டும் ஒரு முறை கல்லறையை வணங்கிவிட்டு, அதனருகே அமர்ந்தார். இப்பொழுது அவர் அழவில்லை!

கையிலிருந்த அந்த மல்லிகைச் சரத்தைச் சிலுவையில் சாத்தினர்.

அவருடைய வாழ்க்கையில், அந்தச் சமாதியின் துன்பமிக்க சரித்திரத்தில் அவர் மனம் பொதிந்தது...அதில் லயித்தது!

* * *

உள்ளூர் பிரபல டாக்டர் ஜேம்ஸுக்கும் வைலட்ராணிக்கும் திருமணம்! அந்தச் செய்தி, வில்லியம்சுந்தர்ராஜுக்கு நெஞ்சில் உதைத்தது போலிருந்தது!

எதிர்கால இன்பக் கனவுகளில் ஆழ்ந்திருந்த அவன் கண்களில் கலக்கம்...கண்ணீர்!

அன்று ஞாயிற்றுக்கிழமை! மாதாகோயிலுக்குச் சென்று திரும்பிவருகிறுன் சுந்தர். யந்திரம் போல் அவன் நடக்கிறுன்...சிந்தனை எங்கோ சுழல்கிறது!

அவனுக்கு முன் சற்றுத் தூரத்தில் செல்வது ராணியும் அவளுடைய பெற்றோரும்.

"என்ன ராணி, அடுத்த வாரம் மணக்கோலத்துடன் கோயிலிலிருந்து திரும்பி வருவாய்... இல்லையா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார் அவள் தந்தை. மகளுக்கு மணமுடிக்கப் போகும் மகிழ்ச்சி அவருக்கு. அவள் பதிலொன்றும் பேசவில்லை.

அவள் பெற்றோரின் மகிழ்வுக்குக் காரணமாகிய அதே திருமணம், அவள் நெஞ்சைக் குடைந்தது! அவளை மட்டுமா?...

அதோ, தலையைக் குனிந்து அவர்கள் பின்னே வருகிறுனே, சுந்தர்...

கைக்குட்டையால் முகத்தை அழுத்தித் துடைத்துக்கொண்டான். கோயிலில் ஜபம் நடந்துகொண்டிருந்தபொழுது அவன் பார்வை அடிக்கொரு தடவை அவள் பக்கம் திரும்பியது! அவளும் அவனைக் கவனித்தாள்.

கைவிரல்களைக் கோத்து, மோவாயை அதன் மீது ஊன்றிக்கொண்டு அவள் கர்த்தரையா ஜபித்தாள்?... அவள் கண்களில் பொங்கி வழிந்த கண்ணீரை அவன் கவனிக்காமலில்லை!

அவன் மனம் குழம்பியது.

"நானே சென்று அவர்களிடம் கேட்டால்..."

"ஹூம், உனக்கென்ன பைத்தியமா, உனக்கென்ன அந்தஸ்து இருக்கிறது, உங்கள் பெண்ணை எனக்குக் கொடுங்கள் என்று அவர்களைக் கேட்க; நீ அநாதை... அதை மறக்காதே, நீ சற்றுக் கௌரவமாக உலாவுகிறாய் என்றால் அது அவர்களுடைய ஆதரவினால்தான்... நீ வேறு கேட்க வேண்டுமா? நேற்று அவளுக்குச் சொன்ன பதில் தான் உனக்குக் கிடைக்கும்... அதை நீ வேறு நேரில் கேட்கவேண்டுமா?...

நெற்றியில் அரும்பிய வியர்வைத் துளிகளைத் துடைத்துக்கொண்டான்.

முதல்நாளிரவு... ராணிக்கும் அவள் பெற்றோருக்கும் நிகழ்ந்த சம்பாஷணை அவன் காதுகளில் ஒலித்தது;

"ராணி, இப்புடியாகும்னு தெரிஞ்சிருந்தா அவனை இங்கே சேர்த்தே வச்சிருக்கமாட்டேன்..."

"நான் என்னப்பா செஞ்சேன்..."

"நீ ஒண்ணும் செய்யலை...ஆனா சுந்தரை நீ நினைக்கிறது ரெரம்ப தப்புத்தான்......அது நடக்காது .."

அவள் மௌனமானாள்...

பிறகு மீண்டும் அவர் தொடர்ந்தார்:

"அவன் யாரு...யாரோ அநாதை, அன்பா இருந்தான், நல்ல பையன்...அதுக்காக ஏதோ உதவி செஞ்சோம்... இன்னும் செய்வோம்... ஆனா இது மாத்திரம் நடக்காது...அவனுக்கு ஏற்ற இடத்தில் அவனுக்கு ஒரு கல்யாணம் செய்யாம விட்டுடுவோமா என்ன...?

அவள் விம்ம ஆரம்பித்தாள்.

"போடி பைத்யம், எல்லாம் மொதல்லே அப்படித்தான் அழவரும்...சின்னக் கொழந்தை, அவளுக்கென்ன தெரியும், என்னென்னமோ அவகிட்டேப் பேசுறீங்களே;" அவள் தாய் மகளை அணைத்துக்கொண்டு ஆறுதல் கூறினாள்.

ராணிக்கு அவர்களிடம் தர்க்கிக்கச் சக்தியில்லை, அதன் பிறகு அவள் கண்ணீர்தான் உள்ளத் துடிப்புக்கு ஆறுதல்!

அதைப் புரிந்துகொள்ளும் சக்தி பெற்றோருக்கு இல்லை!

சுந்தரின் சிந்தனை தேங்கிற்று! அவன் செய்வதறியாது குழம்பினான். தலை நிமிர்ந்து பார்த்தான். அவனைப்போன்றே சிரம் குனிந்து சோக வடிவமாக அவள் செல்கிறாள்.

இதில் அவன் செய்வதற்கொன்றுமில்லை! அந்த முயற்சி நடப்பதும் நடக்காததும் அவள் சக்திக்குட்பட்டவை! அவன் என்ன செய்ய முடியும்?

பெற்றோரை இழந்த சிறுவயதில் அநாதையாக அவர்கள் வீட்டில் அடைக்கலம் புகுந்தான்.

அன்புகாட்டி அவனை வளர்த்தனர். படிக்க வைத்தனர், உண்டியும், உடையும், உறையுளும் கொடுத்துப் பத்து ஆண்டுகளாக, தங்கள் குடும்பத்தில் ஒருவனாக அவனை மதித்து ஆதரிக்கின்றனர். அதற்குக் கைம்மாருக...

அதனால் ராணியின்மீது கொண்டுள்ள காதலைத் தியாகம் செய்ய-பலிகொடுக்க—அவனுக்குச் சக்தியில்லை!

அவன் குழம்பினான்!

* * * *

அன்று மாலை...

வீட்டிற்குப் பின்புறம்—ஆற்றங்கரையில் அவர்கள் சந்தித்தனர்.

அவர்களிருவரும் ஆளுக்கொரு திசையை வெறித்து நோக்கியவாறு, நின்றிருந்தனர்.

வைகை வழக்கம்போல் சுழியிட்டு ஓடிக்கொண்டிருந்தது. அன்று நிலவுகூட இல்லை. இருள்!

அவர்கள் வாழ்க்கை அந்தகாரத்தின் முன் அது எம்மாத்திரம்?

அவள் அவனருகே வந்தாள்.

"சுந்தர்...அடுத்த ஞாயிற்றுக்..." அவள் முடிக்கவில்லை; அவள் வாயைப் பொத்தினான் அவன்.

"அதைப்பற்றி ஒன்றும் பேசாதே! கிடைத்த சந்தர்ப்பத்தைக் கண்ணீரில் ஏன் மூழ்கடிக்க வேண்டும்! நடப்பது நடக்கட்டும்; எனக்கு ஒன்றும் செய்யத் தோணலே!"

"எனக்குப் பயமா இருக்கே..."

"பயப்படாதே ராணி" நாம் என்ன செய்யறது; அது போவட்டும்... நீ அழுதுகிட்டே இருந்தா எனக்கு இன்னும் வருத்தமா இருக்கு...எங்கே சிரி, கொஞ்சம் சிரி... அதைப்பார்த்தா கொஞ்சம் ஆறுதல் பிறக்கும்......"

"என்னை சிரிக்கவா சொல்றே... எப்படி சிரிப்பேன்... என் தலையில் விழப்போற இடியை நெனைச்சு என்னை சிரிக்கச் சொல்றியா...என்ன இருந்தாலும் நீ ஆண் பிள்ளை..."

"ராணி... நான் சிரிக்கிறேன்... என் விதியை நெனைச்சு நான் சிரிக்கிறேன்" இதைச் சொல்லும் போது அவன் சிரிக்கவில்லை... அழுதான்!

கரிய இருளில் அவர்கள் வெகுநேரம் அழுதார்கள். அவர்களுக்காக இருள் அழுதது! பிறகு, அவன் மெல்லப் பேசினான்.

"ராணி, நான் சொல்றதை கேப்பியா?..."

"என்ன சொன்னாலும் கேட்கிறேன்..."

"நீ...நீ...ஜேம்ஸை கல்யாணம் செஞ்சுக்கோ... என்னை மறந்துடு!... நான்... உன்னை மறக்க முடியாது ராணி, முடியாது...நான் போறேன்... ஊரைவிட்டு போயிடறேன், உன்னைவிட்டு... அவசியமானல் உலகத்தைவிட்டே நான் போயிடறேன்... நான் போறேன்...ராணி...... நான் போறேன்...

"சுந்தர்..." அவள் குரல் கிறீச்சிட்டது!

அவன் இருளில் மறைந்தான்!

* * *

அந்தச் சம்பவத்திற்குப்பின் சுந்தரைக் காணவில்லை. ராணியின் பெற்றோர்கள் அவனால் மிகவும் கவலைப்பட்டார்கள். ராணியின் தாய் இடிந்தே போய்விட்டாள். வளர்த்த பாசமில்லையா?...

ராணிக்குக் கல்யாண ஏற்பாடுகள் துரிதமாக நடந்தன. இரண்டு மூன்று நாட்களில் அவள் பெற்றோர் சமாதானமடைந்தனர்.

ஆனல் ராணியின் இதயம் ஒவ்வொரு விநாடியும் அவனுக்காக ஏங்கிற்று!

இரவு மணி மூன்று!

விடிந்தால் கல்யாணம்!

மாடியில், அவளுடைய அறையில் ஜன்னலோரத்தில் உட்கார்ந்துகொண்டு, சற்றுத் தூரத்தில் தெரியும் மாதாகோயிலின் கோபுரத்தை, அதன்மீது தெரியும் சிலுவையை அர்த்தமற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள் ராணி.

அவள் கண்களில் கண்ணீர் நிறைந்தது! கோபுரம், சிலுவை யாவும் மறைந்தன.

அந்தச் சிலுவை அவளது நீர் நிறைந்த விழிகளுக்கு இப்பொழுது மறைந்துவிடலாம்!

விடிந்தால்...?

அவள் வாழ்க்கை—கர்த்தர் அறையப்பட்ட அதே சிலுவையில் அறையப்படுமே!

அவள் எண்ணம் சுழன்றது!

அவளுக்கு விவரிக்க இயலாததே!

பயங்கர பூதம் ஒன்று தன்னை நெருங்குவதைப் போன்ற பிரமை.

அவள் வாழ்க்கை—விடிந்தால் நிகழப்போகும் கல்யாணம்—மலையுச்சியின் மீது நின்றுகொண்டு இரண்டு மலைகளுக்கிடையிலிருக்கும் கிடுகிடு பாதாளத்தைக் குனிந்து பார்ப்பதுபோலிருந்தது.

பின்னாலிருந்து ஒரு பைசாசம் அவளைத் தள்ளக் காத்திருப்பதுபோல்...

அதோ, சுவரில் கரிய நிழல்...

நிழல் அவளை நெருங்குகிறது!

அவள் மனம் குழம்பிக் கிடந்தது.

உடல் நடுங்கியது...

முகம் பயத்தால் சுருங்கியது...

வீரிட்டலறியிருப்பாள்...

அந்த உருவம் அறை வாசற்படியில் நின்றிருந்தது!

கண்ணீரால் நனைந்த அவள் கண்ணிமைகள் படபடத்தன. ஜன்னல் வழியாகக் குளுமையான காற்று வீசியது. சுருண்டகேசம் நெற்றியில் புரண்டது. சேலைத் தலைப்பை மார்போடு அணைத்தவண்ணம் பரிதாபகரமாகச் சிரித்தாள் அவள்!

அவளால் அசைய முடியவில்லை.

பேசமுடியவில்லை; தொண்டையில் ஏதோ அடைத்தது!

கண்கள் நீரை உகுத்தன!

உதடுகள் அழத் துடித்தன!

அவளுடைய உணர்ச்சிகள் அனைத்தும் தன்னிடையே பிரதிபலிக்க, அந்த உருவம் - சுந்தர் வாயிற்படியில் நின்றிருந்தான். முகம் ரத்தம் போல் குழம்பியிருந்தது. உதட்டைக் கடித்துக் கொண்டு சிரிக்க முயன்றான்.. ...அழுகைதான் வந்தது.

கோட்டுப் பித்தானைத் திருகிக்கொண்டு அசையமுடியாது தவித்தான் அவன்.

"சுந்தர்..." அவள் குரல்வளையை என்னவோ செய்தது.

"ராணீ" அறைக்குள் பாய்ந்தான் அவன்.

படீரென அறைக் கதவு மூடிக்கொண்டது.

"ராணீ...ராணீ..." அவன் கரங்களுக் கிடையே அவள் துவண்டு சரிந்து கிடந்தாள்!

குலுங்கிக் குலுங்கி அழுதாள்!

"ராணீ...... அழாதே....... .. அழாதேயம்மா, அழாதே..."

"நீ எங்கேபோனே, என்னைவிட்டுட்டு நீ எங்கே போயிருந்தே, இனிமே தனியா இருக்கமாட்டேன்...நீ போனா நானும் உன் கூடத்தான் வருவேன்...என்னை விட்டுட்டு எங்கேயும் போகாதே, சுந்தர்...சுந்தர்..." அவன் கரங்களுக்கிடையில்' அவன் மார்பின் மீது கிடந்து துடித்தாள், நெளிந்தாள்!

"சுந்தர், நான் ஜேம்ஸைக் கல்யாணம் செஞ்சுக்க முடியாது... நான் உன்னோடே வர்றேன்... நாம் எங்கேயாவது போயிடலாம்" அவனை அவள் உலுப்பினாள்.

"ஹூம்...ராணி, உனக்கென்ன?" அவனுக்கு வார்த்தைகள் வெளிவரவில்லை. அவன் மனதில் தாயின் வாத்ஸல்யத்துடன் ராணியின் தாயும் தந்தையின் கருணையுடன் அவள் தந்தையும் தோன்றினர்.

அவனுக்கு மண்டைக்குள் என்னவோ குடைந்தது!

"மகனே, பிள்ளையில்லாததால், உன்னை மகனாகக் கருதி பாசம் வைத்து வளர்த்ததற்கு நீ செய்யப்போகும் கைம்மாறு... என் மகளை... விடிந்தால் மணக்கோலத்தில் பார்த்து மகிழ வேண்டிய எங்கள் மகளை... உன்னோடு அழைத்துக்கொண்டு ஓடி. ஊரார் முன், உறவினர்முன் எங்களை, எங்கள் குடும்பத்தை அவமானப் படுத்து...செய்...செய் மகனே செய்...!"

"இல்லை...இல்லை...ராணியை நான் அழைத்துச் செல்லமாட்டேன்...மாட்டேன்...மாட்டவேமாட்டேன்..."அவன் லேசான குரலில் உறுதியாகக் கூறினான்.

"நான் வருவேன்...உன்னோடுதான் வருவேன்" அவள் குழந்தைபோல் முரண்டு பண்ணினாள்.

அவன் மௌனமாக நின்றிருந்தான்.

"சுந்தர்...எனக்குத் துரோகம் செய்யாதே! நான் உன்னைத்தவிர யாரை, எப்படிக் கல்யாணம் செஞ்சுக்குவேன்!"

"அது உன் விஷயம்...அப்பா, அம்மா சொல்லுகிற மாதிரி கேட்டு நட...நான் பெரிய தப்பு செஞ்சுட்டேன்...தப்பைத் திருத்திக் கொள்ளலாம்...தப்பு...ராணி...எல்லாம் தப்பு... நாம் செஞ்சதெல்லாம் தப்பு...மறந்துடு... மறந்துடு...நாம் தப்பு செய்யறோம்...தப்பு... தப்பு..." வெறிபிடித்தவன்போல், தலையை உலுப்பிக்கொண்டே அவன் முனு முனுத் தான்...கீழ்ஸ்தாயியில் அவன் குரல் 'தப்பு... தப்பு' என உச்சரித்துக்கொண்டே இருந்தது.

அவன் கரங்களுக்கிடையில் சிக்கி, அவன் மார்பில் புதைத்திருக்கும் தன் முகத்தை நிமிர்த்தி அவனைப் பயம் கலந்த விழிகளால் நோக்கினாள்.

அவன் கிராப்பைப் பிடித்து, அவன் முகத்தை நிமிர்த்தினாள். தன்னருகே அவன் முகத்தை இழுத்தாள். "எது தப்பு...நீயும் நானும், ஒருத்தரை ஒருத்தர் காதலிச்சது தப்பு...எனக்குப் பிடிக்காத ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி நீயே சொல்றியே ..இது சரி...ரொம்ப சரி...ஏன் அப்படித்தானே?...நீ கோழை...பயங்காளி..." பல்லைக் கடித்துக்கொண்டு, அவன முகத்தருகே முகம் சேர்த்து, கண்ணீர் கலங்கி

வழியும் அவன் விழிகளை ஊடுருவிப் பார்த்த வாறு அவள் உறுமினாள்.

அவன் ஒடுங்கும் குரலில் பேசினான்:

“என் நிலையில் நீ இருந்தால்...”

தாயன்பை இரவல் வாங்கி அனுபவித்திருந்தால்...

தந்தையின் கனிவுக்குப் பிச்சை வாங்கியிருந்தால்...

அதுக்காகப் பல நாள் ஏங்கியிருந்தால்...

ஆதரிக்க யாருமில்லாத அநாதையாகக் கஷ்டப்பட்டிருந்தால்... அப்பொழுது உன்னிடம் தாயும் தகப்பனுமாக அன்புகாட்டியவர்களிடம் நீ எப்படி நடந்துகொள்வாயோ அப்படித்தான் நடந்துகொள்கிறேன். என்னைத் திட்டாதே, திட்டு...திட்டினால் திட்டு...ஆனால் என்னை மறந்துடு...

உன் பெற்றோர்கள் கண்கலங்க நான் சுகமடைய எனக்கு மனம் வரவில்லை... அது நடக்காது... கர்த்தர் மீது...” அவன் வாயைப் பொத்தினாள் ராணி.

அழுகையை அடக்கினாள்...

மார்பே வெடித்துவிடும்போலிருந்தது.

விம்மல்!...

அவள் நிலை அவன் மனதை என்னவோ செய்தது. அவளை வாரியெடுத்து மார்புறத் தழுவினான்! அவள் சிகையைக் கோதிக்கொண்டே கண்ணீர் வடித்தான். அவள் குமுறினாள்!

“இனிமே... நாம... என்னிக்கும் சேர முடியாதா?...” அவள் கன்னத்தைத் தாங்கிக் கொண்டிருந்தது அவனது கரங்கள். அவள், குழந்தைபோல் கண்களில் கண்ணீர் வழிய அவன் முகத்தைப் பார்த்து, தலையை ஆட்டிக்கொண்டே கேட்டாள்..அவளுக்கு மூச்சு வாங்கிற்று... நெஞ்சு வலித்தது... என்னமோ அடிவயிற்றில்... ஈட்டிபாய்ந்ததுபோல...நெஞ்சை அடைத்தது

குனிந்து அவள் அதரத்தில் முத்தமிட்டான்.

கால்கள் பின்னி, சுவரில் சாய்ந்தாள் அவள்.

நெற்றியிலும் கன்னத்திலும் மாறி மாறி முத்தமிட்டான்.

வெறி பிடித்தவன்போல் அவளை விலக்கித் தள்ளிவிட்டு ஓடினான்...

அலங்கோலமாக, மயங்கிக் கீழே வீழ்ந்து கிடந்தாள் ராணி!

அவன் சென்ற திசையை நமஸ்கரிப்பதுபோல் கவிழ்ந்துகிடந்தாள் அவள்!

* * *

இருள் மறைந்தது; பகல் வந்தது! ராணியின் அறைக்குள் தோழி ஒருத்தி நுழைந்தாள்!

வந்தவள்...

திகைத்தாள்...

வீரிட்டலறினாள்...

ஒரே கூட்டம்; கூச்சல்; குழப்பம்!

பெண்ணைப் புரட்டினா.

பெண்ணையா, அல்ல; பிணத்தை!

பெண்ணைப் பெற்றவளின் பிலாக்கண ஓலம் கல்யாண வீடு முழுதும் வியாபித்தது!

அங்கே மல்லிகையின் மணம்..

ஊதுவத்தியின் புகைச்சல்...

அது ஒரு துர்க்கந்தம்...

மரண வாடை;

* * *

சமாதியருகே அமர்ந்திருந்த கிழவர் கண் விழித்தார். இப்பொழுது நிலவு, அவர் தலைக்கு நேரே வந்துவிட்டது.

தோளில் தொங்கும் பையில் பைபிளை எடுத்துக்கொண்டு அவர் கிளம்பினார்.

அதோ போகிறார் அந்தக் கிழவர்! வைகையாற்றின் அக்கரையில் கூனிக் குறுகிக் கொண்டு, கைத்தடியுடன் நிற்கிறதே ஒரு கிழம்...

அது ஒரு பைத்தியம்!

இந்த உலகில் பைத்தியம் என்று யாரையும் லகுவில் முடிவு கட்ட முடியாது; கூடாது! ஆனால்...

அவருக்கு வாழ்க்கையில் எவ்வளவு அனுபவங்கள்!

❑ அவர் கண்களை —பஞ்சு பூத்த அவர்

ஆரோக்யப்ரதாயினி

ஜீவாம்ருதம் உபயோகிப்பதனல் பலஹீனர்களுக்குப் பலமும், துர்ப்பலமுடையோர்க்கு—உற்சாகமும், நித்திரை யற்றவர்க்கு—சுக நித்திரையும், நரம்புத் தளர்ச்சியுற்ற வர்க்கு—நரம்புப் பலமும், ஜீரண சக்தியற்றவர்க்கு—நல்ல பசியும், ரத்தஹீனர்களுக்கு—நல்ல சிவந்த ரத்தமும், ஞாபகஹீனர்களுக்கு—மிகுந்த ஞாபக சக்தியும், வாட்டமுற்றவர்களுக்கு—மிகுந்த முகக்காந்தியும் முதலிய எவ்வளவோ நற்குணங்களையளிக்கவல்லது.

ஸ்திரீ, புருஷர், பால்யர், வயோதிகர் முதலிய யாவராலும் எக்காலத்திலும் எந் நிலைமையிலும் உபயோகிக்கத் தக்கது.

எல்லாவிடங்களிலும் கிடைக்கும்

ஜீவாம்ருதம்

தேகாரோக்யத்துக்கும் பல விருத்திக்கும் சிறந்தது.

ஆயுர்வேதாசிரமம் லிமிடெட்

மதராஸ்-17.



உயர்ந்தபக்ஷ மைல்கள் ஓட
லேடெக்ஸ்-இணைப்புள்ள
டன்லப் போர்ட்

இப்பொழுது ஸஹாகஞ்சில், டன்லப் கம்பெனியாரால், பிரசித்திபெற்ற எல்லா வகை கார்கள் டிரக்குகள், பஸ்களுக்கும் தகுந்த துண்டுபடாத நாலினல் நீடித்துழைக்கும்படி அமைத்த டன்லப் விசிறி பெல்டுகள் தயாரிக்கப்படுகின்றன.

TRADE MARK

DX 410 TM

வெண்ணிற விழிகளைச் சற்றுநேரம் உற்று நோக்குங்கள்!

காலதேவனை வென்றி கொள்ள முடியாத ஒரு ஏக்கம்; இத்தனை வயதிற்குப் பின்பும் தணியாத ஒரு வெறி; அதே சமயத்தில் குழந்தையின் கண்களைப்போன்ற குறுகுறுப்பு! ஆழமற்ற சோகம்! எத்தனை கவிதை...எத்தனை காவியம்!

பருவங்களைக்கடந்த, அவற்றின் சேஷ்டைகளை அடக்கி ஆட்சிபுரிந்த, புனிதவாழ்வாலெழுந்த கம்பீரத்துடன் நோக்கும் ஒரு தபஸ்வியின் கண்களில் சுடர்விடும் ஒளியை - அசாதாரண அந்த ஒளியை—அவர் கண்களில் காணலாம்!

அது, வாழ்க்கையில் அடிபட்ட கட்டை! உலக மகாயுத்த காலத்தில்...

அதன் வாழ்க்கை துப்பாக்கி முனையில் கழிந்தது. காடுகளிலும் மலைகளிலும் சிங்கம் போல் உலவியது அந்தக் கிழம்!...

பிணங்களைக் குவியல் குவியல்களாகக்கண்டு சலித்துப்போன உள்ளம்!

அந்தக் கிழவர்!

இன்று நரைத்துத் திரைத்து, கூனிக் குறுகி, கையில் ஒரு தடியுடன், கந்தல்தரித்து, தோளில் காகிதக்குப்பை நிறைந்த ஒரு பையைத் தாங்கிக்கொண்டு ஊரைச் சுற்றுகிறார்!

அவரைத் தினசரி இந்தச் சமாதியருகில் காணலாம்!

காலம் அவரை இப்படியாக்கிற்று!

காலம்!

அது துரோகி!

மனித வர்க்கத்தின் வஞ்சனைகளைச் சிருஷ்டிக்கும் வைரி!

ஒரு மனிதனை...

அநாதையாக்கி, ஆதரிப்பார் ஒருவரை அளித்து, அவனுக்குக் காதலைமூட்டி. அதைப் பொருந்தாக் காதலாக்கி, அவன் காதலைக் கொன்று, அவன் காதலியைக் கொன்று, அவன் வாலிபத்தையெல்லாம் யுத்தப் பேய்க்கு வாரி வழங்கி, அவன் ரத்தத்தை உறிஞ்சி...அவனை முதுமையடையச்செய்து பிறகும்கூட, அவன் மனதில் கிஞ்சித்தும் சாந்தியேற்படச் செய்யாத—காலம்...!

அவனைச் சக்கையாக்கிற்று, காலம்! ஐம்பத்து மூன்று வயதில் அவனைப் படுகிழவனாக்கியது, காலம்!

கடைசியில், காலம் கொடுத்த உதையில், தன் சொந்த மண்ணிலே, தன் காதலியின் கல்லறையிலே உருண்டு கிடக்கிறான் அந்த மனிதன்!

அந்தக் கிழவனின் இதயத்திலுள்ள காதலை அழிக்கக் காலத்தால் முடியவில்லை; முடியாது!

காலம் தோற்றுவிட்டது!

அதைக் கிழவன் உணர்ந்தானா? ●

ஆவணக் காப்பக
199345
சென்னை-600 008
600 008

Edited & Published by N. R. Ramanujam & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.